

வெள்ளி நிலா
முற்றத்திலே
ஜெய்சக்தி
முற்றத்திலே
ஜெய்சக்தி

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : வெள்ளி நிலா முற்றத்திலே! |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 304 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கொடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ☎ 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை: ரூ.100.00**


# வெள்ளி நிலா முற்றத்திலே!



# வெள்ளி நிலா முற்றத்திலே!

## 1

"எனக்கு நம்பிக்கையிருக்கு! நாம ஜெயிப்போம்!" என்றார் வழக்கறிஞர் கெங்குசாமி.

"நம்பிக்கை... அது எனக்கும் நிறைய இருக்கு! ஆனா நடைமுறையில நாம நினைக்கறது நடக்கணுமில்லே!" என்றான் பார்த்தசாரதி.

"நடக்கும். நடக்கும். நடக்காம எங்கே போகும்? நடக்கலேன்னா விட்டுருவோமா? நடக்க வைப்பமில்லே! அதுக்குத்தானே நாங்க இருக்கோம்?" என்றார் கெங்குசாமி கெத்தாக.

பார்த்தசாரதிக்கு மனதுக்குள்ளே லேசான சிரிப்பு மலர்ந்தது.

"ஆசாமி.. என்ன.. இன்றைக்கு ரொம்பத் தெனாவெட்டாகப் பேசுகிறார்..! போன வாய்தா வரைக்கும்.. எந்த வித நம்பிக்கையுமில்லாதவர் போலப் பேசிக் கொண்டிருந்தவர். இன்றைக்கு.. என்னவோ.. ரொம்பவும் நம்பிக்கையாகப் பேசுகிறார்.

"என்ன சார் விஷயம்! ரொம்பக் கான்ஃபிடன்டா ஃபீல் பண்றீங்க.. போல.. இருக்கு!" என்றான்.

"ஆமா.. சார்! கை வசம் ஒரு துருப்புச் சீட்டு இருக்கு..! எதிர்பாராத இடத்துல இருந்து.. எதிர்பாராத உதவி.. வருது..!"

"என்ன.. சார்! குடுகுடுப்பைக்காரன் மாதிரி.. குறி சொல்லிகிட்டிருக்கீங்க..!"

"குறியில்ல.. சார்! நிஜம்! இன்னைக்குக் கோர்ட்டே கலகலக்கப் போகுது.. பாருங்க!"

பேசிக்கொண்டே வழக்கறிஞரின் அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

பத்திரிகைக்காரர்கள். டி.வி. மனிதர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

"சார்! ஒரு சொத்து.. நீங்க வாங்கிக் குடுத்ததுக்கப்புறம் உங்களுதுன்னு.. ஆகாதே! அப்புறம் எப்படி சார்.. உங்க கேஸ் ஜெயிக்கும்!"

"இத பாருங்க! அந்த சொத்தை நான் திருப்பிக் கேக்கலே! அது அவங்களுதாகவே இருக்கும்! ஆனா.. அது நான் வாங்கிக் குடுத்ததுதான்னு இருக்கணும் ஆனா.. போதும்.."

"அதனால.. உங்களுக்கென்ன இலாபம்?"



"இலாபமா? கேஸ் முடியட்டும்.. நான் சொல்றேன்..?"

"சார்! இது என்னவோ.. பப்ளிசிட்டி ஸ்டண்ட் மாதிரித் தான் தெரியுது."

"கண்டிப்பா.. பப்ளிசிட்டிக்காகத்தான் பண்றேன். ஆனா.. ஸ்டண்ட் கிடையாது. அந்தப் பிராப்பர்ட்டி கஷ்டப் பட்டுச் சம்பாதித்த பணத்துல இருந்து வாங்கினது. அது கையாளப்பட்ட விதமும், அதுக்குப் பின்னாலே காயப்பட்ட என் மனசும்.. இருக்கு..!"

"சார்! இதெல்லாம்.. ஒரு காயமா? அமெரிக்காவுல கம்ப்யூட்டர் என்ஜினியரா இருக்கீங்க..! கோடி கோடியா சம்பாதிக்கிறீங்க..!"

"அதுக்காக? இளிச்சவாய் ஆக முடியாதில்லே!"

"சார்! எது எப்படியோ.. உங்க கேஸ்னால எங்களுக்கு ரொம்ப ஹெல்ப்.. சார்! எங்களுக்கு ரொம்ப ஹெல்ப்" என்று அந்த நிருபர் காதருகில் முணுமுணுத்தார்.

"இது ஆஃப் த ரெக்கார்ட் உங்க கேஸ் மட்டும் இதே ஸ்பீட்ல போனா.. எங்க பத்திரிகை ஆசிரியர்.. ஒரு.. பைக் வாங்கி எனக்கு பிரஸன்ட்.. பண்றேன்னு சொல்லியிருக்கார்" என்றார்.

"என்ஜாய் யுவர்செல்ஃப்" என்று புன்னகைத்தான் பார்த்தசாரதி. கூட்டம் கடந்து நடந்தான்.

இப்போதல்ல..!

எப்போது.. அவன் தனது பிரச்சினையைக் கேஸ் என்று கொண்டு போனானோ அப்போதே எல்லாப் பக்கமும் இருந்து கேள்விக் கணைகள்! அறிவுரைகள்! ஆலோசனைகள்! அனுதாபக் குரல்கள்! கேலிச் சிரிப்புகள்!

பார்த்தசாரதியின் அப்பா கோபாலகிருஷ்ணனே சொன்னார்.

"தம்பி! தப்போ.. ரைட்டோ! அந்தப் பிரச்சினையில சிக்கினே! வெளிய வந்துட்டே! அதை விட்டுட்டு அடுத்த வேலையைப் பாரு!"

"சரிப்பா! நான் அப்படி விடறதாயில்லே! அது ஹார்ட் இயர்ன்ட் மனி! அப்படி யார் வேண்ணாக் குழைச்சு.. நாமத்தைப் பூசுங்கடா.. சாமின்னு.. நான் நெத்தியைக் காட்டிட்டு தேமேன்னு.. நிக்க முடியாது! ஐ ஹேவ் டு டு சம்திங்..! நான் படிச்சிருக்கேன்.. நல்லா சம்பாதிக்கறேன்.. உலகம் தெரிஞ்சவன்...! எனக்கே.. இந்தக் கதின்னா.. சாதாரணப் பட்டவங்க.. என்ன செய்வாங்க! ப்ளீஸ்! இந்த ஒரு விஷயத்துல எனக்கு.. ப்ரீடம் குடுங்க!"

"உனக்கு.. எப்ப.. நான் ப்ரீடம் குடுக்கலே! சொல்லப் போனா.. இப்படி.. ஓவரா ப்ரீடம் குடுக்கப் போய்த்தான்.. இப்படி வந்து நிக்குது.. நீ ஒண்ணும் சின்னக் குழந்தையில்ல.. யு.நோ.. திங்ஸ்..! ஆனா.. சிலதெல்லாம் நான் சொல்லத்தான் வேண்டியிருக்கு.. சொல்லலாமா?"

"சொல்லுங்கப்பா!"

"எங்கண்ணன். உங்கப்பா. மினிஸ்டரா.. இருக்கார். அனாவசியமா.. அவர் பேரு.. சந்திக்கு வரும்!"

"அதெல்லாம்.. நான் பெரியப்பாகிட்டே பேசிட்டேன்!"

"ஜமாய்டா.. ராஜா! அப்படீன்னுட்டாரு!"

அப்பா ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை! பிறகு அடங்கிய குரலில் சொன்னார்.

"அது மட்டுமில்லடா! எல்லாப் பத்திரிகையிலயும் உன் பேரு.. கிழிபடும்..!"



"வரட்டும்பா!"

"உங்கப்பன்.. அதான்! உன் முதலாளி! இருக்காரே.. அவர் ஒத்துப்பாரா?"

"எங்கப்பன்.. அதான்.. என் முதலாளி! ஜான் செபாஸ்டியன்! ரசித்துச் சிரிக்கிறார். கேரி ஆன் மேன்! டஸ் இட் ஹேப்பன் இன் இண்டியா? யு ஆர் டூயிங் தி ரைட் திங்! அப்படீன்னு சிரிச்சார்."

"ஓ!"

"அப்பா..! ரொம்பக் கஷ்டப்படாதீங்க! ஒண்ணும் வேலையாகாது! எல்லாக் கோணத்திலும் யோசிச்சுட்டுத் தான் நான் இறங்கியிருக்கேன். என்னோட உணர்வுகள்.. உண்மையான உணர்வுகள் அவமானப் படுத்தப்பட்டு இருக்கு! அதுக்குண்டான பலனை ஆப்போசிட் பார்ட்டி அனுபவிச்சே ஆகணும்" என்றான்.

"சரிப்பா! உன் இஷ்டம்! ஆனா, இதனால உன் எதிர் காலத்துல.. ஏதாவது.. பாதிப்பு... ஏற்பட்டுதுன்னா.. உன் கல்யாணம்.. கார்த்தின்னு.."

"ப்ளீஸ்ப்பா! ராங் டைமிங்பா! கல்யாணம் பத்திப் பேசறதுக்கு இது நேரமேயில்லை!"

"தட்ஸ் ட்ரூ!" என்றார் அப்பா அடங்கிய குரலில்.

இனி தான் என்ன சொன்னாலும் செல்லுபடியாகாது என்று நினைத்தாரோ என்னவோ அதற்குப் பிறகு அது பற்றிப் பேசுவதை விட்டு விட்டார்.

ஒரு பார்வையாளரைப் போல வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்.

அப்பொழுது ஆரம்பித்த ஆட்டம்தான்!

வழக்கறிஞர் ஒரு பக்கம் யோசித்தார். ''சார். ஜெயிக்கறது கஷ்டம்.''

''பரவாயில்லை சார். கொஞ்சம் பேருக்காவது.. என்ன நடந்ததுன்னு தெரியணும்! ஜஸ்ட் லைக் தட்.. நேரபடி கேள் வாக் அவுட்னு புரியணும்.''

''ஓ! அது செய்யலாம்!'' என்றார்.

இப்போதுகூட பார்த்தசாரதிக்குச் சந்தேகம். தனக்குத் தெரிந்த பத்திரிகையாளர்களை வைத்துக் கொண்டு அவர் தான் விஷயத்தைப் பெருக படுத்துகிறாரோ என்று.

செய்யட்டுமே!

நமக்கென்ன வந்தது! நாமும் இதைத்தானே எதிர் பார்த்தோம்? என்று எண்ணிக் கொண்டான்.

சூழ்நிலையை ரசிக்க ஆரம்பித்தான்.

அவரது காரில் அவன் தனது டிப்டாப்பான உடையுடன் வந்து கம்பீரமாக இறங்குகையில் இருந்தே அங்கங்கே திடீர், திடீரென்று போட்டோ எடுப்பதற்காக காமிராக்கள் மின்னும். முதலில் அது சற்றே கஷ்டமாக இருந்தது!

இப்போது பழகிப் போய் விட்டது!

பார்த்தசாரதி அவர்களைக் கண்டு கொள்ளாமல் கை வீசி நடப்பதும்.. அவர்கள் பின் தொடர்ந்து வருவதுமாக கொஞ்ச நேரம் டிராமா நடக்கும்.

அப்படித்தான் இப்போதும் நடந்தது.

''இவனுங்க தொல்லை தாங்கலே!'' என்று முணு முணுத்தார் கெங்குசாமி.

''சார்! பிரஸ் பீப்பிள். பகைச்சுக்காதீங்க... என்னமோ சொன்னீங்களே இந்தக் கேஸ் ஜெயிக்கறது கஷ்டம்னு.



ஜெயிக்கறது கஷ்டமோ என்னமோ உங்களுக்கு எத்தனை பப்ளிசிட்டி பாருங்க.. அமெரிக்காவில இருந்து வந்த ஒரு என்ஜினியர் இந்த லாயரை புக் பண்ணியிருக்கார்ன்னா லாயர் எவ்வளவு பெரிய ஆளா இருக்கணும்னு பேசிக்கறாங்களா இல்லையா?''

''அதென்னமோ நிஜம்தான்!'' என்றார் கெங்குசாமி.

அதே நேரம்!

வேறொரு காரில் வந்து இறங்கினாள் மேகலா!

கொஞ்சமும் கலையாத மேக்கப்! கூட அந்த இளைஞன்! அவனிடம் ஏதோ குறித்துப் பேசிக் கொண்டே சிரித்தபடி அலட்டிக் கொள்ளாமல் நடந்தாள்.

ஒரு நிமிடம் நின்றான் பார்த்தசாரதி!

அவள் அலட்டலை ஒரு வெறுமையான பார்வை பார்த்துக் கொண்டு நின்றான். உள்ளத்தின் ஓரத்தில் சுரீ என்று ஒரு வலி தோன்றியது!

எத்தனை அழகாக ஏமாற்றினாள்!

பலியாடு போலக் கூட வருகிற இளைஞனைப் பார்த்துப் பாவமாக இருந்தது!

இத்தனை ''புகழ் வெளிச்சம்'' தன் மேல் படிந்தும் அவளால் எப்படி இப்படி அவனோடு உரசிக் கொண்டு நடந்து வர முடிகிறது?

ஏதாவது மிரட்டி வைத்திருப்பாள். ஏதாவது சாட்சி வைத்திருப்பாள்.

நல்ல வேளையாகத்தான் அந்த மாதிரி எதுவும் அவளிடம் மாட்டிக் கொள்ளவில்லை! ஆனால் சொன்னால் யார் நம்பப் போகிறார்கள்?

அதைப் பற்றித் தனக்கென்ன கவலை.

தொடர்ந்து அவன் பார்வை அவள் முதுகைத் துளைத்த போதும் அது குறித்துக் குறுகுறுப்பும் இருந்த போதும் அவள் ஸ்டைலாக நடந்து போனாள்.

அவன் கிண்டலாகப் புன்னகைத்துக் கொண்டான். வழக்கறிஞரைப் பார்த்தான். அவரும் ஒரு விதமாகச் சிரித்தார்.

"பார்த்தீங்களா சார்! இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமான்னு நடந்து போறதை." என்றார் லாயர் கடுப்புடன்.

"அவங்களுக்கென்ன? அப்பாவி எலிகள் மேலே வந்து விழுகத் தயாராயிருக்கையில்!"

சுற்றிலும் பத்திரிகைக்காரர்கள் என்ற நினைவிலிருந்து விடுபடாமலிருக்க அவன் பழகிக் கொண்டான். அதனால் எச்சரிக்கையாகவே நடக்கப் பழகிக் கொண்டான்.

கோர்ட்டில் அவர்கள் வழக்கு வருவதற்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. வந்தது. எதிர்க்கட்சி வக்கீல் கேட்டார்.

"சார் ஒரு சொத்து.. அவங்க பேர்ல இருக்கும்போது.. அது எப்படி உங்க சொத்தாகும்?"

"அது என் சொத்துன்னு நான் சொல்லிக்கவே நான் விரும்பவில்லை! ஆனா.. நான்தான் அதை வாங்கிக் குடுத்தது. அதை மட்டும் ஒத்துக்கச் சொல்லுங்க.." என்றான்.

"அதனால.. உங்களுக்கு என்ன லாபம்!"

"லாபம்.. நஷ்டம்.. பத்திச் சொல்றதுக்கு இப்ப என்ன அவசியம்? எனக்கு வேண்டியதெல்லாம் அது நான்



வாங்கிக் குடுத்ததுதான்னு உலகத்துக்குத் தெரியணும். அவ்வளவுதான்!"

"அதை ஏன் அவங்க சொல்லணும். உங்ககிட்டே ஆதாரம் இருந்தா நீங்க நிரூபிச்சுட்டுப் போங்க..."

"அதை நாங்க செய்யத்தான் போறோம். எங்க லாயர் கண்டிப்பா செய்யத்தான் போறாரு!..."

அந்த நேரம்! லாயர் கெங்குசாமி முதலில் அவனுக்கும், அந்த பங்களா உரிமையாளருக்கும் இடையில் செய்யப் பட்ட ஒப்பந்தம் காட்டினார். பிறகு வாங்குவதற்கான பணம் பார்த்தசாரதி தன் அக்கவுண்டிலிருந்து கொடுத்த தற்கான ஆதாரம் என்று எல்லாவற்றையும் கொடுத்தார்.

"இதெல்லாம் சரி!.. நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"சார்" என்று ஆரம்பித்த கெங்குசாமி அப்போதுதான் முழுமையாக விளக்கம் சொன்னார்.

"கனம் கோர்ட்டார் அவர்களே! இந்தச் சொத்தை ஏன் என் கட்சிக்காரர் வாங்கிக் கொடுத்தார் என்பதைப் பொறுத்துத்தான் இந்த வழக்கின் சாரமே அமைகிறது. செல்வி மேகலாவுக்கும் எனது கட்சிக்காரருக்கும் திருமணம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால்... பரிசைப் பெற்றுக் கொண்ட மேகலா இப்போது எனது கட்சிக்காரரை ஏமாற்றுகிறார். செக்ஷன் 417ல் ஏமாற்ற முயற்சி செய்கிறார் என்று நிரூபிக்க விரும்புகிறோம். வரதட்சணைக் கொடுமை பற்றி மட்டும் பேசுகிற நாம் இது போன்ற துரோகங்கள் பற்றி என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் தெரிய வேண்டியிருக்கிறது."

"ஓ."

"அந்தப் பணம் சும்மா வந்ததல்ல நீதிபதி அவர்களே! கடுமையான உழைப்பில் வந்தது. மனதார அளிக்கப் பட்ட ஒரு பரிசை வாங்கிக் கொண்டு மனசேயில்லாமல் ஏமாற்றுகிற இந்த மாதிரி ஆட்களுக்கு என்ன தண்டனை என்று கோர்ட் தீர்மானிக்க வேண்டுகிறோம்."

எதிர்க்கட்சி வழக்கறிஞர் கேட்டார்.

"சரி.. உங்கள் வாதத்திற்கே வந்தாலும்.. வாங்கிக் கொடுத்தது அவராகவே இருக்கட்டும்.. எங்கள் கட்சிக் காரர் அவரைத் திருமணம் செய்து கொள்வதாக எப்போது வாக்களித்தார்? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அது பற்றி எழுத்து மூலமான ஒப்பந்தம் இருக்கிறதா?"

கெங்குசாமி இப்போது தயக்கத்துடன் சொன்னார்.

"அவர்கள் குடும்பத்தார்கள் சொல்ல வேண்டும்!"

"அவர்கள் எல்லாரும் இல்லையென்று மறுக்கிறார்கள். பெண்ணின் பாட்டி... அம்மா... அப்பா... எல்லாரும் எழுதியே கொடுத்திருக்கிறார்கள். அதையும் கோர்ட்டில் சமர்ப்பிக்கிறேன் கோர்ட்டார் அவர்களே! கோர்ட்டார் விரும்பினால் அவர்களை அழைத்து நேரில் வேண்டு மானாலும் சொல்லச் சொல்கிறேன்."

கெங்குசாமி அமர்த்தலாகச் சிரித்தார்.

"மாண்புமிகு நீதியரசர் அவர்களே! அவர்கள் குடும் தைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் சொல்வார்களா?"

"அதிலென்ன சந்தேகம்?"

"இல்லை நீதிபதி அவர்களே! அவர்கள் குடும்பத்தி யே உண்மை மட்டுமே பேசுகிற ஒருவர் இருக்கிறார்.



அவரை எங்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க விரும்பு கிறேன்."

"யார்?"

"ஸ்ரீகலா!... எதிர்க்கட்சித் தரப்பில் குற்றம் சாட்டப் பட்டுள்ள... செல்வி மேகலாவின் தங்கை."

கோர்ட்டில் சலசலப்பு ஏற்பட்டது.

ஸ்ரீகலா எழுந்தாள்.

அப்போதுதான் சஸ்பென்ஸ் உடைந்தது.

மேகலாவைப் போல இல்லாமல் அமைதியாக நடமாடிக் கொண்டிருப்பாள்!

அதிகமாக அவனிடம் பேசியது கூட இல்லை.

மேகலாவின் சாதுரியத்தில் மயங்கிப் போய்க் கிடந்த காலத்தில் ஸ்ரீகலாவை ஒரு பொருட்டாகக் கூட நினைத் தது இல்லை.

ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு அவள் பாட்டுக்குத் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப் பாள்.

"அது கிடக்கு! புத்தகப் புழு! உலகம்னா... என்னன்னு தெரியாத பைத்தியம்!" என்பாள் மேகலா. பார்த்தசாரதி மெல்லிய சிரிப்போடு பேச்சை மாற்றி விடுவான்.

அந்தப் பெண்ணா?

அழுத்தமான பார்வையோடு அவள் கூண்டில் ஏறி நிற்பதை அவளது குடும்பமே அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தது.

அலுங்காத குலுங்காத நடையில் தளது பின்னல்... அசைய.. அந்தக் கூண்டில் ஏறி நின்றாள்!

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எந்தவிதமான கலக்கமும் இல்லாமல் தெளிவாக பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

வழக்கும் வழக்குமன்றமும் களை கட்டினாற்போல எல்லாரும் அமைதியாகக் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

பார்த்தசாரதி ஒருவித அதிர்ச்சியும். அதிசயமும் கலந்த பாவனையில் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 2

பார்த்தசாரதி உண்மையாகவே ஆச்சரியத்தின் எல்லைக்கே போனான்!

மேகலாவுடன் பழகிய நாட்களில் எல்லாம் அவன் ஸ்ரீகலாவை அதிகமாகக் கவனித்தது கூட இல்லை!

தான், உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பாள். மேகலா கலகலவென்று இருப்பாள் என்றால் ஸ்ரீகலா அமைதியின் வடிவமாக நடமாடுவாள்.

ஸ்ரீகலாவின் அறைக்குள் ஒரே ஒரு முறை போயிருந்தான். அறையில் இருந்த அலமாரியில் புத்தகங்கள் நிறைந்து இருந்தன.



மேஜை மேல் கை வேலைப்பாடு செய்வதற்கான உபகரணங்கள் இருந்தன. ஏதோ எம்ப்ராய்டரி வொர்க் செய்து கொண்டிருந்தாள்.

''உள்ளே.. வரலாமா?'' என்று கேட்டபடி உள்ளே நுழைந்தான்.

படபடப்பாக எழுந்து நின்றாள்.

''டென்ஷன் ஆகாதீங்க! மேகலா போன் பண்ணினா.. அவ வர்றதுக்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகுமாம். உங்க ரூம்ல புக்ஸ் ஏதாவது இருந்தா.. எடுத்துப் படிக்கச் சொன்னா..'' என்றான்.

அவசரமாக ஒதுங்கிக் கொண்டாள்!

முகமெல்லாம் சிவந்து போய் விட்டது!

''இந்த ராக் முழுக்க புக்ஸ்தான்... வந்து.. எடுத்துக்குங்க'' என்றாள்.

''தேங்க்ஸ்!'' என்றான். அதற்குப் பிறகு அவன் நிற்பதையே கவனிக்காதவள் போல் அவள் வேலையில் ஆழ்ந்து விட்டாள்.

பத்து நிமிடங்கள் தேடி ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அவனுக்கென்று மாடியில் இருந்த அறைக்குப் போனான்!

படிகளில் ஏறித் திரும்பும்போது தற்செயலாகக் கீழே பார்த்தான்!

ஸ்ரீகலாவின் பார்வை அவனைத் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்தப் பார்வையில் ஏதோ இருந்தது!

அப்போது புரியவில்லை!

இப்போது புரிகிறாற்போல் இருந்தது!

பலி கொடுக்க அழைத்துச் செல்லப்படுகிற ஆட்டைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தாள்!

ஸ்ரீகலா தன்னிடம் பேச முயற்சித்ததே இல்லை என்பது தெரியும். ஆனால் அதற்கான காரணங்களை அவன் எப்போதும் யோசித்ததேயில்லை. ஆனால் இப்போது பார்க்கும் போது புரிந்தது.

ஸ்ரீகலாவும் நல்ல அழகுதான்! அவள் முகத்தில் ஒரு அறிவின் களையும், மொத்தத்தில் ஒரு கம்பீரமும் இருந்தது.

தன்னால் வாங்கிக் கொடுக்கப்பட்ட வீட்டைப் பார்க்க வந்தபோது கூட அவள் ஒரு கூச்சத்துடன்தான் இருந்தாள் என்று தோன்றியது. மானிகளுக்கேயுள்ள ஒரு நாணம் போலும்!

மொத்தக் குடும்பத்துக்கும் ஸ்ரீகலாவுக்கும் ஒரு இடைவெளி இருந்தது இப்போது புரிகிறது.

அந்த நாட்களில் எல்லாம் அவன் வந்து விட்டால் அந்த வீடே அல்லோலகல்லோலப்படும்.

"மாப்பிள்ளை வந்திருக்காரு..! மாப்பிள்ளை வந்திருக்காரு" என்று பாட்டியிலிருந்து மேகலாவின் பெற்றோர் வரை அவனை மிகவும் உபசரிப்பார்கள்!

விருந்து அமர்க்களப்படும்!

பெரியவர்கள் எல்லாரும் அவனோடு அமர்ந்து சாப்பிடுவார்கள்! ஆனால் ஸ்ரீகலா மட்டும் காணப்படமாட்டாள்!

கேட்டால் "அது ஒரு புத்தகப் பூச்சி! மிங்கிள் ஆகமாட்டா" என்ற பதில்தான் வரும்.



யாரோடும் பழகுவதற்கும் கூட யோசிக்கிற பெண் இப்போது கோர்ட் படியேறி வருகிறாள். அதிலும் தன்னுடைய சொந்தக் குடும்பத்துக்கெதிராக!

பார்த்தசாரதி கொஞ்சம் கொஞ்சமென்ன நிறையவே திகைத்துப் போய் அமர்ந்து இருந்தான்.

ஸ்ரீ கலா நடந்து வருகிற இடைவெளியில் திரும்பி மேகலாவின் குடும்பத்தினர் அமர்ந்திருந்த திசையைப் பார்த்தான்!

மேகலாவும் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தாள்! மேகலாவின் பெற்றோர்கள் கூட இருண்டு போன முகத்துடன் அமர்ந்திருந்தார்கள்.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்! திகைப்பு மாறி மெல்லக் கடுப்பு தெரிந்தது.

பார்வையாளர்கள் போல அமர்ந்திருந்தவர்களிடையே கூட சலசலப்பு ஏற்பட்டது.

"மேகலாவோட சிஸ்டராம்ப்பா!"

"இதென்னப்பா... அதிசயமா இருக்கு?"

"என்னமோ வித்தியாசமா... இருக்கு!" என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

மேகலாவின் வக்கீல் அவர்கள் குடும்பத்தை நோக்கி இதென்ன.. இது? என்பதுபோல் கையசைவில் கேட்டுக் கொண்டிருந்தார்.

மேகலா கடுப்புடன் "தெரியவில்லை" என்பதுபோல் உதட்டைப் பிதுக்கினாள்!

மேகலாவின் அருகில் அமர்ந்திருந்த அவளுடைய "நண்பர்" அதைக் காட்டிலும் இருண்டு போன முகத்துடன் அமர்ந்திருந்தார்.

பார்த்தசாரதிக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

மெல்ல முகத்தைத் திருப்பி மேலே என்ன நடக்கிற தென்று பார்க்கலானான்!

ஸ்ரீகலா தனது நிதான நடையில் வந்து அப்போதுதான் சாட்சிக் கூண்டில் ஏறி நின்றிருந்தாள்.

* * *

மேகலா தன் அம்மாவைப் பார்த்தாள்!

"பாத்தியா.. அம்மா! குலத்தைக் கெடுத்த கோடாரிக் காம்பு.. மாதிரி.. நிக்கறா! எனக்குத் தெரியும்! அப்பவே தெரியும்" என்றாள் முணுமுணுப்பாக.

எப்போதும் ஸ்ரீகலாவின் அழுத்தமும், அமைதியும் மேகலாவுக்கும் பிடிக்காதவை.

பள்ளி நாட்களிலும் சரி, கல்லூரி நாட்களிலும் சரி அமைதியாக நடமாடுகிற ஸ்ரீகலாவை எல்லாருக்கும் பிடிக்கும்.

மேகலா விளையாட்டில் அதிரடியாக இருப்பாள்! ...கலா விளையாட்டிலும் ஓரளவு இருப்பாள். படிப்பில் ...ட்டி.

மேகலாவிடம் பேராசிரியர்கள் ஸ்ரீகலா மாதிரி மார்க் ...ங்க வேணாம்! கொஞ்சம் பாஸ் மார்க்காவது வாங்க ...ம்.. இல்லே!" என்று சொல்லும் போதெல்லாம் அவ ...க்குள் ஒரு நியாயமில்லாத கோபம் ஸ்ரீகலாவை ...க்கிப் பாயும்!

மேகலாவின் குடும்பத்தைப் பொறுத்தவரை பாட்டி ... சர்வாதிகாரி. பாட்டி அன்னபூரணிக்கோ மேகலாவைத் ... பிடிக்கும்.



மேகலாவின் தாய் புஷ்பம் அமைதியான சுபாவம். புஷ்பத்தின் கணவர் குகநாதன் அவ்வளவாக சாமர்த்தியம் இல்லாதவர். பாட்டி அன்னபூரணியின் வழியாக வந்த சொத்துக்கள்தான் அவர்களை இதுநாள் வரை வாழ வைத்தன என்று பேசிக் கொள்வார்கள். ஆனால் அன்ன பூரணியின் கணவர் எப்போதோ அவரை விட்டு விட்டு சென்று விட்டார்.

இப்போது உயிருடன் இருக்கிறாரா.. இல்லையா.. என்று தெரியவும் இல்லை. அது பற்றி அன்னபூரணிப் பாட்டி கவலைப்பட்டதும் இல்லை.

பின்னாட்களில் சிந்தித்துப் பார்க்கும்போது பார்த்த சாரதிக்கு ஒரு விஷயம் பிடிபட்டது. அன்னபூரணியின் "குண விசேஷங்கள்" பிடிக்காமல்தான் தாத்தா போய் விட்டார்.

விளையாட்டுப் போல் மேகலாவிடம் சொல்லுவான்.

"ஏன்.. மேகலா! அதென்ன உங்க பாட்டி... இந்தப் போடு போடறாங்க.. அதான் தாத்தா எஸ்கேப் ஆயிட்டாரோ?" என்று.

மேகலா தனது கவர்ச்சியான கலகலச் சிரிப்பை அள்ளி வீசுவாள். ஏதாவது ஒரு விதத்தில் அவன் கவனம் மாற்றி விடுவாள். அந்தக் கவனச் சிதறல் அவனுக்குப் பிடித்த மானதாகவே இருக்கும்.

எல்லாரும் கலகலப்பாகச் சிரிக்கையில் புஷ்பம் அமைதி யாக அமர்ந்திருப்பார் அல்லது உள்ளே சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருப்பார். ஸ்ரீகலா உதவி செய்து கொண்டிருப்பாள்.

தாயும், மகளும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருப்பார்கள். சுவையான ஐட்டங்கள் டைனிங் டேபிளுக்கு வந்து கொண்டிருக்கும்.

பார்த்தசாரதியை குகநாதனும் மேகலாவும், அன்னபூரணியும் புகழ்ச்சிக் கடலில் குளிப்பாட்டிக் கொண்டிருக்கையில் உள்ளே மௌனமாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அந்தப் பெண்மணிகள் இருவரையும் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று கூட பார்த்தசாரதி எண்ணியது இல்லை.

பார்த்தசாரதிக்கு இப்போது நினைக்கையில் அது குறித்து வெட்கமாக இருந்தது என்றால் சாட்சிக் கூண்டில் ஸ்ரீகலா அழுத்தமாக நிற்பதைப் பார்த்து புஷ்பம் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். ஆனால் வெளியில் எந்த உணர்வையும் காட்டாமல்.

''என்னை என்ன பண்ணச் சொல்றே! நீயாகட்டும், அவளாகட்டும் எப்போ.. நான் சொல்றதைக் கேட்டிருக்கீங்க'' என்றார் வருத்தம்போல்.

''புஷ்பம்! சும்மா.. ஒண்ணும் தெரியாத மாதிரிப் பேசாதே! உனக்குத் தெரியாமயா.. உன் மக இந்த வேலை செஞ்சிருக்கா!''

''என்னத்தே.. இப்படிச் சொல்றீங்க! உங்களுக்குத் தெரியாமல் எப்ப அவ என் கூடப் பேசியிருக்கா! இல்லே மேகலாவுக்கோ, ஸ்ரீகலாவுக்கோ அட்வைஸ் பண்ற அளவுக்கு.. எனக்கு என்னத்தை அறிவு இருந்துச்சு...'' என்றார் புஷ்பம் பாவமாக.

அன்னபூரணியம்மாவுக்கு நடக்கிற விஷயத்தில் எரிச்சல் என்றாலும் மருமகள் சொன்ன பதிலில் திருப்தி



ஏற்பட்டிருந்தது. மருமகள் மீது எப்போதும் நம்பிக்கை இருந்ததில்லை. தன்னைப் போல ''சாமர்த்தியம்'' மருமகளுக்கு இல்லை என்று நினைப்பு.

புஷ்பம் சாதாரணக் குடும்பத்தில் இருந்து வந்தவர். ஒரே சகோதரன். ஆனால் அவனுக்குப் பெரிய ஊதியம் இல்லை. அம்மா, அப்பாவும் அவருக்குத் திருமணமாகிய ஒன்றிரண்டு ஆண்டுகளிலேயே இறந்து போனார்கள்.

புஷ்பத்துக்குப் போக்கிடம் இல்லாமல் போனது. திருமணமான புதிதில் மாமியாரின் ''நடத்தை'' அவருக்குப் புரிந்து போனது. வெளியுலகத்துக்குத் தெரியாத வண்ணம் தனது அழகைப் பயன்படுத்தித்தான் அவர் இத்தனை சொத்துக்களை சேர்த்திருக்கிறார் என்பது புரிந்தது.

புஷ்பம் வந்த புதிதில் அன்னபூரணி புஷ்பத்தையும் தன் வழிக்குக் கொண்டு வர முயற்சி செய்தார். திருமணம் முடிந்த முதலாமாண்டுக் கடைசியில் மாமனார் வீட்டை விட்டுப் போனவர்தான். அதுவும் தன்னால்தான் நேர்ந்தது என்று புஷ்பத்துக்குத் தெரியும்.

ஒரு நாள் கணவனுக்கும், மனைவிக்கும் வாக்குவாதம்!

''பாரு.. பூரணி! உன்னைப் பத்தி எல்லாம் தெரிந்தும் நான் இத்தனை நாள் பேசாம இருந்தேன். ஏன் தெரியுமா? குடும்பம்னு ஒண்ணு ஆயிடுச்சு.. தப்போ.. ரைட்டோ.. நம்ம குகநாதன் எனக்குப் பொறந்த புள்ளைன்னு எனக்குத் தெரியும். ஒரு ஆம்பளைன்னு வீட்ல இருந்தா.. அது குடும்பம்னு பேருக்காவது ஓடிகிட்டு இருக்கும். குகநாதன் நல்லவன் அப்பிராணி. அவனுக்கு வாய்த்தவளோ.. புஷ்பம்.. குணவதி.. தெய்வம்! அவளைத் தொல்லை

பண்ணாதே! சேர்த்து வச்சிருக்கியே அழுக்குச் சொத்து அது போதும்..!" என்றார்.

அன்னபூரணி இப்போதெல்லாம் கொஞ்சம் அடக்கித் தான் வாசித்தார். ஆனால், தனது முயற்சிகளைக் கைவிட வில்லை. ஒரு நாள் புஷ்பம் மாமனாரது அறையில் நின்றாள். அந்த நேரம் அன்னபூரணி யாரோ தன் நண் பர்களது குடும்பத்தைப் பார்க்கப் போயிருந்தார்.

"மாமா! அத்தையோட விருப்பத்துக்கு என்னால நடக்க முடியாது. எங்க வீட்டுக்காரருக்கு விஷயம் புரி யவே மாட்டேங்குது.. என்னைக் காப்பாத்துங்க.." என்று அழுதாள்.

சுகவனம் பெருமூச்சு விட்டார்.

"அம்மா! அந்தப் பயலுக்கும் யாராவது பொண்ணு குடுக்கணும். அவனும் குடும்பம்னு செட்டிலாகணும்னு தான் நான் இந்தக் குடும்பத்துல ஒட்டிகிட்டுக் கிடந்தேன். நீ ஒண்ணும் கவலைப்படாதே! நான் பாத்துக்கறேன்" என்று உறுதியளித்தார்.

புஷ்பம் நிம்மதியானாள். ஆனால், அன்னபூரணி தன் தாக்குதலை வேறு விதமாக ஆரம்பித்தார்.

"என்ன.. மாமனாரின்.. சப்போர்ட்டா! மாமனாருக்கும் மருமகளுக்கும் என்ன அப்படியொரு இணக்கம்" என்று ஒரு விதமான குரலில் கேட்டார்.

போகவர இது போலவே பேசுவதைக் கேட்ட புஷ்பத் துக்கு வேறு விதமாகக் கவலையேற்பட்டது. அதே மாதிரி நிலைமை இருந்தபோது சுகவனம் திடீரென்று ஒரு நாள் வெளியே கிளம்பி விட்டார்.

போகும்போது.. ஒரு குண்டையும் போட்டு விட்டுப் போனார்.



"மன அமைதி வேண்டிப் போகிறேன். உன்னுடைய மோசமான நடத்தை பற்றிய எல்லா விதமான சாட்சிகளும் என்னிடம் இருக்கின்றன. நீ புஷ்பத்துக்கு ஏதாவது தொல்லை கொடுத்தால் எங்கிருந்தாலும் நான் வரு வேன்.." என்று மிரட்டி விட்டுப் போயிருந்தார். அத னாலோ என்னவோ அன்னபூரணி கொஞ்சம் அடங்கி விட்டார்.

"இவகிட்டே அந்தாள் இத்தனை நாள் இருந்ததே பெரிய விஷயம்" என்று எல்லாரும் ஜாடையாகவும் காது படவும் பேசவும் பயமாகிப் போனது.

புஷ்பத்தின் சகோதரன் ஒருநாள் வந்து அன்னபூரணியை நேரடியாக மிரட்டி விட்டுப் போனான்.

"அம்மா! உங்களைப் பாத்து பொண்ணைக் குடுக் கலை. மாமனாரைப் பாத்துத்தான் பொண்ணைக் குடுத் தோம். புஷ்பம் என்னைக்காவது அழுதுகிட்டு வந்து நின்னா.. நான் சும்மாயிருக்க மாட்டேன்" என்று.

இந்த இரண்டு மிரட்டல்களும் அவரை அடக்கி வைத்து விட்டன. ஆனால், ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவு காத்திருக்குமாம் கொக்கு என்பது போல் மேகலாவின் வளர்ச்சியில் அன்னபூரணி மகிழ்ச்சியடைந்தார்.

மேகலா.. எந்த அளவுக்கு அழகாக இருந்தாளோ அந்த அளவுக்கு அழகின் காரணமாக கர்வமாகவும் இருந்தாள்.

குகநாதனுக்குப் பெயருக்கு ஒரு கடை வைத்துக் கொடுத்திருந்தார். அன்னபூரணிதான் நிர்வாகம் செய்து கொண்டிருந்தார். ஆனாலும் பெரிய அளவில் நிர்வாகத்தில் வெற்றி பெறவில்லை. அதனால் கடை அப்படியே இருந்தது.

ஒரு பக்கம் சொத்துக்கள் கரைந்து கொண்டிருந்தது. அதனால் அன்னபூரணிக்கு உள்ளூர கவலை பெருகிக் கொண்டேயிருந்தது. அந்த நோக்கில் மேகலா தன்னைக் கொண்டே வளர்வதில் அவருக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி ஏற்பட்டது.

"இதபார்றி, மேகலா! உன்னோட அழகுக்கு ஏத்தவனா மட்டுமில்ல உனக்காக உயிரையே குடுக்கறவனா.. இருக்கணும். அது முக்கியம்" என்றார்.

"ஆமா பாட்டி! பணக்காரனாத்தான் பாக்கணும்" என்றாள் மேகலா.

அழகுக் கலைகளில் ஆர்வம் செலுத்தினாள். பியூட்டிஷியன் கோர்ஸ் எடுத்துக் கொண்டாள். அதனால் தன்னை விதவிதமாக அலங்கரித்துக் கொண்டாள்.

டிரஸ் சென்ஸ் என்பதில் தேர்ந்தவளாக விளங்கினாள். அழகாக உடை உடுத்தும் திறன் இருந்தது. அழகும் நேர்த்தியுமாக அவள் நடமாடும்போது கண்கள் மொய்ப்பதில் அவள் பெருமை உடையவளாக இருந்தாள்.

எப்போதும் தனது அழகையே பிரதானமாகக் கருதியமையால் அது குறித்து கவனம் செலுத்துவது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

போதாக்குறைக்கு அன்னபூரணியம்மாள் அந்த நினைப்பை விசிறி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். பெருமையும் இளமையின் ஆதிக்கமுமாக அவள் திரிந்து கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில்தான் பார்த்தசாரதி அவளைப் பார்த்தான்.

பார்த்த கணமே மயங்கி விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.




கோர்ட்டில் எழுந்த சலசலப்பு இப்போது அவனது கவனத்தை திசை திருப்பியது. சாட்சிக் கூண்டில் என்ன நடக்கிறதென்று கவனிக்க ஆரம்பித்தான்.

"எனது கட்சிக்காரரை உங்களது சகோதரி திட்டமிட்டு ஏமாற்றி விட்டார் என்பதாகத்தான் எனது கட்சிக்காரர் உங்கள் சகோதரியின் மீது செக்ஷன் 417ல் குற்றம் சாட்டியிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் எனது சகோதரியும் மிஸ்டர் பார்த்தசாரதியும் திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்திருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்காகத் திருமணப் பரிசாகத்தான் அந்த பங்களாவை எனது சகோதரிக்கு வாங்கிக் கொடுத்தார் என்பதும் எனக்குத் தெரியும்."

கோர்ட் வளாகத்தில் இருந்த அத்தனை பேரும் அதிர்ந்து போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் பார்த்தசாரதி உட்பட...

## 3



"டேய், கிராமத்துக்குப் பக்கத்துல ஒரு இருபது ஏக்கரா விலைக்கு வருதாம்டா! வாங்கிப் போடலாம்டா!" என்றார் அப்பா.

பார்த்தசாரதி "ஆமா! ஏற்கனவே வாங்கிப் போட்டிருக்கிற முப்பது ஏக்கராவுக்கே வேலையைக் காணமாம். இதுல இன்னும் இருபது ஏக்கராவா?" என்றான் முணுமுணுப்பாக.

அம்மாவிடம்தான்! அப்பாவிடம் இப்போதும் எதிர்த்துப் பேசுகிற துணிவு அவனுக்கு வரவில்லை.

"என்னடா! முணுமுணுக்கறே! உனக்குக் கல்யாணம் ஆகட்டும்னு பாக்கறேன். அதுக்கப்புறம் ஊர்ல போய் விவசாயம்தான். இந்த வருஷக் கடைசியிலே போய் தென்னந்தோப்புக்கு ஏற்பாடு பண்ணப் போறேன்."

"கல்யாணம் ஆனா.. என்னை அம்போன்னு விட்டுட்டுப் போயிடலாம்னு நினைப்பாக்கும்."

"உன்னை எதுக்குடா அம்போன்னு விட்டுட்டுப் போறது? வைஃப் வந்துடுவா இல்லே! அப்புறம் உங்கக்கா வேற பக்கத்துல இருக்கா... உனக்கென்ன கவலை!" என்றார்.

"ஆமாடா! சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோ!" என்றார் அம்மா புனிதவதி.

"அம்மா இருபத்தெட்டுல பண்ணிக்கறேன்."

"அவ்வளவு நாளா? இருபத்தேழு வயசுதாண்டா கரெக்டான வயசு" என்றார் அம்மா.

"அம்மா! இந்த அமெரிக்க பொண்ணெல்லாம் எனக்கு வேண்டாம். இந்த நம்ம இந்திய வாழ்க்கைக்கு ஒத்து வராதும்மா! பிராப்ளம்ஸ் வரும். அதனால இந்தியப் பொண்ணு தான்... வேணும்" என்றான்.

"சரி ஏதோ ஒரு பொண்ணு! கொஞ்சம் நல்ல பொண்ணா.. பொண்ணு கொஞ்சம் கௌரவமா.. இருந்தாப் போதும்.." என்றார் அம்மா.

அப்பா கோபாலகிருஷ்ணனுக்கு பாம்புக் காது.

"ஏதோ நீ பொண்ணு பார்த்து அவன் கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி கனவெல்லாம் வச்சுக்காதே! ஏதோ ஒரு பொண்ணு அவன் மனசுக்குப் பிடிச்சதுன்னு கொண்டு வந்து நிறுத்திட்டாலும் போதும்னு நினை!" என்றார்.



"ஆமா!.. நீங்களே அவனுக்கு ஐடியா குடுங்க" என்றார் புனிதவதி.

"நான் என்னத்தை ஐடியா குடுக்கறது? இங்க அமெரிக்காவுல பாக்கறயில்லே!.. இஷ்டத்துக்கு மேரேஜ்.. இஷ்டத்துக்கு.. டைவர்ஸ்ன்னு.. அப்படியெல்லாம்.. இல்லை.. ஏதோ.. அமைதியான வாழ்க்கை வாழ்ந்தா சரி."

அப்பா அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றியவர். தன் விருப்ப ஓய்வு வாங்கிக் கொண்டு மகனுக்காக அமெரிக்காவுக்கு வந்து விட்டார். மகளுக்கும் அமெரிக்காவில் மாப்பிள்ளை கிடைக்கவே அருகில் இருப்பது போல் ஏற்பாடு செய்து கொண்டனர்.

வாழ்க்கை லகுவாகவே ஓடிக் கொண்டிருந்தது. அதிலும் அவர்கள் இருந்த பகுதியில் நிறைய தமிழர்கள் இருந்தார்கள். அதனால் எல்லாம் இயல்பாகவே ஓடியது.

வருடத்திற்கு ஒருமுறை கிராமத்துக்குப் போய் விட்டு வருவார்கள். ஒரு மாதம் இருந்து விட்டு வருவார்கள்.

மகன் திருமணத்தைத் தள்ளிப் போடுகின்றானே என்ற ஒரே ஒரு வருத்தம் மட்டும்தான்.

பணியில் இருந்து கொண்டே எம்.எஸ். முடித்தான். "அப்பா படிப்பு.. படிப்புன்னு இருந்துட்டு இப்பத்தான் கொஞ்சம் ஓய்ஞ்சிருக்கேன். கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கறேன்" என்றான்.

"அதுவும் சரி..." என்றுதான் தோன்றியது. ஆனால் ஒரு விஷயத்தில் தெளிவாக இருந்தார்.

"தம்பி! அந்தக் காலத்துல நாங்க எல்லாம்.. கை காட்டின இடத்துல கல்யாணம் பண்ணிகிட்டோம். பெரிய எதிர்பார்ப்புக்கள் இல்லை. அதனால பிரச்சினைகள்

இருக்கலை. ஆனா.. உங்க காலம் அப்படியில்லை வீட்டுக் காரரோட படிக்காத பொண்டாட்டியா இருந்தாலும் சந்தோஷமா இருந்தாங்க. ஆனா.. உங்க கனவுகள் பெருசு. உங்க வாழ்க்கை முறைகளும்.. வேற. உனக்கும் உன் வைஃப் இப்படித்தான் வேணும்னு ஐடியா இருக்கும். யு கூல்..! நாங்க நடத்தி வைக்கிறோம்..'' என்றார்.

"பொண்ணோட பேக்கிரவுண்ட் எதுவா இருந்தாலும் சரியாப்பா?'' என்றான்.

"பேக் கிரவுண்ட்.. ஃப்ரெண்ட் கிரவுண்ட்.. என்னடா, பெருசா! எத்தனையோ மோசமான குடும்பங்கள்ல.. அருமையான பொண்ணுங்க.. பொறந்து குடும்பம் நடத்தி இருக்காங்க. அதனால.. நீ முடிவு பண்ணிக்க'' என்றார்.

அம்மா.. அப்பா பச்சைக் கொடி காட்டியதாலோ என்னவோ அவனும் தெளிவாக இருந்தான். பரபரப்பாகப் பெண்கள் பக்கமே கண்ணை ஓட்டிக் கொண்டிருப்பதோ தேடிக் கொண்டிருப்பதோ அவனைப் பொறுத்தவரை நிகழவில்லை.

தன்னுடைய தொழில் தொடர்பான முன்னேற்றத்தில் தான் கவனம் செலுத்தினான். நண்பர்களில் கதிர் என்று ஒருவன், காதல் திருமணம் செய்து கொண்டான். இத் தனைக்கும் பெண்ணை அவனோடு ஒப்பிடும்போது சுமார்தான்.

"என்னத்தைக் கண்டு டெஸ்ட் பண்ணினே?'' என்று கேட்டான்.



''என்னத்தைக் காணறது? ரெண்டு மூணு விசேஷத் துல பார்த்தேன். எனக்குப் பிடிச்சது.. அவ்வளவுதான்'' என்றான். அதுபோல் ஒரு பெண் தன் வாழ்க்கையிலும் வரக்கூடும் என்று காத்துக் கொண்டிருந்தான்.

அப்படி ஒரு பெண் அவனது வாழ்க்கையிலும் வந்தாள்.

* * *

''டேய்! ஆகாஷ்.. நான் சொன்ன மாதிரியே.. உன் கல்யாணத்துக்கு வந்துட்டேன். பாத்தியா?'' என்றான் பார்த்தசாரதி.

''ரொம்பத் தாங்க்ஸ்டா! நீ எங்கே வராம வுட்டுடுவி யோன்னு நினைச்சேன். ஆனா... அதே சமயத்துல..'' என்றவன் ''நெருங்கின நண்பன்னாலும் ஒருத்தன் ப்ளைட்டுக்கு செலவு பண்ணி வர முடியுமான்னு மனைத் தேத்தி வச்சிருந்தேன்'' என்றான் ஆகாஷ்.

''ஆம்டா! இந்த ப்ளைட் சமாச்சாரத்துனால சில நேரங்கள்ல வெளி நாட்டுல இருக்கறவங்க.. அவுங் கவங்க வீட்டு நல்லது கெட்டதுக்கே வரமுடியறதில்லை'' என்றான் அருண்குமார்.

''அதிலயெல்லாம்.. நாங்க விவரமில்ல! போன மாசமே எங்க கம்பெனி சார்பா ஒரு டிரிப் நான் இந்தியா வர வேண்டியிருந்தது. அதை ஒரு பத்து நாள் தள்ளிப் போட்டுக் கூட ஒரு மாசம் லீவும் போட்டுட்டு.. வந்தேன். இந்தத் தடவை இண்டியாவைக் கொஞ்சம் சுத்திப் பாக்கலாம்னு ஐடியா'' என்றார்.

"குட்.. குட்! ஆனாலும் கூட இப்படியெல்லாம்.. என் கல்யாணத்துக்காக நீ டிஸைட் பண்ணி வந்தது பெரிய விஷயம்பா."

"அடடா! போதும்டா! நீ என் ப்ரண்டுடா.." என்று சிரித்தான். "அது சரி! இப்படியே ஓட்டிருவீங்களா..? பொண்ணைக் காட்ட மாட்டீங்களா?" என்றான்.

முதல் நாளிரவே மண்டபத்துக்கு வந்து விட்டான் பார்த்தசாரதி. எப்படியும் கல்லூரி நண்பர்கள் வருவார்கள். எல்லோருடனும் இரண்டு மூன்று நாட்கள் கழிக்க வேண்டுமென்று ஆவலாய் இருந்தான்.

பார்த்தசாரதியை மிகவும் பெருமையாக அழைத்துக் கொண்டு போனான் ஆகாஷ்.

"லதா..! இது என் க்ளோஸ் ப்ரண்ட் சாரதி.. நான் சொன்னேனே!" என்று அறிமுகப் படுத்தினான்.

"ஆமா! எனக்காகக் கண்டிப்பா வருவான்னு சொன்னீங்களே?" என்றாள் லதா.

நண்பர்கள் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"எல்லாத்தையும் ஒப்பிச்சுருக்கான்டா! டோட்டல் சரண்டர்தான்" என்று முணுமுணுத்தார்கள். அது லதாவின் காதில் விழ அவள் முகம் சிவந்தாள்.

"அப்படியில்லே..!" என்று அவள் ஆரம்பிக்க,

"லதா.. நீ எதுக்கு விளக்கம் சொல்றே! ஆமாண்டா! அப்படித்தான்! நீங்கள்ளாம் தோப்புக்கரணமே போடறது தெரியாதாக்கும்.." என்றான்.

"டேய்! வேணாம்டா! நீங்க அப்படியெல்லாம் ஆரம்பிச்சீங்கன்னா.. எனக்கு பயமாயிருக்கு" என்று பார்த்தசாரதி சிரிக்க,



"ஆமடா! நீ ரொம்ப ஸ்பீட்தான்..." என்று வேடிக்கைப் பேச்சுக்கள் ஆரம்பித்தன.

பார்த்தசாரதி முழுமையாக அந்தக் கல்யாண விளையாட்டுக்களில் பங்கெடுத்துக் கொண்டான். கலகலவென்று சிரித்து மகிழ்ந்தான்.

அப்போதெல்லாம் இரண்டு அழகிய கண்கள் தன்னைக் கூர்ந்து கவனிப்பதை அவன் கவனிக்கவில்லை. அடுத்த நாள்தான் அது அவன் கவனத்துக்கு வந்தது.

அதுவே பின்னாளில் அவனது எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமாகவும் அமைந்தது.

* * *

'அலை பாயுதே கண்ணா!' என்ற பாடலுக்கு அபிநயம் பிடித்தாள் மேகலா.

வழக்கமாகக் கல்யாண வீடுகளில் நடைபெறும் கச்சேரிகளின்போது மக்கள் அங்குமிங்கும் நடமாடுவதையும், போனால் போகிறதென்று இடைவெளி கிடைக்கும்போது கொஞ்ச நேரம் அமர்ந்து கவனித்து விட்டு எழுந்து போகிறவர்களைத்தான் பார்த்தசாரதி பார்த்திருக்கிறான். ஆனால், இந்தப் பெண்ணுடைய நடனத்தைப் பார்க்க அமர்ந்த எல்லாரும் ஏதோ கட்டிப் போட்டாற் போன்று அமர்ந்திருப்பதைப் பார்த்தவுடன் அவனுக்கே ஆர்வம் பொங்கியது.

மேகலாவின் அபிநயங்கள் அருமையான வகையில் விரக தாபத்தையும், காதல் ஏக்கத்தையும் வெளிப்படுத்த ஏகப்பட்ட இளைஞர்கள் மெய்ம்மறந்து போய் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பார்த்தசாரதியின் கண்களும் அந்தப் பெண்ணையே மொய்த்துக் கொண்டு கிடந்தன. இடையிலே குறிப்பாக

இரண்டு மூன்று முறை அந்தப் பெண்ணின் பார்வை தன் மேல் நிலைத்து மீண்டாற் போல் உணர்ந்தான்.

தேனில் விழுந்த எறும்பைப் போல் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான்.

ஒரு மணி நேரம்தான் அவளது நிகழ்ச்சி. அதற்குப் பிறகு குழந்தைகளை ஆடவிட்டிருந்தார்கள்.

அந்தத் திருமண மண்டபத்தில் நிறைய அறைகள் இருந்தன. அதில் ஒன்றில் உடை மாற்றிக் கொண்டிருந்தாள் மேகலா.

நிறையப் பேர் அவளைப் பாராட்டுவதற்காகக் காத்திருந்தார்கள். மேகலா வெளியே வந்து நிற்கவும் சரமாரியாகப் பாராட்டினார்கள். ஒரு பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு சற்று பரபரப்பாக இருந்தது. அதற்குப் பிறகுதான் ப்ரீயாக இருந்தாள்.

விருந்து இரண்டு விதமான முறையில் இருந்தது. பந்தியில் பரிமாறி வைத்திருந்ததில் சாப்பிட விரும்பியவர்கள் போனார்கள். அதில்லாமல் 'பஃபே' முறையிலும் உணவு பரிமாறப்பட்டது.

பார்த்தசாரதியும், நண்பர்களும் ஒரு குழுவாகப் போய் வரிசையாக உணவு வாங்கிக் கொண்டு நின்றார்கள். அந்த சமயம் மேகலா தனது தோழிகளோடு நடக்கையில் அருண்குமார் மேகலாவை அழைத்தான்.

"மேகலா" என்று.

மேகலா "என்ன.. அருண்?" என்று வந்தாள்.

"சாரதி.. இது என்னோட கசின் மேகலா.. டான்ஸ் பார்த்தீங்க.." என்று அறிமுகப்படுத்தினான்.



''மேகலா! இது பார்த்தசாரதி.. மாப்பிள்ளையோட க்ளோஸ் ப்ரண்ட்.. அட் ப்ரசன்ட் அமெரிக்காவுல என்ஜினியரா இருக்கான். நிறைய சம்பாதிக்கிறான். சம்பாதிச்சதை செலவு பண்றதுக்காக ஒரு வைஃப் தேடிக்கிட்டிருக்கான்'' என்றான்.

பார்த்தசாரதி புன்னகைத்தான்... அருண்குமார் சொன்னதையே கண்டு கொள்ளாதவன் போல தொடர்ந்தான்.

''மேடம்! உங்க டான்ஸ் ப்ரொகிராம் ரொம்ப நல்லா இருந்தது'' என்று.

''தாங்க்ஸ்!'' என்றாள் மேகலா அடக்கத்தின் சிகரமாக.

''மேடம்.. ரெகுலரா.. டான்ஸ் ப்ரொகிராம்.. குடுக்கறீங்களா?'' என்று கேட்டான்.

''இல்ல சார்! சும்மா.. கொஞ்ச நாள் கத்துக்கிட்டதுதான்! ப்ரண்ட்ஸ் வீட்டு விசேஷம், ரிலேடிவ்ஸ் வீட்டு விசேஷங்கள்ல மட்டும் ஆசைக்காகக் கொஞ்சம் ஆடுவேன்.''

''எனி ஹவ்.. பர்பாமன்ஸ் ரொம்ப நல்லா இருந்துச்சு..'' என்றான்.

அதையே காரணமாக வைத்துக் கொண்டு மேலும் சற்று நேரம் பேசினார்கள்.

மேகலா அந்தப் புறம் நகர்ந்ததும்.. அருணைப் பார்த்துக் கேட்டான்.

''டேய்! என்ன திடீர்ன்னு இன்ட்ரொட்யூஸ் பண்ணறே?'' என்று.

''இல்லே! அய்யா.. நடனத்தைப் பார்த்து மலைச்சுப் போய்க் கிடந்தீங்களே.. அதான்..'' என்று அவன் குறும்பாகச் சிரித்தான்.

பார்த்தசாரதி இயல்பாகப் புன்னகைத்தான்.

"பர்பாமன்ஸ் மட்டுமில்ல.. அவளும் குட் லுக்கிங் தான்.." என்றான் அருண்குமார்.

"ஏன்.. நீ ட்ரை பண்ணலையா?"

"அடப்பாவி! எனக்கு முறை வராதுடா.. எங்கயோ சுத்தி வளைச்சு.. சிஸ்டர் முறைன்னாங்க.. அதான் முதல்லயே.. நான் மனசை செட் பண்ணிட்டேன்" என்றான்.

"அப்படியா.. விஷயம்?" என்றான் பார்த்தசாரதி. எப்படியும் தனது கண்கள் அந்தப் பெண்ணையே சுற்றுவதை அவனால் தடுக்க முடியவில்லை.

மேகலா தனது பாட்டியிடம் சொன்னாள்.

"பாட்டி! பார்த்தசாரதி.. இல்லே..! அவரு அமெரிக்காவுல என்ஜினியரா இருக்காராம்.. லட்சக் கணக்கில சம்பாதனையாம்.." என்றாள்.

"பாரு..! உனக்குப் புடிக்குதான்னு பாரு! புடிச்சா.. பழகிப் பாரு.." என்றார் அன்னபூரணி அலட்டிக் கொள்ளாமல்.

மேகலாவுக்கு அதற்குப் பிறகு அவனிடம் நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வது ஒன்றும் கடினமாக இருக்கவில்லை.

அதற்கேற்றாற்போல் ஒரு நிகழ்வும் நடந்தது!

பெண்ணும், மாப்பிள்ளையும் மேடையில் அமர்ந்திருந்தார்கள். திருமணத்திற்கு முன்பே முதல் நாள் ரிசப்ஷன் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மேகலா பெண்ணுக்கு உதவியாக ஏதோ செய்வதும், போவதும்.. வருவதுமாகவும் இருந்தாள்.



பார்த்தசாரதி முன்வரிசையில் அமர்ந்திருந்தவன், அடிக்கடி அருண்குமாரும், மற்ற நண்பர்களும் மேடையில் இருந்து அவனிடம் ஏதோ சைகை காட்டி இளவயதுக்கு உரிய விதத்தில் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அருண்குமார் திடீரென்று "டேய்! இங்க வாடா..! ஒரு விஷயம் இருக்கு.." என்று வற்புறுத்த பார்த்தசாரதி மேடை நோக்கிப் போனான். வந்து போகிற கூட்டம் ஓய்ந்திருந்தது.

மணமகனைச் சுற்றி ஏதோ பேசிக் கொண்டிருந்த பார்த்தசாரதியும் ஒதுங்கிச் சிரித்துக் கொண்டு ஓரடி பின் வாங்கிய அதே நேரத்தில் அந்தப் பக்கம் வந்தாள் மேகலா.

மேகலாவின் மீது முழுமையாகச் சாய்ந்தாற் போல் சாய்ந்த பார்த்தசாரதியை தன் கைகளால் வளைத்துக் கொண்டாள் மேகலா.

எதேச்சையாக நிகழ்ந்தது போல அவன் தோள்களை அழுத்திக் கொடுத்தாள் மேகலா. பிறகு எடுத்து விட்டாள்.

கண்கள் படபடக்க "ஐ ம்.. சாரி" என்றாள்.

"பரவால்லே.. பரவால்லே!" என்று தடுமாறினான் பார்த்தசாரதி.

சங்கடமான முகபாவத்துடன் அவன் ஒதுங்கிக் கொள்ள மேகலா கூச்சமுற்றவள் போல் தயக்கத்துடன் விலகிக் கொண்டாள்.

"ம்.. க்கும்" என்று நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து கனைக்க.. அவன் கோபம் போல் முறைத்தான்.

"டேய்.. ஆக்ஸிடெண்ட்டலா நடந்ததுடா!" என்றான் பார்த்தசாரதி முகம் சிவக்க..

"ம்.. பொண்ணு.. அழகாயிருக்கில்லே!.. எல்லா ஆக்ஸிடெண்ட்டும் நடக்கும்.." என்றான் அருண்குமார்.

"அது நிஜம்தான்..!"

"ஏது..?"

"பொண்ணு ரொம்ப அழகா இருக்கிறது'' என்றான் பார்த்தசாரதி முகம் சிவக்க. எல்லாரும் சிரித்தார்கள்.

## 4



"வாங்க..! வாங்க!" என்று வரவேற்றாள் மேகலா.

"இல்லே..! அருண். எதுக்கோ இங்கே வரச் சொன்னான்.." என்று லேசாக முகம் சிவக்க நின்றான் பார்த்தசாரதி.

"ஓ..! ஆமா.. எனக்குப் போன் பண்ணினாப்ல.." வைஃப்பை அவங்க அம்மா வீட்ல விட்டுட்டு இங்க வர்றேன்னாரு.. நீங்க அவ்வளவு தூரம் வர்றவராக்கும். வெயிட் பண்ண வேண்டாம். அதுக்காக இங்க வரச் சொல்லியிருப்பாரு" என்றாள்.

கிட்டத்தட்ட அரைமணி நேரம் காத்திருக்க வேண்டி வந்தது. அப்போது என்ன செய்வது என்று தெரியவில்லை. கொஞ்சம் நேரம் அரட்டையடித்தான்.

அப்போது மேகலா.. இருந்த வீடு ஓரளவு பெரிய வீடுதான். அழைத்துப் போய் சுற்றிக் காட்டினாள்.

பாட்டியை அறிமுகப்படுத்தினாள்.

"தம்பி நீங்க வந்ததுல ரொம்ப சந்தோஷம்..! உங்களை மாதிரி அறிவாளிங்க.. திறமைசாலிங்களோட தொடர்பு வச்சுக்கறது நல்லதில்லீங்களா..?"



"ஐயோ.. ரொம்ப உசரத்துல தூக்கி வைக்காதீங்கம்மா.. நான் ரொம்ப சாதாரணமான ஆளுதான்!" என்றான் சற்றே கூச்சத்துடன்.

ஒவ்வொரு சுவற்றிலும் அழகான ஓவியங்கள் இருந்தன. அதெல்லாம்.. உண்மையில் வரைந்தது ஸ்ரீகலா என்றாலும் தான்தான் வரைந்தாற்போல் சொல்லிக் கொண்டாள் மேகலா.

உள்ளே அமர்ந்திருந்த ஸ்ரீகலா தனக்குள் சிரித்துக் கொண்டாள். அந்தக் கட்டத்தில் பார்த்தசாரதி மயங்குவதற்கு பெரிய வலையாக வீசப்படுவது புரிந்தது. ஆனால் தான் செய்வதற்கு எதுவும் இல்லை என்று உணர்ந்தவளாக உள்ளேயே அமர்ந்திருந்தாள்.

தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றாள் மேகலா. அறையில் அவளது நடன போட்டோ ஒன்று ப்ளோ அப் செய்து மாட்டப்பட்டிருந்தது.

மிகவும் அழகாக இருந்தது.

மேகலாவின் கண்களின் பாவத்தில் சற்று நேரம் மயங்கினாற் போல் நின்று கொண்டிருந்தான் பார்த்தசாரதி. அவன் நின்று கொண்டிருந்த விதம் பார்த்து அன்னபூரணி மகிழ்ந்து போனார்.

"பேசிக்கிட்டிருங்க.. தம்பி!" என்று தனிமை கொடுத்து விலகிப் போனார்.

மேகலா மிகவும் கவனமாகத் தனது நல்ல பக்கத்தை மட்டுமே விவரமாக விளக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் ஸ்ரீகலா வரைந்து வைத்திருந்த ஓவியங்களை மட்டும் தான் வரைந்தாற்போல் சொல்லிக் கொண்டாள்.

ஸ்ரீகலா கீழே இறங்கிப் போய் விட்டாள். தனது தாயிடம் போய் "அம்மா நான் கோவிலுக்குப் போய் விட்டு வருகிறேன்" என்று வாசல்வரை வரும்போது சரியாக அந்த நேரம் அருண்குமார் வந்தான்.

அருண்குமாருக்கு ஸ்ரீகலாவை மிகவும் பிடிக்கும்.

"ஸ்ரீ எங்கே. கிளம்பிட்டே?" என்றான்.

"கோவிலுக்குப் போயிட்டு வரேன் அண்ணா!" என்றாள்.

"என்.. ஸ்ரீ.. பார்த்தசாரதி வரச் சொல்லியிருந்தேனே.." என்று தனக்குள் சொல்லிக் கொண்டாற்போல் திரும்பியவன் பார்த்தசாரதி வந்த கார் நிற்பதைப் பார்த்து,

"ஓ.. வந்துட்டானா?" என்று சொல்லிக் கொண்டான். பிறகு திரும்பி "அவன் எங்கே?" என்றான்.

ஸ்ரீகலா வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. ஆனால் மாடியைக் கைகாட்டி விட்டுக் கிளம்பினாள்.

அருண்குமார் முறுவலித்தபடி அவளைப் பார்த்தான். பிறகு ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டான்.

அன்னபூரணி சமையலறையில் இருந்து வெளியே வந்தவர்.

"அருண்! எப்ப வந்தே? ஏன் இங்கயே உட்கார்ந்துகிட்டிருக்கே?" என்றார் அன்பாக.

இப்படி ஒரு அருமையான பையனைக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தியிருக்கிறானே என்று அவருக்கு ஒரே சந்தோஷம்.

மேலேயிருந்து கலகலவென்று சிரிப்புச் சத்தம் கேட்டு அன்னபூரணியின் முகம் மலர்ந்து போனது.



"ரெண்டு பேரும் ப்ரண்ட்ஸாயிட்டாங்க" என்று அருணைப் பார்த்துச் சிரித்தார்.

அருண்குமாரின் தாயார் அன்னபூரணியம்மாவைப் பற்றிப் பேசும்போது மரியாதைக் குறைவாகப் பேசமாட்டார். ஆனால் ஒரு விதமான கேலித் தொனி இருக்கும். அருண்குமார் அதை எப்போதும் புரிந்து கொள்ளவில்லை.

புஷ்பத்தை மிகவும் பிடிக்கும். சித்தி முறை வேறு அடிக்கடி வந்து பார்ப்பான். அவள்தான் ஒருநாள் "தம்பி... மேகலா குணத்துக்கு ஏத்த மாப்பிள்ளையா ஒருத்தரை ஏற்பாடு பண்ணிக் குடுப்பா.." என்று கேட்டுக் கொண்டார்.

அன்னபூரணியம்மாவும், மேகலாவும் வசதியான மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். எல்லாவகையிலும் பொருத்தமானவன் பார்த்தசாரதி என்று தோன்றியது. அவர்களின் வெளித் தோற்றத்தையும், குளிர்ச்சியான புன்னகையையும் மட்டும் அறிந்திருந்ததனால் தான் ஏதோ ஒரு சாதனை செய்கிறாற் போலவே நினைத்தான்.

"நான் வேண்ணாப் போய் வரச் சொல்லட்டுமா?" என்றார் அன்னபூரணி.

"இல்லல்லே.. வரட்டும்.." என்று ஹால் சோபாவில் ஏதோ ஒரு பேப்பரை எடுத்துக் கொண்டு அமர்ந்து கொண்டான்.

அதே நேரம்!

மேகலாவின் கலையுணர்வில் தோய்ந்து போயிருந்தான் பார்த்தசாரதி.

அமெரிக்கக் குடும்பங்களில் தாய் நாட்டில் இருந்து தொலைவில் இருப்பதாலோ என்னவோ தாய் நாட்டுக்

கலைகள் மீது ஒரு மோகம் இருக்கும். அவளுக்கும் அது இருந்தது.

மேகலாவை அழகின் வடிவமாய் கலைகளின் வடிவமாய்க் கண்டு மெய் மறந்து கிறங்கிப் போய் விட்டான். "இவள்தான் என்னுடைய மனைவி" என்று சொன்னால் எப்படி இருக்கும் என்ற கற்பனை அப்போதே மனத்தில் ஒரு ஓரமாகத் தொடங்க ஆரம்பித்திருந்தது. ஆனால் அறிவு சொன்னது.

"ஒரே நாள் சந்திப்பில்... என்ன பெரியதாக புரிந்து கொள்ள முடியும்? கொஞ்ச நாள் பொறுப்போம்" என்று மற்றொரு மனது சொன்னது.

"சரி.. இந்தப் பத்து நாட்களையும் மேகலாவிடம் நெருங்கிப் பழகுவதற்காகவே பயன்படுத்திக் கொள்வது" என்று முடிவு செய்தான்.

உடனே செயல்படுத்தவும் செய்தான்.

"மேகலா.. மேடம்! நாளைக்கு நாங்க.. ப்ரண்ட்ஸ் எல்லாரும்.. ஒரு பிக்னிக் போறோம்.. ஆகாஷும் அவன் வைஃப்பும் வர்றாங்க.. நீங்களும் வாங்களேன்" என்றான்.

"ஓ..! நான் பாட்டிகிட்டே கேக்கணுமே?" என்று இழுத்தாள்.

"நான் கேக்கறேன்.. மேடம்!" என்றான்.

"சரி.. கீழே போலாமா.. அருண் அண்ணா வந்தாலும் வந்திருப்பார்.." என்று இறங்கினாள் மேகலா.

முதலிலேயே ஒரேயடியாக மேலே விழுந்து பிடுங்க வேண்டாம் என்று எண்ணிக் கொண்டான் மேகலா. சற்றுத் தள்ளிப் பின் தொடர்வது போல் வந்தான்.



அருண் கீழே சோபாவில் அமர்ந்திருப்பதைப் பார்த்து பார்த்தசாரதி உற்சாகமானான்.

''ஹலோ.. என்னடா கீழேயே உட்கார்ந்துட்டே.. மேலயே வர்லை..?'' என்றான்.

''இல்லே..! கலையார்வலர்கள் ரெண்டு பேரும்.. ஏதோ ஓவியம். காவியம்னு ரசிச்சுப் பேசிகிட்டிருக்க.. நான் எதுக்கு.. இடைஞ்சலா..?'' என்றான்.

பார்த்தசாரதி அந்தக் கேலியைக் கண்டு கொள்ளாதவன் போல்.

''சும்மா... சொல்லக் கூடாதுடா..! மேகலாவோட பெயிண்டிங் எல்லாம் ரொம்ப நல்லா இருக்கு..'' என்றான் பார்த்தசாரதி.

''பரவால்லே..! ஆகாஷ் கல்யாணத்துக்காக நீ அமெரிக்காவுல இருந்து பறந்து வந்தது ஒண்ணும் வேஸ்ட்டாகலே..'' என்றான் அருண்குமார் ஆழம் பார்ப்பவன் போல்.

பார்த்தசாரதி கேள்விக் குறியுடன் பார்க்கவும் ''ஆமடா! மேகலா மாதிரி ஒரு ப்ரண்ட் கிடைச்சாங்கல்லே'' என்று கண் சிமிட்டி முணுமுணுத்தான் அருண்குமார்.

''அதுசரி..! நீயும் ஆகாஷும் உறவுக்காரங்கன்னு சொல்லவே இல்லை'' என்று பார்த்தசாரதி சோபாவில் அமரவும்.

''ஆமடா..! அது எங்களுக்கே தெரியாது! ஆகாஷுக்காகப் பொண்ணு பார்க்கறதுக்கு எங்கம்மா அப்பா ரெண்டு பேரும் வந்தாங்க.. இல்லே! அப்பதான் ரெண்டு வீட்டுக்கும் பொதுவான உறவுக்காரங்க பாமிலி வந்தாங்க.. அதுலதான் தெரிஞ்சது...'' என்றான்.

அதற்குள் மேகலா பேசிக்கிட்டிருங்க... நான் குடா காபி போட்டுட்டு வரேன்'' என்று நகர்ந்தாள். அதற்குள் அருண்குமார் தலையைச் சாய்த்து பார்த்தசாரதி மட்டும் கேட்கும்படியாக.

"போற போக்க[illegible] உறவுக்காரங்க ஆயிடுவீங்க.. போல இருக்கு.." என்று சொல்லிச் சிரித்தான்.

"இதுதாண்டா.. இந்தியாவுல வம்பு! ஒரு பொண்ணு கிட்டே சிரிச்சுப் பேசினா.. கல்யாணம் வரைக்கும் போயிடுவீங்களே!" என்று நடித்தான் பார்த்தசாரதி.

"அண்ணா! போதுங்கண்ணா..! நாங்களும் இத்தனை நாளா உன்னைப் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கோம்.. இதுநாள் வரை எந்த இந்தியப் பொண்ணுகிட்டேயும் இப்படிப் பழக மாட்டீங்க.. இப்ப ஒரே நாள்ல வீட்டுக்கே வந்துட்டீங்க.." என்று அருண்குமார் வாரவும்,

"போங்கடா கொஞ்சம் அலட்டிக்கலாம்னு பார்த்தா.. விட மாட்டீங்களே!" என்றான் பார்த்தசாரதி.

இருவரும் சிரித்தார்கள். பிறகு அருண்குமார் சொன்னான்.

"நீ தாராளமா அலட்டிக்கலாம்பா! அமெரிக்கா.. மாப்பிளை! லட்சக் கணக்கிலே சம்பாதிக்கிறே! உனக்கு அமைஞ்சா.. இப்படி அழகான பொண்ணாத்தான்.. அமையணும்.. அதான்.. நியாயம்!"

"அழகு இருக்கட்டும்டா! குணம் எப்படி?"

"மேகலாகிட்டே எனக்கு பர்சனலாப் பழக்கம்.. இல்லே..! ஆனா.. அவங்கம்மாவை எனக்கு நல்லாத் தெரியும். ரொம்ப அமைதியானவங்க! சின்னது ஸ்ரீகலா.. அவங்கம்மா.. மாதிரி.. அமைதி.. பெரியவ மேகலா.. கொஞ்சம் ஆட்டம்தான்! ஆனா.. எல்லாப் பொண்ணுங்களும் இப்ப.. கொஞ்சம் தெளிவாத்தானே நடமாடறாங்க அதை வச்செல்லாம்.. நாம எந்த முடிவுக்கும் வர முடியாதில்லே!" என்றான்.



பார்த்தசாரதி லேசாகப் புன்னகைத்துக் கொண்டான்.

"ஆமா..! கொஞ்சம் ஆக்டிவ்வாத்தான் இருக்கா.." என்றான். லேசான பெருமிதமும் அதில் தொனித்தது.

இதையெல்லாம் ஒரு புறம் நின்று கவனித்துக் கொண்டிருந்த அன்னபூரணி தனக்குள் சிரித்துக் கொண்டார். பையன் விழுந்து விட்டான் என்று தெளிவாகத் தெரிந்தது.

அவசரமாகப் போய் மருமகள் புஷ்பாவிடம் சொன்னார்.

"இத பார்றி..! புஷ்பம் உன் மகளுக்கு நல்ல வரன் பிடிக்க என்னவோ.. தலையால தண்ணி குடிக்கறேன். நீ என்னவோ.. சம்பந்தமில்லாத மாதிரி நடமாடிட்டிருக்கே! நேத்துப் போட்டயே ஸ்வீட்டு.. அது காரம்.. எல்லாத்தையும் உன் பொண்ணுகிட்டே குடுத்தனுப்பு.." என்று சன்னக் குரலிலேயே மிரட்டி விட்டு நகர்ந்தார்.

புஷ்பம் வழக்கம்போல அழுத்தமான மௌனத்தோடு அழகான இரண்டு மூன்று தட்டுக்களில் ஸ்வீட்டையும் காரத்தையும் வைக்கையிலேயே மேகலா வந்தாள்.

"அம்மா..! நல்லதா.. காபி போட்டுட்டு வரேன்னு நான் சொல்லிட்டு.. வந்திருக்கேன். நான் போட்டா காபி யாரு குடிப்பா? நல்ல காபியா போட்டு வைப்பியாம்.. நான் அதுக்குள்ளே இதையெல்லாம் குடுத்துட்டு.. கொஞ்சம் பேசிட்டு.. வரேன்" என்று போனாள்.

வழக்கம் போல் புஷ்பம் எந்த உணர்வையும் காட்டாமல் "சரி"யென்று தலையாட்டினார்.

"சாரதி..! ஸ்வீட் சாப்பிடுவீங்கதானே?" என்றபடி வந்தாள் மேகலா.

என்ன? அதுவும்.. "என்! ஸ்வீட் சாப்பிட மாட்டேனா ஸ்வீட்டான ஒருத்தர் கையால கிடைக்கும்போது.." என்றான் பார்த்தசாரதி துணிவாக.

மேகலா வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

"ஆஹா..! ஆரம்பிச்சட்டாங்கடா!" என்று அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக கலாட்டா செய்தான் அருண் குமார்.

நறுக்கென்று ஒரு கிள்ளு கிள்ளினான் சாரதி.

"ஹா"வென்று அலறி விட்டான் அருண்குமார்.

"என்ன? என்ன?" என்று மேகலா பதற...

"இல்லே.. கள்ளெறும்பு.." என்று சமாளித்தான் அருண் குமார்.

"எறும்பா.. இருக்காதே..! இப்பத்தானே விரிப்பை மாத்தினேன்" என்று மேகலா 'பில்டப்' செய்தாள்.

"எதுக்கும்.. கொஞ்சம்.. நகருங்க" என்று சொல்லச் சொல்ல இருவரும் எழுந்தார்கள்.

குனிந்து பார்த்தாள். அதே நேரம் பார்த்தசாரதியும் குனிய மீண்டும் நிமிர்கையில் தோளோடு தோள் உரசிக் கொண்டார்கள்.

"ஓ.. ஐம் சாரி!" என்று இருவரும் சிவந்த முகத்துடன் ஒருவருக்கொருவர் சாரி சொல்லிக் கொள்வதைக் குறும்பான பார்வையுடன் பார்த்த அருண்குமார்,

"அதுசரி.. மேகலா! ஸ்வீட் தட்டைக் குடுக்கறதா ஐடியா.. இருக்கா.. இல்லையா?" என்றான்.

"இதோ..!" என்று மேலும் சிவந்த முகத்துடன் நீட்டி னாள் மேகலா..



எல்லாரும் மறுபடியும் அமர்ந்து கொண்டார்கள். பார்த்த சாரதியும், மேகலாவும் சிவந்த முகத்தோடு அமர்ந்து கொண்டிருக்கையில் அருண்குமார் அதைச் சற்றும் புரிந்து கொள்ளாதவன் போல் ஒரு தினப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு கவனமாக அதில் ஆழ்ந்தான்.

இரண்டு பேருமே மேலே கீழே பக்கவாட்டில் என்று பார்வையைத் திருப்பிக் கொண்டு எதேச்சையாகப் பார்வையாகச் சந்தித்துக் கொண்டார்கள்.

வெட்கத்துடன் புன்னகைத்துக் கொண்டாள். தொடர்ந்த அவன் பார்வையைச் சந்திக்க இயலாதவள் போல்,

"நான்.. நான்.. காபி கொண்டு வரேன்" என்று போனாள் மேகலா.

மேகலா அந்தப் புறம் போனவுடன் அருண்குமார் பத்திரிகையைத் தாழ்த்திக் கொண்டு இடிஇடியென்று சிரித்தான்.

"அண்ணனும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தான்.

"டேய்.. சும்மாயிருடா!" என்றான் பார்த்தசாரதி.

"எதுக்குடா.. சும்மாயிருக்கறது? தங்க விக்கிரகம்.. மாதிரி ஒரு பொண்ணு கிராஸ் பண்ணுது. அதுக்கும் இன்ட்ரஸ்ட் இருக்கு மாதிரித் தெரியுது..! ஆனா.. என் னமோ.. விஸ்வாமித்திரர் மாதிரி நடிக்கறே" என்றான் அருண்குமார்.

"ம்.. எனக்கும் பிடிக்கத்தான் இருக்கு.."

"அப்படிப் போடு! மேற்கொண்டு நீங்க சந்திக்கறதுக்கு ஏற்பாடு பண்ணட்டுமா" என்றான் அருண்குமார்.

''ம்..'' என்று வெட்கத்துடன் தலையாட்டினாள் பார்த்தசாரதி.

''என்னடா.. இது?'' அமெரிக்காவுல வேலை செய்யறவ னாட்டமா.. இருக்கே! ஏதோ மளிகைக் கடையில பொட்டலம் கட்டிக் குடுக்கற வேலையில இருக்கறவன் மாதிரி.. ரொம்ப வெட்கப்படறே.''

''வேலை எதுவா.. இருந்தா.. என்னடா? மனித உணர்வுகள்தானே முக்கியம்!'' என்றான் பார்த்தசாரதி.

''ஆஹா..! தத்துவத்திலயே கொன்னுட்டே போ..'' என்றான் அருண்குமார்.

அதற்குள்ளாகவே மேகலா வரும் அரவம் கேட்டது.

''டேய்! பார்ட்டி வராப்ல..! நூல் விட்டுப் பாரு..'' என்றான் அருண்குமார்.

மடக் மடக்கென்று காபியைக் குடித்து விட்டு ''புஷ்பாம்மா.. கிட்டே.. பேசிட்டு வரேன்'' என்று எழுந்து போனான் அருண்குமார்.

காபியை ரசித்துக் குடித்த பார்த்தசாரதி ''காபி நல்லா இருக்கு'' என்றான்.

''தேங்க்ஸ்!'' என்றாள்.

''அப்புறம்.. மேகலா! உங்களுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பாக்கணும்னு இருக்காங்க?'' என்றான்.

''எதுக்குக் கேட்கறீங்க?'' என்றாள் மேகலா.

''இல்லே! எனக்குத் தெரிஞ்ச நல்ல மாப்பிள்ளை இருந்தா.. சொல்லலாம்னுதான்..'' என்றான் பார்த்தசாரதி.

மேகலாவின் முகம் வாடுவதைக் கண்டு ரசித்த அதே சமயத்தில் தனக்குள் குப்பென்று சந்தோஷம் பொங்குவதை உணர்ந்தான்.



5

''மேகலா! ஒரு ஓவியக் கண்காட்சி இருக்கு.. போலாமா?'' என்று பார்த்தசாரதியிடம் இருந்து போன் வந்தது.

மேகலாவுக்கு உள்ளூரக் கடுப்பு.

''எங்காவது சினிமாவுக்குப் போகலாம்'' எக்ஸிபிஷனுக்கு போகலாம், ஜவுளிக் கடைக்குப் போகலாம்'' என்று அழைக்காமல் இதென்ன ஓவியக் கண்காட்சிக்குப் போகலாம் என்று கூப்பிடுகிறாரே என்று கடுப்புத்தான். ஆனால், ''நமக்கு ஓவியத்தில் ஆர்வம்.. என்று நினைத்துக் கொண்டு கூப்பிடுகிறார். நாம ஏன் வேண்டாம்னு சொல்லணும்'' என்று கிளம்பினாள்.

என்றைக்காவது ஒரு நாள் இந்த ஓவியங்கள் எல்லாம் ஸ்ரீகலா வரைந்தது என்று தெரிந்தால் எப்படியிருக்கும்!

அன்றைக்குப் பார்த்துக் கொள்ளலாம். ''உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. ஆனா, உங்களுக்கோ ஓவியம் ரொம்பப் பிடிச்சிருந்தது. அதனால பொய் சொன்னேன். உங்களுக்குத் தெரியாதா? காதலுக்காக எத்தனையோ பொய் சொல்லலாம்னு'' என்று குழைந்து சரிகட்டிக் கொள்ள வேண்டியதுதான்'' என்று முடிவு செய்து கொண்டாள்.

அழகாக உடை உடுத்துக் கொண்டு கிளம்பினாள். பார்த்தசாரதி நண்பனின் காரை எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.

''மேகலா..! ரெடியா..?'' என்று கறுகறுப்பாக வந்தான் பிரேக் போட்டாற்போல் நின்றாள்.

நாம பாட்டுக்கு ஒரு வீட்டுப் பொண்ணை வெளியே போலாம் வான்னு கூப்பிட்டோம். அவுங்க வீட்ல கோபிச்சுக்க மாட்டாங்களா.. என்ற எண்ணம் தோன்றவே நின்றான்.

மேகலா மாடிப்படிகளில் துள்ளலாக இறங்கி வருவதைப் பார்த்தான். மலைத்து நின்றான்.

கொள்ளை அழகாக இருந்தாள் மேகலா! அதற்கேற்ற வகையில் அழகாக உடையுடுத்தி அளவாக மேக்கப் செய்து அசத்தினாள்.

கிட்டத்தட்ட வாயைப் பிளந்து கொண்டு நின்றிருந்தான் பார்த்தசாரதி.

மேகலாவுக்கு உள்ளூர திருப்தி! எப்போதும் ஆண்கள் தன்னைக் கண்டால் மலைத்துப் போய் நிற்க வேண்டும். இல்லாவிட்டால் அவளுக்கு ஒரு பக்கம் வலிக்கிறாற் போல் இருக்கும்.

பார்த்தசாரதி மலைத்து நிற்கவும் மேகலாவுக்கு மனதுக்குள் திருப்தி. இறங்கி வந்தவுடன் மெல்லிய குரலில் கேட்டாள்.

''ஏன்.. சாரதி! உங்களோட வெளியே வர்ற அளவுக்கு.. இருக்கேனா?'' என்றாள்.

பார்த்தசாரதி பளிச்சென்று சிரித்தான்.

''உங்களோட வெளியே வர்ற அளவுக்கு நான் பொருத்தமா இருக்கேனான்னு பார்த்துக்குங்க..'' என்றான்.

மேகலா மென்மையாகச் சிரித்தாள்.

''ஏன்..! உங்களுக்கென்ன.. வசதியானவங்களுக்கெல்லாம் ஒரு பளபளப்பு இருக்குமே.. அது நிறையவே இருக்கு'' என்றாள்.



''தாங்க்ஸ்..!'' என்றான்.

காரில் ஏறி அமர்ந்தாள்!

காரை அவனே டிரைவ் செய்தான். ''மேகலா..! அமெரிக்காவுல எல்லாம் டிராக் சிஸ்டம்! கார் வேகமா ஓட்டணும்! அவ்வளவுதான்! ஆனா இங்கே தாறுமாறா ஓட்டறாங்க. அதுக்கு நடுவுல ஓட்டணும் கொஞ்சம் கஷ்டம்தான்'' என்றான்.

''ம்.'' என்று பெருமூச்சு விட்டாள்.

அவன் திரும்பிப் பார்த்தான்.

''எதுக்கு இப்படி ஒரு பெருமூச்சு?'' என்று கேட்டான். மேகலா குறும்பாகச் சிரிப்பதை ரசனையுடன் பார்த்தான்.

மேகலா புன்னகையுடன் சொன்னாள். ''இல்லே! எல்லாத்தையும் அமெரிக்கன் ஸ்டாண்டர்டல்லயே பாத்தீங்கன்னா... அப்புறம்.. நம்ம ஊர்ப் பெண்களைக் கூடப் பிடிக்காமப் போயிடும்.''

''அப்படி யார் சொன்னா? உலகம் முழுக்கத் தேடினாலும் இந்தியப் பெண்கள் மாதிரிக் கிடைக்காதுன்னு பேச்சு இருக்கு.. தெரியுமா?''

''ஆமா! சுய விருப்பு வெறுப்புக்களையெல்லாம்.. காவு குடுத்துட்டு.. அடிமை மாதிரி இருக்கிறது இந்தியப் பெண்களால மட்டும்தானே முடியும்.''

அவன் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான். அவள் கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசி விட்டோமோ என்பது போல் பார்த்தாள்.

''நான்... நான்.. ஏதும் தப்பாய்ச் சொல்லிட்டேனா?''

"நோ.. நோ.. மனசுல பட்டதைச் சொல்லியிருக்கீங்க.. எனக்குப் புரியுது. அப்படியும் பெண்கள் இருக்காங்க. என் 'ப்ரண்ட் ஒருத்தன் கவிஞன். அவன் சொல்லுவான். 'ஓபன் சாய்ஸ்' அப்படீன்னு ஒண்ணு மட்டும் இருந்தா.. இங்கே நிறைய கல்யாணங்க.. பிச்சுக்கும்டான்னு.. ஆனா.. எங்கம்மா சொல்லுவாங்க..! நம்ம நாட்டுப் பொண்கள் எதையும் தொலை நோக்குப் பார்வையாய் பார்க்கறாங்க..! அடுத்த தலைமுறையைப் பத்தி யோசிக்கறாங்க.. அப்படீன்னு" என்றான்.

அவனது சிந்தனை நிறைந்த பேச்சு.. மேகலாவுக்கு ஒன்றும் பெரிதாக ரசிக்கவில்லை. ஆனால், அதைக் காட்டிக் கொள்ளவும் வழியிருக்கவில்லை.

"இந்த மாதிரி வாதமெல்லாம் எங்க ஸ்ரீகலாவுக்கு ரொம்பப் பிடிக்கும். அவளும் சிக்கு சரியாப் பேசுவா" என்றாள் தனக்குத் தானே பேசிக் கொள்வது போல.

"ம்ஹூம்! ரொம்பக் கொப்டான பொண்ணுன்னு நினைச்சேன்" என்றான் பார்த்தசாரதி.

"ஆமா..! நாலு பேரோட கலந்து பழகத் தெரியாது" என்றாள். எங்கே ஸ்ரீகலாவைக் கவனிக்க ஆரம்பித்து விடுவானோ என்று பயம்.

அறிவு, சிந்தனை, சுறுசுறுப்பு, காரியங்கள் நறுவிசாக செய்து முடிக்கும் திறமை எல்லாமும் தன்னைக் காட்டிலும் ஸ்ரீகலாவுக்கே அதிகம் உண்டு என்ற கவலை அவளுக்குள் இருந்தது. இந்த விஷயத்தில் குறிப்பாக சாரதியின் விஷயத்தில் தலையிடக் கூடாது என்று அன்னபூரணி ஸ்ரீகலாவுக்கு எச்சரிக்கை விட்டிருந்தார் என்பதை சாரதி அறிந்திருக்கவில்லை.



"அது சரி! ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி! சில பேருக்குக் கூச்ச சுபாவம்.." என்றான்.

ஓவியக் கல்லூரி மாணவர்கள் வரைந்திருந்த ஓவியம்.

"மேகலா! பாரின்லயெல்லாம்.. ஆன்ட்டிக்ஸ்ங்கிற பேர்ல.. பழைய காலத்துப் பொருட்களை சேகரிக்கிறதுல ஒரு ஆர்வம்.. அப்புறம்.. ஓவியங்களைக் கூட நல்ல விலை குடுத்து வாங்குவாங்க.." என்றான் சாரதி.

மேகலாவுக்கு இந்த விஷயமெல்லாம் கேட்பதற்கும் பொறுமையில்லை. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாதது மட்டுமல்ல ஆர்வமாகக் கேட்பது போல் நடித்தாள்.

அதே சமயம்!

ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த இரண்டு மூன்று இளம்பெண்களிடம் சுவாரசியமாக பேச்சு நடந்து கொண்டிருந்தது.

"டீ! இங்கே ஓவியர் ஆதிமூலம் சாரோட.. ஓவியங்கள் நல்ல விலைக்குப் போகுதுன்னு பேசிக்கறாங்க.. தெரியுமா?"

"ஆமாடி! உனக்கு ஒரு கதை தெரியுமா? ஓவியர் வான்கோ.. பத்திக் கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"சொல்லு!"

"அவரு வாழ்ந்த காலத்துல.. அவரோட அருமை தெரியலை. ஆனா.. அவர் போனதற்குப் பிறகு அவரோட ஓவியங்கள் ஒவ்வொன்றும் பயங்கரமான விலைக்குப் போகுதுன்னு.." என்றாள்.

பிக்காஸோ ஓவியர் ஹுசேன்.. ரவிவர்மா என்று அவர்கள் சுவாரசியமாகப் பேசுவதை அவர்கள் மெதுவாக

ஓவியங்களைப் பார்வையிடுவது போல நகர்வதை சாரதி
கேட்டபடிச் சிரித்துக் கொண்டான்.

அவர்கள் ஹாலை விட்டு வெளியேறும் போதுதான்
கவனித்தான். அதில் ஸ்ரீலேகாவும் ஒருத்தி.

''பரவாயில்லையே! இந்தப் பெண் இவ்வளவு பேசு
கிறதே'' என்று புன்னகைத்தபடி திரும்பினான்.

''மேகலா.. யாரோ ஒரு பெண்ணிடம் பேசிக் கொண்
டிருந்தாள். அந்தப் பெண் கழுத்தில் ஒட்டினாற் போல
அணிந்திருந்த முத்து மாலையைப் பார்த்தபடி ஏதோ
சொல்லிக் கொண்டிருந்தாள்.

சாரதி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

எவ்வளவு கலை உணர்வும், சிந்தனையும் படைத்த
பெண்கள் கூட நகை, புடவை என்றால் வளைந்து
கொடுத்து விடுகிறார்களே என்று. உடனே மேகலாவுக்கு
ஏதாவது நகை வாங்கிக் கொடுக்கலாம் என்று தோன்றியது.

மேகலா அந்தப் பெண்ணிடம் பேசிவிட்டு வருகிற
வரை நின்று கொண்டிருந்தான். தனது அழகான நடையில்
வந்தாள் மேகலா.

''சாரதி அந்தப் பெண் போட்டுகிட்டிருந்த முத்து
மாலை ரொம்ப அழகா இருந்தது'' என்றாள் புன்னகையுடன்.

''உனக்கும் அப்படி ஒன்னு வாங்குவமா?'' என்றான்.
மேகலாவின் முகம் திடீரென்று வெளிச்சமானாற்போல்
மலர்ந்தது. ஆனால், உடனே முகபாவத்தை மாற்றிக்
கொண்டாள்.

''அப்படியெல்லாம்.. கிப்ட் வாங்கினா எங்க பாட்
டிக்குப் பிடிக்காது..'' என்றாள்.

''ஹலோ! நான் யாரு ஏதோ ரோட்டில் போறவனா
என்ன? உங்க பாமிலி ப்ரண்டு.. நான் பேசறேன்.
பாட்டிகிட்டே!'' என்றான்.



''ம்.. சரி! என்றாள் மனசில்லாதவள்போல். ஆனால்,
உள்ளுக்குள்ளே தன் நடிப்பைக் கண்டு உண்மை என்று
நம்பி வாங்கிக் கொடுக்கிற ஐடியாவை விட்டு விடப்
போகிறானோ என்ற பயமும் இருந்தது. ஆனால் அவன்
காரில் ஏற்றிக் கொண்டு சென்னை நகரின் மிகப் பெரிய
நகைக் கடைக்கு அழைத்துச் சென்றான்.

முத்துக்கள் பதித்த ஒரு நகை செட்டே வாங்கிக்
கொடுத்தான். புறப்படும்போது,

''தாங்க்ஸ்.. மேகலா..! நீ யோசிப்பதைப் பார்த்தா.. எங்க
வாங்கிக்க மாட்டியோன்னு நினைச்சேன்'' என்றான்.

அவள் முகம் சிவக்கத் தரையைப் பார்த்துக் கொண்டு
சொன்னாள்.

''எத்தனையோ.. பேர்.. கிப்ட் வாங்கித் தரேன்னு
கூப்பிட்டப்ப எல்லாம் கோபிச்சிருக்கேன். நீங்க.. யாரு
எனக்கு கிப்ட் வாங்கித் தர்றதுக்குன்னு.. முகத்தில
அடிச்சாப் போல பேசியிருக்கேன். ஆனா.. உங்ககிட்டே..
எனக்கு அப்படிப் பேசத் தோணலே..! ஏன்னு.. தெரியலே..''

சாரதியின் மனமும், முகமும் மலர்ந்தது.

''ஒருவேளை.. நண்பனா ஏத்துக்கிட்டியோ..?''
என்றான்.

''அப்படித்தான்னு நினைக்கிறேன்..!'' என்றாள். அதே
போல் நிலம் பார்த்தபடியே.

சாரதி சத்தமாக சிரித்தே விட்டான். ''மேகலா! ஒன்னு
சொல்லட்டா..! இந்த மாதிரி முகம் சிவந்து நிக்கும்போது..
யு.. ஆர் வெரி.. பியூட்டிஃபுல்'' என்றான்.

''தாங்க்ஸ்!'' என்றாள்.

"சரி.. இப்ப நாம ஜவுளிக்கடைக்குப் போறோம். இந்த நகைக்கு ஏத்த மாதிரி.. ஒரு செட் டிரஸ். பத்தாயிரம் வரை அமௌண்ட் அலாட்ட்" என்றான்.

அவள் யோசனையோடு அவனைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

"இல்லே.. வேண்டாம்..! இது ரீ மச் மாதிரித் தெரியுது.." என்றாள்.

"ரீ மச்சாவது ஒண்ணாவது..! நீ வா!" என்றான். காரைக் கிளப்பும்போது திரும்பி அவளைப் பார்த்து அழகாகச் சிரித்தான்.

"மேகலா! மனசுக்குப் பிடிச்சவங்களுக்கு வாங்கிக் குடுக்கறதுன்னால ஒரு சந்தோஷம் வருமே! அந்த மாதிரி ஒரு சந்தோஷம் என் மனசுக்குள்ளே பூராவும் நிறையுது." என்றான்.

மேகலா மறுபடியும் மௌனம் சாதிப்பது போல் நடித்தாள். அவன் முகம் பார்க்காமல் வெளியே பார்த்துக் கொண்டு வந்தாள்.

சாதியும் தான் எல்லை மீறிப் பேசுகிறோமோ என்று பயந்தவன் போல் அமைதியாகி விட்டான். பிறகு தயக்கத்துடன் கேட்டான்.

"மேகலா? ஆம் ஐ கிராசிங் மை லிமிட்?" என்று.

"இல்லல்லே! மனசுல பட்டதைத் தானே சொல்றீங்க?" என்றாள். லேசாக ஆள்காட்டி விரல் நகத்தால் இருக்கையைக் கீறினாள். மெல்லிய குரலில் சொன்னாள்.

"இல்லே! எனக்கும் என்னைப் பத்தியே ஆச்சரியமாயிருக்கு. நானும் என்கிட்டே யாரும் இப்படியெல்லாம்



பேச அனுமதிப்பதில்லே...!" என்றாள். பிறகு அவளுக்கே சந்தேகம் வந்து விட்டது 'அனுமதிப்பது' என்பது சற்றே பெரிய வார்த்தையோ என்று.

"அனுமதிக்கறதுங்கறது எல்லாம்.. பெரிய வார்த்தை இல்லே..!" என்று அவளைப் பார்த்து வாஞ்சையுடன் புன்னகைத்தான்.

"ஹோப் யு அன்டர்ஸ்டான்ட் சாரதி..! நான் கொஞ்சம் பாக்கறதுக்கு சுமாராயிருக்கேன்னு எங்க வீட்ல எல்லாருக்கும் பயம். நம்ம ஜனங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் சட்டுன்னு அடுத்தவங்களோட கேரக்டரைப் பத்திப் பேசறதுதான். எங்க பாட்டி அடிக்கடி சொல்வாங்க.. 'என் அழகேதான்டி பொண்ணே எனக்கு எதிராப் போச்சு. குடும்பத்திலயே குழப்பம் பண்ணிருச்சு..' என்று வருத்தப்படுவாங்க.. அது மாதிரி.. என் வாழ்க்கையிலயும் ஆயிடக் கூடாதேன்னு பயம்."

"ஓ..! அப்படி உங்க பாட்டி வாழ்க்கையில என்ன ஆச்சு?"

"பாட்டி ரொம்ப அழகு.. தெரியுமில்லே! அது மட்டுமில்ல.. கலகலப்பாய் பழகுவாங்க!"

"ஓ!"

"அந்தக் காலத்துலயே கொஞ்சம் படிச்சவங்க.. வேறயா..? அதனால எல்லாருக்கும் பொறாமை.. "தாத்தா.. அடிக்கடி சந்தேகப்பட்டு பாட்டியை ஏதாவது சொல்லிகிட்டேயிருப்பாங்க.. ஒரு கட்டத்துல அவங்களாலேயே பொறுக்க முடியலை. பிரச்னையாயிருச்சு.."

"ஓ..!"

"திடீர்னு தாத்தா.. வெளிய கிளம்பிட்டாரு.. இன்னை வரைக்கும் எங்க இருக்காருன்னு தெரியலை. ஆனா.. பாட்டிக்கு.. எங்கயாவது உயிரோட இருப்பாருன்னு நம்பிக்கை" என்றாள்.

அன்னபூரணிதான் ஆலோசனை கொடுத்திருந்தார். நம்ம ஜனங்க பொறாமை புடிச்சவங்கடி.. ஏற்கனவே உங்க தாத்தா.. என் பேரை ரிப்பேர் பண்ணி வச்சுட்டுப் போயிட்டாரு. நீ முதல்லயே இதைப் பத்தியெல்லாம் சொல்லி பாதுகாப்புப் பண்ணிக்கோ என்று சொல்லி வைத்திருந்தார்.. அதனால்தான் மேகலாவே முன்கூட்டியே சொல்லி வைத்தாள்.

சாரதி கொஞ்சம் நெகிழ்ந்து போனான். "ஆமா.. நம்ம மக்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் கேரக்டர் அசாஸிநேஷன்தான். விடுங்க.. ஒண்ணும் பெரிசாக் கேர் பண்ணிக்காதீங்க" என்றான்.

மேகலா நிம்மதியானாள்.

"மேகலா..! உங்களுக்கு என்ன கலர் பிடிக்கும்? எனக்குத் தோணுது.. நீங்க எடுத்திருக்கிற முத்து மாலை செட்டுக்கு.. ஆழ்ந்த பச்சை நிறத்துல அல்லது ஆழ்ந்த வயலட்ல டிரஸ் எடுத்தா.. நல்லா.. இருக்கும்.." என்றான்.

"இருங்க..! என் சிஸ்டர் ஸ்ரீ நல்லா கலர் செலக்ட்... செய்வா.. அவகிட்டே கேட்கறேன்" என்று செல்போனை ஆன் செய்தாள்.

"அக்கா..!" என்றாள் ஸ்ரீகலா.

"ஸ்ரீ..! நம்ம சாரதியில்லே. அவரு எனக்கு அழகா.. ஒரு முத்து நெக்லஸ் செட் வாங்கிக் குடுத்திருக்காரு..! டிரஸ்ஸும் எடுக்கணும்கறாரு.."



"அக்கா..! யார்கிட்டயும் எந்த கிப்ட்டும் வாங்கிக்கறதுக்கு முன்னால யோசிச்சுக்கோ.." என்றாள்.

"சரிங்க.. பாட்டி! வேண்டாம்னா.. கோபிச்சுக்கறாரு.. சரி அதை விடு.. இந்த முத்து செட்டுக்கு நல்ல.. மேட்ச் ஆகிற மாதிரி கலர் சொல்லு."

"அக்கா...! லைட் கலர்ல டிரஸ் எடுத்தேன்னா.. முத்து.. எடுப்பா.. இருக்காது. டார்க் கலர்ல.. ம்.. பாட்டில் கிரீனல.. டார்க் பச்சையில எடு.. நல்லாயிருக்கும்" என்றாள்.

"ஸ்ரீ..! சாரதியும் அதேதான்.. சொன்னாரு.." என்றாள் மேகலா.

இயல்பாகத் திரும்பி சாரதியைப் பார்த்தாள்.

"பாத்தீங்களா..! அவளும் அட்வைஸ் பண்றா..! கிப்ட் வாங்கிக்கறதுக்கு.. முன்னால் யோசி... அப்படீன்னு."

சாரதியும் வாஞ்சையாகப் புன்னகைத்தான். "தாங்க்ஸ்..!" என்றான்.

"எதுக்கு..?" என்றாள் மேகலா. புரியாதவளாய் பார்த்தாள்.

"இல்லே! முக்கியமானவங்கறதுனாலதானே.. கிப்ட்டை அக்செப்ட் பண்ணிக்கிட்டீங்க.." என்றான்.

மேகலா கவர்ச்சியாகச் சிரித்தாள்.

அப்போது சாரதிக்குத் தெரியவில்லை. அடிக்கடி அந்த மாதிரித் தாங்க்ஸ் தான் சொல்ல வேண்டியிருக்கும் என்று.

## 6

''ஹாய்.. மேகலா!'' என்று உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது சாரதியின் குரல்.

''மேகலா.. மேலே இருக்கா..! நான் அன்னபூரணி பேசறேன்'' என்றவுடனே சாரதிக்கு ஒரு மாதிரி வெட்கமாகப் போய்விட்டது.

''பாட்டி..!'' என்றான் திணறலாக.

''சொல்லுப்பா..!''

''பாட்டி.. நான் இப்ப சப்ரைஸா அங்க வரலாம்னு பார்த்தேன்.. வரலாமா?''

''இதென்னப்பா.. பர்மிஷன் கேட்டுட்டு.. தாராளமா.. வர்லாம்..'' என்றார் அன்னபூரணி.

''அப்ப.. சரி! பாட்டி..'' என்றான் கிசுகிசுப்பாக.

''என்னப்பா..!''

''நான் வர்றதை மேகலாகிட்டே சொல்ல வேண்டாம். நான் மேகலாகிட்டே ஒரு முக்கியமான விஷயம்.. பேசணும்'' என்றான்.

''சரி..'' என்றார் அன்னபூரணி.

ஸ்ரீகலா அப்போது சமையலறையை விட்டு வெளியே வந்தாள். ''அப்பா.. சாப்பிட வரீங்களா?'' என்று அழைத்தாள்.

''அப்பாவைப் பார்க்கும்போதெல்லாம் அவளுக்குள் ஒரு கோபம் தோன்றும். 'இப்படியும் ஒரு மனிதன் அப்பிராணியாக இருப்பாரா..' என்று. ஆனால் உடனே பரிதாபமும் தோன்றும். 'நிழலடித்த செடி' என்பார்களே அது போல பாட்டியின் ஆதிக்கத்துக்கு பயந்து பயந்து




வாழ்க்கை குளறுபடியானதுதான் மிச்சம். ஆனாலும் அப்பாவின் மேல் பிரியம். எது எப்படியானாலும் அம்மாவை நன்றாக வைத்துக் கொள்கிறாரேயென்று. அப்பா தன் அம்மாவின் மேல் வைத்திருக்கும் அன்பு கலப்படமற்றது. அம்மாவும் அடிக்கடி சொல்வதுண்டு.

''பாவம்.. உங்கப்பா..!'' அவரு என்ன செய்வாரு?'' என்றே சொல்வதாலோ என்னவோ ஸ்ரீகலா எப்போதும் அவரை நன்றாகக் கவனித்துக் கொள்வாள்.

''அப்பா! வாங்கப்பா..! எனக்கு நேரமாச்சு'' என்று குரல் கொடுத்தாள் ஸ்ரீகலா, மறுபடியும்.

''வந்துட்டேம்மா..'' என்று வந்தார் அப்பா.

ஸ்ரீகலா சூடாக தோசையும் இட்லியும் கொண்டு வந்து பரிமாறினாள்.

''அப்பா..! உனக்குப் பிடிச்ச மிளகாய்ச் சட்னி...'' என்று புன்னகைத்தாள்.

பெரிய அளவில் உணர்வுகள் எதையும் காட்டாமல் சாப்பிடுகிற அப்பாவைப் பார்த்து மறுபடியும் பரிதாப உணர்வே தோன்றியது. 'ரசனை' 'சிரிப்பு' 'கலகலப்பு' இதெல்லாம் அப்பாவுக்குத் தெரியுமா என்ன? என்ற கவலை கூட உள்ளே ஓடிக் கொண்டிருந்தது.

ஒன்றோ, இரண்டோ அதிகமாக தோசை வாங்கிக் கொண்டால் பிடித்திருக்கிறது என்று பொருள். அளவாகச் சாப்பிட்டு விட்டு எழுந்து போனால் அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்று பொருள்.

''அம்மா..! ஏண்டி.. நாயே! என்னத்தைடி சமைச்சிருக்கிறே? என்று காட்டுக் கூச்சல் போடுகிற ஆள் உன் புருஷனைக் காட்டிலும் தேவலே!'' என்று அம்மாவிடம் முணுமுணுப்பாள் ஸ்ரீகலா.

புஷ்பம் ஒன்றும் பேசமாட்டார். புன்னகைப்பார்.

“ஆமா..! நீ அதுக்கும் மேலே!” என்பாள்.

ஸ்ரீகலாவின் கோபதாபங்கள் எல்லாமே தாயிடம்தான் இயல்பாக வெளிப்படும். மற்றவர்களுக்கெல்லாம் அவள் ஒரு மூடி போட்ட குடுவை மாதிரித்தான்.

“ம்.. ஸ்ரீகலா.. சிரிப்பாளா? வாய் கூட அடிப்பாளா?” என்று கேட்பார்கள்.

அப்பாவுக்கு பரிமாறிக் கொண்டிருக்கையில் சாரதி வரவும் சற்றே படபடப்பாகி விட்டாள்.

“வாங்க..!” என்று வரவேற்றாள்.

“சாப்பிடுங்க..!” என்று உபசரித்தாள்.

“இல்லே ஸ்ரீ! நான் உங்க சிஸ்டரைப் பார்க்க வந்தேன்” என்றான் பார்த்தசாரதி.

“காபி கலந்து தரட்டுமா?” என்றாள் ஸ்ரீகலா.

“ம்.. சீக்கிரம்..” என்று அவன் சிறு குழந்தை போல் பறக்கவும் ஸ்ரீகலாவும் அவசரமாக காபி கலந்து கொடுத்தாள்.

அவன் காபி குடித்துக் கொண்டிருக்கையிலேயே உள்ளேயிருந்து அன்னபூரணி வந்தாள்.

“சாரதி..! வாப்பா..!”

“வரேன்.. பாட்டி..”

“காபி குடிச்சுட்டு.. மேல போ..! நான் இன்னும் அவளுக்கு விஷயம் சொல்லலே..” என்றாள்.

பார்த்தசாரதி துள்ளல் நடையில் மேலே போவதைப் பார்த்தாள் ஸ்ரீகலா. அந்த நேரம் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.



சாரதி மாதிரி ஆட்களெல்லாம் எப்படி அக்காவைப் போன்ற ஆட்களின் வலையில் விழுகிறார்கள் என்பது தான் அந்த ஆச்சரியம்.

‘இப்போதுதானே.. அக்கா.. குளிக்கிறேன்.. என்று போனாளே. பாட்டி இந்த நேரத்துக்கு அனுப்பி வைக்கிறாரே’ என்று எண்ணம் தோன்றியது. உடனே பாட்டியும், பேத்தியும் ஏதோ திட்டம் போட்டு நடத்துகிறார்கள் என்று தோன்றவும்.. இதழ்கடையோரத்தில் ஒரு இகழ்ச்சிப் புன்னகை தோன்றியது.

அதே நேரம்!

ஸ்ரீகலா.. நினைத்தாற்போலவே அங்கே ஒரு நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்தது.

மேகலாவின் அறைக்குள் நுழைந்ததுமே பாத்ரூமிலிருந்து குளிக்கும் சத்தம் கேட்டது.

“மேகலா.. நான் சாரதி வந்திருக்கேன்!” என்று குரல் கொடுத்தான்.

“ஓ..! சாரதி.. வாங்க..!” கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்க..” என்று பதில் குரல் கொடுத்தாள் மேகலா..

‘வெயிட்ன்னா.. எங்கே பண்றது?’ என்ற சந்தேகம் எழுந்தது. ‘சரி, எதுக்கும்.. இங்கயே வெயிட் பண்ணுவோம்’ என்று முன்னறையில் இருந்த சோபாவில் அமர்ந்தான்.

குளித்து விட்டு உள்ளே ஒரு கவுனை மாட்டிக் கொண்டு கிட்டத்தட்ட அரைகுறை உடையில் வெளியே வந்த மேகலா கண்ணாடியில் பார்த்தாள். முன்னறையில் பார்த்தசாரதி அமர்ந்திருப்பது தெரிந்தது. ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு சட்டென மேலே போர்த்தியிருந்த

[illegible] எடுத்து விட்டு அந்த கவுனைப் போன்ற [illegible] சகஜமாக முன்னறைக்கு வந்தாள்.

ஏதோ கதவைத் தாழிடுவதற்காக வந்தவள் போல் கதவைத் தாழிட்டு விட்டுத் திரும்பியவள் பார்த்தசாரதி அமர்ந்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டவள் போல் நின்றாள்.

அவனும் திடுக்கிட்டுத்தான் போனான்! தன்னையும் மீறித் தன் பார்வை மேகலாவின் மேல் படர்வதை அவ னால் தடுக்கவில்லை. இன்னொரு மனது சொன்னது.

"ஓங்கி அறையப் போறா பாரு..!'' என்று.

குழப்பத்தோடேயே நின்றான். அதற்குள் அவன் பார்வை பார்த்த மேகலாவுக்கும் அது நடிப்புயென்ற போதும் அவளையும் மீறி முகம் சிவந்தது.

"நீங்க.. நீங்க.. எப்ப வந்தீங்க?'' என்று தடுமாறி விட்டு ஆனால் சட்டென்று உள்ளே போகாமல் நின்றாள்.

சாரதி சட்டென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டான். ஏதோ ஆதாரு தேடுபவனைப் போல் தனது இரு கைகளை யும் பாண்ட் பாக்கெட்டுகளில் விட்டுக் கொண்டான்.

"இ ம் சரி! நான் இப்படி நினைக்கலே! சும்மா.. [illegible]..'' என்று தடுமாறினான்.

"பரவால்லே..!'' என்று அவளும் உளறிக் கொட்டி விட்டு உள்ளே போனாள்.

அவன் அங்கேயே தயங்கி அமர்ந்திருக்க. அவள் [illegible] சுடிதார் அணிந்து வெளியே வந்தாள். கதவையும் திறந்து விட்டாள்.

"நீங்க.. நீங்க.. [illegible]..'' என்று அவன் இழுத்து [illegible] அவள் [illegible] "கோபம் வர்லே!'' என்பது [illegible]



''சும்மா.. சர்ப்ரைஸா.. வந்தேன். ஆனா..'' என்று மறு படியும் இழுத்து நிறுத்தினான்.

மறுபடியும் அவள் முகம் சிவந்தது. அவன் கலகல வென்று சிரித்தான்.

''பரவால்லே! இங்கயும் சர்ப்ரைஸா..!'' என்று நிறுத் தினான். அந்தக் கணத்தில் மேகலாவுக்கும் நடிப்புக்காக இந்த நாடகத்தை ஆரம்பித்தாலும் தனக்கும் சாரதியைப் பிடித்திருந்தது என்பது புரிந்தது.

''ப்ளீஸ்!'' என்றாள் கிறக்கக் குரலில்.

''தாங்க்ஸ்!'' என்றான்.

''எதுக்கு..?!'' என்றாள். விழித்தாள்.

''இல்லே! உன்னை யாருய்யா.. இப்படி உள்ளே நுழையச் சொன்னதுன்னு உதை விழும்னு.. பயந்து போனேன்'' என்றான் மறுபடியும் சிரித்தான்.

''அப்படி.. உங்களை நடத்த முடியுமா?'' என்றாள் முணுமுணுப்பாக.

''மேகலா..!'' என்று அவன் சற்றே நெருங்கி நின்றான். அறை முழுவதும் ஏதோ ஒரு நல்ல செண்ட்டின் மணம் வீசியது.

''ம்..!'' என்றான்.

''இந்த வெட்கத்துக்கு.. என்ன அர்த்தம்?'' என்றான். மெல்லக் குனிந்து அவள் முகம் பார்த்தான்.

''எனக்குத் தெரியலே..! ஆனா.. உங்களுக்குத் தெரிஞ் சிருக்கணும்..!'' என்றாள் மேகலா.

''என்ன தெரிஞ்சிருக்கணும்..!''

"ஒரு பொண்ணு ஒரு வயசுப் பையன்கிட்டே கிப்ட் அக்செப்ட் பண்ணிகிட்டா.. அதுக்கு வேற அர்த்தம் இருக்கு.."

"ம்ஹூம்.. அப்படியா? என்ன அர்த்தம்?"

அப்போது மேகலா சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள். இதழ்கள் துடிக்கச் சொன்னாள்.

"அந்தப் பையனைப் பிடிச்சிருக்குன்னு அர்த்தம்!" என்றாள்.

"பிடிச்சிருக்குன்னா.. எந்த அளவுக்குன்னு.. எப்படித் தெரிஞ்சுக்கறது?" இப்போது அவனுக்குத் துணிவு கூடியிருந்தது.

"வாழ்க்கையையே ஒப்படைக்கிற அளவுக்கு..!" என்றாள்.

மெல்ல அந்தச் செய்தி அவன் மனதுக்குள் இறங்கியதும் பார்த்தசாரதி உணர்ச்சி மேலீட்டால் திக்குமுக்காடிப் போனான்.

"மேகலா..!" என்று இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்ப ஆற்றினாற் போல் சொல்லியபடி நின்றான்.

மேகலாவும் தவித்தபடியே நின்றாள். பிறகு கலக்கப் பார்வையுடன் கேட்டாள்.

"உங்க.. பேரண்ட்ஸ்.. ஒத்துக்குவாங்களா?"

அவன் சிரித்தான். "அதை நான் பார்த்துக்கறேன். இங்கே உங்க பக்கம் எப்படி" என்று ரிலாக்ஸ்டாக சோபாவில் அமர்ந்தான்.

அருகில் அமர்த்திக் கொண்டான்.



அவள் முணுமுணுப்பாகச் சொன்னாள். பாட்டிக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு பாட்டி சொன்னா மத்தவங்க யாரும் பெருசா.. அப்ஜக்ட் பண்ண மாட்டாங்க.." என்றாள்.

"அதானே! இல்லாட்டி.. பேத்தியோட ரூமுக்கே அதுவும் அவ தனியா இருக்கும்போது.. அனுப்புவாங்களா? அதுவும்.. செம தரிசனம்ப்பா..!" என்றான், மறுபடியும் சிரித்தான்.

மேகலா இப்போது ஏதோ ஒரு வார மலர் அங்கே கிடந்ததை எடுத்து அடிக்கிறாற்போல் விளையாடினாள். அவன் பயந்தாற்போல் நடித்தான்.

எழுந்து வந்து சிட் அவுட்டின் ஓரத்தில் இருந்த ஜன்னலின் வெளிப்புறமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் மேகலா. தன்னையும் மீறி அவளுக்குள் கூச்சம் நிறைந்திருந்தது.

பார்த்தசாரதி வெகு அருகில் நின்றான். அவனது மூச்சுக் காற்று அவள் கழுத்தருகில் படுகிறாற் போல் நின்றான்.

"சைட் சீயிங்காக்கும்?" என்றான்.

"ஆமா..! பாருங்க.. இந்த ரோடெல்லாம் எவ்வளவு அழகா.. இருக்கு.." என்றாள்.

ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக..

"ஆமா..! இங்கயும்.. சைட் சீயிங்தான்!" என்றான். அவனது குறும்பும், சிரிப்பும் அவளுக்கும் நன்றாகத்தான் இருந்தன. ஆனாலும் விஷயத்துக்கு வந்தாள்.

மெல்லத் திரும்பினாள். "என்.. சாரதி! இந்தத் தடவை எத்தனை நாள் லீவு போட்டுட்டு வந்திருக்கீங்க..?" என்றாள்.

அவன் மெல்லியதொரு பெருமூச்சு விட்டபடி வந்து மறுபடியும் சோபாவில் அமர்ந்தான்.

"எனக்கென்ன தெரியும். இப்படி பூஞ்சோலைத் தென்றல் வந்து என் வாழ்க்கையில வீசும்னு! பிஸினஸ் டிரிப்பையும் கம்பைன் பண்ணிகிட்டு ஆகாஷ் கல்யாணத்துக்காக வந்தேன். அநேகமாக அடுத்த திங்கட்கிழமை கிளம்பிடுவேன்" என்றான்.

மேகலாவின் முகம் வாடியது!

"டோன்ட் வொர்ரி.. தங்கம்ஸ்..! நெக்ஸ்ட் மன்த் வர்றேன். ஒன் மன்த் லீவ் போட்டுட்டு வந்தர்றேன். வி கேன் என்ஜாய் அப்புறம்.. மறுபடி ஒரு ரெண்டு மாசத்திலே.. கல்யாணம் வச்சுக்கலாம்" என்றான் இழைந்தான். அதுக்கு மேலயும் காத்திருக்க முடியாது..!" என்றான்.

அவள் தலையாட்டினாள்.

"அப்புறம்.. அப்புறம்.." என்று இழுத்து நிறுத்தினான்.

"ம்.. சொல்லு..!"

"உங்க வீட்ல ரொம்பவும் எதிர்பார்ப்பாங்களோ?"

"ம்.." என்று இழுத்தாள். "இல்ல.. நான் பாத்துக்கறேன்.." என்றான்.

"இல்லே! எங்க வீட்ல பெரிய அளவில் சொத்து எதுவும் இல்லே! ஏதோ பொழைப்பு கௌரவமா ஓடிகிட்டிருக்கு.. அவ்வளவுதான்" என்றாள்.

"ஓ.கே..! ஓ..கே..! ஐ கன் அன்டர்ஸ்டான்ட்" என்றான்.

"நானே வேணுமட்டும் சம்பாதிக்கறேன்.. அப்படி ஏதாவது பிரச்சினை வந்தா.. நான் பாத்துக்கறேன்" என்றான்.



அவள் மெல்ல அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். "ஐ ம் வெரி.. லக்கி.. இல்லே!" என்றாள்.

"ஐ ம் ஆல்ஸோ.." என்றான்.

சற்றுக் கழித்து, இருவரும் கலகலவென்று சிரித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் இறங்கி வந்தார்கள்!

அதே நேரம்!

ஸ்ரீ கலா ஹேண்ட் பேக்கிற்குள் டிபன் பாக்ஸை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"அக்கா.. நான் வரேன்! சார் நான் வரேன்!" என்று உற்சாகமாகக் கிளம்பினாள்.

மேகலா சாரதியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"சொன்னாக் கேட்க மாட்டேங்கறா.. வேலைக்குப் போறாளாம்."

"ஓ.. எங்கே?"

"ஒரு லெண்டிங் லைப்ரரியில.. ஃபைவ் தவுசண்ட் குடுக்கறாங்க.. செலவுக்காச்சில்லே! அது மட்டுமில்லாம.. முக்கியமான காரணம், நிறைய புக்ஸ் படிக்கலாம்.. இல்லே..!" என்றாள் ஸ்ரீகலா.

"தட்ஸ் ரியலி குட்!" என்றான். அவனுக்கு அது ஒன்றும் வித்தியாசமாகத் தெரியவில்லை.

அமெரிக்காவில் சும்மா வீட்டில் இருக்கிற பெண்கள் கூட 'பேபி சிட்டிங்' என்று போய் சம்பாதிப்பதை அவன் பார்த்திருக்கிறான்.

"உழைப்பில என்ன இருக்கு? தப்பே இல்லை..." என்றான்.

"வரேன்" என்று உற்சாகமாகப் போகிற ஸ்ரீகலாவை அவனும் உற்சாகமாக வழியனுப்பி வைத்தான்.

"பாட்டி..!" என்று வெட்கத்துடன் அழைத்தாள் மேகலா..

பழைய கால சினிமாக்களில் வருகிற ஜமீந்தாரிணிகளைப் போல தங்க பிரேம் கண்ணாடியும்.. கரை போட்ட கைத்தறிப் புடவையுமாய் இருந்த அன்னபூரணி திரும்பிப் பார்த்தாள்.

"பாட்டி..! சாரதி.. என்னமோ.. சொல்றார்.." என்றாள்.

"சொல்லுங்க.. தம்பி..!" என்றார் அன்னபூரணி.

"அது.. அது" என்று தடுமாறினான். சட்டென்று சிரித்து விட்டாள்.

"இல்லே! உங்க வீட்டுப் பொண்ணை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.." என்றான்.

"ஓ..!"

"ஆமா..! எந்த அளவுக்குன்னா.. நீங்க சம்மதிச்சா.. கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு.." என்றான் இயல்பாக சோபாவில் அமர்ந்தான்.

அன்னபூரணிக்கு குப்பென்று மகிழ்ச்சி பொங்கியது.

"அப்பாடா.. மாட்டினானே!" என்றிருந்தது.

"என்ன பாட்டி! உங்களுக்கும் சம்மதம்ன்னா.. எல்லாரும் சரிம்பாங்க..ன்னு மேகலாவே சொல்றாப்ல" என்றான்.

அன்னபூரணியின் முகம் மலர்ந்தது. "எனக்கும் பிடிச்சுத்தான்ம்பா.. இருக்குது." என்று சொல்லுகையில் ஸ்ரீகலா தண்ணீர் பாட்டிலை எடுக்கலாம் என்று திரும்பி வந்தவள் காதில் இந்த உரையாடல் விழுந்தது.



முகத்தில் கவலை தேங்கியது. தண்ணீர் பாட்டில் இல்லாவிட்டால் என்ன என்பது போல் திரும்பி நடந்தாள். அவள் எவ்வளவுக்குக் கவலையானாளோ அதே போல் இன்னொருவரும் இது கேட்டுக் கவலையானார்.

# 7

"தாங்க்ஸ்..! தாங்க்ஸ்..!" என்று மேகலா ஒவ்வொரு முறையும் சொல்லும்போது சாரதி உலகத்தையே ஜெயித்தவன் போல் உணர்ந்தான்.

நல்ல அழகு! நளினமான நடை உடை பாவனை! கல்வியறிவு இவையெல்லாமாகச் சேர்ந்து மேகலாவை அவன் மனத்தில் உயரத்தில் தூக்கி வைத்திருந்தான்.

அமெரிக்காவுக்குத் திரும்பியவுடனே அப்பாவிடம் விஷயம் சொன்னான் பார்த்தசாரதி.

"அப்பா! உங்க விருப்பம்போல இந்தியப் பொண்ணே அமையும் போலே இருக்கு." என்றான்.

"அப்படியா..?" என்றார் அப்பா ஆர்வமாக.

"ஆமாப்பா! ஆகாஷ் மேரேஜ்ல வச்சு ஒரு பொண்ணைப் பார்த்தேன். காஷுவலா பேசியும் பார்த்தேன். ரொம்பப் பிடிச்சதுப்பா.." என்றான் சாதாரணமாகச் சொல்வது போல.

அப்பா கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

"சரிப்பா! உனக்குப் பிடிச்சா.. சரி..!" என்றார்.

பார்த்தசாரதி உடனே அவரை சமாதானப் படுத்துவது போல் "இல்லப்பா! உங்களுக்கும் பிடிக்கணும்" என்றான்.

புகைப்படங்களை எடுத்துக் காட்டினான். அப்பா பார்த்தார். பெண் அழகாக இருக்கிறாள். அதனால்தான் மகனுக்குப் பிடித்து விட்டது என்று புரிந்து கொண்டான்.

"அப்பா! எங்க ப்ரண்டு அருண்குமார்.. இல்லே! அவனோட சொந்தக்காரப் பொண்ணு தான் ஆகாஷுக்கும் கூட தூரத்து உறவுதான்னு சொன்னாங்க" என்றான் மறுபடியும் ஆவலாக.

மகனின் ஆர்வம் மிகுந்த விளக்கம் கேட்டு அப்பா தனக்குள் புன்னகைத்துக் கொண்டார். தனியாக மனைவியிடம் சொன்னார்.

"அவனோட ப்ரண்டல் பாத்துச் சொன்ன பொண்ணுன்னா நல்லபடியாத்தான் இருக்கும்.. இல்லே!" என்றார். தனக்குத்தானே சொல்லுவது போலே.

அம்மா புன்னகைத்துக் கொண்டார்.

"என்னமோ..! சின்னப் பசங்க.. நம்ம மாதிரி விவரமா நாலையும் பாத்து முடிவு பண்ணுவாங்கன்னு சொல்ல முடியாதில்லே" என்றார் தயக்கத்துடன்.

"இல்லம்மா.. பொண்ணு அழகா இருக்குது.." என்றார் அப்பா.

"அதான்..! எனக்கு பயமாயிருக்கு.. எதுக்கும் பாமிலியைப் பத்தி விசாரிங்க" என்றார்.

அப்பா கோபாலகிருஷ்ணன் யோசனையுடன் முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டார்.

"இல்ல..! எனக்கென்னமோ சாதீயே செலக்ட் பண்ணி சம்மதம் குடுத்துட்டு வந்திருப்பான் போல இருக்கு" என்றார் கோபாலகிருஷ்ணன்.



"அது சரி..! நீங்கதானே ஏற்கனவே சம்மதம் குடுத்திருக்கீங்க! பொண்ணு உனக்குப் பிடிச்சிருந்தா.. சரின்னு. அதான் தைரியமாப் பொண்ணுப் பாத்துட்டான்" என்றார் அம்மா.

பெண் அழகாக இருக்கிறாள் என்பதைப் பொறுத்த வரை அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது. அது மட்டுமில்லாமல் மகனுக்குப் பிடித்திருக்கிறது என்பது குறித்து அவர்களுக்கும் மகிழ்ச்சி.

அடுத்த மாதத்திலேயே மகன் மீண்டும் இந்தியா போகிறேன் என்று புறப்பட்ட போது அவர்களும் பெரிதாகத் தடுக்கவில்லை.

* * *

"சாரதி... அம்மா.. அப்பா.. என்ன சொன்னாங்க" என்று ஆர்வமாகக் கேட்டாள் மேகலா.

பார்த்தசாரதி காலரை உயர்த்திக் கொண்டான். பிறகு சொன்னான்.

"ஐயா.. யாரு! நான் சொல்லி அவங்க வேற சொல்லிருவாங்களா?" என்றான் பெருமை தொனிக்கும் குரலில்.

உடனே மேகலா சொன்னாள்.

"பின்னே? சாதாரணப் பொண்ணா கொண்டு போயிருக்கீங்க..? அழகான பொண்ணையில்லே கொண்டு போயிருக்கீங்க?" என்றாள்.

"சரி.. சரி..! நீ அழகுன்னு நாங்க சொல்லணும்.. நீங்களே சொல்லிக்கக் கூடாது.." என்று கிண்டல் செய்தான்.

"நீங்கதான் சொல்ல மாட்டேங்கறீங்களே?" என்றாள் செல்லச் சிணுங்கலுடன்.

பார்த்தசாரதி நெருங்கி உட்கார்ந்தான்.

"ஹலோ! சும்மா.. சொல்றதா...? அதான் எங்க லைஃப்பையே தூக்கி கையில குடுத்துட்டயில்லே.." என்றான்.

"ஆமா..! அதுதான்.. என்ன பண்றதுன்னே எனக்குத் தெரியலை!" என்றான் கவலையாக.

உடனே "ஓஹோ..! ரொம்பக் கவலைப்படறாப்ல இருக்கு..! அப்ப சரி.." என்று அவன் முறுக்கிக் கொள்ள,

"என்னப்பா.. நீங்க? இப்படிக் கோபிச்சுக்கறீங்க?" என்று அவன் மேலே உரசிக் கன்னம் வழித்துத் தாஜா செய்ய அவன் குளிர்ந்து போனான். அந்த மாதிரித் தாஜாக்களுக்கு அவன் உடனடியாகப் பரிசும் கொடுத்தான்.

"எங்கயாவது போலாமா?" என்றான் பார்த்தசாரதி.

"எங்க போலாம்?"

"ஒரு ரெண்டு நாள் எங்கயாவது போனா நல்லாயிருக்கும்" என்றான் பார்த்தசாரதி.

"ஐய்யோ! ரெண்டு நாளெல்லாம்.. பாட்டி ஒத்துக்க மாட்டாங்க.." என்றாள் மேகலா.

"ஹேய்! உங்க பாட்டிகிட்டே சொல்லு! தப்பு நடக்கற துன்னா.. ஜஸ்ட் ரெண்டு மணி நேரம் வெளியே போயிட்டு ரப்பக் கூட நடக்கலாம்" என்றான் சற்றே கடுப்புடன்.

"அது கரெக்ட்தான். பாட்டியே கூட அப்படிச் சொல்லு ங்க.. ஆனா.. மத்தவங்க பேசுவாங்க.. இல்லே! அதுக் கப் பாக்கறதுதான்" என்றாள்.

"சரி ஒரு நாள் மட்டும் எங்கயாவது போலாம்" என் ன்.



"மகாபலிபுரம்.. போலாமா?" என்றான்.

அவள் உற்சாகமாக ஒத்துக் கொண்டாள். மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் பார்த்து மலைத்துப் போனான் பார்த்தசாரதி.

மாமல்லபுரத்துக் கடற்கரையையும், கடலலைகளையும், கல்லில் வடிக்கப்பட்ட காவியங்களையும் பார்த்தசாரதி பெரும் தாகத்துடன் ரசித்துக் கொண்டிருக்கையில் மேகலா கண்டிப்பாக அன்றைக்கு ஏதாவது பரிசு வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தாள்.

"ஷாப்பிங்.. செய்யலாம்.. சில நேரத்துல இந்தக் கடற்கரைக் கடைகளில் நல்ல மெட்டீரியல்ஸ் கிடைக்கும்" என்று விதவிதமான செயற்கை ஆபரணங்களை வாங்கிக் கொண்டாள்.

"ஹேய்! என்ன நீ ஓவியம் வரையற ஆளுன்னு பார்த்தா.. நீ பாட்டுக்கு நகைகள் மேலதான் கவனம் செலுத்திட்டிருக்கே?" என்று கடிந்து கொண்டான்.

"ஆமா! ஓவியமெல்லாம்.. நான் எங்கே வரைந்தேன்?" என்று தன்னையுமறியாமல் உளறினாள் மேகலா. பிறகு சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"பின்னே? நீ வரையலையா?" என்றான் பார்த்தசாரதி.

"இல்லல்லே! நான்தான் வரைஞ்சேன்" என்றாள். ஆனால் சொன்னதில் அழுத்தம் இருக்கவில்லை. ஆனால் பார்த்தசாரதி அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

வழியில் ஒரு கடற்கரையில் உள்ள சுற்றுலா மையத்தில் சற்று நேரம் கழிக்கலாம் என்று போனார்கள். ஒரு காட்டேஜ் புக் செய்திருந்தான். போவதற்கு முன்பாகவே சொல்லி விட்டான்.

"மேகலா! இங்க கொஞ்ச நேரம் தங்கிட்டு... அப்புறமா.. இன்னைக்கு நகைக்கடை போறோம். உனக்குத் தேவை யான அளவுக்கு நகையெல்லாம் வாங்கிக்கலாம்'' என் றான்.

"ரெடிமேடா.. எடுத்துக்கலாமா? ஆர்டர் பண்ணலாமா?'' என்றான்.

"ரெடிமேடாவே எடுத்துக்கலாம்.''

"செலக்ஷனுக்கு நேரமாகுமே?'' என்றாள்.

"சரி.. இப்ப.. நாம என்ஜாய் பண்ணலாம்'' என்று கடலோரத்தில் நிறைய நேரம் செலவழித்தார்கள்.

கடலலையில் கால் நனைய நின்றாள். சட்டென்று அவனைப் பிடித்துக் கடலில் தள்ளி விட்டாள். பார்த்த சாதிக்கும் உற்சாகம் தொற்றிக் கொள்ள அவனும் தள்ளி விட்டான்.

கொஞ்ச நேரம் விளையாடி மகிழ்ந்தார்கள். அதற்குப் பிறகு சூடான காபி குடித்தார்கள். மீண்டும் இருளில் நடந்தார்கள்.

காட்டேஜுக்குப் போய் உடைமாற்றிக் கொண்டு சற்று நேரம் ஓய்வெடுத்தார்கள்.

"கொஞ்ச நேரம் செலவழிக்கறதுக்கு எதுக்கு காட் டேஜ்?'' என்றாள் மேகலா.

"இல்ல... மேகலா..! உங்க வீட்ல உன் ரூமுக்கே வர்ற துக்கு அலவ் பண்றாங்க..! இருந்தாலும் எந்த நிமிஷம் யார் மேல வருவாங்களோன்னு ஒரு பயமாவே இருக்கு. கொஞ்ச நேரமாவது உங்கிட்டே ப்ரீயாப் பேசலாம்னு தான்'' என்றான். புன்னகைத்தான்.



அவளும் புன்னகைத்தாள்!

"வா...!'' என்றான்.

அருகில் போனாள். அவன் கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டான். அவள் அவன் அருகில் அவன்மேல் சாய்ந்தாற்போல் அமர்ந்து கொண்டாள்.

"மேகலா! உன்னைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. பார்த்தோம்.. பழகினோம்.. உன்னோட பர்ஸனல் இன்ட் ரஸ்ட் என்னன்னு எனக்குத் தெரியாது. சொல்லு..'' என்றான்.

"நீங்க முதல்ல சொல்லுங்க!'' என்றாள்.

"மேகலா! பணத்துக்கு நமக்குப் பிரச்சினையேயில்லை. நான் வேணுங்கற மட்டும் சம்பாதிக்கறேன். நீ எங்க அம்மா அப்பாவோடு ஒத்துப் போய் சந்தோஷமா நடமாடிட் டிருந்தால் போதும்...'' என்றான்.

மேகலாவுக்குப் பொசுக்கென்றாகியது.

"ஓ..! உங்கம்மாவும், அப்பாவும், நம்மோடதான் இருப் பாங்களோ?'' என்றாள்.

"ஆமா..! அவங்க இந்தியாவுக்கு வர்றோம்.. விவசாயம் பாக்கறோம்னுதான் சொல்றாங்க.. ஆனா.. என்னால அவங் களை விட்டுட்டு இருக்க முடியாது. அதனால ஜாயின்ட் பாமிலிதான். அதைப் பத்தியெல்லாம் கவலைப்பட வேண்டியதேயில்லை. உன்னை பெத்தப் பொண்ணாப் பாத்துக்குவாங்க.''

"அது சரி..! எனக்கொன்னும் பிராப்ளமில்லை. நான் கொஞ்சம் ப்ரீயா எல்லார்கிட்டயும் பழகுவேன்.''

"நோ... பிராப்ளம்... என் சிஸ்டரே... அப்படித்தான்... சரியான வாயாடி...'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

மேகலா பேசிக் கொண்டே இயல்பாக அவனிடம் நெருங்கி அமர்ந்திருந்தாள்.

"ஹேய்! இன்னும் கல்யாணத்துக்கு ரெண்டு மாசம் காத்திருக்கணுங்கறாங்க" என்று முணுமுணுத்தாற்போல் சொல்லியபடி கொஞ்சி மகிழ்ந்தான்.

மேகலா தடுக்கிறாற் போல் நடித்தாள். ஆனால் இழைந்து கொடுத்தாள்.

"எனக்கே ஆச்சரியம்! நீங்க அமெரிக்காவுல எல்லாம் எத்தனை விதமான பொண்ணுங்களைப் பாத்திருப்பீங்க. ஆனா, உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கே?" என்றாள்.

"தெரியலே! பார்த்தவுடனே பிடிச்சது" என்றான்.

"சரி... உன்னோட ரசனைகளைப் பத்திச் சொல்லு. உனக்கும் ஓவியம் பிடிக்கும். எனக்கும் ஓவியம் பிடிக்கும். நீ வரைவே! நான் பக்கத்துல இருந்து ரசிப்பேன்."

மேகலாவுக்குக் கருக்கென்றது.

'கல்யாணம் ஆகட்டும்...! எதையோ சொல்லி சமாளிக்கலாம்' என்று எண்ணிக் கொண்டாள்.

"எனக்கும் விதவிதமா டிரஸ் பண்ணிக்கிறது பிடிக்கும். எப்பவும் வேலை, சமையல்னு இல்லாம லைஃப்பை என்ஜாய் பண்றது ரொம்பப் பிடிக்கும்" என்றாள்.

பார்த்தசாரதிக்கு அவள் பதிலில் கொஞ்சம் ஏமாற்றம் ஏற்பட்டது ஆனால் உடனே சமாதானம் சொல்லிக் கொண்டான்.

'சரி... குடும்பத்தைப் பார்த்துக் கொண்டால் போதும். அந்த அளவுக்குத் தயார் செய்து கொள்ளலாம்' என்று எண்ணிக் கொண்டான்.



பத்து நாட்களுக்கு மேல் சென்னையில் தங்கியிருந்தான். அப்போதுதான் தோன்றியது. தான் வரும்போதெல்லாம் பயன்படுத்துவதற்கு ஒரு கார் இருந்தால் தேவலை என்று.

மாருதி ஆல்டோ ஒன்று வாங்கினான்.

"மேகலா... செல்லம்! நான் ஊருக்குக் கிளம்பும் போது உங்க வீட்லதான் காரை நிறுத்தப் போகிறேன். யு கேன் யூஸ்" என்றான்.

மேகலாவுக்கு ஒரே மகிழ்ச்சி. தானே கார் ஓட்டக் கற்றுக் கொள்ளப் போவதாகச் சொன்னாள். இந்த முறை பத்து நாட்கள் விடுமுறையில் வந்திருந்தான். அருண்குமாரைச் சந்தித்தான். ஆனால் ஆகாஷைச் சந்திக்க முடியவில்லை.

திருமணத்திற்குப் பிறகு உடனடியாகப் போக முடியாமல் இப்போதுதான் அவன் மனைவியை அழைத்துக் கொண்டு தேனிலவு கிளம்பியிருந்தான். சரியாக பார்த்தசாரதி கிளம்புவதற்கு முதல் நாள்தான் காலையில் வந்து சேர்ந்தான்.

மாலையிலேயே பார்த்தசாரதி நண்பன் வீட்டுக்குப் போனான்.

"எங்கடா... தங்கியிருக்கே?" என்றான் ஆகாஷ்.

"ஹோட்டலில்தான்" என்றான் பார்த்தசாரதி.

"அடப்பாவி! எங்க வீட்டுக்கு வந்திருக்க வேண்டியது தானே?" என்றான்.

"வந்திருக்கலாம்... ஆனா நீதான் தேனிலவு கொண்டாடப் போயிட்டியே!" என்றான்.

அதே சமயம் ஆகாஷின் மனைவி உள்ளேயிருந்து பலகாரம் கொண்டு வந்தாள்.

முகத்தில் ஒருவிதமான நாணம் படர்ந்திருந்தது. ஏதோ ஒரு நிறைவு தெரிந்தது. பார்ப்பதற்கு நன்றாக இருந்தது.

மேகலா கூடத் தன்னோடு வரும்போது இப்படி ஒரு புது மெருகோடுதான் இருப்பாளோ என்று தோன்றியது.

வாஞ்சையாகப் புன்னகைத்தான். "சிஸ்டர், ஆகாஷ் பய ஏதாவது குறும்பு கிறும்பு செஞ்சான்னா... என்கிட்டே சொல்லுங்க... நான் பாத்துக்கிறேன்" என்றான். சிரித்தான்.

"ஆமா... இந்தக் குறும்பையெல்லாம் உன்கிட்டே வந்து சொல்லிகிட்டிருப்பாங்களாமா?" என்று முணு முணுத்தான் ஆகாஷ் அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக.

"அதானே! நான் ஒரு மடையன்டா...!" என்று.

"அதுசரி! தெரிஞ்ச விஷயத்தையே எதுக்கு அடிக்கடி சொல்லிகிட்டிருக்கே?" என்றான் ஆகாஷ்.

இப்படியே சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு மெதுவாக விஷயத்துக்கு வந்தான் சாரதி.

"டேய்... ஆகாஷ்! உன்கிட்டே முக்கியமான ஒரு விஷயம் சொல்லணும்" என்றான்.

"சொல்லுடா...!"

"டேய்... உன் கல்யாணத்துக்கு வந்ததுல எனக்கும் ஒரு முக்கியமான வாழ்க்கைத் திருப்பம் ஏற்பட்டுடுடா" என்றான்.

"ரியலி? சொல்லு! சொல்லு!" என்று சுவாரசியமானான் ஆகாஷ்.

"ஆமடா! உங்க ரிசெப்ஷன்ல பொண்ணு— அந்த மேகலா... [illegible]...!" என்றான்.



ஆகாஷின் நெற்றிப் புருவங்களில் முடிச்சு விழுந்தது.

"அந்தப் பொண்ணை எனக்கு ரொம்பப் பிடிச்சதுடா...! நான் ப்ரபோஸ் பண்ணி அந்தப் பொண்ணும் ஒத்துகிச்சு."

"ஓஹோ!" என்றான் ஆகாஷ். ஆனால் அவனிடத்தில் அவ்வளவு உற்சாகம் இல்லை என்பதை பார்த்தசாரதி புரிந்து கொள்ளவில்லை.

"அது மட்டுமில்லடா...! எங்க அப்பா, அம்மாவும் உனக்குப் பிடிச்சிருந்தா சரி... என்று சொல்லிட்டாங்க..." என்றான்.

ஆகாஷும் 'இவ்வளவு தூரம் போனதற்குப் பிறகு நாம் என்ன சொல்ல முடியும்?' என்று நினைத்தானோ என்னவோ.

"சரிப்பா! ரொம்ப சந்தோஷம்! உன் லைஃப் சந்தோஷமா அமைய வாழ்த்துக்கள்" என்றான்.

"என்னடா...! ரியாக்ஷன் ரொம்ப டல்லா... இருக்கு." என்றான் பார்த்தசாரதி சற்றே ஏமாற்றத்துடன்.

ஆகாஷ் சட்டென்று சமாளித்துக் கொண்டான்.

"குடும்பஸ்தனாயிட்டேனில்ல...! அதான்... எல்லாத்திலயும்... நிதானம்" என்றான்.

"ஐஸிஹவ்! வாழ்த்துக்கள்! இன்னைக்கு நம்ம வீட்ல விருந்து..." என்றான்.

மறுநாள் மேகலாவையும் அழைத்து விருந்து கொடுத்தான். ஆனால் அவன் உற்சாகம் செயற்கையாகவே இருந்தாற்போல் பார்த்தசாரதிக்கு ஒரு எண்ணம். தன் நண்பனிடம் மனம் திறக்காத ஆகாஷ் அவனது பெற்றோரிடம் மனம் திறந்து பேசினான்.

• • •

"ஒஹ்ஹோ!" என்றார் கோபால கிருஷ்ணன்.

# 8

யோசனையில் ஆழ்ந்தார்.

"அவன்தான் சம்மதம் சொல்லிட்டானே! இனி என்ன செய்ய முடியும்?" என்றார் கவலையுடன்.

"அங்கிள்! அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி எனக்கே ஆஃபர் வந்தது. அதுக்கப்புறம்தான் அந்தப் பொண்ணோட நெருங்கின சொந்தக்காரங்ககிட்டே விசாரிச்சது. அப்பத்தான் இதெல்லாம் தெரிய வந்துச்சு," என்றான் ஆகாஷ்.

"எப்பா! இவன் சம்மதம் சொல்றதுக்கு முன்னாடி உங்ககிட்டே கலந்து ஆலோசிக்கலையா?"

"இல்லையே அங்கிள்! அந்தப் பொண்ணு ரொம்ப அழகு... அங்கிள்! அந்த வீட்ல வச்சு அந்தப் பொண்ணோட அப்பா... நல்லவர். ஆனா சுயசிந்தனையோ, சாமர்த்தியமோ இல்லாதவர். பொண்ணோட அம்மா ரொம்பச் சாது. ஆனா... சின்னப் பொண்ணு ரொம்ப அருமையான பொண்ணு. ஒருவேளை இவன் சின்னப் பொண்ணை லைக் பண்ணியிருந்தான்னா... நானே சாதகமாப் பேசியிருப்பேன். அன்னபூரணிப் பாட்டி எப்படியிருந்தாலும் ஸ்ரீகலா அருமையான பொண்ணுன்னு. ஆனா, இப்பக் கவலையாயிருக்கு. ஏன்னா... எனக்கு சாரதியோட நேச்சர் தெரியும்.... கண்டிப்பா இவனால அந்தப் பொண்ணோட சந்தோஷமான ஒரு வாழ்க்கை வாழ முடியாது" என்றான்.

"ஒஹ். சரிப்பா... பேசிப் பார்ப்போம்" என்றார். கோபால கிருஷ்ணன். பிறகு அப்போதுதான் நினைவு வந்தவர் போல் கேட்டார்.



"எப்பா! வைஃப் நல்லாயிருக்காப்பலயா... நல்ல பொண்ணா?"

"ரொம்ப நல்ல மாதிரி... அங்கிள்! ஒண்ணும் பிரச்சினையில்லை... அங்கிள்!" என்றான். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு போனை வைத்தான்.

புனிதவதி வந்து அருகில் நின்றார்.

"என்னங்க?" என்றார்.

"இல்லே! ஆகாஷ்... ரொம்பக் கவலைப்படறான். மேகலாப் பொண்ணுக்கும் சாரதிக்கும் சரிவராதுங்கறான்" என்றார்.

"ஏன்? பொண்ணு நல்லாத்தானே இருக்காள்" என்றார் புனிதவதி.

"பொண்ணு ஆள் மட்டும்தான் அழகாம். மத்தபடி குணமெல்லாம்... நம்ம குடும்பத்திற்கு ஏத்தமாதிரி இல்லேங்கறானே!"

"ஓ...!"

"ஆமா... பாட்டி ஒரு மாதிரியாம். அதனாலதான் தாத்தா பிரிஞ்சு போயிட்டாராம். பொண்ணோட பேரண்ட்ஸ் நல்லவங்கதான். ஆனா, இந்தப் பொண்ணு முழுக்க முழுக்க... பாட்டியோட டைப்தானாம்" என்றார்.

"இப்ப சம்மதம் சொல்லியாச்சே! என்ன பண்றது?" என்றார் புனிதவதி கவலையுடன்.

"சரி... விடு, என்ன செய்யறதுன்னு... பார்க்கலாம்...!" என்றார் அப்பா.

"பாத்து டீல் பண்ணுங்க! பையன் நொறுங்கிப் போயிடுவான்" என்றார் அம்மா.

"நானும் அதான் புனிதா... யோசிக்கறேன்" என்றாள்.

தன் வீட்டில் பூகம்பம் கிளம்பியிருப்பது தெரியாமல் பார்த்தசாரதி கற்பனையில் இருந்தான்.

* * *

"கல் நெக்லஸ்... பார்த்தியா" என்று ஆர்வமாகக் காட்டினாள் மேகலா.

ஸ்ரீகலா பார்க்க வேண்டுமென்பதற்காகப் பார்த்தாள்.

"அவரு... வாங்கிக் குடுத்தாரு...?" என்றாள் மேகலா.

"நல்லாருக்கு...?" என்றாள் ஸ்ரீகலா. ஆனால் முகத்தில் ஒரு இகழ்ச்சிப் புன்னகை தோன்றி மறைந்தது. பிறகு தாங்க மாட்டாதவளாகச் சொன்னாள்.

"அக்கா...! நான் சொல்றேன்னு தப்பா நினைக்கக்காதே! என்ன இருந்தாலும் கல்யாணத்துக்கு முன்னாடி இப்படியெல்லாம் வாங்கிக்கறது தப்பு...?"

"நானா... கேட்டேன்? அவர்தானே வாங்கிக் குடுத்தாரு."

"நீ எல்லாத்தையும் உங்க வீட்லயே வைங்க... நான் கல்யாணத்துக்கப்புறம்... வாங்கிக்கறேன்னு சொல்ல வேண்டியதுதானே...!"

"அது எதுக்கு? எனக்குன்னு வாங்கிக் குடுத்தாச்சு...! நான் பூல் பண்ணாம எதுக்கு அவங்க வீட்ல குடுத்துப் பூட்டி வைக்கணும்" என்றாள் ஆவேசமாக.

"இல்லே! நாளைக்கே... இந்த ரிலேஷன்ஷிப்ல ஏதாவது மாற்றம் வந்தா...?"



"மாற்றம்... எதுக்கு வர்றது? அவங்க அம்மா அப்பா ஒத்துகிட்டாச்சு... நாங்களும் சம்மதிச்சாச்சு... இன்னும் ரெண்டே மாசத்திலே கல்யாணம் நடக்கப் போகுது. மாற்றம் எதுக்கு வருது?"

"இல்லக்கா...! ஒரு பேச்சுக்குச் சொன்னேன்" என்றாள் ஸ்ரீகலா.

"இவள்கிட்டே எதுக்குடா... பேச்சக் குடுத்தோம் என்கிற மாதிரி ஆகிவிட்டது. அவள் அப்படி யோசித்துக் கொண்டிருக்கும் போதே மேகலா மறுபடியும் சொன்னாள்.

"அப்படி... ஒரு வேளை இந்தக் கல்யாணம் நின்னே போனாக் கூட இந்த நகையெல்லாம்... நான் கண்டிப்பாத் திருப்பித் தர மாட்டேன்" என்றாள்.

ஸ்ரீகலா அதிர்ச்சியடைந்தாள். ஆனால் எதுவும் சொல்லவில்லை; ஒரு நிமிடம் கழித்து அவளே சமாதானமும் சொன்னாள்.

"நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன். கல்யாணம் எல்லாம் எதுக்கு நிக்கப் போகுது?" என்றாள். ஆனால் தனது அறைக்குப் போனவுடன் அவளுக்குத் தோன்றியது.

'சாரதி... ரொம்ப நல்லவர். இவள்கிட்டே மாட்டிகிட்டு என்ன ஆகப் போறாரோ. தெரியலை?' என்று எண்ணிக் கொண்டாள்.

சாரதியின் பக்குவமான பேச்சும், அழகான சிரிப்பும் ஸ்ரீகலாவின் மனதுக்குள் வந்து போயின. மனதுக்குள் கவலை தோன்றியது.

'இப்படிப்பட்ட நல்ல மனிதர்கள் எல்லாம் ஏன் மேகலா மாதிரிப் பெண்களின் வலையில் வந்து விழுகிறார்கள்' என்று தோன்றியது. ஆனால் அவளால் என்ன செய்ய முடியும்?

அக்காவிடம் மேலும் எதுவும் பேசாமல் இடத்தை விட்டு நகர்ந்தாள்.

அறைக்குப் போய்விட்டாள்!

அறையில் அமர்ந்து கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

முதல் பார்வையிலேயே ஸ்ரீகலாவுக்கு பார்த்தசாரதியை மிகவும் பிடித்துப் போனது. மிகவும் நல்லவர் என்று தோன்றியது. கலகலவென்ற சிரிப்பும், கணீரென்ற குரலும் ஆக அவன் வீட்டுக்கு வந்தாலே வீடே நிறைந்தாற் போல் ஆகும்.

எப்போதாவது அவனிடம் நின்று பேசுவாள். தன்னிடம் நின்று பேசும்போது மட்டும் புத்தகங்களைப் பற்றிப் பேசுவதை உணர்ந்து கொண்டாள்.

அக்காவின் அழகினால் ஏற்பட்ட ஈர்ப்பெல்லாம் ஒரு மாதிரி வடிந்து போய் அவன் ஆழமில்லாதவள் என்று அறிந்து கொண்டால் பார்த்தசாரதிக்கு ஏற்படப் போகிற கவலையைப் பற்றி இப்போதே அவளுக்குக் கவலை ஏற்பட்டது. பார்த்தசாரதியின் மீது அனுதாபம் கூட ஏற்பட்டது.

சட்டென்று ஒரு புத்தகத்தை எடுத்து நெருப்புக்கோழி தலையைப் புதைத்துக் கொண்டாற்போல் தலையைப் புதைத்துக் கொண்டாள். மெல்ல மெல்ல நினைவும் மாறியது.

லெண்டிங் லைப்ரரி வேலைக்கு அவள் சென்றதற்குக் காரணமே புத்தகங்கள் நிறையப் படிக்க முடியும் என் பதற்காகத்தான். அதிலே சம்பாதிக்கிற பணம் முழுவதையும் கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்து விடுவாள். பாட்டி அவளிடம் மட்டும் வாயடிக்க மாட்டாள்.



"பாட்டி... உங்ககிட்டயும், என்கிட்டயும் இருக்கறதைக் காட்டிலும் அம்மாகிட்டே பாதுகாப்பா இருக்கும்" என்பாள்.

அன்னபூரணிக்கு சில வேளைகளில் தோன்றும் ஸ்ரீகலா தனது கணவரைக் கொண்டிருக்கிறாள் என்று. அதனால் அவள் இருப்பதையே கண்டு கொள்ளாதவர் போல் நடமாடுவார்...

"தன்னை ஒதுக்கினாற்போல் நடத்துவதே வசதி" என்றே ஸ்ரீகலாவும் நினைக்க ஆரம்பித்திருந்தாள். ஆனால் பார்த்தசாரதியின் வருகையும், அவன் வாங்கிக் கொடுக்கிற பொருட்களும் ஸ்ரீகலா வயதில் இருக்கற பெண்களுக்கு சலனத்தையே ஏற்படுத்த வேண்டும். மாறாகக் கவலையையே ஏற்படுத்தியது.

தன்னைச் சுற்றியிருக்கிறவர்கள் தன் நலம் விரும்புகிறவர்கள் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் பார்த்தசாரதி கனவுகளில் மூழ்கியிருந்தான்.

கோல்டன் பீச் போயிருந்த போது சற்று நேரத் தனிமையின் போதே மேகலா அவன் விருப்பங்களுக்கு இடம் கொடுத்த விதம் மிகவும் பிடித்தது. இன்னும் கொஞ்சம் முயற்சி செய்திருந்தால் முழுமையாகவே தன்னை ஒப்படைத்து விடுவாள் போல இருந்தது. அதற்கு அவள் சொன்ன விளக்கமும் பிடித்திருந்தது.

"என்னடா இந்த அளவுக்கு இடம் கொடுக்கறாளேன்னு தப்பா நினைக்காதீங்க... நீங்க பேச்சு மாற மாட்டீங்கன்னு தெரியும். அந்தத் துணிச்சல்தான் இடம் குடுக்கறேன்" என்றாள்.

அதே நினைவுகளோடு பார்த்தசாரதி அலுவலக வேலை முடித்து விட்டு வீட்டுக்கு வந்தான்...

அப்பாவும், அம்மாவும் ஏதோ விதமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

"என்னப்பா...!" என்றான்.

"இல்லப்பா...! மனசு சரியில்லே!" என்றார்.

"ஏம்பா!"

"இல்லடா! நான் விசாரிச்ச வரைக்கும் மேகலா வீட்ல பெரிய வசதி ஒண்ணும் இல்லேங்கறாங்க" என்றார்.

"அப்பா!" என்று அதிர்ச்சியுடன் பார்த்தான். பிறகு மெல்லிய குரலில் சொன்னார்.

"பாரு... தம்பி! உனக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கலாம். ஆனா, நாலு பேரு கேட்கும் போது வாய் விட்டுச் சொல்ற அளவுக்காவது ஒரு தகுதி இருக்கணு மில்லே...!" என்றார்.

"ஓ!" என்று உற்சாகமிழந்தான் பார்த்தசாரதி. சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது. பிறகு சொன்னான்.

"அப்பா...! என்ன எதிர்பார்க்கறீங்க?" என்றான் சுரத்தில்லாமல்.

"இங்க பார்றா! ஒரே ஒரு வீடு... அதுவும் நம்ம பேருக்கு வேண்டாம்... புள்ளைப் பேருக்கு வாங்கிக் குடுக்கச் சொல்லு" என்றார்.

"அப்பா நமக்கு மெட்ராஸிலேயே நாலு வீடு... இருக்கு..." என்றான்.

"ம்...! இப்பத்தான்... ஞாபகம் வருது! சென்னையிலேயே நமக்கு நாலு வீடு இருக்குங்கறதையும் நமக்கு எவ்வளவு வசதி இருக்குங்கறதையும் நீ பொண்ணு வீட்ல சொல்ல வேண்டாம்."



"ஏம்பா?" கேள்விக் குறியாகப் பார்த்தான்.

"நாங்க அனுபவசாலிங்க...! ஏதோ காரணத்துக்காகத் தானே சொல்வோம்..."

"அப்பா...! அவங்களால வீடு வாங்கித் தரமுடியு மான்னு தெரியல...!" என்று இழுத்தான்.

"நீ கேக்கறதைக் கேளுப்பா. என்ன செய்யறாங்கன்னு... பார்க்கலாம்..." என்றார் அப்பா.

"சரிப்பா!" என்றான். பிறகு சொன்னான். "அப்பா! இப்படிக் கேட்கறதுல... எனக்குக் கொஞ்சம் கூட இஷ்ட மில்லே...!" என்றான்.

"தம்பி! நான் ஏதோ காரணத்தை மனசுல வச்சுகிட்டுத் தான் சொல்றேன்... நான் சொல்றதை நீ செய்" என்றார் பிடிவாதமாக.

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு நகர்கிற மகனைப் பார்த்தவுடன் அவருக்கு சந்தேகம் தோன்றியது.

"சாரதி! எனக்கும் பிராமிஸ் பண்ணு!" என்றார்.

"என்னப்பா... இப்படிச் சொல்றீங்க!" என்றான். அப்பா ஏன் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறார் என்பது அவனுக்குப் புரியவில்லை. அப்பாவைச் சற்றே வேதனையுடன் பார்த் தான். தன் பார்வை அவரைக் கரைக்கும் என்று நினைத் தான். ஆனால் அவரோ சற்றும் அசைந்து கொடுக்க வில்லை.

அன்னபூரணியைப் பற்றியும் அவரது குடும்பம் பின் னணி பற்றியும் தான் விவரங்கள் சேகரித்து வைத்துள் ளதையும் மகனிடம் கூறவும் இல்லை.

"சாரதி...! நான் எது செஞ்சாலும் உன் நன்மைக்காகத் தான் செய்வேன்கறதை மட்டும் நீ புரிஞ்சுகிட்டேன்னா... போதும்" என்றார்.

"அது தெரியும்ப்பா...! ஆனா..." என்று இழுத்து நிறுத்தினான்.

அப்பா முகத்தை இறுக்கமாகவே வைத்துக் கொண்டு நின்றார். பிறகு மெதுவாக அப்பாவிடம் சொன்னான்.

"அப்பா...! நானாத்தான்... மேகலாகிட்டே அப்ரோச் பண்ணினேன்...! இப்ப நானே போயி எப்படி விடுன்னு கேட்கறது..." என்றான்.

"சரி... விடு...! மேட்டரை நான் பாத்துக்கறேன். என்கிட்டே விட்டு" என்றார்.

சாதிக்கு எதுவும் பேசுவதற்கு வழியிருக்கவில்லை. சற்றே மனமொடிந்தாற்போல் தனது அறைக்குப் போனான்.

"உனக்குப் பிடிச்ச பொண்ணுன்னு ஒருத்தி வந்தாப் போதும் எந்த எதிர்பார்ப்புமில்லை" என்று சொன்ன அப்பா... இப்போது ஏன் இப்படிப் பேசுகிறார்?

இப்போதுதான் தோன்றியது.

'ஆகாஷ்... கூட அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை ஏனால்? அது சரி... பொதுவாக அழகான பெண்கள் என்றாலே இந்த சமுதாயம் ஒரு விதமாகத்தான் பார்க்கிறது. எப்போதும் அழகுடைய பெண்களை எப்போதுடா குற்றம் சொல்லலாம் என்பது போல் சமுதாயம் பார்க்கிறதோ? அதில் உள்ளார்ந்த ஒரு பொறாமை இருக்கிறதோ...' என்று என்னென்னவோ எண்ணிக் கொண்டான்.

அதற்கு மேல் பெரிதாக யோசிக்க அவனுக்குத் தோன்றவில்லை. மேகலாவின் அழகில் மயங்கிய உள்ளம் மேற்கொண்டு எதையும் சிந்திக்க மறுத்தது.

ஒரு விஷயத்தின் மேல் விருப்பம் விழுந்து விட்டால் மனம் அந்த விஷயத்திற்கு எதிரான எந்த எதிர்க்



கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்ள மறுக்குமே, அது போல!

அன்றிரவு!

மேகலாவிடம் பேசினான்!

''ஹேய்! மேகலா... எப்ப நீ இங்க வருவியோன்னு இருக்கு'' என்றான்.

''எனக்கும் தான்'' என்றாள் மேகலா.

இருவருக்குமே ஈர்ப்பு இருந்த நேரம்தான் அது.

''மேகலா! இங்க ஒரு நகைக் கண்காட்சிக்குப் போனேன். அங்க அருமையான டிசைன்களில் நகைகள் எல்லாத்தையும் போட்டோஸ் எடுத்துட்டு வந்திருக்கேன். இன்னைக்கு அனுப்பறேன். டவுன்லோடு பண்ணிட்டு மெதுவாப் பாத்து நாளைக்குள்ள எந்த நகை வேணும்னு சொல்லு. ஒரே ஒரு செட்தான்...! ஓ.கே.வா?'' என்றான்.

''ம்...!'' என்றாள்.

''இப்ப ஒரு செட் வாங்கிக்கோ. அப்புறம் கல்யாண சமயத்துல... பிளாட்டினத்துலயே வாங்கிக்கலாம்...''

''பிளாட்டினத்திலயா? ஹைய்யோ!'' என்றாள்.

''அப்புறம்... மேகலா...'' என்றான் தயக்கமான குரலில்.

''சொல்லுங்க!'' என்றாள்.

''இல்லே! புதுசா ஒரு பிரச்சினை கிளம்பும் போல இருக்கு. திடீர்னு எங்கப்பா... பேச்சில ஒரு மாற்றம் தெரியுது. பொண்ணு வீட்ல இருந்து என்னடா செய்வாங்கன்னு கேட்கறாரு. யாரோ ஏதோ தட்டி விடற மாதிரித் தெரியுது'' என்றான்.

"ஓ...!" என்றாள் மேகலா காற்றுப் போன பலூனைப் போல.

"ஹேய்! ஒண்ணும் கவலைப்படாதே? உங்க பாட்டி கிட்டேதான் பேசுவாரு... போல... இருக்கு... அவரு என்ன கேட்டாலும் பாட்டியை சம்மதம்னு சொல்லச் சொல்லிடு. நான் பாத்துக்கறேன்... சரியா?" என்றான்.

"என்ன சாரதி! கதை இப்படித் திரும்புது?" என்றாள் மேகலா.

"ஹேய்! நான் பேர்ல மட்டுமா... சாரதி...! உன் வாழ்க்கைக்கே... நான்தான் சாரதி... நீ எதுக்கும் கவலைப் படாதே!"

"அது சரி! நீங்க மட்டும் ஓட்டினா... சரி! ஆளாளுக்கு ஓட்டினா...!" என்றாள் கவலை தொனிக்கும் குரலில்.

"அதை விடு... நான் பாத்துக்கறேன். அப்புறம் உனக்குப் பிடிச்ச இன்னொரு விஷயம். ஓவியம் வரையறது பத்தின நிறைய புத்தகங்கள் வாங்கியிருக்கேன். வரும் போது கொண்டு வரேன்" என்றான்.

"ம்...!"

"எப்ப வருவீங்கன்னு கேட்க மாட்டியா?"

"ம்ஹூம்... கேட்க மட்டேன்!"

"ஏன்?"

"நீங்க தான் என் கூடவே இருக்கீங்களே?"

"எங்கே?"

"இங்கே...! என் மனசுக்குள்ளே!"

"அப்படிப் போடு! ஆனா... என்ன செய்ய? இங்கிருந்து கிட்டப் பாத்தாத் தெரியாதே?"



"போங்க! எவ்வளவு முக்கியமான விஷயம் சொல்லியிருக்கேன்" என்று செல்லமாகக் கோபித்தாள்.

இப்படியே பேசிக் கொண்டிருந்து விட்டு போனை வைக்கும் போது பிரச்சினை எதுவும் இல்லாதது போலவே உணர்ந்தான் பார்த்தசாரதி.

## 9



அன்னபூரணி அதிர்ந்து போனார்!

வீடு வேண்டுமென்று கோபாலகிருஷ்ணன் கேட்பாரென்று அவர் எதிர்பார்க்கவில்லை. நாசுக்காகக் கேட்டார்.

"அன்னபூரணியம்மா! எங்க வசதிக்கு நிறைய பெரிய இடத்துப் பொண்ணுங்க எல்லாம் கல்யாணத்துக்குத் தயாரா இருக்காங்க. ஆனா, எங்க பையனுக்கு உங்க பொண்ணைப் பிடிச்சிருக்க. என் பையனுக்கு இருக்கிற சொத்தெல்லாம் நாளைக்கு உங்க பொண்ணுக்குத்தான். அதனால... ஒரு வீடு மட்டும் பொண்ணு பேர்ல வாங்கிக் குடுத்துருங்க..." என்றார்.

"வீடா!?" அன்னபூரணி திகைத்துப் போனார். "சரிங்க! பாமிலியில கன்ஸல்ட் பண்ணிட்டுச் சொல்றேன்" என்றார் குரலில் சுரத்தேயில்லை.

மேகலா வெளியே போயிருந்தாள். வரட்டும் என்று காத்திருந்தார்.

வந்தவுடன் பதைபதைப்பாகச் சொன்னார்.

"டீ... மேகி! என்ன உன் சாரதியோட அப்பா... என்னென்னவோ கேட்கறார்."

"என்ன கேட்டார்?" மேகலாவிடம் அவ்வளவாக அதிர்ச்சி தெரியவில்லை.

"என்டி நான் பதைபதைப்பாச் சொல்றேன். நீ என்னமோ சாவதானமாக் கேட்டுக்கறே."

"பாட்டி! இந்த மாதிரி ஏதோ வரும்னு சாரதி சொன்னாரு. அதனாலதான் எனக்கு அதிர்ச்சியா இருக்கலை. சரி... சொல்லுங்க... என்ன கேட்டாரு? பணம், நகைன்னு ஏதாவது கேட்டாரா?"

"இல்லடி... அதுக்கும் மேல! வீடு... அதுவும் பங்களா டைப்ல வேணுமாம்...!" என்றார்.

"ஓ...!" மேகலாவும் கூட உற்சாகம் இழந்தாள்.

ஏதோ கேட்பார்கள் என்று நினைத்தாள். ஆனால் இந்த அளவுக்குக் கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் உடனே பார்த்தசாரதி "எதுவானாலும் கவலைப் படாதே. நான் பாத்துக்கறேன்" என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

"பாட்டி கவலைப்படாதீங்க! சாரதி... பாத்துக்குவாரு...!" என்றாள்.

"என்னடி... பாத்துக்குவாரு...! வீடு உன் பேர்ல வேணும்னு அந்தக் கிழவன் கேட்கறாரு" என்றார்.

"அதான்... சொன்னேனே... சாரதி பாத்துக்குவார்ன்னு" என்றாள்.

அன்னபூரணி நம்பிக்கையில்லாமல்தான் நகர்ந்தார். அடுத்த அறையில் அமர்ந்திருந்த ஸ்ரீகலாவின் காதுகளில் இத்தனை பேச்சும் விழுந்தன.

மனம் வாடியது!

மேகலாவைப் பொறுத்தவரை பார்த்தசாரதியின் மீது காதல் என்பதெல்லாம் இல்லை என்றும் வசதியானவன் அழகாக இருக்கிறான். தன் அழகால் அவனை என்றைக் கும் கட்டிப் போட்டு விருப்பப்படி ஆட்டி வைக்கலாம் என் பதுதான் நோக்கம் என்று ஸ்ரீகலாவுக்குத் தெரிந்திருந்தது.



ஆனால் ஏனோ... ஸ்ரீகலாவுக்கும் கூட பார்த்தசாரதி மேகலாவின் அழகினால் ஈர்க்கப்பட்டிருக்கிறானே ஒழிய முழுமையான காதலைப் புரிந்து கொள்ளவில்லை என்று தோன்றியது.

மேகலாவிடம் நெருங்கிப் பழகி அவளுடைய உண்மை யான குணங்கள் வெளிப்படும்போதுதான் தனக்கு அவள் மேல் இருந்தது "கவர்ச்சி" அல்லது "ஈர்ப்பு" என்று உணர்ந்து கொள்வான் என்று தோன்றியது.

பார்த்தசாரதியின் யதார்த்தத்தை இவர்கள் பயன் படுத்திக் கொள்கிறார்கள் என்று தோன்றியது. அவளது மனத்தில் முழுக்க முழுக்க பார்த்தசாரதியின் பக்கமே அனுதாபம் இருந்தது.

நியாயப்படி பார்த்தால் தான் தனது சகோதரிக்காகவே பரிந்து பேச வேண்டும். ஆனால் அப்படியெல்லாம் ஏதோ ஒரு மூன்றாம் மனிதன் மேல் தனக்கு எதற்காக அனு தாபம் தோன்ற வேண்டும் என்ற கேள்வியும் எழுந்தது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள். 'நமக்கு யார் மேல் அனுதாபம் இருந்தால் என்ன? நம்மை யாரும் கண்டு கொள்ளப் போவதில்லை. அது குறித்து நம்மிடம் கேட்கப் போவதும்... இல்லை. தேவையில் லாமல் எதற்காக நாம் இந்த விஷயத்தில் மூக்கை நுழைக்க வேண்டும்?' என்று எண்ணிக் கொண்டாள்.

'சாரதிக்கு அக்காவைப் பிடிக்கிறது. அக்காவுக்கு சாரதியைப் பிடிக்கிறது. இந்த விஷயம் தனக்குப் பிடிக்க வில்லை. என்பதால் அவர்களுக்கு என்ன ஆகப் போகிறது? இல்லை தனக்குத்தான் என்ன ஆகப் போகிறது?'

மனதை வலுக்கட்டாயமாகத் தன் கையிலிருந்த புத் தகத்தின் மேல் திருப்பினாள். மெல்ல மெல்ல அதில் ஆழ்ந்தாள்.

• • •

''ஹேய்...! மேகலா... என்ன இதோட பத்தாவது தடவை கூப்பிடறேன். லைன் கிடைக்குது அப்புறம் கட் ஆகுது...? என்னடா?'' என்றான்.

அவன் சற்றே கவலையுடன் கேட்கவும் அவளுக்கு மனம் உருகியது.

''ப்ச'' என்று உச்சுக் கொட்டினாள்.

''ஹேய்!'' என்ன ஆச்சு?''

''ம்...'' என்று ஒரு பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள்.

''என்ன ஆகணும்! உங்கப்பா... பேசினார். பாட்டி கிட்டே?''

''ம்... என்ன கேட்கறார்?''

''ம்... வீடு...! பங்களா டைப்ல வீடு வேணுமாம். நாங்க [illegible] அதுல... [illegible] மத்தத்துக்கு [illegible] கொட்டாவி விடக் கூடாதுங்கறது'' என்றாள்.

''நீ அப்படிக் கொட்டாவி விடும்போது கூடக் க்யூட்டாத்தான் இருப்பே...''

''விளையாடாதீங்க... சாரதி...'' என்றாள்.

''என்ன விளையாடினேன்! நான் உன்கிட்டே விளையாட வேண்டிய விளையாட்டு என்னன்னு தெரியுமா?''

''ப்ளீஸ்... சாரதி! பி சீரியஸ்!''

''சரி...! எங்கப்பா என்ன வேண்ணாக் கேட்டுட்டுப் போறாரு. நான்தான் ஒரே வார்த்தையில சொன்னேன் இல்ல... நான் பாத்துக்கறேன்'' என்றான்.

''எப்படிப் பாத்துக்க முடியும்? வீடு என் பேர்ல இருக்கணுமாமே?''



''ஸோ வாட்!'' இருக்கற மாதிரிப் பாத்துகிட்டாப் போச்சு...'' என்றான்.

''சாரதி...! ரியலி...!'' என்றாள் மனம் குளிர்ந்து போய்...

''ஹேய்! என்கிட்டே எனக்காக பணம் இருக்காதா? அதுல நான் நினைத்தபடி வாங்க முடியாதா...? மக்கு... இப்பவே ஒரு நல்ல புரோக்கர்கிட்டே சொல்லு... உங்க பாட்டிகிட்டே சொல்லு... ஒரு நல்ல வீடாப் பாருங்க...!'' எவ்வளவானாலும் சரி...'' என்றான்.

''எங்க ஏரியாவிலயா! ஒரு மாதிரி அளவுல பாத்தம்னாலும் ஒரு வீடு... முப்பது நாப்பது லட்சத்துக்குப் போகும் போல இருக்கே?''

''ஆகட்டுமே! மூணு நாலு வீடு பாத்து வைங்க... ஐ ம் கமிங் தேர் நெக்ஸ்ட் வீக்...! பத்து நாள் இருக்கேன். கிரயம் [illegible] ஹேய்... [illegible] நீ வேற இல்லைன்னு நான் வேற இல்லைன்னு ஆனதுக்கப்புறம் வீடு உன் பேர்ல இருந்தா... என்ன... என் பேர்ல இருந்தா... என்ன?'' என்றான்.

''சாரதி...'' என்றாள் நெகிழ்ந்து போனவளாய் ''இதுக்கெல்லாம்... பதிலா... நான் என்ன செய்றது?'' என்றாள்.

''என்னென்னவோ... செய்யலாம்...! அது தனி... அது தனி டீலிங். அதை நான் அப்புறம் பேசித் தீர்த்துக்கறேன்'' என்றான்.

மேகலா ''பாத்தீங்களா? சான்ஸ் கிடைச்சாப் போதுமே! வேலையைக் காட்டுவீங்களே?'' என்றாள்.

''எங்க போய் வேலையைக் காட்டறது? போன்ல ஆளப் பிடிச்சுப் பேசறதுக்கே... இந்தப் பாடா இருக்கு... அப்புறம்... எங்க வேலை காட்டறது'' என்றான்.

"சரி... சாதி! நான் ரொம்பக் கவலையாயிட்டேன். அதான்...!"

"யாமிருக்க பயமேன், இனிமேல் கவலைகள் எல்லாம் எம்மிடம். நீங்க அங்கே சந்தோஷமா நடமாட வேண்டியது எங்களையும் சந்தோஷப்படுத்த வேண்டியது"' என்றான்.

"பின்னே? அதை விட்டா வேற வேலை வேணுமே..." என்றாள்.

பத்து நாள்! பிஸினஸ் ட்ரிப் என்று சொல்லிவிட்டு சாதி இந்தியா புறப்பட்ட போது அப்பாவுக்கு சந்தேகம் தோன்றவில்லை. ஆனால், சாரதி வந்து சேர்ந்ததற்குப் பிறகு பத்திருபது நாட்களுக்குப் பின் விஷயம் மகளிடம் இருந்து வராமல் வெளியிடத்தில் இருந்து காதுக்கு வந்த போது மிகவும் கவலைப்பட்டுப் போனார்.

* * *

"ஹேய்! ஸ்ரீகலா எதுக்கு? நாம மட்டும் பாத்தாப் போதாதா?" என்றான் சாரதி.

"இல்லைங்க... அவ டேஸ்ட் நல்லா இருக்கும். அவ செலக்‌ஷன் நல்லா இருக்கும்" என்றாள் மேகலா.

ஸ்ரீகலா அமைதியாக வந்தாள்.

மேகலா சாரதியை ஓரக் கண்ணால் பார்த்துச் சிரிப்பதையும், அவன் உடனே குனிந்து பேசுவதையும் பார்த்தும் பாராதவள் போல் அமர்ந்து கொண்டு வந்தாள். காரில் பின் சீட்டில் அமைதியாக வெளியே பார்த்தபடி அமர்ந்து வந்தாள்.

"என்ன ஸ்ரீ? பேசவே மாட்டேங்கறீங்க?" என்றான் சாரதி.



"இல்லை! நான் வந்தா.... உங்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோன்னு..." என்றாள்.

"ஏன்... நீங்க வந்தா... ஏன் எனக்குப் பிடிக்காமப் போகணும்..."

"நீங்க ரெண்டு பேரும் வந்தா... உங்களுக்கு ப்ரீயா இருக்கும். அக்காதான் கேட்க மாட்டேங்கறா..." என்றாள்.

"நாங்கதான் லைஃப் பூரா சேர்ந்து இருக்கப் போறோமே...! ஏன் கவலைப்படறீங்க" என்றான்.

ஸ்ரீகலா புன்னகைத்தாள்.

சாரதிக்கு ஸ்ரீகலாவின் அளவான புன்னகை, அறிவான பேச்சு, அமைதியாகக் காரியங்கள் செய்வது இதெல்லாம் குறித்து ஒரு மரியாதை இருந்தது. அதனால் அவளை சீண்டிப் பார்க்க மாட்டான். அமைதியாக ஓரிரு வார்த்தைகள் பேசி அதோடு விட்டு விடுவான்.

இப்போது அப்படியே விட்டு விட்டு வேறு விஷயங்கள் பேச ஆரம்பித்தான்.

மேகலாவும், பார்த்தசாரதியும் சேர்ந்து முன்னே போக விட்டு விட்டு அவள் வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். இரண்டு மூன்று வீடுகள் பார்த்தார்கள்.

கடைசியாகப் பார்த்த வீடு ஸ்ரீகலாவுக்கு மிகவும் பிடித்தது என்று சொன்னாள்.

பார்த்தசாரதிக்குக் கூட மிகவும் பிடித்தது. வீட்டைச் சுற்றிலும் இடம் இருந்தது. வீட்டுக்கு முன்னாலும் இடம் இருந்தது.

மொத்தம் பத்து சென்ட் இடம் இருந்தது. வீட்டின் விலை அவர்கள் போட்ட திட்டத்துக்கு கட்டுப்படியாகிற மாதிரி இருந்தது.

கிட்டத்தட்ட ஒரு கோடி வரையிலும் கூடப் பேசுவ தற்கு பார்த்தசாரதி தயாராக இருந்தான். அதை ஸ்ரீகலா விடம் சொல்லவும் செய்தான்.

ஸ்ரீகலா அப்போது மட்டும் சொன்னாள்.

"சார் அவ்வளவு விலையில வேண்டாம். இங்க ஒரு லீடியம் அளவா வாங்கிக்குங்க" என்றாள்.

பார்த்தசாரதி ஒத்துக் கொண்டான்.

இப்போது வீடு எல்லாருக்கும் பிடிக்கவே ஸ்ரீகலா சொன்னாள்.

"சார் அக்ரிமெண்ட் போட்டுடுவோம்" என்றாள் ஸ்ரீகலா.

"எதுக்கும்மா? நேரடியா பணம் குடுத்து வீட்டை வாங்கிக்கலாம்" என்றான்.

"இல்லே? எதுக்கும் அக்ரிமெண்ட் போட்டுக்குங்க சார்! அப்புறம் பின்னால பிராப்ளம் வரும்" என்றாள்.

பார்த்தசாரதிக்கு சிரிப்பாக வந்தது.

"சரி... உங்க ஆசையைக் கெடுப்பானேன்" என்று ஒப்பந்தம் போட்டான்.

ஒப்பந்தம் போடும் போது மட்டும் தன்னுடைய பெய ரில் போட்டான்.

பங்களா மிகவும் பிடித்திருந்தது என்றார் அன்னபூரணி. அவர்கள் மகிழ்ச்சியையெல்லாம் பார்த்து அவனுக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் இத்தனை செய்யும் போதும் உள்ளூர ஒரு உறுத்தல் இருந்தது.

பெற்றோர்களுக்கு தெரியாமல் இப்படிச் செய்கிறோமே என்பதும், இது நாள் வரை இப்படிச் செய்ததில்லையே என்றும் உறுத்தலாக இருந்தது. ஆனால் மனதுக்குப்



பிடித்த பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்காகத் தானே இப்படிச் செய்கிறோம்.

திருமணம் முடிந்தவுடன் அப்பாவிடம் நடந்ததை யெல்லாம் சொல்லி விடுவோம் என்று முடிவு செய்து கொண்டான்.

ஒருவாறு மனம் தேற்றிக் கொண்டான்.

வீட்டளவுக்கு ஒரு பூஜையும் வைத்துக் கொண் டார்கள்.

மேகலா மகிழ்ச்சியின் எல்லையில் இருந்தாள். பூஜை முடிந்த அன்றைக்கு சாரதியும் மேகலாவும் வெளியே போனார்கள்.

"தாங்க்ஸ்... சாரதி...!" என்று அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

கடற்கரையோரமாக இருந்த ஒரு கெஸ்ட் ஹவுஸில் அவன் தங்கியிருந்தான்.

மேகலாவும் அவனும் கடற்கரையில் மெதுவாக நடந் தார்கள்.

சிலு சிலுவென்ற கடற்காற்றும், மாலை நேரமும் இதமாக இருந்தது.

இடக்கையால் மேகலாவின் தோளை வளைத்துக் கொண்டான்.

"எதுக்கு?" என்றான் பார்த்தசாரதி.

"இல்லே! மலை போல ஒரு பிரச்சினை வந்தது. அதைப் பனி போல விலக்கி சால்வ் பண்ணிக் குடுத்தீங் களே?" என்றாள்.

"ஹேய்! என்ன பிரிச்சப் பேசறே? பிரச்சினை உன்னோடது மட்டும் இல்லையே! என்னோடதும் தானே! நம்ம கல்யாணத்துக்காகத்தானே எங்கப்பா கண்டிஷன் போடறாரு. நானாகத்தான் உன்னை எனக்குப் பிடிச்சிருக்குன்னு பொண்ணு கேட்டேன். அதனாலதான் நானே பிரச்சினை சால்வ் பண்ணிக் குடுத்தர்லாம்னு முடிவு பண்ணினேன்" என்றான்.

"எப்படின்னாலும் 'நான் என்ன பண்ணட்டும்' எங்கப்பா கேட்கறார்ன்னு சொல்லிட்டு ஒதுங்கிக்காம... பிரச்சினையில கை குடுத்தீங்களே?"

"அவ்வளவு மயக்கம்!" என்றான். சிரித்தான். சுற்று முற்றும் பார்த்தான்.

மெல்ல முகம் நோக்கிக் குனிந்தான். ஆனால் மேகலா மெல்ல விலகிக் கொண்டாள்.

"ம்ஹூம்... வேண்டாம்! கல்யாணத்துக்கப்புறம்... எவ்வளவு வேண்ணாலும்..." என்றாள். வெட்கம் நிறைந்தவள் போல.

எல்லாம் பாட்டியின் உபதேசத்தின் அடிப்படையில் தான்.

"பார்த்தி மேகலா! ஏதோ இவ்வளவு பெரிய சொத்து வாங்கிக் குடுத்துட்டானேன்னு வளைஞ்சு குடுத்துராதே! அப்புறம் மரியாதை இல்லாமல் போயிடும்" என்று சொல்லியிருந்தார்.

விலகிக் கொண்டாலும் பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள்.

"என் சாரதி...! கோபமில்லையே!" என்றாள்.

அவன் புன்னகைத்தான்.




"கோபமில்லே! ஆனா... ஏக்கம்?" என்றான்.

"இரண்டே மாசம் பொறுங்க! எல்லா ஏக்கத்தையும் தீர்த்தர்றேன்" என்றாள்.

சாரதி தனது வருங்கால மனைவியைப் பற்றிப் பெருமையாகத்தான் எடுத்துக் கொண்டான்.

## 10



"அதுக்குத்தான்... சொன்னேன் நேரடியாவே பேசுங்கன்னு" என்றார் புனிதவதி.

"நேரடியா... பேசறதுக்கு முடியாமத் தானே நான் இப்படிப் பிரச்சினை கிளப்பினேன்" என்றார் கோபாலகிருஷ்ணன் வருத்தம் தொனிக்கும் குரலில்.

"இல்லைங்க...! இப்படி இப்படிக் கேள்விப் படறோம். அந்தப் பொண்ணு வேண்டாம்னு நீங்க வெளிப்படையாய் சொல்ல வேண்டியதுதானே...!" என்றார் புனிதவதி மறுபடியும்.

புனிதவதி எப்போதும் கணவனிடம் கடுமையாகப் பேசியவர் அல்ல. இப்போதும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில்தான் அப்படிப் பேசினார்.

"புனிதா... புரிஞ்சுக்க...! நான் ஒரு வீடு வேணும்னு கேட்டதுக்கே... 40 லட்சம் போட்டு வீடு வாங்கிக் குடுத்துருக்கான். அதுவும் நம்மகிட்ட சொல்லாம செய்யறான். இதுலிருந்து என்ன தெரியுது...? அந்தப் பொண்ணு மேல அவ்வளவு பைத்தியமா இருக்கான். அந்தப் பொண்ணை வேண்டாம்னு சொன்னா நாளைக்கு "இது என் வாழ்க்கைப்

பிரச்சினை... எனக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கு. நான் அவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னா என்ன செய்யறது? இல்லை, தெரியாமத்தான் கல்யாணம் செஞ்சுகிட்டு வந்து நின்னா என்ன பண்றது?'' என்றார்.

''ஆம்மா...!'' என்றார் புனிதவதி. இப்போதுதான் அவருக்குக் கணவர் ஏன் தயங்குகிறார் என்பது புரிந்தது. மறுபடியும் கவலை தோய்ந்த குரலில் கேட்டார்.

"என்ன செய்யறது?"

"ஒன்னும் செய்யறதுக்கில்லே... தப்போ.. ரைட்டோ... அவன் கல்யாணம் செஞ்சு அனுபவிக்கட்டும். அப்புறம் அதுல இருந்து மீண்டு வந்தா வரட்டும்'' என்றார் அப்பா.

"ஏன்... அப்படி நினைக்கறீங்க...? ஒரு வேளை அவன் அந்தப் பொண்ணைத் திருத்திக் கொண்டு வரலாமில்லே...'' என்றார் புனிதவதி.

தாய் மனது கனவு காணுகிறது என்பதைப் புரிந்து கொண்ட அப்பாவும் ஆறுதலாகச் சொன்னார்.

"சரி... நாம அப்படித்தான் நம்பிக்கை வைக்கணும். வேற வழியில்லே...'' என்றார்.

அதே சமயம் பார்த்தசாரதியின் கார் வரும் சத்தம் கேட்டது.

இரவு ஏழு மணிக்கு வந்தாலும் சரி... அம்மாவின் கையால் ஒரு காபி சாப்பிடுவான். இப்போதும் கேட்டான்.

அம்மா தயாரித்துக் கொண்டு வருவதற்குள்ளாக அப்பாவை கேட்டான்.

"எப்பா...! மேகலா வீட்டில இருந்து எதுவும் தகவல் வந்ததா?'' என்றான்.



''ஆமப்பா!'' என்றார். தலையை அழுந்தக் கோதிக் கொண்டு சோபாவில் அமர்ந்தார்.

"நீங்கதான்... மேகலா பேர்ல... ஒரு வீடு இருக்கணும்னு சொன்னீங்களாம்...!'' என்றான். குற்றம் சாட்டுகிற குரலிலோ, விமர்சனம் செய்யும் குரலிலோ இல்லாமல் மையமான குரலிலேயே பேசினான்.

''ஆமப்பா! உன்னோட ஸ்டேட்டஸுக்கு ஈக்வலா இல்லேன்னாலும் ஏதோ கொஞ்சமாவது இருக்கணுமில்லே. இப்போ இளமைக் காலத்துல... அழகுதான் முக்கியமாத் தெரியும். ஆனா, கால முழுமைக்கும்... குணம்தான் முக்கியமாத் தெரியும். அப்பத் தோணலாம் அழகைப் பார்த்து ஒன்னுமே இல்லாத ஒரு பொண்ணைக் கொண்டு வந்துட்டமோன்னு'' என்றார் அப்பா மிகவும் எச்சரிக்கையாக.

பார்த்தசாரதி இதுநாள் வரை அப்பாவுக்குத் தெரியாமல் எதுவுமே செய்வதில்லை. முதன்முதலாக அப்பாவுக்குத் தெரியாமல் ஒரு காரியம் செய்திருக்கிறான். அந்த உறுத்தல் வேறு அவனுக்கு இருந்து கொண்டே இருந்தது. ஆனால் எப்படி அப்பாவிடம் சொல்வது என்றும் புரியவில்லை. சற்று யோசித்த போது அவனுக்குப் புரிந்தது. லேசுப்பட்ட காரியமா செய்திருந்தான்.

எவ்வளவு பெரிய இன்வெஸ்ட்மென்ட்! அதனால் அது குறித்துப் பேசுவதற்குப் பயமாக இருந்தது.

"இன்றைக்கு அந்தப் பெண்ணுக்காக இவ்வளவு பெரிய தொகையை அதுவும் பெற்றோருக்கு தெரியாமல் செலவழிக்க அவசியம்... என்ன...?'' என்று கேட்டால் என்ன சொல்வது.

அப்பாவுக்கு உள்ளூர வருத்தம் இருந்தது. ''மகன் இப்படியொரு காரியம்... தங்களைக் கலந்தாலோசிக்காமல் இப்படிச் செய்து விட்டானே'' என்று அவருக்குப் பெரிய வருத்தம்.

லேசான ஒரு விலகலும், விரிசலும் மனதுக்குள்ளே இருந்த மாதிரி இருந்தது. அது பார்த்தசாரதிக்கு புரிந்தது.

தான் பார்க்காத சமயத்தில் அப்பா தன் முகத்தை உற்றுப் பார்ப்பதும் தான் பார்க்கும் போது வேறு புறம் பார்ப்பதும் தெரிந்தது. ஆனால் எப்படி ஆரம்பிப்பது என்று புரியவில்லை.

மெல்லிய திரை ஒன்று இருவருக்கும் இடையே விழுந்து விட்டதை இருவருமே உணர்ந்தார்கள்.

அம்மா அதற்குள்ளாக காபி கொண்டு வந்தார்.

''ஆமாப்பா! நீங்க சொல்றதும் சரிதான்!'' என்றான்.

சற்று நேரம் வேறு விஷயங்கள் பேசினார்கள்.

பிறகு தனது அறைக்குச் செல்வதற்காகக் கிளம்பினான். கிளம்பியவன் ஏதோ சொல்ல வந்தவன் போல திரும்பி அப்பாவைப் பார்த்தான்.

''ப்பா!'' என்றார்.

''சொல்லுப்பா!'' என்றார் கோபாலகிருஷ்ணன்.

''அப்பா! எப்பவும் எனக்குன்னு கொஞ்சம் பணம் ஒதுக்குது.. இல்லே! அந்தப் பணத்துல நான் விருப்பப் பட்டவங்களுக்கு கிப்ட் வாங்கிக் குடுத்தா தப்பா நினைப் பீங்களா?'' என்றான்.

அப்பாவுக்கு உள்ளூரச் சிரிப்பு மலர்ந்தது.

''அப்பா! அது உன் பணம். நீ என்ன வேணா செய்யலாம்..'' என்றார்.



''தாங்க்ஸ்ப்பா!'' என்றான். ஏதோ சொல்ல நினைத்தவன் சொல்ல முடியாதவன் போல் நகர்ந்தான்.

அந்தக் கணத்தில் அப்பாவின் மனசு குளிர்ந்தது. தான் நினைத்த அளவுக்கு மகன் மனசாட்சி இல்லாதவனாக நடந்து விடவில்லை. அவனுக்கும் அவன் செய்த காரியம் உறுத்தலாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அப்பா ஏற்றுக் கொள்வாரோ இல்லையோ என்ற பயத்தினால்தான் அப்படி நடந்து கொள்கிறான் என்பது புரிந்தது. ஆனாலும் ஆகாஷ் ''அந்தப் பெண்ணின் பெயருக்கு சொத்தை வாங்கியிருக்கிறான்'' என்று சொன்னபோது கொஞ்சம் ''சுருக்'' கென்றது.

''எத்தனை லட்சம்!'' என்று கவலையானது. ஆனால் இன்னொரு மனது சொன்னது.

''இந்த மட்டில் அந்த பெண் நியாயமாக நடந்து கொண்டால் அவனைத் திருத்தி அவன் ஒரு வாழ்க்கை வாழட்டும். இல்லையென்றால் பணத்தோடு நஷ்டம் தொலையட்டும் என்று எண்ணிக் கொண்டார்.

மனம் தெளிந்தார்.

''எல்லாத்தையும் அந்தப் பண்ணாரியம்மன் மேல் போடுவோம்'' என்று முடிவு செய்து கொண்டார்.

மனம் அமைதியடைந்தது.

* * *

''ஹேய்...! மேகலா... இது வரைக்கும் நான் எங்கம்மா அப்பாகிட்டே எதையும் மறைச்சதில்லை தெரியுமா?'' என்று அவன் அன்றிரவு போனில் வருத்தப்பட்டுக் கொண்டபோது மேகலா சொன்னாள்.

''கவலைப்படாதீங்க! அந்தச் சொத்து என் பேர்ல இருந்தாலும் அது உங்க சொத்துதான். வேணும்னா அந்தச்

சொத்தின் பேர்ல உங்ககிட்டே கடன் வாங்கியிருக்கற மாதிரி... நான் எழுதிக் குடுத்தர்றேன்'' என்றான்.

அந்தக் கணத்தில் பார்த்தசாரதியின் மனத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் மறைந்து போனது. கொஞ்சம் சந்தேகம் இருந்திருந்தாலும்,

''சரி... அப்படித்தான் செய்வோம்'' என்று ஒத்துக் கொண்டிருப்பான்.

கலகலவென்று சிரித்தபடி சொன்னான்.

''ஹேய்! நம்பிக்கையில்லேங்கறதல்ல பிரச்சினை... எங்கம்மா அப்பாவுக்குத் தெரியாம நான் எதுவும் செய்ததில்லேங்கறதுதான்.. பிரச்சினை'' என்றான்.

''சரிங்க! கல்யாணம் முடிஞ்சதும் நாம ரெண்டு பேருமா சேர்ந்து உங்கம்மா, அப்பாகிட்டே மன்னிப்பு கேட்டுக்குவோம்... சரியா...?'' என்றாள்.

அன்றைக்கு மனம் நிம்மதியடைந்தது. பத்து நாட்களுக்குப் பிறகு அன்றைக்குத்தான் நிம்மதியாக உறங்கினான். ஆனால், கதை தலைகீழாக மாறப் போவதை அவன் அன்றைக்கு அறிந்திருக்கவில்லை.

* * *

''நிஜம்மாவா... மேகலாக்கா! நீ அப்படி சொன்னயா என்ன?'' என்று ஆச்சரியமானாள் ஸ்ரீகலா.

''ஏண்டி! நீ என்னை என்ன பிராடுன்னே முடிவு பண்ணிட்டியா?'' என்று கோபித்துக் கொண்டாள் மேகலா.

''சேச்சே! நான் அப்படிச் சொல்லலை! என்ன இருந்தாலும் கல்யாணத்துக்கு முன்னாடி ஒருத்தர்கிட்டே அந்த மாதிரி கிப்ட்டெல்லாம் வாங்கறது தப்பு. அதுவும் இது கிப்ட்டெல்லாம் கிடையாது. முப்பத்தைஞ்சலட்சத்துக்கு பங்களா...'' என்றாள் ஸ்ரீகலா.

''உனக்குப் பொறாமை!'' என்றாள் மேகலா.



''எனக்கெதுக்குப் பொறாமை. நான் உன் இடத்திலிருந்தா என்ன சொல்லியிருப்பேன் தெரியுமா! இந்த மாதிரி அம்மா, அப்பாவுக்குத் தெரியாம கிப்ட் வாங்கிக் குடுக்கறதெல்லாம் வேண்டாம். பொறுமையாக் காத்திருந்து போராடுவோம்னு சொல்லியிருப்பேன்'' என்றாள்.

''நான் காத்திருப்பேன். ஆனா, அவரு காத்திருக்க மாட்டாரே...'' என்றாள் மேகலா.

அதே நேரம்!

அன்னபூரணி பின்னாலே நின்று கொண்டு இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார் என்பதை ஸ்ரீகலா அறியவில்லை.

ஸ்ரீகலா அந்தப்புறம் போகும்வரை பொறுத்துக் கொண்டிருந்த அன்னபூரணி மேகலாவை தன்னுடைய அறைக்கு அழைத்துப் போனார்.

''பாருடி! மேகலா...! கடன் பத்திரம் எழுதிக் குடுக்கறேன்னு சொன்னியாம். உனக்கென்ன பைத்தியமா'' என்றார்.

''இல்ல.. பாட்டி! அவ சொன்னதும் நியாயம்தானே கல்யாணத்துக்கு முன்னாடி இவ்வளவு காஸ்ட்லியா வாங்கக் கூடாதுதானே!'' என்றாள் மேகலா.

''போடி... போக்கத்தவளே! உங்க தாத்தா விட்டுப் போட்டுப் போயிட்டாரு. உங்கப்பன் மாதிரி ஒரு அசட்டு ஆம்பிளையை வச்சகிட்டு நாம என்ன செய்றது? இத்தனை நாளும் உட்கார்ந்து சாப்பிடறோமே... இதெல்லாம் எப்படி வந்துச்சு? கொஞ்சம் முன்னே பின்னே இருந்துதான் வந்தது. ஐயோ! மானமே... கௌரவமேன்னு பேசினா.. கிடைக்குமா? அதெல்லாம்.. அழகு... பக்ஸணாவிட்டி இல்லாதவங்க பேசற பேச்சு'' என்றார் அன்னபூரணி.

"என்... பாட்டி! அப்படிச் சொல்றீங்க! நம்ம ஸ்ரீகலாவும் அழகுதான்" என்றாள் மேகலா.

"அது அவளுக்குப் புரியணும் இல்லே! லெண்டிங் லைப்ரரிக்கு வேலைக்குப் போறாளாம். மாசமெல்லாம் காலைல ஒன்பது மணிக்குப் போயிட்டு சாயங்காலம் ஏழு மணி வரைக்கும் வேலையில இருப்பா.. அஞ்சாயிரம் தர்றாளாம். அஞ்சாயிரம் நீ வாங்கற லிப்ஸ்டிக்குக்கும் மேக்கப் சாமானுக்கும் போதுமா?" என்றார்.

மேகலா கூர்ந்து கவனிக்கலானாள்.

"மேல் மட்டத்துலயும், ரொம்பக் கீழ் மட்டத்துலயும் சரி... யாரும் இந்தக் கமிட்மெண்ட்டுகளெல்லாம் வச்சுக் கறதில்லே! பார்த்தசாரதியைப் பத்தியே எனக்குக் கொஞ் சம் சந்தேகமாத்தான் இருக்கு. இப்ப அப்பா கேட்டாங்கற துக்காக தன்னோட பணத்துல உனக்கு வீடு வாங்கித் தர் றாரு. நாளைக்கு அவங்க அம்மா அப்பாவுக்குத் தெரிஞ்சா.. எப்படி எடுத்துக்குவாங்களோ.. தெரியலை... அதுக்கு பதிலா அப்படியெல்லாம் எதுவும் கேட்க வேண்டாம்னு சொல்லியிருக்கணும். இல்லே! துணிஞ்சு கல்யாணம் பண்ணியிருக்கணும். அப்படியில்லாம அம்மா அப்பாவைத் திருப்திப் படுத்தறதுக்குத் திருட்டுத்தனமா இந்த வேலை செய்யறாரு" என்றார்.

மேகலாவுக்கும் பாட்டி சொல்வதைக் கேட்டவுடன் நியாயம் போல்தான் தோன்றியது.

"உண்மைதானே! நேரடியாகப் பேசித் தீர்க்க வேண் டியதை விட்டு விட்டு எதற்காக இந்தத் திரைமறைவு வேலையெல்லாம்."

பாட்டியிடம் விட்டுக் கொடுக்காமல் சொன்னாள்.

"இல்ல.. பாட்டி! இத்தனை நாளா வளர்த்த பெத்தவங் களை ஒதுக்கிட்டு எப்படித் திடீர்னு எதுவும் செய்யக்



கூடாதில்லே... அதான் அவர் ஒவ்வொன்றும் யோசிக்கச் செய்யறார்" என்றாள்.

"என்னமோ! அந்தப் பையன் அமெரிக்காவுல இருந் தாலும் குடும்பம் கட்டுப்பெட்டியான குடும்பம் மாதிரித் தான் தெரியுது. எத்தனை நாளைக்கு மாமனார், மாமியாருக் கும் பதில் சொல்லிகிட்டிருப்பேன்னு தெரியலை" என்றார்.

தன்னுடைய அறைக்குப் போகும்போது மேகலாவுக் குள்ளும் பெரிய சந்தேகங்கள் எழுந்தன.

தன் வீட்டில் பெரிய அளவில் கட்டுப்பாடுகள் எதுவும் இதுவரை இருந்ததில்லை. சுதந்திரமாக இருந்தாள். தனது அழகை ஆராதிக்கிற ஆண் நண்பர்கள்தான் அதிகம். ஆனால், இதுவரை அவர்களைப் பயன்படுத்திக் கொள் வாளே தவிர தான் அவர்களின் வழிக்குப் போனதில்லை. விலாங்கு மீன் போல நழுவிக் கொண்டு வந்து விடுவாள். ஆனால், முதன் முறையாக வாழ்க்கை முழுவதற்குமான ஒரு கட்டுப்பாட்டில் சிக்கிக் கொள்ளப்போகிறாள்.

எடுத்தவுடனேயே அந்த விஷயத்தில் ஏற்பட்ட குழப்பம் அவளுக்குள்ளும் கிலியை ஏற்படுத்தியது. பேச்சு வாக்கில் ஸ்ரீகலா சொன்னது வேறு அவளுக்குள் சந்தேகத்தை எழுப்பியது.

"மேகலா! நீ நினைக்கற மாதிரி பார்த்தசாரதி எல்லாத் துக்கும் வளைஞ்சு குடுக்க மாட்டார்...! நீ அடங்கித்தான் இருக்கணும். ஆனா, நீ மட்டும் அவங்ககிட்டே சின்சியரா இருந்தேன்னா... அவங்களும் உன்னைத் தங்கமா வச் சுக்குவாங்க" என்றாள்.

ஸ்ரீகலா சொன்னதின் இரண்டாவது பகுதியை அவள் புரிந்து கொள்ளவில்லை. மாறாக "நீ உன் இஷ்டத்துக்கு இருக்க முடியாது" என்ற பகுதி மட்டும் புரிந்து கவலை

யானாள். பாட்டியும் ஸ்ரீகலாவும் வேறு வேறு கோணங்களில் சொன்னாலும் சொன்னது ஒரே விஷயம்தான் என்பது அவளுக்குப் புரிந்தது.

மறுநாள்!

பார்த்தசாரதியிடம் தேன் தடவிய குரலில் குழைந்து கொண்டு சொன்னாள்.

"சாதி! எனக்கென்னமோ நாம செஞ்சிருக்கிற காரியம் தெரியும் போது உங்கம்மா, அப்பாவுக்கு பயங்கர கோபம் வரும்னு தெரியுது" என்றாள்.

பார்த்தசாரதி நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"ஆமா... நாம எப்படியோ சமாளிக்க வேண்டியதுதான்."

"எப்படி?"

"எப்படின்னா, அவங்க கோபத்துல ஏதாவது பேசினாக் கூட நாம மனசல வாங்கிக்காம போயிட்டே இருக்க வேண்டியதுதான்" என்றான்.

"ஓ! ரொம்பக் கோபிக்கப்பாங்களோ?"

"யார் கண்டது?"

"எனக்கு அப்படியெல்லாம் யாரோட கண்ட்ரோல்லயும் இருந்து பழக்கமில்லையே!"

"ஓ...!"

"என்ன ஓ! இப்ப நான் கூட ப்ரண்ட்ஸ் கூட சுத்தறேன். குடும்பம்னு ஆனா அதையெல்லாம் கட் பண்ணிட்டு ஓடி வந்து விடுவேன் இல்ல... அப்புறம்... குழந்தை குட்டின்னு..."

"ஐயோ! இம்மீடியட்டா... குழந்தை குட்டியெல்லாம்... வேண்டாம்... கொஞ்சம்... லேட்டாய்...!"

"ஹேய்!" என்ன பேசறே... நீ? எனக்கு அப்படியெல்லாம் எண்ணமே இல்லே...! உன்னைப் போல அழகா... ஒரு பொண்ணு... அப்புறம் ஒரு பையன்."



"ஐயே! அதெல்லாம்... நடக்காது..."

வேடிக்கைக்காக அவள் பேசுவதாகவே பார்த்தசாரதி நினைத்தான். ஆனால் மேகலா பார்த்தசாரதியைக் கல்யாணம் செய்து கொண்டால் ஜாலியாக இருக்கலாம். வசதியாக இருக்கலாம் என்று மட்டும்தான் நினைத்தாள்.

"அப்போ...! ஜாலியாவெல்லாம் இருக்க முடியாதா?"

"ஜாலியாவா? ஹல்லோ! நீ இனிமே குடும்பத் தலைவியாகப் போறே! என் வாழ்க்கையையே உன் கையில குடுத்துட்டு நான் ஜாலியா இருக்கப்போறேன்" என்றான்.

அப்போதுதான் மேகலாவுக்குத் தான் நினைத்தது போல் சாரதியோடு வாழ்க்கை ஜாலியாக இருக்கப் போவதில்லை. மாறாகத் தான் ஒரு பொறுப்பான மனைவியாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பான் என்பது புரிந்தது.

முதல் முதலாக இந்த திருமண பந்தம் குறித்து அவளுக்கு பயம் ஏற்பட்டது. அவள் நடத்தையில் ஏற்படுகிற மாற்றங்களை கவனித்து வந்த ஸ்ரீகலாவுக்கு கவலையேற்பட்டது.

## 11

"அம்மா! பாட்டி செய்யறது ஒண்ணும் நல்லால்லே!" என்று அம்மாவிடம் கவலைப்பட்டாள் ஸ்ரீகலா.

"ஸ்ரீ! இந்த வீட்ல இருக்கறது... நெருப்பு மேலே நடக்கறது மாதிரி. வயசுக் காலத்துல உங்க அப்பாவை நம்பி வெளியே போய் என்ன பண்றதுன்னு பாத்தேன். இப்ப... ரெண்டு வயசுப் பொண்ணுங்களை வச்சுகிட்டு வெளியே போய் என்ன பண்றதுன்னு பயம்மா... இருக்கு...! உங்க தாத்தா மட்டும் இருந்திருந்தாங்கன்னா கதையே... வேற..." என்று பெருமூச்சு விட்டாள் புஷ்பம்.

பிறகு சொன்னார்.

"ஸ்ரீ! மேகலா... எப்படியோ.. போகட்டும். நீ மட்டுமாவது இவங்க வலையில சிக்காம இருந்தீன்னா.. சந்தோஷப்படுவேன்" என்றார்.

"அம்மா...! கவலையே படாதே! என்னைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும். இப்பவும் சொல்லு.. நீ என் கூட வர்றியா? வா.. வெளியே போவோம்.. போய் கௌரவமா.. ஒரு பொழப்பு நடத்துவோம்..." என்றாள் ஸ்ரீகலா.

"இவரு.. வரமாட்டாரேடி! இவரு மட்டும் வர்றதா இருந்தா.. எப்பவோ வெளியே போயிருப்பேனேடி. இவருக்கு அவங்கம்மாதான் தெய்வம்.. யாரு.. எது சொன்னாலும் நம்ப மாட்டாரேடி" என்றார்.

"பாட்டிக்கு.. எப்படி.. ஒரு லக் பாத்தியா! இப்படிக் கல்லுளிமங்கன் மாதிரி ஒரு மகன்" என்று கசப்பாகச் சிரித்தாள் ஸ்ரீகலா.

"மாமா.. மட்டும்.. நம்ம கூட இருந்திருந்தா..." என்று மறுபடியும் வருத்தப்பட்டார் புஷ்பம்.

"அம்மா...! பரவால்லே... நம்மளைக் காப்பாத்திக்கறதுங்கறது நம்மகிட்டேதான் இருக்கு..." என்றாள் ஸ்ரீகலா.

இப்போதெல்லாம் ஸ்ரீகலா பேசுகிற பேச்சைக் கேட்டு புஷ்பத்துக்கே அவளிடம் பயம் கலந்த மரியாதை எழுந்தது.

அழுத்தம் திருத்தமாகப் பேசினாள். நேரான பார்வையில் அன்னபூரணியைப் பார்த்துப் பேசினாள். அன்னபூரணிக்கே அவளிடம் பயம் ஏற்பட்டது.

சில நேரங்களில் ஸ்ரீகலாவின் பார்வையைச் சந்திக்க அவரால் முடிவதில்லை.

"சின்னது.... இருக்கே...! சரியான கொழுப்புப் பிடிச்சது..." என்றோ,



"ஐயோ! அது ஊர்ப்பட்ட சட்டமெல்லாம்.. பேசும்... அதுகிட்டே யாரு பேசுவா..." என்று முணுமுணுத்துக் கொண்டு நகர்ந்து விடுவார்.

அவளிடம் நெருங்க மாட்டார்.

ஸ்ரீகலா... உள்ளுக்குள் சிரித்துக் கொள்வாள். அவளும் அவர்கள் வழியில் குறுக்கிட மாட்டாள்.

"ஏண்டி ஸ்ரீ! இந்த மேகலா.. என்னடி... பாட்டி பேச்சைக் கேட்டுட்டு ஆடறா" என்று வருத்தப்படும் போது ஸ்ரீகலா சொன்னாள்.

"விளக்கில் விழுகிற விட்டில் பூச்சி மாதிரி.. அக்காவுக்கு அன்னபூரணிப் பாட்டியைப் பிடிக்குது. நாம என்ன சொன்னாலும் எடுபடாது. வாழ்க்கையைக் கெடுத்துகிட்டுப் பாடம் கத்துகிட்டா... கத்துக்கட்டும். இல்லே.. இதுவே வாழ்க்கைன்னு.. வாழ்ந்தா வாழட்டும் என்னா... அவளுக்கு.. எது சொன்னாலும்.. எடுபடாது. விட்ற வேண்டியதுதான்" என்றாள்.

அம்மா மௌனமாகக் கவலையோடுதான் கேட்டுக் கொண்டார்.

"பாட்டியையே பாரேன்...! நாம சொன்னா எதுவும் கேப்பாங்களா? இவங்கள்ளாம் நெகடிவ் பர்சானலிட்டீஸ். இவங்களையெல்லாம்.. மாத்தறதுக்கு.. முயற்சி செஞ்சா... சுவத்துல முட்டிக்கற மாதிரித்தான். நமக்குத்தான் காயமாகும். கேக்கிற மென்டாலிட்டி இருக்கறவங்களுக்குதாம்மா அறிவுரை சொல்லணும்" என்றாள் ஸ்ரீகலா.

அம்மா மௌனமாக ஒத்துக் கொண்டார்.

ஸ்ரீகலாவும், அம்மாவும் எதிலும் தலையிட மாட்டார்கள். தங்களால் முடிந்த மட்டிலும் உழைப்பார்கள். அதிலும் ஸ்ரீகலா தன் வேலை முடிந்தவுடன் நெருப்புக் கோழி முகத்தைப் புதைத்துக் கொண்டாற்போல் முகத்தைப்

புத்தகங்களுக்குள் புதைத்துக் கொள்வாள். அவளை யாராவது வம்புக்கு இழுத்தாலும் கூட விலாங்கு மீன் போல் நழுவி விடுவாள். ஆனாலும் அவளுக்கே பார்த்தசாரதியின் மேல் ஒரு அனுதாபம் இருந்தது.

நல்ல அன்பான பெற்றோர்களிடம் வளர்ந்தவள் என்பதாலோ என்னவோ உலகத்தில் அன்பைக் காட்டுவது போல் நடிப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதே அவளுக்குத் தெரியாமல் இருந்தது.

மேகலாவின் வெளித்தோற்றத்தின் வெளிச்சத்தில் அவளது உள்தோற்றத்தின் மறுபக்கத்தை அவன் பார்க்க முயற்சிக்கவில்லை அதற்கான அவசியமும் இருக்கவில்லை. அந்த அவசியமும் அவனுக்கு வந்தது.

* * *

''ஹல்லோ!'' நான் அருண்... பேசறேன்...!'' என்றான் அருண்.

''சொல்லுங்கண்ணா...!'' என்றாள் மேகலா.

''மேகலா.. நான் இன்னைக்கு உங்க வீட்டுக்கு வர்லாம்னு பாத்தேன்... இன்னைக்கு ஒரு லேண்ட் ஓனர் ஒருத்தர்... என் கூட வர்றதா... இருக்காரு. அவரையும் கூட்டிட்டு வரலாமா?'' என்றான் அருண்.

''வொய்... நாட்?!'' என்றாள் மேகலா.

''லேண்ட் ஓனர்'' என்றால் ஏதோ முண்டாசு கட்டிக் கொண்டு கிழடு தட்டிய யாராவதோ அல்லது ஒங்கு தாங்காக முறுக்கு மீசையுடன் யாராவதோ வருவார்கள் என்று நினைத்தாள்...

மாறாக.. ஒரு இளைஞன்! கொஞ்சம் வாட்டசாட்டமாகவே இருந்தான். தோற்றம் நல்ல ஜமீன்தாரைப் போல கன கச்சிதமாக இருந்தது.



மேகலா வரவேற்று அமரச் செய்தாள்! அன்னபூரணிப் பாட்டியும் அவளும்தான் அப்போது வீட்டில் இருந்தார்கள்.

''மேகலா! இவரு பேரு இரத்தினசாமி. பேருக்கேற்ப இரத்தினமேதான்.'' என்று அறிமுகம் செய்தான் அருண்குமார்.

இரத்தினசாமி அளவாகப் புன்னகைத்தார்.

''ஹேய்... நல்ல காபி போட்டு குடு'' என்றான் அருண்குமார்.

அன்னபூரணியைப் பேசவிட்டு விட்டு மேகலாவின் பின்னால் போனான்.

''மேகலா! கொஞ்சம் பொறுத்திருந்தா.. இந்த மாப்பிள்ளைக்கு உன்னைப் பேசி முடிச்சிருக்கலாம்...''

''ஐயோ! கிராமத்துல போயி யாரு இருக்கப் போறாங்க?!'' என்று பழித்தாள் மேகலா.

''உன்னை யாரு... கிராமத்துல போயி இருக்கச் சொன்னாங்க... அப்பப்ப தலையைக் காட்டிட்டு... வந்துட வேண்டியதுதான்.. ஐயாவுக்கு... நிலம் எவ்வளவு இருக்கு தெரியுமா? ஆயிரம் ஏக்கர்...!'' என்றான்.

மேகலா வாயைப் பிளந்தாள்.

''ஆயிரம் ஏக்கரா?''

''ஆமா...! அது மட்டுமில்ல... இரத்தினசாமிக்கு அம்மா.. அப்பா... யாரும் கிடையாது. ஒரே ஒரு மாமன் மட்டும்தான். அது சபலிஸ்ட். அதை மட்டும் கைக்குள்ள போட்டுட்டா... எல்லாத்தையும் வளைச்சர்லாம்... ம்... ஏமாந்து போயாச்சு...'' என்றான். பெருமூச்சு விட்டான்.

''பேசாம... ஸ்ரீகலாவுக்குப் பார்த்தர்லாமா?'' என்றாள் ஆர்வமாக.

''ஸ்ரீகலாவா? இந்தாளுக்கு ஒத்து வரவே வராது. என்ன இருந்தாலும் உன்னை மாதிரி சாமர்த்தியக்காரி.. இல்லே!'' என்றான்.

"தாங்க்ஸ்... பார்த்தி காம்ப்ளிமென்ட்... ஆனா.. நீங்கள்ளாம் ஒரு நல்ல ப்ரண்டான்னு எனக்கு சந்தேகமா இருக்கு..." என்றாள்.

"ஏன்.. அப்படிச் சொல்றே?"

"பின்னே? உங்க ப்ரண்டு கேட்டா என்ன நினைப்பாரு?"

"மேகலா...! அவன் எனக்கு ப்ரண்டு மட்டும்தான். ஆனா.. நீ எனக்கு உறவுக்காரி. அதுவுமில்லாம புஷ்பம் ஆன்ட்டியை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவங்க குழந்தைங்க... நல்லா இருக்கணும்னுதானே.. நினைப்பேன்" என்றான்.

மேகலா கொஞ்சம் திகைத்துத்தான் போனாள்.

"பாக்கறதுக்கு கண்ணுக்கு... நல்லாத்தான்... இருக்காரு" என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

அருண்குமார் ஆழமாகப்பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று கேட்பவன் போல் "என்ன பிடிச்சிருக்கா?" என்றான்.

"டிகிரி.. முடிச்சிருக்கான். ஏதோ பி.எஸ்.சி...." என்றான்.

"என்னண்ணா... சொல்றே! டிகிரி முடிச்சவரு இன்னொ சண்டாவா... இருப்பாரு..."

"நீ வேற! போஸ்ட் கிராஜுவேட் முடிச்சவன்.. எத்தனை பேரு பேக்காண்களா இருக்காங்களாம். நான் காட்டறேன் பாரு..." என்றான்.

கடகடவென்று சிரித்தாள்.

"அது நிஜந்தான்" என்று முணுமுணுத்துக் கொண்டாள் மேகலா.

ஐந்து நிமிடங்களுக்குள்ளாக இத்தனையும் பேசி முடித்து விட்டு முன் ஹாலுக்கு வந்தார்கள். அதற்குள்ளாக அன்னபூரணி எல்லாவற்றையும் விசாரித்து முடித்திருந்தார். அவர் முகத்திலும் மலைப்பு.



"ம்... மேகி! இவருக்கு.. ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்காம்.. அப்புறம் வீடு.. தோப்புன்னு என்னென்னவோ... சொல்றாரு..." என்றார் ஆச்சரியத்துடன்.

"ஆமா! அண்ணா.. சொன்னாரு...!" என்றாள் மேகலா.

வெகுவாக உபசரித்தாள்.

இரத்தினசாமி தன்னை விழுங்குவது போல் பார்ப்பது கண்டு அவளுக்குப் பெருமையாக இருந்தது. ஆனால் முணுமுணுப்பது போல சொன்னாள்.

"அருண்... அண்ணாவோட ப்ரண்ட் பார்த்தசாரதிக்கும் எனக்கும்.. கல்யாணம் நிச்சயமாகியிருக்கு" என்று.

இரத்தினசாமி அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சட்டை செய்யவும் இல்லை. தொடர்ந்து அவளை விழுங்கினாற்போலத்தான் பாத்துக் கொண்டிருந்தான். மேகலாவுக்கு என்னவோ போல் இருந்தது. ஆனால், உள்ளூர அவன் பார்வை அவளுக்கு எதையோ வெற்றி கொண்டாற்போல் கர்வம் கொடுத்தது.

* * *

இன்றைக்கெல்லாம் பார்த்தசாரதிக்கு வேலையே ஓடவில்லை.

நேற்றெல்லாம் மேகலாவிடம் பேச முடியவில்லை. அவன் பிஸியாக இருந்தான். இன்றைக்குக் காலையில் இருந்து அவள் கிடைக்கவில்லை.

இரண்டு முறை முயற்சி செய்தான். யாரோ பேசிக் கொண்டிருக்கிறாற் போலவே ஒலி வந்தது.

இப்போது மறுபடியும் முயற்சி செய்தான். அன்னபூரணி லைனில் வந்தார்.

"சாரதித் தம்பி! இப்பத்தான் மேகலாவும், ஸ்ரீகலாவும் கோயிலுக்குப் போனாங்க."

"பரவாயில்லையே! மேகலா.. கோயிலுக்குப் போறாளா?" என்று சிரித்தான்.

"ஆமாங்க! தம்பி! ரெண்டு நாளாவே என்னமோ மனசு சரியில்லேன்னா.." என்றார்.

"ஓ....!"

"என்னவாம்!"

"இல்லே! உங்கப்பா... இப்படி டிமான்ட் வச்சுட்டா ரேன்னு வருத்தம்... கல்யாணத்துக்கு முன்னாலயே பொருளை வாங்கிக்கிட்டமேன்னு ஒரு பக்கம் கவலை" என்றார் அன்னபூரணி.

"பாட்டி! இதென்ன.. இது... புதுசு புதுசாக் கவலை.. இன்னும் இரண்டே மாசம்! அப்புறம்.. ரெண்டு பேரு சொத்தும் ஒண்ணு ஆயிடப் போகுது..." என்றான் தேறுதல் சொல்வது போல.

"தம்பி! எதுக்கும் ஒரு வாரம் விட்டுப் பிடிங்க.. அதுக்கப்புறம் தானாக் கூப்பிடுவா..." என்றார்.

"சரி...!" என்றான் சுரத்தில்லாமல்.

அதே நேரம்!

"பாட்டி பொய் பொய்யாக அடுக்கிக் கொண்டிருப்பதையும், அக்கா மாடியில் இருந்து கொண்டே ஏன் சாரதியிடம் பேச மறுக்கிறாள் என்பதையும் ஸ்ரீகலா கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள்.

நான்கு நாட்கள் இதே கதை தொடரவும் பார்த்தசாரதிக்குள் ஏதோ பொறி தட்டியது. வயிற்றுப் பிள்ளை நழுவி



விழுகிறாற்போல் அன்னபூரணிப் பாட்டி பேசினாலும் ஏதோ வித்தியாசமாய் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று புரிந்தது.

சொத்துப் பதிவு செய்து கொடுத்து இருபது நாட்கள் தான் ஆகி இருந்தது. அதற்குள் ஏற்பட்டிருக்கிற இந்த மாற்றம் அவனுக்குள் கலக்கத்தை ஏற்படுத்தியது.

என்னவோ தெரியவில்லை. அப்பாவும் மேற்கொண்டு இந்த விஷயம் பற்றி பேசுவதைத் தவிர்த்துக் கொண்டிருந்தார்.

மன உளைச்சலில் சிக்கிக் கொண்டான். ஒரு நாள்! ஆகாஷிடம் பேசினான்.

"ஏண்டா! சாரதி! அந்தப் பொண்ணு பேர்ல பெரிய பிராப்பர்ட்டி ஒண்ணு வாங்கியிருக்கே.. ஆனா.. எனக்குச் சொல்லலே!" என்றான்.

"சாரிப்பா! நிலைமை அப்படி! அப்பாவே எதிர்ப்பாருன்னு நான் நினைக்கலே! எப்படியாவது.. கல்யாணம் முடிஞ்சாப் போதும்னு..." என்று கூறும் போதே ஆகாஷ் குறுக்கிட்டான்.

"எப்படியாவது.. கல்யாணம் பண்ண அந்தப் பொண்ணு என்ன அவ்வளவு கிரேட்டான்னு.. விசாரிச்சிருக்கலாமேடா...!"

"நான்.. நான்தான்.. சொன்னேனேடா..."

"என்னடா... சொன்னே? எனக்குப் பிடிச்சிருக்குன்னு.. சொன்னே? ஆனா... எங்ககிட்டே ஏதாவது விசாரிச்சியாடா?"

"ஓ..!"

"சரி.. விடு..! என்ன விஷயம்கறதை விசாரிச்சுச் சொல்றேன். ஆனா.. ஒரு வேளை... அந்தப் பொண்ணு உன்கிட்டே விலகற மாதிரி ஏதாவது சுவடு தெரிந்தாக் கூடப் போதும்.. விட்டுது சனின்னு.. விலகிடு.. வெறும் தோல்விதான்..." என்றான்.

"என்னடா.. இப்படிச் சொல்றே?" என்றான் இறங்கிய குரலில்.

"இதுக்கு மேல.. தெளிவாச் சொல்ல முடியாதுடா!" நான் உன் ப்ரண்டு.. எப்பவும் நல்லதுதான்... நினைப்பேன். அதைப் புரிஞ்சுக்கோ!" என்றான்.

கனமான மனதுடன் செல்போன் ஆஃப் செய்கையில்தான் முதன்முதலாக பார்த்தசாரதிக்கு மேகலாவின் மேல் இருந்த மயக்கம் என்ற மாயத்திரையின் முதல் "லேயர்" என்பார்களே அதுமாதிரி முதல் திரை மெதுவாகக் கழன்று யோசிக்க ஆரம்பித்தான்!

பார்த்தசாரதி யோசிக்க ஆரம்பித்த அதே கணத்தில் ரத்தினசாமியுடன் ஒரு கெஸ்ட் ஹவுஸுக்குப் போயிருந்தாள்.

பார்த்தசாரதியைப் போல் மென்மையாக அல்லாமல் இரத்தினசாமிக்கு முரட்டுத் தனமானவள் என்று தெரிந்திருந்தது மட்டுமல்லாமல் மேகலா இளகச் செய்யவும் தெரிந்திருந்தது.

"ப்ளீஸ்!" நான் இன்னொருத்தருக்கு நிச்சயமான பொண்ணு..." என்று அவள் முணுமுணுக்க.

"அம்மிணி! இந்த நாடகம் எல்லாம் வேண்டாம் அம்மிணி! அய்யாவை பிடிக்கலேன்னா.. கூட வெளியே வருவீங்களாக்கும்" என்று அவன் சற்றே எல்லை மீற



இரத்தினசாமியின் ஆயிரம் ஏக்கர் கண்ணுக்குள் மின்னலாக வந்து போக அனுமதித்தாள் மேகலா.

முதற்கட்டத் திகைப்புக்குப் பிறகு முழுமையாக எல்லை மீறுமுன் அவள் தன்னை மீட்டுக் கொண்டாலும் தங்கள் நெருக்கத்தை கைக்கடக்கமான சிறிய காமிரா ஒன்று பதிந்து கொண்டதை அவள் அறியவில்லை.

அதே நேரத்தில்!

பார்த்தசாரதியும் விஷ்வ ரூபம் எடுக்க ஆரம்பித்தான்.

# 12

ஸ்ரீகலா சாட்சி சொல்லி முடித்து விட்டு எப்படி நிதானமாக வந்து தீர்க்கமான முறையில் சாட்சி சொன்னாளோ அதே முறையில் சாட்சிக் கூண்டை விட்டுக் கீழே இறங்கினாள்.

புஷ்பம் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார் என்றால் பார்த்தசாரதி வியப்பின் எல்லையில் இருந்தான்.

ஸ்ரீகலா இப்படிக் கை கொடுப்பாள் என்பது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் இப்போது மனதில் ஒரு புறம் திருப்தி இருந்தாலும் வேறு விதத்தில் கவலை தோன்றியது.

ஸ்ரீகலாவுக்கு மேகலாவும் அவளது குடும்பத்தினரும் வேறு விதத்தில் தொல்லை கொடுப்பார்கள் என்று தோன்றியது. இத்தனை வசதியும், திறமையும், படிப்பும் இருக்கிற தன்னையே முட்டாளாக்க நினைத்தவர்கள் ஆயிற்றே!

மீண்டும் நினைவு பின்னோக்கி ஓடியது!

கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு மேல் மேகலா லைனில் கிடைக்கவில்லை. ஒரு வாரம் கழித்துக் கிடைத்தாள்.

"என்ன மேகலா! ரொம்பப் பிஸியா? நான் ரொம்பப் பிஸியான ஆள், நான் அடிக்கடி கூப்பிடறேன். நீ என்னமோ.. பெரிய பிஸினஸ் மேக்னட் மாதிரி ஆளே கிடைக்கமாட்டேங்கறே!" என்றான்.

"ம்...! பிஸினஸ் மேக்னட் இல்லாட்டியும் கூட ஏதோ எங்களுக்கும் வேலை இருக்குமில்லே...!" என்றாள்.

"ம்ஹூம்...! அப்படி என்னம்மா.. வேலை..!"

"என்னவோ.. வேலை.. போங்க...! எனக்கு ஆனா... உங்க மேலே கோபம்!"

"ம்...? எதுக்கு?"

"பின்னே! நீங்க உங்கப்பாகிட்டே சொல்லியிருக்கலாமில்லே! அப்படியெல்லாம் பங்களாவெல்லாம்... கேட்காதீங்கப்பான்னு."

"ம்..... சொல்லியிருக்கலாம்தான்! ஆனா, காரியம் பெருசா.. வீரியம்... பெருசான்னு.. பார்க்கணுமில்லே! நீ இங்க வந்து சேரு அப்புறம்.. சொல்லிக்கலாம்."

"அதுவும் சரிதான். ஆனா.. எனக்கு இப்பக் கவலையாயிருக்கு. நான் அங்க வந்து சேர்ந்ததுக்கப்புறம் உங்கப்பா அம்மா..மேல..எனக்குக் கோபமாத்தானே... இருக்கும்?"

"அது சரி! அதுக்காக! அவர்களை முதியோர் இல்லம் அனுப்பிச்சர்லாமா? இங்க பாரு! என்னைப் பெத்தவங்க அவங்க! நீ எனக்கு மனைவியாகப் போறே! கல்யாணம்னு ஒன்னு ஆனா.. யாரை எப்படி எங்க வைக்கணும்னு



எனக்குத் தெரியும். உனக்கும் பிரச்சினையில்லாம.. அவங்களுடைய மரியாதையும் குறையாம எதை எப்படி செய்யணும்னு நான் பாத்துக்கறேன். போதுமா?" என்றான்.

'ம்..!" என்றாள் சுரத்தே இல்லாமல்.

"ஹேய்! என்னைப் புரிஞ்சுக்க! உன்னை நம்பி உனக்காக கல்யாணத்துக்கு முன்னாலயே நாப்பது லட்ச ரூபாய் போட்டு சொத்து வாங்கிக் குடுத்திருக்கேனே... அதுலயே நீ புரிஞ்சுக்க வேண்டாம்!"

அவள் சிரித்தாள்!

"ஆமா! யு ஆர் மை ஸ்வீட் டார்லிங்!" என்றாள்.

"சரி.. சரி! ஐஸ் வச்சதெல்லாம் போதும்... அங்கிருந்து ஏதாவது அனுப்பு" என்றான்.

அனுப்பினாள்!

அழைப்பைத் தொடர்பைத் துண்டித்த பிறகு பார்த்த சாரதிக்கும் கவலை ஏற்பட்டது.

"என்ன இது? இப்போதே அம்மா... அப்பாவை பற்றித் தன்னிடம் குறையாகப் பேசுகிறாள். அம்மாவும் இந்தப் பெண்ணைத் திருமணம் செய்வதில் அவ்வளவாக விருப்பம் இல்லாதவர் போல் இருக்கிறார்.

நமக்கும்தான் மேகலாவைப் பற்றி முழுமையாக என்ன தெரியும்? அழகாக இருக்கிறாள். இனிமையாகப் பழகுகிறாள். குறைவாய் பேசுகிறாள். தான் அதீத அழகு என்பதை தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறாள். தன் அழகை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்கிறாள். எல்லா அழகான பெண்களுக்கும் இருக்கக் கூடிய கர்வம்தானே இது?

இயல்புதானே! குடும்பம், குழந்தை என்றெல்லாம் வரும் போது பொறுப்பு வந்து விடாதா?"

குழந்தையா? குழந்தை பெத்துக் கொள்கிற ஐடியாவே அவனுக்கு இல்லை போல் இருக்கிறதே? இரண்டு மூன்று குழந்தைகளாவது வேண்டும். வீட்டில் "களா புளா வென்று" குழந்தைச் செல்வங்கள் ஓடிக்கொண்டிருக்க வேண்டும்! வீட்டை ரணகளம் செய்ய வேண்டும். இப்படி ஆசை எல்லாம் இருக்கிறதே! என்னவோ அடிப் படையே வேறுபடுகிற மாதிரி இருந்தது.

சிந்தனைகள் இந்த மாதிரிக் கோணத்தில் ஆரம்பித்த வுடன் அவளுக்குள்ளும் குழப்பம் ஏற்பட்டது. அதற்கேற் றாற்போல் மேகலாவுக்கு போன் செய்தாள். எப்போது பார்த்தாலும் "வெளியே போயிருக்கிறாள்" என்பார்கள்.

"கோயிலுக்குப் போயிருக்கிறாள்!"

"கடைக்குப் போயிருக்கிறாள்!"

"கெஸ்ட் வந்திருக்காங்க... அப்புறம் கூப்பிடறேன்" என்பாள்.

"நானே கூப்பிடறேன்" என்ற பதில் வந்தவுடன் பார்த்த சாரதிக்கு நன்றாக உறைக்க ஆரம்பித்தது. மேகலா தன் னிடம் பேசுவதைத் தவிர்க்க நினைக்கிறாள் என்பது.

அதே சமயத்தில்!

மேகலாவும் அது குறித்த குழப்பத்தில்தான் இருந்தாள்.

அன்னபூரணி வேறு அவள் மனதைக் குழப்பிவிட் டிருந்தார்.

"ஏ! மேகலா! எனக்கு என்னமோ இந்த சாரதி பற்றிச் சந்தேகமா இருக்கு... இந்த விசயத்துலயே தெரிஞ்சிடுச்சி



அவங்க அம்மா, அப்பாவை விட்டுட்டு வரமாட்டான்.. போல இருக்கு. ஆனா... இந்த இரத்தினசாமி.. பாரு! அம்மாவும்.. இல்லே! அப்பாவும்.... இல்லே! சொத்தும்.. இருக்கு.. எந்தப் பிக்கல் பிடுங்கலும்.. இல்லே!" என்றார்.

"பாட்டி! ஆள் கொஞ்சம் முரடு மாதிரித் தெரியுது."

"ஐயய்யோ! உனக்கு விஷயம் புரியலே. முரட்டு ஆசாமிகளையும் கட்டிப் போட்டுடலாம்டி. ஒண்ணு மில்லே! அவங்க சொல்றதைக் கேட்கணும். அட்லீஸ்ட் அப்படி நடிக்கணும். நடிக்கறதுக்கு உனக்கு சொல்லியா தரணும்.

"இங்க பார்றி! உனக்கு என்ன குறை! ஆள் நல்லா இருக்கார் வேணும்கற வசதி இருக்கு..." என்றார்.

மேகலாவின் மனமும் மெல்லக் கரைந்தது.

யோசிக்க ஆரம்பித்தாள்! என்ன வசதி இருந்தாலும் பார்த்தசாரதியின் குடும்பம் இன்னமும் நடுத்தரக் குடும் பத்தின் மனப்பான்மையில்தான் இருக்கிறார்கள் என்று தோன்றியது. தானெரும்புகிற சுதந்திரமும் கூட கிடைக் காது போலத் தோன்றியது.

மெதுவாக ஆரம்பித்தாள்!

"பாட்டி! சொத்து வேற வாங்கிக் குடுத்திருக்காரே" என்றாள்.

"சொத்து உன் பேர்லதானே இருக்கு. பாக்கலாம். குடுக்க முடியாதுன்னு சொல்லு. அப்படி மீறிப் பிரச்னை பண்ணினாப் பாக்கலாம்...." என்றார் அன்னபூரணி.

"பாட்டி!" என்றாள் அதிர்ச்சியாய்!

"ஆமாடி! பார்க்கலாம்!" என்றார் அன்னபூரணி தெத் தாக.

மேகலா முதலில் அதிர்ந்தாலும் பிறகு அவளும் அதே மாதிரி மனப்பான்மைக்கு வந்தாள். இது எதுவும் தெரியாமல் பார்க்கதராகி அந்தே சிந்மமிதியாக எதிர்காலம் பற்றிய கனவுகளில் ஆழ்ந்திருந்தான்.

மறுபடியும், மறுபடியும் தொடர்பு கொள்ள மறுத்தவுடனே அவனுக்கும் சந்தேகம் வந்தது.

சூடுகண்ட பூனைபோல் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்க ஆரம்பித்தான்...

ஒரு மாதம் முடிந்தது! இரண்டு மாதம் முடிந்தது. கல்யாணப் பேச்சு வேறு கிணற்றில் போட்ட கல் போலக் கிடந்தது.

மேகலா தன்னை தவிர்ப்பது புரிந்தவுடனேதான் அவனுடைய அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது. யோசிக்க ஆரம்பித்தான்.

மேகலாவைப் பற்றித் தனக்கு முழுமையாக என்ன தெரியும்? அழகாயிருக்கிறாள். ஏதோ ஓவியம் கீவியம் என்று கலை ஆர்வம் இருக்கிறது. ஆனால், தன்னுடைய மனப்பான்மைக்கு ஏற்றவளாக இருப்பாளா என்ற சந்தேகம் தான் முதலாக எழுந்தது.

பொருத்தம் என்பது ஒரு புறம் இருக்கட்டும். இன்னொரு புறத்தில் திடீரென்று அவள் நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணம் அவனுக்குப் புரியவில்லை.

தானே நேரடியாகப் போய் பார்க்கலாமா? என்று யோசித்தான். தான் நேரடியாகப் போனால் எதையாவது சொல்லிச் சமாளித்து விடுவார்கள்.

இப்போது ஒதுங்குவதற்கு உண்மையான காரணம் என்னவென்று தெரிய வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்தான்.



ஆதாரவிடம் கேட்பேயானால், ஆகாஷ் கடுப்பாவான் ''அப்பவே சொன்னேன்.. இல்லே!'' என்பான்.

''பரவாயில்லை! நம்பிக்கையானவன். திட்டினாலும் கூட தனது நன்மையையே விரும்புகிறவன்.''

துணிந்து இறங்கினான்.

ஆகாஷ் உச்சுக் கொட்டினான்.

''போடா...! நீ என்கிட்டே பேசாதே!'' என்றான் கோபமாக.

''ஏண்டா!'' என்றான் சாரதி இறங்கிய குரலில்.

''என்னென்னவோ விஷயம் எல்லாம் நடந்திருக்கு. எதிலயும் என்னைக் கன்ஸல்ட் பண்ணலே'' என்றான்.

''ஆமடா! தப்புத்தான்! ரொம்ப முட்டாள்தனமா நிறைய விஷயங்கள் பண்ணிட்டேனோன்னு இருக்கு.''

''ஓ...!''

''ஆமடா! என்ன பண்ணினேன்னா...'' என்று ஆரம்பித்து நடந்த விஷயங்களையெல்லாம் சொன்னான்.

ஆகாஷ் அதிர்ச்சியானான். அரசல் புரசலாகத் தெரிந்திருந்தது. சந்தேகத்தின் அடிப்படையில்தான் பார்த்த சாரதியின் தந்தையிடம் சொன்னான். இப்போது பார்த்த சாரதியிடமிருந்தே விஷயங்களைக் கேட்டபோது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

''என்னடா! இப்படிப் பண்ணியிருக்கே?'' என்றான்.

''நடந்துருச்சு.. இப்பவும் எனக்கு என்னவோ சந்தேகமா இருக்கு.நைன்லயே வரமாட்டேங்கறா'' என்றான்.

ஆகாஷ் பெருமூச்சு விட்டான்.

"ரொம்பத் தப்பு பண்ணிட்டடா! எங்ககிட்டே விசாரிச்சிருக்கலாம். ஆக்சுவலா அந்த வீட்டில் வச்சு அந்தச் சின்னப் பொண்ணுதான் நல்ல டைப்பு. அம்மா ரொம்ப நல்லவங்க. அவங்கப்பா.. வாயில்லாப் பூச்சி. மேகலாப் பொண்ணு அவங்க பாட்டி மாதிரி. அன்னபூரணிப் பாட்டியோட நடத்தை புடிக்காமத்தான் தாத்தா வெளியே போனாரு" என்று முழுமையாகச் சொல்லவும்தான் பார்த்தசாரதிக்கு விஷயங்கள் புரிய ஆரம்பித்தன.

"அதுலயும்... இவ்வளவு பெரிய சொத்தை வேற வாங்கிக் குடுத்திருக்கே...! அதுவும் அந்தப் பொண்ணு பேர்ல..." என்றான் கடுப்பாக.

இப்போது பார்த்தசாரதி பெருமூச்சு விட்டான். "நான் என்னத்தைக் கண்டேன்!" என்றான்.

"சரி.. விடு.. இனி ஆகறதைப் பார்ப்போம். இப்ப உனக்கு என்ன தெரியணும். அந்தப் பொண்ணு ஏன் உன்னை அவாய்ட் பண்ணுதுன்னு தெரியணும்... இல்லே!" என்றான்.

"ஆமடா!"

"நான் பாக்கறேன்" என்றான்.

நான்கைந்து நாட்களுக்குள்ளாகவே ஆகாஷ் விவரம் சேகரித்தான். ஆனால் எப்படி அதை பார்த்தசாரதியிடம் சொல்வது என்றுதான் தெரியவில்லை. அதனால் ஒரு வேலை செய்தான்.

தனியாக ஒரு பைலில் சேகரித்த விஷயங்களைப் பதிந்தான்... அதை அப்படியே கம்ப்யூட்டரில் ஏற்றி இ மெயிலில் அனுப்பி வைத்தான்.



பார்த்தசாரதி அதைப் பார்த்து விட்டு அதிர்ந்து போனான்!

அப்பாவுக்கு ஏன் அந்தக் குடும்பத்தைப் பிடிக்கவில்லை என்பதனையும், தான் எந்த இடத்தில் இடறி விழுந்திருக்கிறோம் என்பதும் புரிய மெது மெதுவாக உணர்வுகள் ஒரு நிலைக்கு வந்து அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது.

தீவிரமாக யோசிக்க ஆரம்பித்து அந்த முடிவை எடுத்தான்.

ஆகாஷிடம் சொன்னான்!

ஆகாஷ் தயக்கத்துடன் சொன்னான். "ஏன்... பார்த்தசாரதி.. அந்த அளவுக்குப் போகணுமா?"

"இல்லடா! என்னை முட்டாளாக்கிட்டா பாத்தியா. அதை ஒத்துக்க முடியலைடா? யாராவது ரெண்டு பேரைப் பிடிச்சு இந்த மாதிரி மானத்தை வாங்கினோம்னா மத்தவங்களுக்கு பயம் வருமில்லே!"

"மத்தவங்களைப் பத்தி நாம எதுக்காக கவலைப் படணும்?"

"இல்லடா! இப்படி ஏமாந்தது இளிச்சவாத்தனமாத் தெரியுது. அந்தச்சொத்தைத் திருப்பி வாங்கி ஏதாவது ஒரு பொதுக் காரியத்துக்காவது குடுப்பேனே ஒழிய. அந்தப் பொண்ணுக்கு விடக் கூடாது" என்றான்.

ஆகாஷிடம் ஆக்ரோஷமாகப் பேசி விட்டாலும் தனிமையான நேரங்களில் வேதனை அவனைத் தின்றது.

"எப்படி உண்மையான பிரியம் வைத்தோம். எவ்வளவு கேவலப்படுத்தி விட்டார்கள்" என்று வெகுவாக வருத்தப்பட்டான்.

இதற்கு மேலும் யோசித்தால் மண்டை வெடித்து விடும் என்ற நிலை தோன்றியபோது அப்பாவிடம் பேசினான்.

மனத்தில் இருக்கிற துக்கத்தையெல்லாம் கொட்டி விட்டான். அப்போது கூட வழக்குப் போடப் போவதைச் சொல்லவில்லை. தன் வருத்தத்தை மட்டுமே பகிர்ந்து கொண்டான்.

அப்போது அப்பா சொன்னார்.

"எப்பா! எவ்வளவு பெரிய தொகையை கொண்டு போய் இறக்கி அப்படி ஒரு பிராப்பர்ட்டியை வாங்கிக் குடுத்திருக்கியே...!" என்றார்.

"நம்பினேன்ப்பா! நம்பிக்கை வைத்தேன்" என்றான்.

"சரி! நான் சொல்றதை நல்லாக் கவனிச்சுக்கோ. ஏதோ ஒரு பொண்ணு அவளைப் பார்த்ததும் உனக்குப் பிடிச்சுப் போய் ப்ரபோஸ் பண்ணினே. அவளோட குணங்கள் பத்தி உனக்கு என்ன தெரியும்!"

"ரொம்பப் பெரிசா.. ஒண்ணும் தெரியாதுப்பா...! பழகின வரைக்கும்... யதார்த்தமாத்தான் தெரிஞ்சா...! ஆனா... இப்ப... யாரோ.. இரத்தினசாமின்னு ஒருத்தராம்!

"அப்பா.. கைய உயர்த்தினார்.. "வேண்டாம்ப்பா! அது பத்தி நாம பேச வேண்டாம். காலுக்குதவாத செருப்பை கழட்டிப் போட்டுட்டு வேற வேலையைப் பாருப்பா" என்றார்.

அவன் நின்றான். "அப்பா! அப்படித் தூக்கி வீசிட்ற மதிரி சொத்தில்லே. அதுவுமில்லாம உழைச்சு சம்பாதிச்ச பணம். விடக்கூடாதுப்பா" என்றான்.



அப்பா சிந்தனையிலாழ்ந்தார்.

"யோசிக்கலாம்ப்பா!" என்றார். ஆனா, அப்பா உள்ளூர அந்த சொத்து பறிபோனதில் கவலையே படவில்லை.

சொல்லப் போனால் இந்தச் சொத்து போனாலும் பையன் தங்களுக்கு மிஞ்சினானே என்று மகிழ்ச்சியடைந்தார்.

சொத்தை மீட்பதற்கு ஏதாவது செய்வோம். யாராவது நான்கு பெரியவர்களை வைத்து ஏதாவது செய்வோம் என்று எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் மகன் வேறுவிதமாகத் திட்டம் தீட்டுகிறான் என்று தெரிந்தவுடன் ஆலோசனை சொல்லிப் பார்த்தார். பிறகு அவன் போக்கில் விட்டு விட்டார்.

நடந்ததெல்லாம் நினைவில் ஓட இப்போது எதிர்பாராத விதமாக ஸ்ரீகலாவே வந்து சாட்சி சொன்ன விதம் பார்த்து ஒரு விதத்தில் மகிழ்ச்சியும், திகைப்புமாக எழுந்தான் பார்த்தசாரதி.

கோர்ட்டுக்கு வெளியே வந்தவுடன் நிருபர்கள் பரபரவென்று மொய்ப்பதை பார்த்து ஸ்ரீகலா தெளிவாகச் சொன்னாள்.

"இது எங்க குடும்ப சொத்து சம்பந்தப்பட்ட விவகாரம். இதுல பத்திரிகைகளுக்கு என்ன ஆர்வம்னு எனக்குப் புரியலை. தயவுசெய்து என்னைத் தொல்லை செய்யாதீங்க. நன்றி!" என்று கைகூப்பி விட்டுப் பரபரவென்று போனாள்.

சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த பார்த்தசாரதி அவளிடம் நன்றி சொல்வதற்காக நெருங்கினான். கைகள் கூப்பி "நன்றி" என்றான்.

ஸ்ரீகலா நின்றாள்!

"சார்! இனிமேலாவது யார் எப்படின்னு தெளிவாப் புரிஞ்சுகிட்டு வாழ்க்கையை அமைக்கப் பாருங்க" என்றாள்.

வேகமாக நடந்தாள்!

பார்த்தசாரதி திகைத்து நின்றான்.

இப்படி ஒரு சாட்சி சொன்னதற்காக அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் எத்தனை பெரிய புயல் வீசப் போகிறது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. அறிந்த போது...!

## 13

மொத்த ஹாலுமே நிறைந்தாற் போன்ற தோற்றம் அவளுக்குள் தோன்றியது!

அன்னபூரணி ஒரு பக்கம் பழைய படங்களில் வருகிற வில்லி மாமியாரைப் போல இடுப்பில் கை வைத்துக் கொண்டு நின்றிருந்தார்.

நடுநாயகமாக மேகலா நின்றிருந்தாள்! பார்வையாளரைப் போல ஒரு சோபாவில் காலாட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான் இரத்தினசாமி.

எப்படியும் பூகம்பம் வெடிக்கும் என்ற எதிர்பார்ப்போடுதான் வீட்டுக்கு வந்தாள் ஸ்ரீகலா. வரும்போதே ஒரு முடிவுடன் வந்தாள் என்பது மட்டுமல்ல அந்த முடிவை அவள் சாட்சி சொல்லப் போகும் போதே எடுத்து விட்டாள்.

வெகு ஆர்வமாகத் தன்னிடம் நன்றி தெரிவிக்க வந்த பார்த்தசாரதியை முகத்தில் அடித்தாற்போல் பேசி



விட்டோமே என்ற கவலை கொஞ்சம் நேரம் இருந்தது. அதற்குப் பிறகு வீட்டுக்குப் போய் சமாளிக்க வேண்டிய நிலைமையைப் பற்றிய கவலை அவளை ஆக்கிரமித்து விட்டது.

முன்னாலிருந்த சிட்அவுட்டில் செருப்புக்களை கழட்டி விட்டு விட்டு உள்ளே நுழையும்போதுதான் பாட்டியும், மேகலாவும் தலா ஒரு பத்ரகாளியைப் போல நிற்கையில் அம்மா சற்றுத் தள்ளி கலங்கி கையையும் பிசைந்து கொண்டு டென்ஷனாக நிற்பதைப் பார்த்தாள்.

ஒரு அரைப்புன்னகையுடன் திரும்பித் தனக்கென்று இருக்கின்ற அறைக்குப் போக யத்தனித்தாள்.

"நில்லுடி... ஸ்ரீ!" என்று கர்ஜித்தார் அன்னபூரணி.

நின்றாள்.

எதிர்ப்பார்வைப் பார்த்தாள்.

"உன்னைக் கோர்ட்டுக்கு வந்து யாருடி சாட்சி சொல்லச் சொன்னா?" என்று கேட்டார் உக்கிரமாக.

"யாரு சொல்லணும்? எனக்கு என் மனசாட்சி சொன்னது. செஞ்சேன்."

"ஓஹோ! எந்தத் தைரியத்துல இந்த வீட்டுக்குள்ளே இப்ப நுழையறே?" என்றார் மறுபடியும்.

ஸ்ரீகலா பதில் சொன்னவிதம் பார்த்து மேகலாவே கொஞ்சம் கலங்கித்தான் போனாள்.

"பாட்டி! சும்மா ஆர்ப்பாட்டம் பண்ணாதீங்க! எப்ப நான் சாட்சி சொல்லக் கூண்டேறி நின்றேனோ... அப்பவே என்னோட தைரியம் என்னன்னு உங்களுக்குப் புரிஞ்சிருக்கணும். அஃப்கோர்ஸ் தப்பாவோ, நிஜமாவோ

ஏதோ ஒரு வசதி பண்ணி எங்களையெல்லாம் காப்பாத்தினீங்க. அந்த செஞ்சோத்துக் கடனுக்காகத்தான் இந்த வீட்ல இருந்தேன். ஆனா, எல்லாத்துக்கும் ஒரு எல்லை இருக்கில்ல. எப்ப சாதி வழக்குப் போட்டாரோ அப்பவே சமாதானத்துக்குப் போயி சொத்தைத் திருப்பிக் குடுத்திருக்கணுமில்லே! நம்பிக்கை வச்ச ஒருத்தர் சொத்து வாங்கிக் குடுத்தாரு. அவருக்கு துரோகம் பண்ணிட்டீங்க... ஆனா.. அவருக்கு சொத்தை திருப்பிக் குடுக்க வழி பாருங்க! அதை விட்டுட்டு மேல மேல ஏதாவது பிரச்பனம் பண்ணினீங்கன்னா... நல்லா இருக்காது... ஆமா!" என்றாள் மிரட்டலாக.

"என்னடி செய்வே!"

"நான் என்ன செய்றது? இப்பவே குடும்பத்தைப் பத்தி மோசடிக் குடும்பம்னு பேசறாங்க... இன்னும் நானும் வேற அதை நிரூபிக்கணுமாக்கும்" என்றாள்.

மேகலாவின் முகத்தில் உண்மையாகவே கலக்கம் அதிகரித்தது. ஸ்ரீகலாவையும், இரத்தினசாமியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

ஸ்ரீகலா அதைக் கண்ணால் காட்டிப் பாட்டியிடம் சொன்னாள்.

"பாட்டி! என் வாயைப் பிடுங்காதீங்க... அது உங்களுக்கு நல்லதில்லே. அது மட்டுமில்ல.. என் பொழப்பைப் பாத்துக்க எனக்குத் தெரியும்." என்றவள் அம்மாவிடம் போய் நின்றாள்.

"அம்மா! ரொம்ப நேரம் இங்கே இருக்கப் போறதில்லே. நான் வீட்டை விட்டுக் கிளம்பறேன். எங்க ஓனர்கிட்டே விவரம் சொன்னேன். அவர் இப்ப நான் பாத்துகற லெண்



டிங் லைப்ரரியை என் பொறுப்பில விட்டுட்டு இன்னொன்று ஆரம்பிக்கிறாராம். எனக்கு ஏழாயிரம் சம்பளம் தர்றேங்கறார். அதுமட்டுமல்ல.. அந்தக் கட்டிடம் முழுக்க அவருக்கு சொந்தம். அதனால மேல மாடியில அவங்க வீட்டுக்குப் பக்கத்திலயே ரெண்டு ரூம் இருக்கிற சின்னப் போர்ஷன் ஒதுக்கியிருக்காரு. அதனால பாதுகாப்புக்கும் குறையில்லே. நீ என்னோட வர்றியா?" என்றாள்.

புஷ்பம் மௌனமாக நின்றாள்.

"தெரியும்மா! நீ என்னோட வரமாட்டேன்னு. இப்படி ஊமையா இருந்தே வாழ்க்கையை இவங்களுக்கு வேலைக்காரி மாதிரிக் கழிச்சுட்டே!" என்றாள் வருத்தத்துடன்.

தனது அறை நோக்கிப் போனாள். ஏற்கனவே தயாராகப் பெட்டியில் துணிமணிகள் மற்றும் தன்னுடைய பொருட்களை எடுத்துத் தயாராக வைத்திருந்தாள் போலும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

"மேகலா! இப்பவாவது யோசி! இந்த அன்னபூரணிப் பாட்டியை நம்பி உன் வாழ்க்கையைக் கெடுத்துக்காதே!" என்றாள்.

அப்போது மேகலா சொன்ன வார்த்தைகள் ஸ்ரீகலாவின் நெஞ்சில் சம்மட்டி போல் தாக்கியது என்பதால் அதே நேரம் அந்த வீட்டின் வாசலில் வந்து நின்ற பார்த்தசாரதியின் காதுகளிலும் அது விழுந்தது.

தயங்கி நின்றான்! திரும்பி நடந்தான்!

• • •

"போதும்! அன்னபூரணி... இனி அந்தக் குழந்தை மேல கையை வச்சே... நடக்கறதே... வேறு!" என்று இடி

போல் முழங்கிய குரலைக் கேட்டு அன்னபூரணி திகைத்து நின்றுவிட்டார்.

ஸ்ரீகலா மீண்டும் ஒருமுறை முயற்சித்துப் பார்ப்போம் என்ற எண்ணத்துடன் அம்மாவின் அருகில் போனாள்.

"அம்மா.. அப்பாவும்... நீயும் என்கூட வந்துடுங்க" என்றாள்.

அன்னபூரணிக்குப் பயம் பிடித்துக் கொண்டது. புஷ்பம் போய் விட்டால் வீட்டுக் காரியமெல்லாம் யார் பார்ப்பது.

பின்னாலிருந்து புஷ்பத்திடம் கண்ணைக் காட்டினார். மிரட்டல் விடுத்தார். மகன் அருகில் போய் நின்றாள்.

"டேய்! குகநாதா! உன் பொண்டாட்டியும், நீயும் வெளியே போனா.. நான் தற்கொலைதான் பண்ணிக்கு வேன்..." என்றார் கலங்கிய குரலில்.

எப்போதும் போல குகநாதன் முடிவெடுக்க முடியாமல் நின்றார்.

அதே நேரம்!

"எனக்குத் தெரியும்டி! உனக்கு அந்தப் பார்த்தசாரதி மேலே இன்ட்ரஸ்ட்... அதனாலதான். நீ சான்ஸ் கிடைச்ச வுடனே.. நல்லவள்ன்னு நிரூபிச்சுட்டே....." என்றாள் மேகலா.

அந்த வார்த்தைகள் ஸ்ரீகலாவை வெகுவாகத் தாக்கியது என்றால் பார்த்தசாரதியும் கொஞ்சம் அதிர்ந்துதான் போனான்.

அதே நேரமே பாட்டி கோபமாக ஸ்ரீகலாவை நெருங் கினார். "இன்னும் எதுக்குடி எல்லார் மனசையும் கெடுத்து கிட்டு நிக்கறே!" என்றார். கையை ஓங்கினார்.



உள்ளே நுழைவதற்கு இது சரியான நேரமல்ல என்று உணர்ந்தவன் திரும்பினான். இரண்டு எட்டு எடுத்து வைத்திருப்பான்.

நல்ல ஆகிருதியுடன், பெரிய மீசையுமாக ஒரு பெரியவர் அவனைப் பிடித்து நிறுத்தினார்.

பார்த்தசாரதியிடம் சில நிமிடங்கள் பேசினார். அவ ரிடம் பேசிய பிறகு பார்த்தசாரதியின் மனத்தில் உள்ளே நிம்மதி ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும். அந்த இடத்தை விட்டு அகன்றான்.

அந்த பெரியவர்தான் அன்னபூரணியின் பங்களாவை நோக்கிப் போனது அவர்தான் வாசலில் நின்று அப்படி யொரு மிரட்டல் மிரட்டியது.

அன்னபூரணி திகைத்துப் போய்ப் பார்க்கையில் அங்கே நின்று கொண்டிருந்தார் சுகவனம்.

"என்னடா! செத்துத் தொலையாம நிக்கறாளேன்னு பார்க்கறியா?" என்றார் கர்ஜிக்கும் விதமாக.

அன்னபூரணி இப்படியொரு திருப்பத்தை எதிர்பார்க்க வில்லை.

"அன்னபூரணி! அந்தப் பெரிய புள்ளையும் நீயும் என்னமோ செய்ங்க... ஆனா, இந்த சின்னப் புள்ளையை என் பொறுப்பில விட்ரு" என்றார்.

அன்னபூரணி ஒன்றும் பேசவில்லை! கடுகடுவென்று முகத்தை வைத்துக் கொண்டு நின்றார். ஆனால் உள்ளூரக் கொஞ்சம் நடுக்கம் இருந்தது.

ஸ்ரீகலா ஏதோ மலைபோல் ஒரு ஆதரவு கிடைத்தாற் போல் நகர்ந்து போய் தனது தாத்தாவின் அருகில் நின்றாள்.

மேகலாவுக்கு என்னமோ இதெல்லாம் சினிமாவில் நடக்கிற மாதிரி இருந்தது.

புஷ்பம் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். இரத்தினசாமி கூட காலாட்டிக் கொண்டு சோபாவில் அமர்ந்திருந்தவன் எழுந்து நின்று கொண்டிருந்தான்.

''வாம்மா!'' என்று சின்னப் பேத்தியைத் தனது அருகில் நிறுத்திக் கொண்டார்.

மறுபடியும் சொன்னார்.

''அன்னபூரணி! விஷயம் இதோட முடியலை. உனக்கும் உன்னோட அழகான பேத்திக்கும் பத்து நாள் கெடு தர்றேன். பேசாம.. அந்தப் பிராப்பர்ட்டியை அந்தப் பையனுக்குக் கொடுத்துடுங்க... இல்லே.. நடக்கறதே... வேற'' என்றார்.

''அது... அது... எதுக்கு... நீங்க பேசறீங்க'' என்று அன்னபூரணி ஆரம்பிக்கையிலேயே அவர் சரேலென்று உள்ளே நுழைந்தார்.

ஓங்கி ஒரு அறை விட்டார்!

''ஊரு பூராவும்... கப்பலேறிக்கிட்டிருக்கிறது.. என்ற பரம்பரை மானமும் மரியாதையும். நான் சொல்றதைச் செய்! இல்லே. எப்படிச் செத்தேன்னு கண்டு பிடிக்க முடியாதபடிக்குக் கொலை நடக்கும்...'' என்றார்.

''ஹலோ! நீங்க யாருங்க... இங்க வந்து மிரட்டல்.. பண்றீங்க!'' என்று இரத்தினசாமி ஆரம்பிக்க.

''டேய்! ஒட்டுப்புல்லு! சும்மா நில்றா! உங்க மாமன் சின்னப்பன்கிட்டே கேளு.. நான் யாருன்னு சொல்லுவான். நீ அக்கட்டால நில்லு. இது எங்க குடும்ப விவ



காரம்...'' என்று குரலெடுக்க இரத்தினசாமி கொஞ்சம் அடங்கிவிட்டான்.

''மாமன் சின்னப்பன்'' என்ற சொற்கள் மந்திரம் போல வேலை செய்தது.

இத்தனை பேச்சுக்கள் நடக்கும்போதும் அப்பா குகநாதன் கல்லுளி மங்கனைப் போல நிற்பதை ஒரு வித வேதனையுடன் பார்த்தாள் ஸ்ரீகலா. அம்மாவையும் பார்த்தாள். ஸ்ரீகலாவின் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அம்மாவும் அதே வேதனைப் பார்வையை பார்த்தார்.

''ஸ்ரீகலா! நீ கிளம்புடி!'' என்றார்.

ஸ்ரீகலா மேற்கொண்டு எதுவும் பேசாமல் தாத்தாவைத் தொடர்ந்தாள்.

தாத்தாவின் கார் வெளியே நிற்பதையும், டிரைவர் ஒருவர் ஓடி வந்து பெட்டியை வாங்கிக் கொள்வதையும் அவள் சலனமில்லாமல் பார்த்தாள்.

''ஏறிக்கடா.. ராஜாத்தி!'' என்றார் தாத்தா.

ஏறிக்கொண்டாள். ஒன்றுமே பேசவில்லை.

''என்னடா! அப்ச்சி மேல கோபமா?'' என்றார். ஸ்ரீகலா மௌனமாக அவரைப் பார்த்தாள். இல்லையென்று தலையசைத்தாள்.

''சரிடா! இனிமேக் கவலைப்படாதே! எல்லாப் பிரச்சினையும் நான் பாத்துக்கறேன்'' என்றார்.

கார் அந்தத் தெருவிலிருந்து திரும்பி மெயின் ரோட்டுக்கு வந்தது.

"அந்த லெண்டிங் லைப்ரரியில நிறுத்துங்க" என்றாள் ஸ்ரீகலா.

தாத்தா அதிர்ச்சியாகப் பார்த்தார்.

"அப்ச்சி! நீங்க இப்படி மாயாவி மாதிரி வந்து குதிப்பீங்கன்னு எனக்கென்ன தெரியும். நான் எங்க ஓனர்கிட்டே இந்த லெண்டிங் லைப்ரரி முழுக்க நான் பாத்துக்கறேன்னு சொல்லியிருக்கேன். அவரு என்னை நம்பி இன்னொரு பிராஞ்ச் ஓப்பன் பண்ணிட்டாரு. திடீர்னு கைவிட முடியாது. நான் இப்போதைக்கு அந்த வீட்டுக்கே போறேன். நல்ல குடும்பம். அந்த வீட்ல எனக்குப் பாதுகாப்புக்கும் குறையில்லை. நான் சொன்னபடி நடந்துக்கணும் இல்லே?! ஒரு மூணு மாசம்! அதுக்குள்ள இந்தப் பிரச்சினைகளும் முடியட்டும். அப்புறம்... உங்களோட வந்து இருக்கேன்" என்றாள்.

சுகவனத்திற்கு ஏமாற்றமாக இருந்தது.

'இத்தனை நாள் பொறுப்பற்ற முறையில் ஒதுங்கி இருந்து விட்டு இப்போது மட்டும் என்ன திடீர் அக்கறை! என்னைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்' என்று பேத்தி சொல்லி விடுக்கிறாள் என்பது புரிகிறது.

சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

"ஒண்ணு செய்யட்டா? நீ தனியா இருக்க வேண்டாம். நம்ம நிலத்துல வேலை செய்யும் சப்பாத்தான்னு ஒரு பாட்டி. இப்ப சும்மாதான் இருக்கு. கொண்டு வந்து துணைக்கு வக்கிறேன்" என்றார்.

அந்த யோசனை வேண்டுமானால் நல்ல யோசனையாக இருந்தது.

ஏற்றுக்கொண்டாள்.



"சரிடா! நாளைக்கே அனுப்பி வைக்கறேன்" என்று அவரும் இறங்கி வந்தார்.

வீட்டைப் பார்த்தார்!

துடைத்து வைத்தாற்போல் இருந்தது.

"சரி வா! வேணும்கற பொருள் வாங்கித் தர்றேன்" என்று அழைத்துப் போய் பாய் தலையணை, கொஞ்சம் பாத்திரங்கள் என்று வாங்கிக் கொடுத்தார்.

"நாளைக்கே நம்ம தோட்டத்து வீட்ல... சும்மா கிடக்கிற கட்டிலு, பீரோ எல்லாம் அனுப்பி வைக்கறேன்" என்றார்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பேத்தியோடு அளவளாவினார்.

யாருக்கோ போன் செய்து விட்டு வந்தார்.

காரையும் அனுப்பி வைத்தார்.

பக்கத்தில் இருக்கும் ஓட்டல் ஒன்றுக்கு நடந்து போனார்கள். பேத்திக்கு ஆசை ஆசையாய் உணவு வகைகள் வாங்கிக் கொடுத்தார்.

பத்து மணி வாக்கில்!

சப்பாத்தா பாட்டி வந்தே விட்டார்! ஸ்ரீகலாவுக்கு ஆச்சரியம்.

"அப்ச்சி... அதுக்குள்ளே வந்துட்டாங்க!"

"இப்படி நிலையும் வரும்னு தெரியும்மா!" என்றார்.

"எல்லாம் பத்து இருபது மைலுக்குள்ளதான் இருக்கோம். எங்கயும் போயிடலை" என்றார்.

புறப்படும்போது பேத்தியின் தோளில் தட்டினார். "பரவால்லை... நீ நியாயஸ்த்தின்னு நினைச்சேன் நியாயமான

ஆளு மட்டுமில்லை... ரோஷக்காரியும்தான்னு காட்டிக் கிட்டே. அது சரி! உன்ற அப்ச்சி ஏன் இப்படியெல்லாம் செய்ய வேண்டி வந்துச்சுன்னு ஒரு நாளைக்கு விளக்க மாய் சொல்றேன். அம்மிணி! ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க... ரொம்ப நாளைக்கப்புறம் இன்னைக்குத்தான் வயிறு நிறையச் சோத்தை ருசிச்ச உண்டிருக்கேன்... தெரியுமா?" என்றார்.

ஸ்ரீகலாவும் நெகிழ்ந்தாள்.

"அப்ச்சி!" என்று ஏதோ கேட்க நினைத்தவள் "வேண்டாம்! இப்போது கேட்டால் தாத்தாவின் மனம் புண்படும்... அதற்கும் நேரம் வரும்" என்று கட்டுப் படுத்திக் கொண்டாள்.

அன்றிரவு!

பத்து மணியளவில் அவளது செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. பேசினாள். பேசி முடித்து விட்டு வைத் தவள் மனதில் மேலும் குழப்பம்தான் தோன்றியது.

எதிர்காலம் குறித்துப் பலவிதமான சந்தேகங்கள் தோன்றி அந்த இரவு தூக்கமில்லாமல் கழிந்தது.

## 14



"ஸ்ரீ. புத்தகம் எடுக்கறதுன்னா மட்டும்தான் உங்க லெண்டிங் லைப்ரரிக் குள்ளே விடுவீங்களா...? இல்லே! மனு ஷங்களைப் பாக்கறதுக்கும் வரலாமா?" என்று சிரித்தபடி நிற்கிற ஆகாஷைப் பார்த்து ஸ்ரீகலாவின் முகம் மலர்ந்தது.

"அத்தான்! வாங்க... வாங்க!" என்று வரவேற்றாள். "அக்கா...! எப்படியிருக்காங்க?" என்றாள் உற்சாகமாக.



"அக்காவுக்கென்ன...! அவ நல்லாத்தான் இருக்கா... எனக்குத்தான் இடுப்பு வலியாயிருக்கு!" என்றான்.

"ஏன்.. உங்களுக்கென்ன...? இடுப்பு வலிக்கு...?!" என்று சிரித்தாள் ஸ்ரீகலா.

"பின்னே...? காலையிலிருந்து ஓயாம தோப்புக் கரணம் போடறதுன்னா.. சும்மாவா?" என்றான் ஆகாஷ்.

ஸ்ரீகலா கலகலவென்று சிரித்தாள். சிரித்துக் கொண்டே லைப்ரரி வாசலில் நிழலாடவே யாரோ வாசகர் வருகிறார் போல இருக்கிறதே என்று எண்ணியபடி திரும்பினாள்.

பார்த்தசாரதி நின்று கொண்டிருந்தான்.

அவள் சிரிப்புப் பாதியிலேயே நின்றது.

"வாங்க!" என்றாள் மெல்லிய குரலில்.

"ஸ்ரீ!" என்றான் பார்த்தசாரதி தயங்கினான்.

"வாங்க! உட்காருங்க!" என்று இரண்டு பிளாஸ்டிக் ஸ்டூல்களை எடுத்துப் போட்டாள்.

அமர்ந்தார்கள்!

பார்த்தசாரதி ஆழமாக அவளைப் பார்த்தான். "ஸ்ரீ! தேங்க்ஸ்! அண்ட் ஐ ம் சாரி!" என்றான்.

ஆகாஷ் சிரித்தான்.

"என்னடா.. இது! ஸ்வீட்டும் காரமும் ஒரே நேரத்தில் பரிமாற்ற மாதிரி. தேங்க்ஸும், சாரியும்" என்று கேட்டான் ஆகாஷ். சிரித்தான்.

ஸ்ரீகலாவும் சிரிக்கவில்லை. பார்த்தசாரதியும் சிரிக்க வில்லை.

பார்த்தசாரதி தொடர்ந்து பேசினான்.

"ஆமா! எனக்காகக் கோர்ட்டில் கூண்டேறி நின்னு சாட்சி சொன்னாங்களே... அதுக்குத் தாங்க்ஸ்! ஆனா, அப்படியொரு சிச்சுவேஷனை ஏற்படுத்தி இப்பக் குடும்பத்தையே விட்டுப் பிரிஞ்சு நிக்கற சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டுட்டனே... அதுக்காக.. சாரி..!" என்றான்.

ஸ்ரீகலாவுக்கு ஒரு நிமிடம் என்ன சொல்வதென்று தெரியவில்லை. பிறகு சொன்னாள்.

"என்ன செய்யலாம்? சூழ்நிலை அப்படியாகிப் போச்சு. என் மனசுக்கு நியாயம்னு பட்டதை நான் செஞ்சேன். அக்கா.. செஞ்சது.. துரோகம்.. பெரியவங்களும் அவளுக்கு சரியா வழி காட்டலே. அதனால நான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியதாப் போச்சு..." என்றாள்.

"அப்படி வந்து நின்னு சொல்றதுக்கு தைரியம் வரணுமில்லே...!" என்றான் ஆகாஷ். பிறகு ஸ்ரீகலாவின் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

"ஸ்ரீ உண்மையிலேயே நீ செய்தது அற்புதமான.. காரியம்!" என்று பாராட்டினான்.

பார்த்தசாரதி ஐந்து நிமிடங்களுக்கு மேல் அங்கேயிருந்த புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு நின்றான். பார்த்தசாரதியும், ஆகாஷும் அவளது தேநீர் உபசரிப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

இடையில் இரண்டு மூன்று வாடிக்கையாளர்கள் வரவே அவள் அவர்களைக் கவனிக்கலானாள். அவர்கள் பொறுமையாகக் காத்திருந்தார்கள்.

வாடிக்கையாளர்கள் போன பின்பு அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தாள்.



"சாரதி தயக்கத்துடன் சொன்னான். "ஸ்ரீகலா...! எந்த ஹெல்ப் வேண்ணாலும் என்கிட்ட கேட்கணும் என்ன!" என்றான்.

"தேவைப்பட்டால் கண்டிப்பாக் கேட்கறேன்" என்றாள். ஆகாஷ் பிறகு கேட்டான்.

"அப்புறம், உங்க வீட்ல என்ன நடக்குது?!"

ஸ்ரீகலா சொன்னாள்.

"தாத்தா... பத்து நாள் கெடு வச்சிருக்காரு. பங்களாவைத் திருப்பிக் கொடுக்கணும்னு..." என்றாள் ஸ்ரீகலா.

"ஆமா! எங்களுக்கும் தூது வந்திருக்கு.. இனிமேல் பேச்சு வார்த்தைதான். அதான் பார்த்தசாரதி லீவை எக்ஸ்டெண்ட் பண்ணியிருக்கான். இந்த விஷயத்தை முடிச்சுட்டுப் போலாம்னு" என்றான் ஆகாஷ்.

ஸ்ரீகலா மையமாகப் புன்னகைத்தாள்.

"ஆமா! ஆகாஷ் அத்தான்! நேம் டிரான்ஸ்பர் முடிச்சுட்டே போங்க" என்றாள். பிறகு தயங்கிய குரலில் சொன்னாள்.

"உண்மையாவே... எனக்கு ஏதாவது ஹெல்ப் பண்ணணும்னு நினைச்சீங்கன்னா... நேம் டிரான்ஸ்பர்க்கு பத்திர செலவு பண்ற அளவுக்கு இப்ப எங்க வீட்ல பணம் இருக்காது முடிஞ்சா..."

பார்த்தசாரதி சட்டென்று குறுக்கிட்டான். "ஸ்ரீகலா! உண்மையா நான் எதுக்கு கேஸ் போட்டேன்னா.. அது உழைச்சுச் சம்பாதிச்ச பணம்.. அதை ஏமாந்து விட முடியாதில்ல...! நீங்க எனக்கு அந்தச் சொத்தையே மீட்டுக் குடுத்திருக்கீங்க... அந்த செலவு ஒண்ணுமே இல்லை. ஆனா.. நீங்க கவலைப்பட வேண்டாம். அந்த செலவை

உங்க தாத்தா எத்துப் பண்ணிக்கறேன்னு சொல்லிட்டாரு..." என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். புறப்படும்போது ஸ்ரீகலா சொன்னாள்.

"சார்! நான் எனக்கு எது நியாயம்னு பட்டதோ அதைச் செஞ்சேன். ஆனா... அதுக்காக எங்க குடும்பத்தை மட்டமா நினைச்சுராதீங்க" என்றாள்.

மௌனமாகத் தலையாட்டிக் கொண்ட பார்த்தசாரதி சம்பிரதாயமாக விடை பெற்றுக் கொண்டான்.

"மறுபடியும் பார்க்கலாம்" என்றான் ஆகாஷ்.

பார்த்தசாரதியும், ஆகாஷும் புறப்பட்டுப் போனதற்குப் பிறகு ஸ்ரீகலா மௌனமாகப் புன்னகைத்துக் கொண்டாள்.

"இனிமேல்.. பார்த்தசாரதியைப் பார்க்கப் போவதில்லை. பிரச்சினை முடிந்துபோனது. அப்படியிருக்கும் போது இனிமேல் எதற்குப் பார்க்கப் போகிறோம் என்று எண்ணிக் கொள்கையிலேயே பார்த்தசாரதி திரும்பவும்.

"மேடம்! அந்த நேம் டிரான்ஸ்பரின்போது நீங்க வந்து சாட்சிக் கையெழுத்து போடணும்" என்று வேண்டிக் கொண்டான்.

ஸ்ரீகலா "சரிங்க.. சார்" என்றாள்.

அவர்கள் தெருவில் இறங்கிப் போவதை டேபிளுக்கருகில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

பத்தடி நடந்து எதிர் பிளாட்பாரத்துக்கருகில் நின்ற காரில் ஏற முன்பாக ஏனோ ஆகாஷ் நின்று பார்த்தான்.



ஒரு விதமாகப் புன்னகைத்து விட்டுப் போனான்! அந்தப் புன்னகையின் பொருள் அப்போது ஸ்ரீகலாவுக்குப் புரியவில்லை!

புரிந்த போது...!

* * *

கையெழுத்துப் போட்டுவிட்டு நிமிரும்போது மேகலா முகத்தில் கடுப்பு.

ஸ்ரீகலா ஜாடையாக பார்த்தசாரதியின் முகத்தைப் பார்த்தாள்!

இறுக்கமான முகத்தோடு இரண்டு பாண்ட் பாக்கெட்டுகளிலும் கை விட்டபடி மிகவும் அலட்சியமாக மேகலாவைப் பார்த்தபடி நின்றிருந்தான் சாரதி.

ஸ்ரீகலாவுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. மிகவும் இயல்பாகச் சிரித்தபடி மேகலாவின் பின்னேயே அலைந்து கொண்டிருந்த பார்த்தசாரதியா இவன் என்று எண்ணிக் கொண்டாள்.

எந்தவிதத் தகுதியும் இல்லாத ஒரு பெண்ணுக்காக இவ்வளவு தூரம் இறங்கினோமே என்று எண்ணி வருத்தப்பட்டிருப்பான் போலும் என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், முகம் இப்போது உணர்ச்சிகளைத் துடைத்துப் போட்டாற்போல் வெறுமையாக இருந்தது.

மேகலா எவ்வளவு அருமையான ஒரு வாழ்க்கையை இழந்து விட்டாள் என்று தோன்றியது.

கண்டிப்பாக பார்த்தசாரதி அவளை மிகவும் போற்றி வைத்துக் கொண்டிருந்திருப்பான். ஆனால் ஸ்ரீகலாவுக்குள் இப்போது இன்னொரு கவலையும் தோன்றியது.

மேகலா கொடுத்த அடியால் பாவம் இப்போது உள்ளூர நொந்து போயிருப்பான். அதனால் இனிமேல் பெண் களின் மேல் நம்பிக்கையில்லாமல் போகும். எப்படி யிருந்தாலும் பெற்றோர்களின் விருப்பத்துக்காகவாவது ஒரு திருமணம் செய்ய வேண்டியிருக்கும்.

பாவம்! அந்தப் பெண்!

முழுமையான விதத்தில் அன்பைச் செலுத்துவதில் இனிமேல் சாரதிக்கு.... ஒரு தயக்கம் வாழ்நாள் முழுவதும் இருக்கும். அந்தத் தயக்கத்தைத் துடைத்தெடுத்து அவன் மனசு முழுக்க நிறைந்திருக்கும் அன்பை வெளிக் கொண்டு வருவதற்கு அந்தப் பெண் போராட வேண்டி யிருக்கும்.

சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டாள் ஸ்ரீகலா.

இதென்ன? அடியேங்கறதுக்கு ஆத்துக்காரியைக் காணமாம். அதுக்குள்ளே பிள்ளைக்குப் பேரு என்ன வைக்கறதுன்னு யோசிச்சாளாம்.

கேவலம் ஒரு சாட்சிக் கையெழுத்து! அதைப் போட்டு விட்டு நாம் போகப்போகிறோம். அதற்குப் பிறகு நமக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இருக்கப் போவதில்லை. நமக்கெதற்கு இந்த யோசனையெல்லாம்? என்று எண்ணிக் கொண்டாள்.

உள்ளுக்குள்ளே புன்னகை மலர்ந்தது.

என்னதான் சமாதானம் சொல்லிக்கொண்டாலும் அவ னது மனமெல்லாம் மேகலாவுடன் சுற்றிக் கொண்டிருந்த காலத்தில் மலர்ந்து கிடந்த சாரதியின் முகத்தையே திரும் பத் திரும்ப நினைத்துக் கொண்டது. இப்போதைய உணர்ச் சியற்ற முகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டது.



தங்கத் தட்டில் ஏந்தித் திருமகள் அளித்த அற்புதமான வாழ்க்கையை அக்கா இழந்து விட்டாளே என்று மனது திரும்பத் திரும்ப ஏங்கியது.

''மேடம்! இந்த இடத்துல கையெழுத்துப் போடுங்க...'' என்று யாரோ சொல்ல இந்த உலகுக்கு வந்தாள்.

சாட்சிக் கையெழுத்தைப் போட்டாள்.

''பத்திரம் கிடைக்கறதுக்கு எப்படியும் ஒரு வாரம் ஆயிடும்'' என்றார்கள் அலுவலகத்தில்.

''நோ.. பிராப்ளம்!'' என்றான் பார்த்தசாரதி.

வெளியே வந்தார்கள்!

மேகலா யாரிடமும் எதுவும் சொல்லிக் கொள்ளாமல் வேகமாகக்கிளம்பினாள். அன்னபூரணிப் பாட்டி மட்டும் தான் அவளோடு வந்திருந்தார். இரண்டு பேரும் யாரி டமும் எதுவும் சொல்லாமல் கிளம்பிப் போனார்கள்!

ஆகாஷ் ''அப்பாடா! விட்டுது சனியன்'' என்று விடுதலை உணர்வுடன் கூறியபடி திரும்பிப் பார்த்தான்.

அவர்கள் இருவரையும் கூர்ந்து கவனித்தபடி நின்றிருந் தாள் ஸ்ரீகலா.

மேகலா வேகமாகப் போகிற நேரத்தில் பார்த்தசாரதி யின் கண்களில் ஆழ்ந்த வேதனை மின்னி மறைவதை ஸ்ரீகலா கண்டு கொண்ட அதே நொடியில் அவன் லாவகமாக அதை மறைத்துக் கொள்வதையும் கண்டாள்.

ஆகாஷைப் பார்த்து அவன் வாஞ்சையாகப் புன்னகைக் கிற அதே நேரத்தில் தாத்தாவிடம் கேட்டாள் ஸ்ரீகலா.

''ஏங்க அப்ச்சி! அந்த இரத்தினசாமி.. வர்லையாக்கும்'' என்று.

"அவனா! அவன் எதுக்கு வர்றான். என்னதான் இருந்தாலும் அவனும் ஆம்பளைதான்! இந்தக் கேவலத்துக்கு கூட வந்து நிக்கறதுக்கு உறுத்துயில்லே" என்றார்.

பெருங்குரலெடுத்துச் சிரித்தார்.

"சிங்கப்ச்சி! போதும் நிறுத்துங்க! அவங்கள்ளாம் ஒரு விதமாப் பாக்கறாங்க..." என்றாள்.

"சும்மாயிரு புள்ளே! இப்படிச் சந்தோசமாச் சிரிச்சு... ரொம்ப நாளாச்சு. உங்க அன்னபூரணிப்பாட்டி பிடிச்சு வச்ச கொழுக்கட்டையை மாதிரி மூஞ்சிய வச்சுட்டுப் போறா ல்லே. பாக்கறதுக்கு எவ்வளவு நல்லா இருக்கு" என்று இடிஇடியென்று மறுபடியும் சிரித்தார்.

ஸ்ரீகலாவின் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது. தாத்தா தன்னிடம் பேசும்போது மட்டும் கோயமுத்தூர் பாஷையில் பேசுவது அவளுக்கு ஆச்சரியம்!

"ஏங்க அப்ச்சி! அதென்ன என்னைக் கிண்டல் பண்றீங்களோ..." என்று கேட்டாள்.

"இல்ல புள்ளே! நம்ம மனசுக்குப் பிடிச்சவங்ககிட்டே யாவது நம்ம விருப்பம் போலப் பேசணும் புள்ளே! நம்ம பூர்வீகத்தை மறந்துடக் கூடாதில்லே!" என்றார்.

ஸ்ரீகலாவுக்கும் அந்த பாஷை பிடித்துத்தான் இருந்தது. இப்போது இவ்வளவு கம்பீரமாகவும் ஏன் சில சமயங்களில் தெனாவெட்டாகவும் பேசுகிற தாத்தா.. ஏன்.. தனது குடும்பத்தை சரி செய்யவில்லை?!" என்று எண்ணிக் கொண்டாள்.

பேச வேண்டும்! தாத்தாவிடம் ஒரு நாள் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டே நினைத்த கணத்தில்.



அலுவலரிடம் பேசிவிட்டு ஆகாஷும், பார்த்தசாரதியும் அவர்களை நோக்கி வந்தார்கள்.

பார்த்தசாரதி கை கூப்பி வணக்கம் சொன்னான். "ரொம்ப நன்றி! என்று.

"இதுக்கெதுக்கப்பா.. நன்றி! என் பேத்திக்கு இருக்கிற தைரியம்.. எனக்கு அந்தக் காலத்துல இல்லாமப் போச்சு... சரிப்பா! இந்த மேகலா இல்லேன்னா.. உன்னோட வாழ்க்கையே ஏதாவது ஆயிடும்னு நினைச்சுக்காதே! நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ?!" என்றார்.

"நீங்க வேற தாத்தா! இப்பவே என்னவோ பெண்களை நம்பாதேன்னு! ஆயிடுவான் போல இருக்கு" என்றான் ஆகாஷ் லேசான கவலை தொனிக்கும் குரலில்.

ஸ்ரீகலா முகத்திலும் அதே கவலை தொனிப்பதைக் கவனித்தார் சுகவனம்.

"அதென்ன... அப்படி நினைக்கறது? இப்ப மேகலா மாதிரியா ஸ்ரீகலா.. இருக்கா...! தைரியமா கோர்ட்டுல கூண்டுல நின்னு சாட்சி சொல்லலையா? உலகத்துல நல்ல பொண்ணுங்க நிறைய இருக்காங்கப்பா" என்றார்.

"ஆமாங்க.. தாத்தா!" என்றான் ஆகாஷ். அப்போதும் பார்த்தசாரதி எதுவும் பேசவில்லை. லேசான புன்னகையுடன் ஆமோதிக்கவும் செய்யாமல் எதிர்க்கவும் செய்யாமல் நின்றான்.

"சரி... போலாமா?" என்றார் தாத்தா.

மெதுவாகக் காம்பவுண்டை விட்டு வெளியே வருகிற நேரத்தில் சர்ரென்று ஒரு கார் வந்து நின்றது.

நல்ல களையான நடுத்தர வயதில் ஒரு பெண்மணியும், பெரியவரும் இறங்கினார்கள். பார்த்தமாத்திரத்தில் புரிந்தது பார்த்தசாரதியின் பெற்றோர்கள் என்று.

பார்த்தசாரதியை நோக்கிப் பரபரப்பாக வந்தார்கள்.

"அப்பா! நான்தான் பாத்துக்கறேன்னு சொன்னேனே!" நீங்க ரெஸ்ட் எடுக்காம...?" என்றான் சாரதி.

"அடப் போப்பா! ரெஸ்ட் எப்பவும் நல்லாத்தான் எடுக்கறோம்... இந்த நேரத்துல உன் கூட இருக்கணும்னுதானே வந்தது...!" என்றார் கோபாலகிருஷ்ணன்.

"நீதானா... கோர்ட்டேறி சாட்சி சொன்ன பொண்ணு" என்று புனிதவதி ஸ்ரீகலாவை அணைத்துக் கொண்டார்.

கணவனிடம் பெருமையாகச் சொன்னார்.

"எவ்வளவு தைரியம் இருக்கணும்...!" என்று. கோபாலகிருஷ்ணனும் ஸ்ரீகலாவுக்கு நன்றி சொன்னார். "உன் நல்ல மனசுக்கு கடவுள் ஒரு குறையும் வைக்க மாட்டான்" என்று உயர்த்தினார்.

புனிதவதி அவளிடம் மெல்லிய குரலில் சொன்னார். "உண்மையான பிரியம் வச்சேனே. இப்படி முட்டாளாக் கிட்டாளேன்னு ஒரே வருத்தம் எங்க சாரதிக்கு... அதனால தான் பிடிவாதமா அந்த சொத்தை திருப்பி வாங்கணும்னு.. பிடிவாதமா.. இருந்தான்.

"புரிஞ்சதுங்கம்மா! உண்மையான அன்பை ஒருத்தர் பகடைக்காயாப் பயன்படுத்தி விளையாடும்போது அது எவ்வளவு பெரிய தப்புன்னு எனக்கும் புரியுது. அதனால தான்... நானும் சாட்சி சொன்னேன்" என்றாள்.

சற்று நேரம் மரியாதைக்காக நின்று பேசிவிட்டுப் புறப்பட்டார்கள்.



மறுபடியும் பார்த்தசாரதி சொன்னான். "ஸ்ரீ! ரொம்பத் தேங்க்ஸ்! கண்டிப்பா ஊருக்குப் போறதுக்கு முன்னால உங்களை மீட் பண்றேன்" என்றான்.

ஸ்ரீகலா புன்னகையுடன் தலையாட்டினாள். ஒரு வினாடி அவள் பார்வை அவன் முகத்தில் நிலைத்தது. பிறகு மீண்டது.

அந்தக் கணத்தில்!

ஸ்ரீகலாவுக்கு அந்த உண்மை புலப்பட்டது. அதிர்ந்து போனாள். லேசான நடுக்கம் உடலில் பரவியது.

பார்த்தசாரதிக்காகத் தான் அவன் நிலையில் நின்று யோசித்து வருத்தப்பட்டதற்குமான காரணங்கள் எல்லாம் ஒரு நொடியில் தெளிவானது. தன்னைக் குறித்தே அச்சம் தோன்றியது.

கடலலையின் ஆழம் போல் ஆழமாக அவளது பார்வை மீண்டும் ஒரு முறை பார்த்தசாரதியின் மேல் படர்ந்து மீள்கையில் கார் நகர்ந்தது.

பார்த்தசாரதிக்கு ஒன்றும் புரியவில்லை என்றாலும் அவனுக்குப் பின்னாலே நிற்கிற ஆகாஷுக்கு அந்தப் பார்வை புரிந்தது.

கவலையும், கரிசனமும் மனதிற்குள் ஓட சிந்தனையில் ஆழ்ந்தான்.

# 15

எப்படி எல்லாருக்கும் கேட்ட வண்ணம் பதில்கள் அளித்தாள். சரியான முறையில் உரையாடல்கள் நிகழ்த்தினாள் என்பதெல்லாம் தெரியவில்லை. ஆனால் சரியாகச் செய்தாள்.

இரவெல்லாம் உறக்கமே இல்லை.

நேற்று கார் நகர்கிற நேரம். பார்த்தசாரதியின் உருவம் கண் பார்வையிலிருந்து விலகிப் போகிற நேரம் அவள் உள்ளத்தில் அந்த உண்மை பொட்டில் அறைந்தது.

தனக்கு பார்த்தசாரதியைப் பிடிக்கிறது!

எப்போதிலிருந்து...?!

தெரியவில்லை. ஆனால், அக்காவின் மேலோட்ட மான ஆழமற்ற குணங்களுக்கும் பார்த்தசாரதியின் பண்புக்கும் சற்று ஒத்துப் போகாது என்று எப்போது புரிந்ததோ அப்போதிருந்தே ஆழ்மனதில் ஒரு கவலை தோன்றியது.

பார்த்தசாரதியின் சார்பாகவே தன் மனம் எண்ணியதின் காரணங்கள் எல்லாம் இப்போது புரிந்தது.

அக்கா ஒருவேளை புரிந்து கொண்டாள் போலும். அதனால்தான் கோபத்தில் கேட்கிறேன் என்று உண் மையைப் போட்டு உடைத்திருக்கிறாள்.

நல்லவேளையாகத் தங்கள் குடும்பத்தினர் யாரும் அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. இந்த ஆசை கருவிலேயே கருகிப் போக வேண்டியதுதான்.

"இத்தோடு இதை மறந்து விடு. ஸ்ரீ! யாரிடமும் எக்காரணமும் கொண்டும் எதையும் சொல்லி விடாதே!" என்று அறிவு எச்சரித்தது.

மனதோடு போராட்டம் நடத்தியது. உள்ளத்தில் ஓரத்தில் ஒரு விதமான விரக்தியும் தோன்றியது.

அப்படித்தான் சொன்னாலும் யாரிடம் சொல்வது? இப்போதைக்குத் தாத்தாவின் அன்பு தைரியம் கொடுக்



கிறது. ஆனால், அவரிடம் போய் இதையெல்லாம் எப்படிப் பேச முடியும்?

அப்படியே பேசினாலும் அக்காவைக் கோர்ட்டுக்கு இழுத்தவளை நீ எப்படி திருமணம் செய்து கொள்வாய்? என்று தாய் தந்தையரே கேட்டால் என்ன சொல்வது?

"சரி! நியாயம் என்று பட்டது. சாட்சி சொன்னாய். அதோடு.. விடு...!" என்று தானே சொல்வார்கள்!

"இல்லை! இது அடிப்படையே சரியில்லை!" என்று தனக்குத்தானே விதவிதமாக வாதப் பிரதிவாதங்கள் செய்து கொண்டாள். ஆனாலும் பேதை மனது அந்தக் காதலை நினைத்துக் கலங்கியது.

சாரதி சிரிப்பது போலவும், கோர்ட்டில் சாட்சி சொல் லும்போது ஆச்சரியமும், திகைப்புமாய் அவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்தது. எல்லாமும் நினைவுக்கு வந்தது.

"எனக்கு சாட்சி சொல்லப் போய்தானே... இந்த நிலைமை!" என்று பரிதாபப்பட்டோ இரக்கப்பட்டோ தெரியவில்லை ஆகாஷை அழைத்துக் கொண்டு லெண்டிங் லைப்ரரிக்குத் தன்னைத் தேடி வந்தது. எல்லா மும் அவளுக்கு "ஸ்லைடு" கள் என்பார்களே அது போல் மின்னி மறைந்தது.

"அடியே! இது ஒன்றும் கதைக்குதவாது. எத்தனையோ பெண்கள் சினிமாவைப் பார்த்து விட்டு அந்தப் படத்தின் ஹீரோவை நாலு நாளைக்கு நினைத்துக் கொண்டு அலைவதில்லையா? அது மாதிரித்தான் இதுவும். நீ போய் சாட்சி சொன்னதனால் மட்டும் நீ வித்தியாசமானவள் என்று அவன் நினைத்தாலும் அவரது குடும்பத்தினர்

... குட்டையில் ஊறிய மட்டை'' என்றுதான் நினைப்பார்கள்.

''போகாத ஊருக்கு வழி தேடாதே அம்மிணி! ஆகற வழியைப் பாரு'' என்று அவள் மனதே உபதேசம் செய்தது.

தன் மனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நேற்றிலிருந்து வெகுவாக முயற்சித்துக் கொண்டிருந்தாள். ஆனால் பெரிதாக வெற்றியேற்படவில்லை.

மாலை நேரமாக ஆக மனம் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு நிலைக்கு வந்தது.

இது வெறும் சலனமாகக் கூட இருக்கலாம். பொறுத்திருந்து பார்க்கலாம். ஒருவேளை இந்தப் பிரச்சினைகள் எல்லாம் முடிந்து பார்த்தசாரதியும் புறப்பட்டுப் போய் விட்டால் கண்காணாமல் போன ஒருவரின் நினைப்பு எதற்காக வரப்போகிறது? என்று தேற்றிக் கொண்டாள். ஆனால் அப்படியெல்லாம் எதுவும் நிகழப் போவதில்லை என்பது அவளுக்கு அப்போது புரியவில்லை.

• • •

''ஏன்.. பாட்டி! எதுக்காக இந்த தாத்தா நாலு மணிக்கே ...ன்னைப் புறப்பட்டு வரச் சொன்னாரு?!'' என்று கேட்...டாள் ஸ்ரீகலா.

''அதெல்லாம் கேட்கற இடத்துல கேட்டுக்கோணும் ...ம்மிணி! வெந்தண்ணி வச்சிருக்கேன். தண்ணி வாத்...ட்டு வருவியாம்'' என்றார் சுப்பாத்தா.

சுப்பாத்தாள் அம்மா வந்த புதிதில் ஸ்ரீகலாவுக்கு அவ...சவது புரியாமல் ஒரே கலாட்டவாக இருந்தது. கொஞ்... கொஞ்சமாக இப்போது புரிய ஆரம்பித்தது.



''பாருங்க... பாட்டி! நீங்க இப்படியே கோயமுத்தூர் பாஷை பேசிகிட்டு இருங்க. நானும்.. ''இன்னாம்மே... இன்னாத்துக்குக் கூவறேன்னு ஆரம்பிச்சுடுவேன்'' என்று மிரட்டுவாள்.

சுப்பாத்தா பாட்டி பாவமாகப் பார்ப்பார். ''என்ன கண்ணு இப்படிச் சொல்றே! நான் என்ன வேணும்னா.. இப்படிப் பேசறேன். எங்க ஊரு பாஷை.. அதுதான்.. எனக்கு சீக்கிரமா வருது'' என்பார்.

ஸ்ரீகலா சிரித்து விடுவாள்.

''ஐயோ.. பாட்டி! நான் தமாஷுக்குச் சொன்னேன்'' என்று சமாதானப்படுத்துவாள்.

ஒருநேரம்! அவர் கேட்பார்.

''எனம்மிணி! அதென்ன.. வந்துக்கினு. போயிக்கினு.. இஸ்துக்கினு..ன்னு இந்த ஊர்ல இப்படிப் பாஷை பேசறீங்க?!'' என்பார்.

''அது பாட்டி! ஒவ்வொரு ஊர்ல ஒவ்வொரு வழக்கம்'' என்று விளக்குவாள். முதலில் ''தண்ணீ வாத்துட்டு வா'' என்றார். ஸ்ரீகலாவுக்கு புரியாது. இப்போதெல்லாம் ''குளித்து விட்டு வா'' என்பதை அப்படிச் சொல்கிறார் என்று புரிந்தது.

அவளுக்கு வென்னீரில் குளித்து விட்டு வந்தால் இதமாக இருக்கும் என்று தோன்றியது. லெண்டிங் லைப்ரரி நல்ல மையமான இடத்தில் இருந்தது. காலை எட்டு மணிக்கே திறந்து விடுவாள். பள்ளி கல்லூரி மாணவர்கள். அலுவலர்கள் செல்வோர் என்று நிறைய வாசகர்கள். இரவு ஒன்பது வரைக்கும் திறந்திருக்கும் பகலில் ஒரு இரண்டு மணி நேரம் வீட்டுக்கு வந்து ஓய்வெடுப்பாள்.

உதவிக்கு ஒரு சிறிய பையன் அப்போதுதான் பிளஸ் டு முடித்த பையன் இருந்தான். ஆனால் அவனுக்கும் வேறு வெளி வேலையும் இருந்தன.

கடுமையான உழைப்பு அவளுக்கு வேண்டித்தான் இருந்தது. அவளது சலித்துக் கிடந்த மனதுக்கு அது மிகவும் அவசியமாக இருந்தது.

திடீரென்று அன்று மாலை நான்கு மணியிருக்கும்! லெண்டிங் லைப்ரரி ஓனர் வந்தார்.

"அம்மா "ஸ்ரீ! உங்க தாத்தா அஞ்சு மணிக்கு வந்தாராம். ஏதோ முக்கியமான பேச்சு வார்த்தை இருக்காம். உங்களை ரிலீவ் பண்ணச் சொல்லியிருக்காரு" என்றார்.

"தாத்தாவா எதுக்கு?" என்றாள் அவள் தனக்குள் பேசிக் கொள்வது போல்.

"அதெல்லாம்... எனக்குத் தெரியாது. நீங்க தாத்தா கிட்டே கேட்டுக்க வேண்டியது" என்றார்.

ஸ்ரீகலா அதற்கு மேல் எதுவும் பேசவில்லை.

தாத்தா எதற்காக வரச் சொன்னார் என்ற யோசனை யோடே மேலே தனது போர்ஷனுக்கு வந்தாள். அப்போது தான் சுப்பாத்தா... பாட்டி அப்படிச் சொன்னார்.

"என்.. பாட்டி! உங்களுக்கு எதுவும் தெரியுமா?" என்றாள் குளித்து விட்டு பாத்ரூமை விட்டு வெளியே வந்தவுடன்.

"அதா.. கண்ணு! யாரோ விருந்தாளிங்க வாராங்களாம்" என்றார்.

"ஓ!" என்று சமாதானமானாள்.

நைட்டியில் நடமாடிக் கொண்டிருந்தவள் நின்று யோசிக்கையிலேயே தாத்தாவே வந்தார்.



"ஏனுங்க.. அப்ச்சி! என்ன நடக்குது...?" என்று விசாரித்தாள்.

"அம்மிணி! விருந்தாளிங்க.. வராங்க! ரொம்ப கிராண்டாவும் இல்லாம, அதுக்காக வீட்டுல சாதாரணமாவும் இல்லாம ஒரு அலங்காரம் பண்ணிக்குவியாம்."

"அப்ச்சி! விருந்தாளிக வந்தா நான் எதுக்கு அலங்காரம் பண்ணிக்கனும்" என்றாள்.

"பெரியவங்க சொன்னாக் கேக்கனும்" என்றார் குறும்பாகச் சிரித்தபடி.

ஸ்ரீகலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் தாத்தாவிடம் எப்படி மறுப்பது என்று எண்ணியவள் ஓரளவு நல்ல புடவையாக உடுத்துக் கொண்டாள். மெல்லிய செயின் வேறு கழுத்தில் அணிந்து கொண்டாள்.

தனக்கு பிடித்த அந்தத் தொங்கட்டானை எடுத்து அணிந்து கொண்டாள். வெளியே வந்தாள்.

"சரிங்க அப்ச்சி! அலங்காரம் எல்லாம் பண்ணியாச்சு. இப்ப சொல்லுங்க. எதுக்காக...யார் வராங்க?" என்றாள்.

அந்த நேரம்!

சற்றும் எதிர்பாராத விதமாக குகநாதனும், புஷ்பமும் உள்ளே நுழைந்தார்கள்.

"அம்மா...!" என்று ஓடிப்போய் ஆசையாகக் கட்டிக் கொண்டாள்.

"ஏம்மா! உங்களையா... விருந்தாளிங்கன்னு தாத்தா.. சொன்னாரு...?" என்று கேட்டாள்.

"இல்லடா! நிஜம்மாவே விருந்தாளிங்க... வராங்க" என்றாள் புஷ்பம்.

அப்பாவிடம் ஓரிரு நிமிடங்கள் பேசினாள். "என்னடா.. நீ! வெளிய போன்னா... வந்துடறதா? இது எனக்கும் வீடுதான்னுட்டு.. இருக்க வேண்டியதுதானே?" என்றார் அப்பா.

அப்பா அப்படி வாய் திறந்து பேசியது அவளுக்கு அதிசயமாக இருந்தது.

"இல்லப்பா! இனிமே அங்க இருந்தா.. பிரச்சினைதான். ஒவ்வொரு நாள் கழிவதும் நரக வேதனையாத்தான் இருக்கும்" என்றாள்.

"அதுக்காக... நாங்க இனிமே உன்னை எப்படிம்மா விட்டுட்டு இருக்க முடியும்?" என்றார் குகநாதன்.

ஸ்ரீகலாவுக்கு ஆச்சரியமான ஆச்சரியம். "அப்பாவா இப்படிப் பேசுகிறார்? அப்பாவுக்கு இப்படியெல்லாம் பேசத் தெரியுமா... என்ன?" என்று.

புஷ்பம் சிரித்துக் கொண்டார்!

எப்போதும் மனத்தில் இருக்கிறதையெல்லாம் தன்னிடம் மட்டுமே கொட்டுவார் என்று சொன்னால் புரியவா போகிறது? புஷ்பம் அதிகமாக எதுவும் பேசமாட்டார். ஆனால் அப்பாவின் மௌனமான நடத்தைக்குப் பின்னே புஷ்பத்தின் ஆலோசனைகள் இருக்கிறது என்பதை ஸ்ரீகலாவுக்கும் புரிந்திருந்தது. ஆனால் அப்பா இவ்வளவு வெளிப்படையாகப் பேசிப் பார்த்ததில்லை.

ஒருவேளை தனது பிரிவு அவரைப் பேச வைக்கிறதோ என்று எண்ணிக் கொண்டாள். சொன்னாள்.

"அப்பா! நீங்க சொல்றது எனக்குப் புரியுது. ஆனா இப்படியொரு பிரச்சினைக்கப்புறம் நான் அங்கே இருக்க முடியுமா?" என்றாள்.



"ஏன்.. அங்க இருக்க முடியாம என்ன?" என்றார்.

"அப்படியெல்லாம்... இல்லப்பா...! நிலைமையைப் புரிஞ்சுக்குங்க. எப்பக் கசப்புன்னு ஏற்பட்டுச்சோ... அதுக்கப்புறம் அங்கே இருக்க முடியாது. பேச்சு வார்த்தை தடிக்கும். சண்டை போட வேண்டி வரும். அதெல்லாம். எதுக்குன்னுதான் வெளியே வந்துட்டேன்" என்றாள்.

அப்பா பெருமூச்சு விட்டார்.

"சரி.. விடு! எல்லாம் நல்லதுக்குத்தான். அதான் நாங்க எல்லாருமா... சேர்ந்து ஒரு யோசனை செஞ்சிருக்கோம்" என்றார்.

ஸ்ரீகலாவுக்கு அப்போதுதான் ஏதோ விஷயம் நடக்குது என்று தோன்றியது.

"என்னப்பா.. நடக்குது?". என்றாள் சந்தேகம் நிறைந்த பார்வையுடன்.

"ஒன்னும் இல்லம்மா! தாத்தா பெரியவங்க ரொம்பப் பிடிவாதமாச் சொல்றாரு...!" என்று தயங்கினார்.

"எதுக்கு?" என்றாள். விழுங்கிக் கொண்டிருக்கும் போதே ஆர்ப்பாட்டமாக தாத்தா வரவேற்றார்.

"அடடே! வாப்பா!" என்றார் மகனைப் பார்த்து.

"உங்கம்மா.. அந்தக் கிழவி.. என்ன சொன்னா?" என்றார்.

"அம்மா.. ரெண்டு மூன்று நாளா பேசறதே.. இல்லை!" என்றார் முணுமுணுப்பாக.

"ஆமா..! பேசி.. அஞ்சாறாச்சு..." என்றார் கசவனம்.

"அப்ச்சி! என்ன நடக்குதுன்னு சொல்லுங்க" என்றாள் சற்றே கண்டிப்பான குரலில்.

"சொல்லனும்மா! கண்டிப்பா.. உன்கிட்ட சொல்லாம விஷயம் எதுவும் நடக்காதில்லே" என்றார். அவர் பேசி முடிப்பதற்குள்ளாகவே லைப்ரரி ஓனர் வீட்டில் இருந்து சேர்கள் வந்து இறங்கின.

"அம்மா! நான் சொல்றதை நல்லா யோசி இப்படி உன்னைத் தனியா இருக்கறதுக்கெல்லாம் விட்டுட்டு நாங்க வேடிக்கை பாத்துட்டு இருக்க முடியாது. அதனால தான் ஒரு நல்ல விஷயம் யோசனை பண்ணியிருக்கு" என்றார்.

"என்ன நல்ல விஷயம்!" என்றாள் ஸ்ரீகலா. மீண்டும் அதே சந்தேகப் பார்வையுடன்.

"இல்லே! நல்லதா ஒரு பிரபோசல் வந்திருக்கு. எங்க எல்லாருக்கும் பிடிச்சிருக்கு. உன்னைப் பொண்ணு பார்க்க இன்னைக்கு வர்றாங்க" என்றார் குகநாதன்.

"அப்பா! இதென்ன... என்னைக் கேட்காம எல்லாரும் ஏற்பாடு செய்யறீங்க?" என்றாள்.

"அம்மா! இதைவிட நல்ல பிரபோஸல் அமையாது. எங்க மேல நம்பிக்கை வை. நாங்க உனக்கு நல்லதுதான் செய்வோம்" என்றார் தாத்தா.

"என் மேலேயே எனக்கு நம்பிக்கையில்லையே" என்று எண்ணிக் கொண்டாள் ஸ்ரீகலா.

"அப்சி.. ப்ளீஸ்! எனக்குக் கல்யாணம் வேண்டாம்" என்றாள் திடமான குரலில்.

தாத்தா ஒரு நிமிடம் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னார்.

"சரிம்மா! பொண்ணு பாக்க வர்றேன்னு கேக்கறப்ப நாம வேண்டாம்னு சொல்லக் கூடாது. அவங்க வந்துட்டுப்



போகட்டும். அதுக்கப்புறம் நாம நம்ம முடிவை சொல்லிக் கலாம்..." என்றார்.

ஸ்ரீகலாவுக்கு மனசு சமாதானமாகவில்லை. ஆனால் இத்தனை பேர் சொல்லும்போது எப்படி மறுப்பது என்று மௌனமாக அமர்ந்து கொண்டாள்.

தன் மனத்தில் பார்த்தசாரதிக்குத்தான் இடம் என்று இவர்களிடம் எப்படிச் சொல்வது?

இடிஇடியென்று சிரிப்பார்கள்.

பெற்றோர்களிடமும் மற்றவர்களிடமும் சொல்வது இருக்கட்டும். முதலில் பார்த்தசாரதி அதற்கு சம்மதிக்க வேண்டுமே.. அப்படியே சம்மதித்தாலும் அது உண்மை யான சம்மதமாக இருக்குமா?

மேகலாவிடம் அவன் எப்படிப் பழகினான் என்பது அவளுக்குத் தெரியும். மேகலா வேண்டுமானால் உண்மையான ஆர்வத்துடன் பழகவில்லை. ஆனால் பார்த்தசாரதி உண்மையாகத்தான் பழகினான் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் அதே அளவுக்குக் கேஸ் போடுவதற்கும் தயாராகிவிட்டாரே. அந்த நேரத்தில் எந்த அளவுக்கு மேகலாவின் மேல் ஆர்வம் காட்டினாரோ அந்த அளவுக்கு அலட்சியம் காட்டினாரே.

"ரூத் லெஸ்" என்பார்களே?! அது மாதிரி தான் ஏமாற் றப்பட்டதற்கு சரியான முறையில் பழி வாங்கினாரே! அப்படிப்பட்ட ஆள் மேகலாவின் குடும்பத்தில் பெண் எடுப்பாரா? மாட்டவே மாட்டார்."

அப்படியானால் தன் தலையெழுத்துத்தான் என்ன? என்றைக்காவது ஒரு நாள் வீட்டில் பார்க்கிறவேறு யாருக் காவது கழுத்தை நீட்டிக் குடும்பம் நடத்திக் குழந்தை என்று...!

சே...! எப்படி முடியும்?

இப்போது மட்டும் ஏதோ ஒரு ஆணுக்கு முன்னால் இப்படிப் போய் அலங்காரத்தோடு நிற்பது எந்த வகையில் நியாயம்?

தன் மீதே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. ஒரு விதமான விட்டேற்றியான மனப்பான்மையில்தான் இருந்தாள். ஆனால் அடுத்தடுத்து அதிர்ச்சிகளாகத்தான் ஏற்பட்டன.

முதலில் மணமகளின் பெற்றோர்கள் என்று வந்தவர்களைப் பார்த்தவுடனே அவளுக்கு அதிர்ச்சி. கோபாலகிருஷ்ணனும் புனிதவதியும் வந்து நின்றார்கள். அது மட்டுமல்ல கோபாலகிருஷ்ணன் தனியாக அழைத்துக் கொண்டு போய் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசினார்.

சற்று நேரத்தில் ஆகாஷும் பார்த்தசாரதியும் வந்தார்கள்.

பார்த்தசாரதி மௌனமாக அவளைப் பார்த்துத் தலையசைத்துப் புன்னகைத்து விட்டு அமர்ந்து விட்டான். ஸ்ரீகலாவும், பார்த்தசாரதியும் அங்கே இல்லாததைப் போலவே கருதிக் கொண்டு பெரியவர்கள் எல்லா விஷயங்களையும் பேசி முடித்தார்கள்.

# 16



ஸ்ரீகலா ஏதோ கனவில் இருப்பவள் போல நடமாடிக் கொண்டிருந்தாள்.

''கெட்டி மேளம்! கெட்டி மேளம்!'' குரல் ஒலித்தது!

மணமகன் மணமகளின் கழுத்தில் தாலி கட்டி முடித்தான்.



பெற்றோர்கள் இரண்டு பக்கமும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

மணமகள் ஸ்ரீகலா ஓரக்கண்ணால் மணமகன் பார்த்தசாரதியை பார்த்தாள்!

முகத்தில் இருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

தாலி கட்டி முடியும் வரை ஸ்ரீகலாவுக்கு சந்தேகமாகவே இருந்தது.

இது உண்மைதானா? நடக்கக் கூடிய காரியமா? என்று.

திருமணப் பேச்சு ஆரம்பித்தவுடனே முதலில் அவள் மனத்தில் தோன்றியது நெஞ்சு கொள்ளாத மகிழ்ச்சி. ஆனால் உடனே அந்த உணர்வு பொங்கிய பால் தண்ணீர் தெளித்தால் அடங்குவது போல் அடங்கி விட்டது.

''இது நல்லதில்லை. ஒரு கல்யாணம் நின்று போன வீட்டில் எப்படி இன்னொரு பெண் எடுக்க முடியும்! கூடாது'' என்று எண்ணம் தோன்றியது.

பெண் பார்க்கும் படலம் முடிந்தவுடன் ஆகாஷ் அவளைத் தேடி வந்தான்.

''ஸ்ரீ! நான் உன்கிட்டே பேசணும்!'' என்றான்.

''சொல்லுங்கத்தான்!'' என்றாள்.

''ஸ்ரீ! எனக்கென்னவோ நீ பார்த்தசாரதியை சரியாப் புரிஞ்சுருக்கேன்னு தோணுது. இல்லாட்டி அவனுக்காக நீ கோர்ட் படியேறி சாட்சி சொல்லியிருக்க மாட்டே. அப்படி நீ சாட்சி சொன்னப்ப எனக்கு ரொம்பப் பெருமையா இருந்தது. அவனுடைய நேச்சருக்கு மேகலா சரிவராதுன்னு எனக்கு முதல்லயே தெரியும். ஆனா அவன் என்கிட்டே

இது பத்திப் பேசாமயே மேகலாகிட்டே நேரடியாய் பேசி எல்லாத்தையும் முடிச்சுட்டான். அது மட்டும் இல்லாம வீடு வாங்கிக் குடுத்தது கூட எனக்குத் தெரியாது. தெரிஞ்சப்ப "சுருக்"ன்னு இருந்துச்சு. ஆனா, நானும் சொல்ல முடியலை. என்னென்னவோ நடந்து போச்சு..." என்று பெருமூச்சு விட்டான்.

ஸ்ரீகலா அமைதியாக ஆனால் கவனமாக அவன் சொல்வதைக் கேட்டாள்.

"ஸ்ரீ! ஒன்னு தெரியுமா? ஸ்ரீகலாவையே கேட்கலாம்னு நான்தான் சொன்னேன். ஏன் தெரியுமா? எதுவுமே வெளியில காட்டிக்காம நடமாடினாலும் இப்போதைக்கு சாரதி மனசளவிலே உடைஞ்சு போயிருக்கான். இப்ப அவனைத் தனியா விடக் கூடாது ஸ்ரீ டிப்ரஷன் வந்துடும்..."

ஸ்ரீகலா மௌனமாகத் தலையாட்டி ஒத்துக் கொண்டாள்.

"இந்த நேரத்துல அவனை அரவணைச்சுக் கொண்டு போற துணை வேணும். அவனை டிப்ரஷன்ல இருந்து காப்பாத்திக் கொண்டு போக உன்னால முடியும்."

"ம்!" என்றாள் ஸ்ரீகலா.

ஆகாஷ் மறுபடியும் தொடர்ந்தான்.

"ஸ்ரீ! இதுல இன்னொரு கோணமும் இருக்கு. மேகலா என்னோட கல்யாணத்துலதான் அவனுக்கு அறிமுகமானா. நம்ம உறவுக்காரங்க எல்லாருமே மேகலா... மாதிரி.. இருப்பாங்கன்னு அவன் நினைச்சுரக் கூடாது. உன்னை மாதிரி இண்டர்நெட் உள்ள பொண்ணுங்களும் இருக்காங்கன்னு நிரூபிக்கணும். எனக்கும், உங்க குடும்பத்துக்கும் பெருமை சேர்க்கணும்" என்றான்.



ஸ்ரீகலா மறுக்கவும் இல்லை. ஆமோதிக்கவும் இல்லை. கண்கள் கலங்கத் தலையசைத்துக் குனிந்து கொண்டாள்.

"எனக்கும் புரியுது ஸ்ரீ! அக்கா கூட சுத்திகிட்டிருந்தவனைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு கேட்கறீங்களே.. இது நியாயமான்னு நினைக்கறே.. இல்லே! அக்காவோட சுத்திகிட்டிருந்தவன் இல்லே.. ஸ்ரீ! உன் அக்காவோட பொறுப்பில்லாத் தனத்தால பாதிக்கப்பட்டவன்... அவன் வாழ்க்கையை நேராக்கற பொறுப்பை நான் உன்கிட்டே குடுக்கறேன். ப்ளீஸ்... ஸ்ரீ.. ஒத்துக்கோ! ஆரம்பத்திலே குழப்பங்கள் இருக்கலாம். ஆனா, சாரதி நல்லவன் ஸ்ரீ! உங்களுக்குள்ள அண்டர்ஸ்டாண்டிங் வந்துருச்சுன்னா... உன்னைத் தங்கத் தட்டில வச்சுத் தாங்குவான்..." என்றான்.

ஸ்ரீகலா தனது உள்ளத்து உணர்வுகள் வெளியே தெரிந்து விடும் என்று நினைத்தாளோ என்னவோ தலை நிமிரவில்லை. ஆனால், ஆகாஷின் கண்களில் குறும்புச் சிரிப்பொன்று தோன்றி மறைந்ததை அவள் கவனிக்கவில்லை.

ஆகாஷ் ஒருவிதமான புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

"சொல்லும்மா! நிமிர்ந்து என் முகம் பார்த்து சம்மதம் சொல்லும்மா...?!" என்றான்.

ஸ்ரீகலா நிமிர்ந்து பார்த்தாள்.

இதழ்கள் துடித்தன! "சம்மதம்" என்பது போல் தலையாட்டினாள்!

முதலில் அவர்கள் வந்து தன்னை பெண் கேட்பது குறித்து அதிர்ச்சியாக இருந்தாலும் உடனே அவள் மனத்தில் தோன்றியது.

பார்த்தசாரதிக்குப் பெரிய அளவில் விருப்பம் இல்லை யென்றால் என்ன? திருமணம் என்பது வாழ்நாள் பந்தம். குடும்பத்தின் உள்ளே நுழைந்தற்குப் பிறகு ஒரு வருஷமோ... இரண்டு வருஷமோ தன்னால் அவன் மனக்காயத்தை ஆற்ற முடியும். அது மட்டுமல்ல...! மேகலாவை அவன் கல்யாணம் செய்து கொள்ளாததே நல்லது என்று புரிய வைக்க முடியும் என்று தோன்றியது. ஆனாலும் தன் பங்குக்குக் கேட்க வேண்டிய கேள்வியைப் பெற்றோரிடம் கேட்டாள்.

"மேகலா.. இருக்கும்போது.. எனக்கு மட்டும் கல்யாணம்...?" என்று இழுத்தாள். அப்பா விட்டேத்தியாகப் பதில் சொன்னார்.

"அதான்! அந்த இரத்தினசாமியோ முத்தினசாமியோ ஒருத்தன் மாட்டிருக்கானே. அவனுக்கும் மேகலாவுக்கும் ஒரு நிச்சயம் பண்ணிரலாம்" என்றார்.

கோபத்தில் அவர் பயன்படுத்திய எதுகை மோனை ஸ்ரீகலாவுக்கு அந்த நேரத்தில் சிரிப்பை வரவழைத்தது.

மேகலாவுக்கும் பார்த்தசாரதிக்கும் திருமணப் பேச்சு இருந்தது என்ற நினைவே இல்லாதவர்கள் போல் இரண்டு குடும்பத்தினரும் கலகலப்பாகத் தங்கள் திருமண ஏற்பாடுகளைச் செய்வது குறித்து ஸ்ரீகலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

திருமண ஏற்பாடுகளின் ஆரம்பத்தில் இருந்த தயக்கம் முற்றிலும் மறைந்து போனது. ஆனால், எதிலும் பட்டும் படாமல் இருந்தவன் பார்த்தசாரதிதான்.

நண்பர்களோடு இருக்கும்போது கலகலப்பாக இருந்தான்.



ஒரே ஒரு முறை அவளைச் சந்தித்தான்!

"ஸ்ரீ! இதுல உறுத்தல் எதுவும் இல்லையே? உனக்கும் சம்மதம்தானே?!" என்று கேட்டான்.

ஸ்ரீகலா அவன் முகம் பார்க்காமல் சொன்னாள். "ஆமா! எனக்கு சம்மதம்தான்!" என்று.

அதற்குப் பிறகு எல்லாம் வேகமாக நடந்தது.

ஆனால் என்ன? மேகலாவும், அன்னபூரணியும் எதற்கும் வரவில்லை.

திருமணத்திற்குக் கூட வரவில்லை.

உறவினர்களிடையேயும், ஆரம்பத்தில் கிசுகிசு, ஆச்சரியமாக விசாரித்தவர்கள் என்று எல்லாம் இருந்தது. கடைசியில்.

"சரி.. விடுங்க! உலகத்துல என்னென்னமோ ஆச்சரியங்கள் நடக்குது. அதுல இதுவும் ஒண்ணு!" என்று முடித்துவிட்டார்கள்.

இதோ!

இப்போது தாலியும் கட்டியாகி விட்டது.

அரங்கம் முன்பு அமர்ந்திருந்த பார்வையாளர்கள் எல்லாம் மேடைக்கு வந்து வாழ்த்த ஆரம்பித்தார்கள்.

நேரம் போனதே தெரியவில்லை!

எது எப்படியோ ஸ்ரீகலாவுக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது.

எல்லாரையும் காட்டிலும் ஆகாஷுக்கு இந்தத் திருமணத்தில் மிகவும் மகிழ்ச்சி என்று.

• • •

பல குழப்பங்களுக்குப் பிறகு நடந்திருக்கு! அதனால முதலிரவு என்று எதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டான் பார்த்தசாரதி.

ஸ்ரீகலாவும் அதைத்தான் விரும்பினாள்!

பரிசுப் பொருட்களையெல்லாம் பிரித்துப் பார்த்துப் பட்டியல் போட்டு கொண்டிருந்தார்கள் அவளும் வேலைக் காரப் பெண்ணும்.

திருமணப் பேச்சுக்குப் பிறகுதான் தெரிந்தது பார்த்த சாரதிக்கு சென்னையிலேயே நான்கைந்து பங்களாக்கள் இருந்தன என்று. அதில் ஒன்றை காலி செய்து இப் போதைக்குக் குடியேறியிருந்தார்கள்.

இருபது நாட்கள் அங்கே தங்கியிருந்து விட்டு அமெரிக்கா கிளம்புவதாக முடிவு!

இரவு பத்து மணி இருக்கும்!

பார்த்தசாரதி அறைக்குள் நுழைந்தான்!

தாத்தா.. வாங்கிக் கொடுத்த இரட்டைக் கட்டில் அந்த அறையில் பளபளப்பாக உட்கார்ந்து கொண்டிருந்தது.

முன்னறையில் ஸ்ரீகலா அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்தாள்.

பார்த்தசாரதி வந்து உள்ளே நிற்கவும் எழுந்து நின்றாள்.

"அக்கா.. நான் அப்புறம் வாரேன்" என்று ஓடி விட்டாள் வேலைக்காரப் பெண்.

"ஸ்ரீ! கல்யாணம் நல்லாப் போச்சு இல்லே!" என்று எதிர் சோபாவில் அமர்ந்தான்.

"ம்..!" என்றாள்.



"அமர்ந்து கொள்" என்று சைகை காட்டினான். அமர்ந்து கொண்டாள்.

"ஸ்ரீ, ஆகாஷ் கல்யாணத்துக்கு வந்தப்ப எனக்குத் தெரியலே! என் லைஃப்ல இப்படி ஒரு புயல் வீசி ஓயும்ன்னு" என்றான்.

அவள் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அமர்ந்திருந்தாள்.

"ஸ்ரீ! உன்னோட மனநிலை எனக்கு நல்லாப் புரி யுது?" என்றான்.

ஸ்ரீகலா திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள்.

"அக்காவுக்குக் கல்யாணம் பேசினவனை நாம எப்படி பண்ணிக்க முடியும்னு கேக்காம பெரியவர்களுக்காக நீ ஒத்துகிட்டே.. நானும் அப்படித்தான்" என்று சொல்லும் போது ஸ்ரீகலாவின் கண்களில் மிரட்சி தெரிந்தது.

அவன் உடனே கைகளை உயர்த்தியபடி சொன்னான்.

"அவசரப்படாதே ஸ்ரீ! ஆஸ் எ பர்ஸனா எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்.. ஆனா.. பட்.. காதல்..." என்று நிறுத்தியவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

"ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட்" என்றாள்.

"ஸ்ரீ நீ அண்டர்ஸ்டாண்ட் பண்ணிப்பேன்னும் தெரி யும்... நாம ரெண்டு பேரும் முதல்ல நண்பர்களா இருப் போம்... அப்புறம்... எத்தனையோ அரேன்ஜ்ட் மேரே ஜுல்ல..." என்று சொல்லும்போதே அவள் குறுக்கிட்டாள்.

"அதை அப்புறம் பார்க்கலாம்!" என்றாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள். இறுக்கம் விலகியது.

"சரி.. அப்ப.. இந்த வொர்க்கைக் கண்டின்யூ செய்வோமா?" என்றாள்.

"சரி...!" என்றான்.

இருவரும் சோபாவில் இரு புறமும் எதிரெதிராகப் பார்த்தபடி அமர்ந்து கொண்டு பரிசுகளை ஒவ்வொன்றாகப் பிரித்து கொடுத்தது யார்? என்ன பொருள் என்றெல்லாம் குறித்துக் கொண்டார்கள்.

ஒவ்வொரு பரிசையும் பற்றிக் கமென்ட், கேலி, கிண்டல் என்று பொழுது ஓடியது.

ஒரு பொட்டலத்தைப் பார்த்தான்.

"ஸ்ரீ! இது பாத்தியா...! இது நாலாவது கவர்க்கடிகாரம். இதை வச்சுகிட்டு நாம என்ன பண்ணப் போறோம் பாரின்லயெல்லாம் ஒரு சிஸ்டம் இருக்கு தெரியுமா? நம்ம தமிழ்க் குடும்பங்கள்ல பொண்ணு மாப்பிள்ளையேயே கேட்பாங்க... என்ன பொருள் வேணும்னு அவங்களும் எஸ்டிமேட் தெரிஞ்சுகிட்டு பெரிய ஷாப்கள்ல போய் அந்தப் பொருளை செலக்ட் பண்ணி "பிளாக்" பண்ணி வச்சுடுவாங்க... கிப்ட் குடுக்கறவங்க அதுக்குப் பே பண்ணிக்குவாங்க" என்றான்.

ஸ்ரீயின் கண்கள் அகல விரிந்தன.

"நியலி! நல்ல சிஸ்டமா இருக்கே?" என்றாள்.

"இங்கயும் அதுமாதிரி வரலாம்" என்றான் பார்த்தசாரதி.

"இங்க அவ்வளவுக்கு முன்னேறலை. ஆனா.. கிப்ட் கூப்பன்ஸ் வாங்கிக் குடுத்தர்றாங்க... அது வச்சு அவங்களுக்கு பிரியமானதை வாங்கிக்கலாம். இல்லே!" என்றாள்.



மணியைப் பார்த்தான்.

மணி ஒன்றாகி விட்டிருந்தது!

"ஸ்ரீ! நாளைக்குக் கண்டின்யூ பண்ணிக்கலாம். லெட் அட் டேக் ரெஸ்ட்" என்றான்.

அறைக்குப் போனார்கள்.

"ஸ்ரீ! பெரிய ஃபோர் பாஸ்டர் பெட்தான். நீயும் நானும் லீகலி வெட்டட் கப்பள்தான். அதனால பெட்டை ஷேர் பண்ணிக்கலாம் தப்பில்லே!" என்றான்.

அவள் முகம் சிவந்தது.

கீழே குனிந்து கொண்டே தலையாட்டினாள்.

படுத்தவுடனே உறங்கிப் போனான் பார்த்தசாரதி. ஸ்ரீகலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தோழிகள் சொல்லக் கேட்டிருக்கிறாள்.

"கம்ப்யூட்டரிலேயே வேலை செய்வது என்பது சற்றுக் கடினமான காரியம். கண்களுக்கு ஸ்ட்ரெயின் என்பதனால் கண்கள் விரைவில் களைப்படைந்து விடும் என்று. அதனால உறங்கி விட்டாரோ.

அது மட்டுமில்லாமல் திருமண அலைச்சல் வேறு.

எழுந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்து கொண்டாள்.

ஆழ்ந்து அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திருமணத்திற்கு முன்பே சொல்லிவிட்டார்கள். "இது பெரியவர்களின் வற்புறுத்தலுக்காக நடைபெறுகிற திருமணம். மேகலாவின் காரணமாக அதல பாதாளத்தில் விழ இருந்த தங்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்று

வதற்காக நிச்சயிக்கப்பட்ட திருமணம்'' என்று. ஆனா லும் பார்த்தசாரதியைப் பார்க்கும்போது அவளுக்குப் பெருமையாக இருந்தது.

மனத்துக்குள் என்னென்ன வருத்தங்கள் இருந்ததோ, குழப்பங்கள் இருந்ததோ தெரியவில்லை. ஆனால் எதையும் காட்டிக் கொள்ளாமல் பெற்றோர்களை மகிழ் விப்பதற்காக அமைதியாக நடமாடிக் கொண்டிருந்தான்.

ஸ்ரீகலா கூட ஆகாஷிடம் கேட்டாள். மேகலாவுடைய பேச்சு வார்த்தை முறிந்த பிறகு இவ்வளவு அவசரமாக இந்தத் திருமணம் நடைபெற வேண்டிய அவசியம் என்ன?

ஆகாஷ் அப்போது சொன்னான். ''ஸ்ரீ இப்போ அவனைத் தனியா விடக் கூடாது. எவ்வளவுதான் கூட இருந்தாலும் அம்மா, அப்பா எல்லா நேரத்திலயும் அவன் கூட இருக்க முடியாதில்லே. இந்த நேரத்தில எல்லா சமயத்திலயும் அவன் கூட இருக்கிற ஒரு ஆள் வேணும். அது மனைவியாத்தான் இருக்க முடியும்'' என்றான்.

என்ன வாஜிக்கோ தெரியவில்லை. ஆனால் பார்த்த சாரதியின் வாழ்க்கையில் நுழைவதற்குத் தனக்கு இதை விட்டால் வேறு வாய்ப்புக் கிடைக்காது'' என்று எண்ணிக் கொண்டுதான் சம்மதம் கொடுத்தாள் ஸ்ரீகலா.

ஆகாஷ் தொடர்ந்து சொன்னான்.

''ஸ்ரீ எனக்கென்னவோ ஆரம்பத்திலே இருந்தே நீதான் சாரதியோட டைப். மேகலா இல்லேன்னு ஒரு எண்ணம் இருந்துகிட்டே இருந்துச்சு. கடவுள் இப்படி ஒரு முடிச்சுப் போட்டுட்டார். பாத்தியா'' என்றான்.

ஸ்ரீகலா ஒன்றும் பேசவில்லை.



இப்போது அதெல்லாம் நினைவுக்கு வர கணவனை திரும்பிப் பார்த்தாள்.

உறக்கத்தில் முகம் நிர்மலமாக இருந்தது. நல்ல நிறம். ஏ.சி.யிலே இருப்பதனால் ஒரு பளபளப்பு. அழகிய முகம். அரும்பு மீசை. சுறுசுறுப்பானவன் தன்னை மறந்து கண்களால் பருகிய வண்ணம் கொஞ்ச நேரம் அமர்ந் திருந்தாள்.

சற்று நேரத்தில் சுயநினைவு வந்தவள் போல சிலிர்த் துக் கொண்டாள். தன் செய்கை குறித்துத் தானே வெட் கப்பட்டாள். அவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

சாரதி தன்னை மனைவியாக நினைத்து எப்போதோ ஏற்றுக் கொள்ளட்டும். தன்னைப் பொறுத்த வரை அவன் எல்லாவித்திலும் கணவன்தான் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

தலையணையில் இருந்த குஞ்சலத்தின் நூலைத் திருகிக் கொண்டே படுத்திருந்தாள். சற்று நேரத்தில் உறங்கிவிட்டாள். ஆனால் அவளுக்குத் தெரியாதது நள்ளிரவில் விழித்த பார்த்தசாரதி வேதனை நிறைந்த முகத்தோடு வெகு நேரம் அறைக்குள் நடை போட்டுக் கொண்டிருந்தான் என்பது.

## 17

கலகலவெனச் சிரித்துக் கொண்டு தனது தாயிடம் பேசிக் கொண்டிருந்த ஸ்ரீயை கவனித்துப் பார்த்துக் கொண்டிருந் தான் பார்த்தசாரதி.

ஜாடையில் மேகலாவைக் கொண்டிருந்தாலும் முந்திலும் எதிராக இருந்தாள் ஸ்ரீகலா.

''அத்தை! அவரு சமைப்பாரா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள் ஸ்ரீகலா.

புனிதவதி சிரித்தார்.

''சமைக்கறேம்மான்னு வந்து நிற்பான். ஆனா, ஐயோ.. வேண்டாம்ப்பா..! நீ அந்தப் பக்கம் போய்ச்சேருனு நாமளே சொல்ற மாதிரி ஏதாவது கலாட்டா பண்ணுவான்'' என்றார்.

ஸ்ரீகலாவுக்கு ஒரே சிரிப்பு.

''அதே நேரம்!

என்ன அப்படிப் பேசிச் சிரிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம் என்ற குறுகுறுப்பில் அவர்கள் அறியாத வண்ணம் ஒருபுறம் நின்று கேட்டான் பார்த்தசாரதி.

ஒரு நாள்!

நானும் உங்க மாமாவும் எங்கயோ விசேஷத்துக்குப் போயிட்டு வர வேண்டியிருந்தது. சரி, சமையலை முடிச்ச வச்சட்டுப் போயிட்டா... இவன் வசதி போலச் சாப்பிட்டுக்குவானேன்னு நினைச்ச.. அவசரமாய் சமைச்சகிட்டிருந்தேன். குழம்பை அடுப்பில வச்சட்டேன். இந்தக் குழம்பைக் கிளறி விடு.. நான் குளிச்சட்டு வர்றேன்னு போனேன்.. அப்புறம்...?''

''ம்...!'' என்றான் ஆர்வமாக.

பார்த்தசாரதிக்கும் அந்த நினைவுகள் வந்தன போலும் மெல்லிய முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.



''அப்புறமென்ன? நான் குளிச்சட்டு வர்றவரைக்கும் கையை எடுக்காம கிளறு கிளறுன்னு கிளறி குழம்பு சுண்டிப் போய் கிரேவி மாதிரி ஆயிடுச்சு'' என்று சிரித்தார்.

ஸ்ரீகலாவும் சிரித்தாள்.

''அம்மா! என்ன இப்படி என்னோட ரெப்யுட்டேஷனை டேமேஜ் பண்றீங்க...!'' என்று சிணுங்கியபடி வந்து நின்ற மகனை அம்மா சிரிப்புடன் பார்க்கையில் ஸ்ரீகலாவும் ஆவலாகப் பார்த்துக் கொண்டாள்.

''இரு.. இரு.. இன்னும் முடிக்கலியே! அப்புறம் ஸ்ரீ.. கொஞ்சம் சமைக்கக் கத்துக்கிட்டான். இப்பல்லாம்.. நாங்க இல்லேன்னாலும் சாண்ட்விச்சுன்னு ஏதாவது சமாளிச்சக்குவான்'' என்றார்.

''ஓ! அப்பப் பரவால்லே!'' என்றாள் ஸ்ரீகலா.

பார்த்தசாரதி அம்மா நிற்பதைப் பொருட்படுத்தாதவனாக அவள் கன்னத்தில் லேசான ஒற்றை விரலால் சுண்டினான்.

''ஹேய்! நீ கவலைப்படாதே! உன்கிட்டே சமையல் கத்துக்கறேன்'' என்றான்.

இப்படி ஒரு செயலை எதிர்பார்க்காத ஸ்ரீகலா முகம் சிவக்க அவனைப் பார்த்தபடி நின்றாள். இங்கிதம் தெரிந்த அம்மா அந்தப் பக்கம் நகர அவன் கிசுகிசுத்தான்.

''ஸ்ரீ! ப்ளீஸ்! கண்டுக்காதே! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எங்கே நான் ரொம்ப அப்செட்டாகிடுவேனோன்னு ஒரே கவலை. சும்மா.. அவர்களைத் திருப்திப்படுத்த.. ம்...!'' என்றான்.

ஸ்ரீ சட்டென்று அடுப்பில் ஏதோ வேலையிருப்பவள் போல் முகம் திருப்பிக் கொண்டு தலையாட்டினாள்.

"ஸ்ரீ... அப்பா.. நம்மளை எங்காவது போயிட்டு வரச் சொல்றார்.. எங்கே போலாம்?" என்றான்.

"எங்கே வேண்ணாலும்?" என்றாள்.

"சரி.. ஊட்டி ஒரு ரெண்டு மூன்று நாள் போலாமா?"

"ம்...!"

"சரி..! நாளைக்கு புறப்படலாம்!"

"நாளைக்கா..? டிக்கெட்டெல்லாம் ரிசர்வ் பண்ண வேண்டாமா?"

"ப்ளைட்ல போவோம்!" என்றான்.

அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள்!

"ஆமா! கோயமுத்தூர் வரைக்கும் ப்ளைட்ல போலாம். அங்கேயிருந்து கார்" என்றான்.

அவள் ஆச்சரியம் நிறைந்த முகத்தில் தெரிந்த வெகுளித்தனம் அவனைக் கவர்ந்தது போலும் புன்னகைத்தான்.

"ஸ்ரீ! அமெரிக்கா போவதற்கு முன்னாடி ஒரு ட்ரையல் ட்ரிப் மாதிரி இருக்கட்டுமே" என்றான்.

ஸ்ரீகலாவுக்கு சொல்வதற்கு ஏதும் இருக்கவில்லை. எதற்காக இப்படி உடனே ஒத்துக் கொண்டு கல்யாணம் செய்து கொண்டோம் என்றே புரியாமல் ஏதோ ஒரு சக்தி தன்னை இழுத்துக் கொண்டு போவது போலவும் அது இழுத்த இழுப்பில் போவது போலவும் உணர்ந்தாள்.

• • •

பாராமுகமாகவே நடமாடிக் கொண்டிருக்கிற அம்மாவை எந்த விதத்திலும் சமாதானப்படுத்த முயற்சிக்காத குகநாதன் புஷ்பத்திற்கு உலக அதிசயமாகத் தெரிந்தான்!



"என்னங்க! ஏன் இப்படி செய்யறீங்க? உங்கம்மாவைச் சமாதானப்படுத்துங்க" என்றார்.

"அடப்போ! சும்மா என்ன சமாதானப்படுத்தறது. பெரியவங்கன்னு இருந்தா.. நல்லது சொல்லணும்.. இந்த அம்மா.. அந்த மேகலாப் புள்ளைக்குத் தப்பான ஐடியா வாக் குடுத்து மானம், மரியாதையெல்லாம் கெடுத்துட்டாங்க" என்று வருத்தப்பட்டான்.

புஷ்பம் ஆச்சரியமாகப் பார்த்தார்.

"புஷ்பம்! நீ என்னைக் கல்லுளி மங்கன்னு நெனச்சகிட்டிருக்கே! அப்படியில்லே! அப்பா.. ஆம்பிளை, அவரு தனியா இருந்தாலும் வேற. ஆனா, அம்மா தனியா இருந்தா.. அது வேற விதமாப் போயிடும். அது மட்டுமில்ல நமக்கும் பொண்ணுங்க...! தப்போ ரைட்டோ நாம கூட இருந்தா.. அம்மாவைக் கொஞ்சமாவது கண்ட்ரோல் பண்ண முடியும். இதையெல்லாம் யோசிச்சுத்தான் நான் அம்மாவோட தங்கினேன்."

"அது மட்டுமில்ல! அப்பாவும்.. இருந்து அம்மாவைத் திருத்தியிருக்கணுமேயொழிய... இப்படி விட்டுப் போட்டுப் போயிருக்கக் கூடாது" என்றான்.

புஷ்பம் பெருமூச்செறிந்தார்!

"பாருங்க! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. இந்த மானம், ரோஷம் உள்ள எந்த மனுஷனும் உங்கம்மாகிட்டே இருக்கமுடியாது" என்றார். ஆனால் சொன்னதற்குப் பிறகு குகநாதன் கோபித்துக் கொள்வாரோ என்று பயந்து போனார். ஆனால், அவர் கசப்பாகப் புன்னகைத்தார்.

"சரி.. போனதை விடு.. இனி என்ன செய்யறதுன்னு பார்ப்போம்..." என்றார்.

"அதைத்தான் நானும் சொல்றேன்! எப்படியோ... ஸ்ரீகலாவுக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சு போச்சு இனி இந்தப் பெரியவளைத் தாட்டி விடற வழியைப் பார்ப் போம்" என்றார்.

"சரி.. நான் இன்னைக்குப் பேசறேன்" என்றார் குக நாதன்.

அப்படியே பேசினார்!

எப்போதும் தான் முகம் தூக்கி கொண்டால் உள்ளே வந்து சமாதானம் செய்கிற மகன் இந்த முறை ஒரு மாதம் ஆகியும் என்ன ஏது என்று கேட்கவில்லையென்றவுடனே அன்னபூரணி கொஞ்சம் அரண்டுதான் போனார். ஆனால், இத்தனை நாளைக்குப் பிறகு தானாகப் போய் இறங்கிப் பேசுவதற்கு அவர் கௌரவம் தடுத்தது.

ஸ்ரீகலாவின் திருமணம் பார்த்தசாரதியுடன் என்று குகநாதனும், புஷ்பமுமே போய் முடிவு செய்து விட்டு வந்தது அவருக்கும் பெரிய அதிர்ச்சி. அந்தத் திருமணத் துக்குத் தான் வரப்போவதில்லை என்று அடம் செய்த போதும்.

"அப்ப சரி! உங்க இஷ்டம்!" என்று ஒரே வாக்கியத்தில் முடித்து விட்டு அவர்கள் மேற்கொண்டு எல்லாமும் நடத்தியதைப் பார்த்தும் அவருக்கு பெரிய அதிர்ச்சி.

பார்த்தசாரதியும், ஸ்ரீகலாவும்தான் பொருத்தமான வர்கள் என்று தான் காதுபடவே பேசும்போது இப்போதைக்கு ஆதரவாக இருக்கிற மகனையும் இழந்து விடக் கூடாது என்று நினைத்துக் கொண்டார் அன்னபூரணி.

மேகலா அதைக் காட்டிலும் அதிர்ச்சியடைந்திருந் தாள்.



புஷ்பமும், குகநாதனும் மற்ற எல்லா விஷயமும் பேசினார்கள் அந்த ஒரு விஷயத்தை தவிர. தன்னுடைய ஏமாற்றத்தை மறைப்பதற்காக அவள் இரத்தினசாமியோடு இணைந்து ஊர்சுற்றிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்துதான் புஷ்பத்திற்கும் கவலையாகிப் போனது.

மேகலாவுக்கும் கல்யாணம் செய்து அனுப்ப வேண் டியது அவசியம் என்று உணர்ந்தார். அதனால்தான் கணவனிடம் பேசினார்.

எங்கேயோ வெளியே போய்விட்டு வந்த மேகலா விடம் இரத்தின்சாமியும் வந்தான். அந்த நேரம்தான் உள்ளே அன்னபூரணியிடம் பேசிக் கொண்டிருந்தார் குகநாதன்.

"அம்மா! சின்னவதான்... அமெரிக்கா கிளம்பப் போறாளே! மேகலா கல்யாணத்தையும் பேசி முடிக்க லாம்.. இல்லே!" என்றார்.

"அதான்! நீங்கதான் எல்லாரும் ரொம்ப ரொம்பப் பெரியவங்க.. ஆயிட்டீங்க... இல்லே! நீங்களே பேசி முடிங்க...!"

"அம்மா! நாம ஒருத்தரையொருத்தர் தாக்கிக்கறதுக்கு இது நேரமில்லே! இந்த ஆள் கூடயும் ரொம்ப சுத்திப் பேரைக் கெடுத்துக்கறதுக்குள்ளே கல்யாணத்தை பெரிய வங்களா முடிக்க அனுப்பிரலாம்" என்றார்.

அன்னபூரணி ஒன்றும் பேசவில்லை! ஆனால் இரத்தின சாமி வந்திருப்பது தெரிந்ததும் ஹாலுக்கு வந்தார்.

"தம்பி! மேகலா கல்யாணத்தையும் முடிச்சரலாம்...!" என்று ஆரம்பித்தார்.

இரத்தினசாமி அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

''எனக்கொன்னும் பிரச்சனையில்லே! எந்த அப்பா.. அம்மா.. எனக்குன்னு பேசறதுக்கு இருக்காங்க...! நீங்களே நடத்த வேண்டியதுதான்! செலவுக்கு நான் பொறுப்பு!'' என்றான்.

அன்னபூரணி லேசாக விழித்தார்.

''செலவென்ன.. தம்பி! செலவு!'' என்றார். ஆனால் மறுக்கவில்லை.

இரத்தினசாமி தனது அரும்பு மீசையை நீவிக் கொண்டு கிண்டலாகப் புன்னகைப்பதைப் பார்க்க புஷ்பத்துக்கு ஏனோ பகீரென்றது!

''எனக்குன்னு யாருமில்லே! ஒரு மாமன்தான். அவரை அடுத்த வாரம் வரச் சொல்றேன்! ஆனா.. எல்லாப் பேச்சு வார்த்தையும் உங்க வீட்டு சின்னப் பொண்ணு அமெரிக்கா கிளம்பிப் போனதற்குப் பிறகுதான். அந்தப் பெரியவரு அந்த மாப்பிள்ளைன்னு யாரும் எந்தப் பேச்சு வார்த்தைக்கும் வரக்கூடாது'' என்றான்.

அன்னபூரணியம்மாவுக்கு உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது.

''அவங்க எதுக்கு... வர்றாங்க தம்பி! இது முழுக்க.. முழுக்க...நான் முன்னால நின்னு நடத்தப் போற கல்யாணம். எப்படி ஜாம், ஜாம்னு நடத்தப் போறேன்.. பாருங்க!'' என்றார்.

''ஆமா! எங்க தகுதிக்குக் குறையக் கூடாது!''

''கண்டிப்பா... குறை வராது.. தம்பி!'' என்றார்.

குகநாதன் மௌனப் பார்வையாளராக இருந்தார். தனியாகப் புஷ்பத்திடம் சொன்னார்.



''புஷ்பம்! என்னவோ எங்கப்பா... அந்த ஆகாஷ் பய எல்லாரும்.. ரொம்ப வற்புறுத்தினதாலதான்...ஸ்ரீயோட கல்யாணம் இப்படி அவசரமா.. நடத்த வேண்டிதாப் போச்சு. இந்தக் கல்யாணத்தை அம்மாவே முன்னாடி நின்னு நடத்தட்டும்'' என்றார்.

புஷ்பமும் ஒத்துக் கொண்டார்!

இரத்தினசாமி அழைத்து வருவதாகச் சொன்ன மாமா வும் வந்தார்!

வந்த மாமாவைப் பார்த்த அன்னபூரணிக்கு ஏதோ காட்டு வேலை செய்து கொண்டிருந்த மனிதரை அழைத்து வந்தாற் போல இருந்தது.

தடபுடல் எல்லாம் எதுவும் செய்யவில்லை. ஆனால் இரத்தினசாமிதான் பேசினான்.

''நகையைப் பற்றிக் கவலையில்லை. கல்யாணச் செலவுக்கு நான் பணம் கொடுத்து விடுவேன்'' என்று தான் சொன்னான். ஆனாலும் புஷ்பத்துக்கு என்னவோ உறுத்தலாகவே இருந்தது.

இரத்தினசாமி முழுக்க உண்மை பேசவில்லையென்று.

கல்யாணம் பேச வருகிறவர் ஊர்க்காரர்கள் நாலைந்து பேரையாவது அழைத்து வரமாட்டார்களா என்றிருந்தது.

இரத்தினசாமி மேகலாவுடன் பேசுகிறேன் என்று தனியாகத் தோட்டத்துக்குப் போயிருந்தார்கள். அன்ன பூரணி மெதுவாகக் கூட வந்திருந்த கோவிந்தசாமியை வாயைக் கிளறினார்.

ஏற்கனவே பார்த்தசாரதிக்குச் சென்னையிலேயே நாலைந்து வீடுகள் இருப்பதை தெரிந்ததிலிருந்தே அன்னபூரணி கொஞ்சம் கவலையாகியிருந்தார்.

பார்த்தசாரதியைக் கழற்றி விடுவதில் அவ்வளவு அவசரப்பட்டிருக்க வேண்டாமோ... என்று.

அந்தக் காலத்தில் அரசல் புரசலாக அடுத்த வீட்டுக்குக் கூடத் தெரியாமல் அவர் எத்தனையோ விளையாடல்கள் செய்தது உண்டு. கடைசியில்தான் கணவரே கண்டு பிடித்தார். ஆனால் இந்தக் காலத்தில் எல்லாம் எப்படியோ வெட்ட வெளிச்சமாகி விடுகிறது. ஏமாந்த பணக்காரர்கள் வெளியே தெரிந்தால் கௌரவக் குறைச்சல் என்று அடங்கி விடுவார்கள் என்பது அவர் கணிப்பாக இருந்தது. ஆனால், பார்த்தசாரதி கோர்ட்டுக்குப் போனது அவருக்குப் பெரிய அதிர்ச்சி. அதனால்தான் இரத்தினசாமியை யாவது கை நழுவ விடாமல் இந்தக் காரியத்தை முடிக்க வேண்டும் என்றிருந்தார். வந்திருக்க ''மாமன்'' என்று சொல்லிக் கொண்டு இந்த ஆளையாவது காக்காய் அடித்து விஷயங்களைத் தெளிவாக முடித்துக் கொள்ள வேண்டு மென்று நினைத்தார்.

''ஏனுங்க...! கோவிந்தசாமியண்ணே! சொந்தக்காரங்க.. ஊர்ப்பெரியவங்கன்னு.. யாரையாவது நாலைஞ்சு பேரைக் கூட்டிட்டு வந்திருக்கணுமில்லே!'' என்றார்.

''கூப்பிட்டிருக்கலாம்...! ஆனா.. தம்பி கொஞ்சம் முரடன்..! எடுத்தெறிஞ்சு பேசிடுவான். அதனால பெரியவங்க எல்லாம் கொஞ்சம் விலகியே இருப்பாங்க...! முரடன் ஆனாலும் நல்லவன்னு எல்லாருக்கும் தெரியும்..'' என்றான்.

''ஓஹோ! ஊருக்குள்ளயே பெரிய பணக்காரரமே'' என்று அடுத்த கொக்கியைப் போட்டார் அன்னபூரணி.

வெறுமையான ஒரு பார்வையை மனைவியை நோக்கி விட்டுத் திரும்பி அம்மாவை பார்த்துக் கொண்டிருந்தார் குகநாதன்.



''ஆமா! பின்னே! நூறு ஏக்கரா இருந்தது அவங்கப்பா காலத்துல...! அது அப்படியே கரைஞ்சு... அம்பது ஏக்கராவாயிடுச்சு. ஆனா.. தம்பி தோணித்தான் அம்பது ஏக்கராவையும் காப்பாத்துச்சு'' என்றார் பெருமையாக.

அன்னபூரணிக்குப் ''பொசுக்'' கென்றானது.

''வெறும் ஐம்பது ஏக்கர்தானா?'' என்ற எண்ணம் ஓடியது.

''பின்னே?! ஆயிரம் ஏக்கர் நிலம்ன்னு சொன்னார்!''

''ஆமாமா! இருந்துச்சு. இரண்டு தலைக்கட்டுக்கு முன்னால...! அப்புறம் பாகம் பிரிச்சு.. பிரிச்சு... எல்லாம்.. போச்சு! இப்பத் தம்பிக்கு ஐம்பது ஏக்கரா...'' என்றான்.

''ஓ!''

''பணம் நிறைய லட்சக் கணக்கில் வச்சிருக்கார். எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. முரடன்..அவ்வளவுதான்!'' என்றான்.

அன்னபூரணி காற்றுப் போன பலூன் போல ஆகி விட்டார்.

இரத்தினசாமியும், கோவிந்தசாமியும் புறப்பட்டுப் போன பிறகு அன்னபூரணி மகனிடமும், பேத்தியிடமும் சொன்னார்.

''என்னடா.. இது! வெறும் ஐம்பது ஏக்கர்தான்... இருக் குங்கறாங்க!'' என்றார்.

குகநாதன் முறைத்தார்.

''அம்மா! என்னமோ ஐம்பது ஏக்கரை அஞ்சு ஏக்கர் மாதிரி.. சொல்றே! ஆத்தங்கரையோரத்து நிலம். சோத் துக்கு பதிலா பணத்தையே தின்னாலும் தீராது. போதும்.

இந்த சம்பந்தத்தையும் குழப்பம் பண்ணிக் கெடுத்துராத" என்றார் குகநாதன்.


மேகலாவும் மனம் வாடி விட்டாள்.

பார்த்தசாரதியை ஸ்ரீகலாவே திருமணம் செய்து விட்டாள் என்ற வலி ஒரு ஓரத்தில் அவளுக்கு இருக்கத்தான் செய்தது. ஆனாலும் இரத்தினசாமிக்கு இருக்கிற ஆயிரம் ஏக்கரை எண்ணித்தான் மனதைத் தேற்றிக் கொண்டாள். ஆனால், அடிப்படையே ஆட்டம் காண்கிறதே!

பார்த்தசாரதி நாகரீகமாக ஒதுங்கியதைப் போல இரத்தினசாமி ஒதுங்க மாட்டான் என்று புரிந்தது. முயற்சித்தும் பார்க்கலாமே என்று நினைத்தாள்.

அப்போதுதான் இரத்தினசாமி யாரென்று முழுமையாகப் புரிந்தது மேகலாவுக்கு.

## 18



"ஏய்! மேகலா! அந்தப் பார்த்தசாரதி மாதிரி என்னைப் பக்கிரின்னு நினைச்சயா?" என்று உறுமியவன் உள்ளே போனான்.

எதையோ ஒன்றைக் கொண்டு வந்தான்.

டி.வி.திரையில் காட்சிகள் வந்ததைப் பார்த்தவுடன் மேகலா அதிர்ந்து போனாள்.

"நல்ல வேளையாக எல்லை மீற அனுமதிக்கவில்லை" என்று அந்த அதிர்ச்சியும், நடுக்கமும் நிறைந்த நேரத்தில் கூட எண்ணிக் கொண்டாள்.



"பாத்தியா! எல்லாப் பத்திரிகைக்கும் குடுத்துடுவேன். ஏற்கனவே பங்களா வாங்கிகிட்டு ஏமாத்தப் பாத்தீங்கன்னு கேஸ்ல ரொம்பப் பிரபலமா ஆகி இருக்கீங்க" என்றான்.

"பிரபலமா?" என வார்த்தையை நக்கலாக உபயோகித்தான்.

இத்தனைக்கும் மேகலா வேறொன்றும் கேட்கவில்லை.

"ஏங்க... சாமி! இப்படிப் பொய் சொன்னீங்களே! இது நியாயமா?" என்றுதான் கேட்டாள்.

"என்ன பொய் சொன்னேன்?" என்றான்.

"ஆயிரம்.. ஏக்கர் இருக்குன்னு சொன்னீங்களே! உங்க மாமா சொல்றாரு" வெறும் ஐம்பது ஏக்கர்தான் இருக்காமே!"

"ஏக்கரைக் கல்யாணம் பண்ணப் போறியா? இல்லே.. என்னைக் கல்யாணம் பண்ணப் போறியா?"

மேகலா விழித்தாள்.

"என்னடி.... முழிக்கறே! உங்களுக்கு பிட் நிறையப் போட்டாத்தானே பிடிக்கும்! அதான் கொஞ்சம் அப்படிச் சொன்னேன்?"

கடகடவென்று சிரித்தான்.

"இப்பத் தோணுமே! அநியாயமா பார்த்தசாரதியை கோட்டை விட்டுட்டோமேன்னு உனக்கெல்லாம் பார்த்தசாரதி சரியில்லே.. தெரியுமா! என்னை மாதிரி ஆளுகதான் சரி. கம்மா அப்படியே சாட்டை சொடுக்கி... வீசி...!"

அவள் கண்களில் பீதி தெரிந்தது.

"பயப்படாதே! அடிக்க மாட்டேன் கோழைப்பயலுக தான் பொம்பளைங்களை அடிப்பாங்க... நான் அடிக்க மாட்டேன். உன்னை எப்படி கையாளணும்னு எனக்குத் தெரியும்."

அவன் அருகில் நெருங்கினான். தன் ஆட்காட்டி விரலால் அவள் முகவாய்க்கட்டையைத் திருப்பினான்.

"மேகலாக் கண்ணு! உன்னைப் பார்த்தவுடனே எனக்கு ரொம்பப் பிடிச்சது. நீயோ அந்த பார்த்தசாரதியோட சுத்திகிட்டிருந்தே! உன்னை அங்கிருந்து கழட்டணும் என்ன செய்யணும்னு யோசிச்சேன். அப்ப எனக்கு ஒரு விஷயம் புரிந்தது. என்னன்னா.. அந்தப் பார்த்தசாரதிக்கும் உன் மேல ஏற்பட்டது ஒரு அட்ராக்ஷன்தான். உனக்கு அவன் பணத்து மேலதான் அட்ராக்ஷன்னு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திகிட்டு விளையாடிகிட்டேன்."

மேகலா சட்டென்று சமாளித்துக் கொண்டாள். ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள்ளாக அவன் மறுபடியும் பேசினான்.

"கவலைப்படாதே! உன்னை வசதியா வச்சுக்கற அளவுக்கு எனக்குத் தெம்பிருக்கு. பணம், காசு நிறைய இருக்கு. காரு, பங்களா, அப்புறம்.. உனக்கு என்னென்ன வேணுமோ... எல்லாம் என்னால குடுக்க முடியும்!"

மேகலா சட்டென்று அந்த முடிவைச் செய்தாள்.

"எப்படியும், இரத்தினசாமியை விட்டா வேற வழியில்லே!" என்பது தான் அந்த முடிவு.

"சேச்சே! என்ன இப்படியெல்லாம் பேசறீங்க! நான் என்ன கேட்டேன்? ஏன் உண்மையை மறைச்சீங்கன்னு தான் கேட்டேன். அதுக்காக உங்களை விட்டு விலகிடுவேன்னு நினைச்சீங்களா?" என்றாள்.



இரத்தினசாமி ஒன்றும் உடனே குளிர்ந்து விடவில்லை.

"அப்படி நினைப்பிருந்தா.. உடனே மூட்டை கட்டிட வேண்டியதுதான்" என்றான் கறாராக.

"ப்ளீஸ்! சாமி! போதும்.. பார்த்தசாரதினால என் பேரு கெட்டதே போதும். அப்படியொன்றும் நான் பணத்துக்கு அலையற ஆளு.. இல்லே!"

எப்படியோ.. சாகசமாகப் பேசி.. அவனை அனுப்பி வைத்தாள்.

பிறகு பாட்டியிடம் போனாள்.

கலங்கிய குரலில் சொன்னாள்.

"பாட்டி! ஆயிரம் ஏக்கராக்காரன்னு நம்பி கொஞ்சம்.. இடம் குடுத்தேன் அத்தனையும் வீடியோ எடுத்து வச்சிருக்கான்" என்று அழுதாள்.

"அதுக்குத்தான்! வெளியே போனாலும் தனி ரூம்க்கெல்லாம் போகக் கூடாதுங்கறது" என்று பாட்டி கூடக் கடிந்து கொண்டார். பிறகு ஒரு பெருமூச்சுடன் சொன்னாள்.

"மேகலா! ஐம்பது ஏக்கரும்.. ஒண்ணும் சின்ன சொத்து இல்லே! எப்படியோ எல்லா வசதியும் குடுத்து வச்சிருந்தா.. சரி! இனிமே நாம ஒண்ணும் செய்யறதுக்கில்லை! எல்லாருமே... எதிர்ப்பா... நிக்கறாங்க..." என்றாள்.

மேகலாவும் வருத்தத்துடன் தலையை ஆட்டிக் கொண்டாள்.

பார்த்தசாரதியின் மீதும், ஸ்ரீகலாவின் மீதும் கொள்ளை கொள்ளையாய்க் கோபம் வந்தது.

சென்னையிலேயே பார்த்தசாரதிக்கு இரண்டு, மூன்று அபார்ட்மெண்ட்கள் இருக்கிறதாம். அதில்லாமல் தனி பங்களாக்கள் வேறு இரண்டு மூன்று இருக்குதாம். அதெல்லாம் தெரியாமல் ஆயிரம் ஏக்கர் என்றவுடனே அவரை விட்டு விட்டோமே என்று தன்னையே நொந்து கொண்டாள்.

முதலில் கோபம் பொங்கியது! பிறகு அதுவே ஆத்திர மாக மாறியது. ஆனால், அவளது அறிவு சொன்னது.

"கண்டிப்பாகப் பார்த்தசாரதியும், ஸ்ரீகலாவும் இன்னும் உடல்ரீதியாக இணைந்திருக்க மாட்டார்கள். இப்போது கூட ஏதாவது கலகம் நிகழ்த்தி அவர்களைப் பிரித்துத்தான் உள்ளே நுழைந்து விட்டால்...!"

"முடியுமா...?!"

"ஏன்! முடியாது! தனக்காகப் பின்னாலேயே அலைந்தவன்!

தன் ஒவ்வொரு அசைவையும் ரசித்தவன். பைத்திய மாகத் திரிந்தவன்.

உள்ளே அந்த நினைவுகள் கண்டிப்பாகப் புதைந்திருக்கும். அந்த நினைவுகளை மட்டும் தட்டியெழுப்ப முடிந்தால்...!

ஆமாம்!

அப்படித்தான் செய்யவேண்டும்!

தன்னை ஏமாற்றிய... இரத்தினசாமிக்கும்.. அது ஒரு மரண அடியாக இருக்கும்.

சந்தர்ப்பம் கிடைத்தவுடன் இடையில் நுழைந்து விட்ட ஸ்ரீகலாவுக்கும் அது ஒரு மரண அடியாக இருக்கும்.



ஆனால், ஸ்ரீகலாவின் ஒத்துழைப்பு இல்லாமல் அது நடக்காதே!

ஸ்ரீகலாவின் மனதையும் கரைக்கணும்.

இரக்க சுபாவம் உள்ளவள்!

கரைக்கலாம். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமாமே!

முயற்சிக்க வேண்டும்! எதிராளியைப் போல அல்லாமல் "உடனிருந்து கொல்லும் வியாதியாக."

உடனே செயல்படுத்தினாள்.

ஸ்ரீகலாவை செல்போனில் அழைத்தாள்!

நல்ல வேளையாக ஸ்ரீகலா எடுத்தாள்.

"ஸ்ரீ! எப்படிடா.. இருக்கே! இந்த அக்கா மேல கோபம் எல்லாம் தீர்ந்துதாடா!"

ஸ்ரீகலா இதை சுத்தமாக எதிர்பார்க்கவில்லை.

"உன்மேல.. எனக்கு என்ன கோபம்! வருத்தம்தான். இப்படி ஒரு நல்ல வாழ்க்கையை இழந்துட்டியேன்னுதான் வேற என்ன?"

"ம்..." அந்த மேட்டரையெல்லாம் இப்பப் பேசி என்னத்துக்கு ஆகுது? நீ சந்தோஷமா.. இருக்கியா?"

"ம்.. எனக்கென்ன?" என்று மகிழ்ச்சியாக பேசுகிற தங்கையை மெல்லப் பேசித் தனக்கு வேண்டிய விஷயம் கறந்தாள்.

"ஆஹா! நாம நினைச்சது உண்மைதான்!" என்று கெக்கலி கொட்டிச் சிரித்துக் கொண்டது மனது.

திட்டங்கள் போட ஆரம்பித்தது மனம்.

• • •

''மேகலா பேசினாங்க...!'' என்றாள் ஸ்ரீகலா ஆர்வமாக.

பார்த்தசாரதி ஒரு நிமிடம் துணுக்குற்றான். ஆனால் சட்டென்று முக பாவத்தை மாற்றிக் கொண்டான்.

''என்னவாம்?'' என்றான் அசிரத்தையாக.

''ரொம்ப வருத்தப்படறா'' என்றாள் ஸ்ரீகலா.

பார்த்தசாரதி ஒன்றும் பேசவில்லை.

''பாவம்! நீங்களும் அவளை மறக்க முடியாமக் கஷ்டப்படறீங்க. முதல்லயே புத்தியோட நடந்திருந்தா.. இந்த நிலைமை வந்திருக்காது.. இல்லைங்க...!'' என்றாள்.

''ப்ளீஸ்! ஸ்ரீ.. போனதை எல்லாம் எதுக்குப் பேசிகிட்டு'' என்றான். மேலும் சொன்னான்.

''நீ நினைக்கிற மாதிரி நான் ஒண்ணும் மேகலா நினைப்பா.. இல்லே! அவளோட இயல்பான குணம் என்னன்னு தெரிஞ்சதுக்கப்புறம்.. அவளை நான் என் மனசல இருந்து எடுத்துட்டேன். மேகலான்னு ஒரு பொண்ணு என் வாழ்க்கையில இருந்தா.. இப்ப.. இல்லே.! அவ்வளவுதான்... புரியுதா?'' என்றான்.

ஸ்ரீகலா பயந்து போனவளாகத் தலையாட்டினாள். ''அப்புறம்....! நீயும் ஒன்றும் குத்த மனப்பான்மையில தடுமாற வேண்டியதில்லே! எத்தனையோ பேர் புத்தம் புதுசா.. கல்யாணம் பண்ணிக்கறதில்லையா? அதிலயும் நீயும் நானும் ஏற்கனவே ஒருத்தரையொருத்தர் தெரிஞ்சவங்க...''

ஸ்ரீகலா மௌனமாகக் கேட்டாள்.

''ஏனோ.. தெரியலே! எங்க பேரண்ட்ஸுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்க. ஆரம்பத்திலே இருந்தே மேக



லாவை அவங்களுக்குப் பிடிக்கலே...! சரி.. அவங்க மனசாவது குளிரட்டும்ங்கறது ஒரு காரணம்.. சரியா?'' என்றான்.

மறுபடியும் தலையாட்டினாள்.

ஸ்ரீகலாவின் அதிர்ந்த முகபாவம் பார்த்தவன் என்ன நினைத்தானோ தெரியவில்லை. புன்னகைத்தான். முகபாவம் மாறியது.

''ஸ்ரீ.. இப்படி உட்காரு!'' என்று பக்கத்தில் ஆனால் முகம் பார்க்கும்படி அருகில் இழுத்து சோபாவில் அவளை அமர்த்திக் கொண்டான்.

''ஸ்ரீ! மேகலா.. என்ன இருந்தாலும் உன் சிஸ்டர். சொன்னா.. உனக்கு சங்கடமா இருக்கும். ஆனாலும் சொல்றேன்.. மேகலா.. ஏதோ காரணமாத்தான் உன்கிட்டே பேசறா... நீ.. ஏதும்.. ஏதும்.. சொன்னியா?'' என்றான்.

ஸ்ரீ தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஆமா.. நான்.. நான்.. நாம.. இன்னும் முழுமையா வாழ ஆரம்பிக்கலேன்னு... சொன்னேன்'' என்றாள்.

பார்த்தசாரதியின் முகம் கடுகடுவென்று மாறியது.

''ஸ்ரீ...! தப்புப் பண்ணிட்டே! அது நம்ம அந்தரங்கம்... நீ அதை அவகிட்டே சொல்லியிருக்க வேண்டியதில்லே... இனிமே.. என்னைப் பத்தி எதுவும் மேகலாகிட்டே பேசத் தேவையில்லை!'' என்றான்.

ஸ்ரீகலா தலையைக் குனிந்து கொண்டாள். ''ஐ ம்.. சாரி!'' என்றாள்.

கண்களில் நீர் திரள நகர்ந்தாள் ஸ்ரீகலா. ''எவ்வளவு அறிவாளியாக இருந்தோம். இருந்தாலும் உனக்கு

திடசித்தம்...'' என்பார் அம்மா.. அப்படி இருந்தவள்.. இப்போது சாரதியின் ஒருவார்த்தைக்காக இப்படி.. கண்களில் கண்ணீர் கட்டிக் கொள்ள நடமாடிக் கொள்ள வேண்டுமா..?'' என்று தன்மீதே கோபம் வந்தது ஸ்ரீகலாவுக்கு.

மௌனமாகக் காபி தயாரித்தாள்.

''ஸ்ரீ!'' என்று அவன் பின்னாலேயே சமையலறைக்கு வந்தான்.

''ஸ்ரீ! நான் சொன்னதை ரைட் சென்ஸ்ல எடுத்துக்க.. மேகலா.. நம்ம ரெண்டு பேருக்கும் நடுவே.. எதும் குழப்பம் பண்ணாம பாத்துக்க'' என்றான்.

''சரிங்க'' என்றாள்.

அவள் கொடுத்த காபியைக் கையில் வாங்கிக் கொண்டான்.

''ஸ்ரீ! நான் சொன்னா.. நம்புவியோ.. மாட்டியோ.. மேகலா பண்ணின துரோகத்தை மறக்க முடியாம தவிச்சுப் போயிடுவேன்னு.. நினைச்சேன். ஆனா.. நீ என் கூட இருந்ததனாலயோ.. என்னவோ... எந்த இழப்பும் என்னைத் தாக்கலே...! ஐ நீட் யுவர் பிரசன்ஸ்...'' என்றான்.

ஸ்ரீகலாவின் மனம் குளிர்ந்தது.

அன்றிரவு!

ஸ்ரீகலா ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

பார்த்தசாரதி.. தனது அலுவலக அறையில் ஏதோ வேலையாக இருந்தான்.

புத்தகம் மார்பின் மேல் இருக்க ஒரு குழந்தையாய் உறங்கிப் போன ஸ்ரீகலாவின் முகம் பார்த்தவுடன் அவனுள் ஒரு புன்னகை!



புத்தகத்தை எடுத்து ஒரு புறம் வைத்து விட்டு ஒரு போர்வையை எடுத்துப் போத்தினான்.

பிறகு! இந்தியாவுக்கு போன் போட்டு குறிப்பிட்ட ஒருவருடன் பேசினான். அமைதியாக அந்தப்புறம் பேசுவதைக் கேட்டான். பத்து நிமிடங்கள் வரை கேட்டவனுக்கு... நெற்றியில் முடிச்சுக்கள் விழுந்தன.

சிந்தனை மாறியது.

உள்ளுக்குள் கோபமும், வெறுப்பும் ஒருங்கே தோன்றியது.

செல்போனைத் தூக்கி சோபாவில் வீசி விட்டுத் திரும்பினான்.

ஸ்ரீகலாவின் மேலாடை லேசாக விலகியிருக்கக் கண்டு சரி செய்ய அருகில் வந்தவன்

''விடுங்க.. சாரதி!'' என்று அவள் உறக்கத்தில் சிணுங்குவதைக் கண்டவன் ஒரு நிமிடம் குழம்பியவன் போல் பார்த்துக் கொண்டு நின்றான்.

தன்னை மறந்தான்.

''ஹேய்! ஸ்ரீ! என்று தன் கையணைப்பில் கொண்டு வந்தவன் முழுமையாக... தன் மனைவியின் உறவில் திளைத்தான்.

ஸ்ரீகலாவுக்கு முதலில் திகைப்பு! ஆச்சரியம்! ஆனால் அவள் மனதைக் காட்டிலும் உடல் அவளது கட்டளைக்கு அடி பணிய மறுத்தது.

பாந்தமாக அவனது கைகளில் அடங்கிக் கொண்டாள்!

மறு நாள் காலை!

இருவருக்குமே.. ஒருவரையொருவர் பார்க்க வெட்கமாக இருந்தது!

மௌனமாகவே ... நடந்தன.
பார்த்தசாரதியின் கார்வரை வந்து அவனை வழியனுப்ப நின்றவள் அந்த வார்த்தைகளை எடுத்து அவன் முகத்தில் வீசினாள்.

"உங்க நோக்கம்.. நிறைவேறிருச்சா...?" என்றாள்.

"ஸ்ரீ" என்றான் திகைப்புடன்.

"எங்கக்காவுக்கும்.. உங்களுக்கும் இடையில் நடக்கற விளையாட்டில் நான்தான் பலிக்கடாவா... கிடைச்சேனா! இனி.. என்ன! மேகலா போன் செய்யும் போது நீ நினைக்கற மாதிரி.. இல்லைடி! எங்களுக்குள்ளே எல்லாம் நடந்துச்சு..ன்னு சொல்லணும். அதுல நீங்க ஜெயிச்சுடுவீங்க! ஆனா.. நான்.. எனக்குன்னு சொந்தமான உணர்வுகள்.. இல்லையா?" என்று ஒரு நிமிடம் பொரிந்தாள்.

பார்த்தசாரதி ஒரு நிமிடம் திகைத்துப் போய்ப் பார்த்தவன் பிறகு சிரித்தான்.

"ஹேய்! கோபத்துல கூட நீ அழகா இருக்கே!" என்றான்.

காரை நகர்த்தி விட்டான்!

ஸ்ரீகலா என்ன செய்வதென்று தெரியாமல் போகிற காரை வேடிக்கை பார்த்தபடி நின்றாள்.

## 19

"அம்மா!" என்றாள் ஆசையாக.

"ஏண்டி! நீ கூப்பிடக் கூடாதா?" என்றார் புஷ்பம்.

"அம்மா! அவரு இருக்கும் போது பேசலாம்னுதான் கூப்பிடலே! மாமாவும் அத்தையும் வேற அவங்க அக்கா



வீட்டுக்குப் போயிருக்காங்க.. இவரு இருக்கும்போதுதான் பேச முடியும். அவரு நைட் டைம்ல லேட்டாத்தான்.. வந்தாரு..." என்றாள்.

"சரிடி! பரவாயில்லை! நல்லாயிருக்கியா?"

"ம்...! புது இடம்! புது மனுஷங்க.. பழக்கமாகணும்."

"அதெல்லாம்... சரியாப் போயிடும். மாப்பிள்ளையும் சரி.. அவங்க பெரியவங்களும் ரொம்ப நல்லவங்க.."

"ஆமாம்மா!" என்றாள். பிறகு ஏதோ ரகசியம் பேசுபவள் போல்.

"அம்மா! மேகலா.. என்கிட்டே பேசினா!" என்றாள்.

"மேகலாவா.. அவ எதுக்கு உன்கிட்டே பேசினா...?" என்றார் கவலையுடன்.

"சும்மாதான்.. ரொம்ப வருத்தப்பட்டா... எவ்வளவு நல்ல சம்பந்தத்தை இழந்துட்டேன். நீயாவது நல்லா.. இருன்னா..."

"ஜாக்கிரதைடி! பாம்புக்காவது பல்லில விஷம்... அவளுக்கு உடம்பெல்லாம்.. விஷம்... அவங்க பாட்டி மாதிரி...!" என்றார் புஷ்பம்.

"அம்மா.. என்னம்மா...! நீ பெத்த பொண்ணைப் பத்தி நீயே இப்படிப் பேசறே...!"

"நான் பெத்த பொண்ணுதான்.. ஆனா... என் வளர்ப்பு இல்லே! எல்லாம் அந்தக் கிழவியோட வளர்ப்பு" என்றார்.

"அம்மா! என்னம்மா.. இவ்வளவு தைரியமாப் பேச ஆரம்பிச்சுட்டே!" என்றாள் ஆச்சரியமாக.

"பின்னே.. என்னடி.. பண்றது? சொன்ன எதையும் கேட்கலே... பணம் சொத்துன்னு அலைஞ்சாங்க. இப்பப்

பேரைக் கெடுத்துட்டாங்க..." என்றார் திடீரென்று சந்தேகம் வந்தவள் போல "ஏண்டி.. மேகலா.. என்னடி கேட்டா...?" என்றார்.

இந்தப் புறம் முகம் சிவக்க மேகலா கேட்ட விவரங்களையும் தான் சொன்ன விவரங்களையும் சொன்னாள்.

"அடப்பாவி! இதையெல்லாம் எதுக்கு அவகிட்டே சொன்னே? ஏண்டி... மாப்பிள்ளை மத்தபடி உன்கிட்டே அன்பா நடந்துக்கறாருதானே?"

"அம்மா! அதெல்லாம் ஒண்ணும் குறையேயில்லை. அவருதான் நான் மேகலாவுக்குப் பதிலா கல்யாணம் பண்ணிருக்கறேன்னு வருத்தப்படுவேன்னு நினைச்சுகிட்டிருக்காரு..." என்றாள்.

"ஓ!"

"அம்மா... ஆனா.. ஆனா...!"

"ம்...!"

"நேத்து.. நேத்து..."

"ம்..."

"சடங்கு.. முடிஞ்சது...!" என்றாள்.

அம்மா அந்தப்புறம் மகிழ்ச்சியாகச் சிரித்தார்.

"அப்பாடா!!" என்றார். "முதல்ல.. உங்கக்காகிட்டே சொல்லு! ஸ்ரீ! அவ ஒண்ணும் சும்மா உன்கிட்டே பேசலே! ஆழம் பாத்திருக்கா! ஏன்.. தெரியுமா?"

"ஏன்?" என்றாள் ஸ்ரீகலா ஆர்வமாக.

"அந்த இரத்தினசாமி.. இருக்காரே இரத்தினசாமி. அந்த ஆளுக்கு.. ஆயிரம் ஏக்கர் இல்லையாம். வெறும்



ஐம்பது ஏக்கர்தானாம் அதான்... ஐயய்யோ... பார்த்தசாரதியை ஐயோ... மாப்பிள்ளைப் பேரைச் சொல்லக் கூடாது.. அருமையான மாப்பிள்ளையைக் கோட்டை விட்டுட்டோம்னு" மாஞ்சு.. போறா..." என்றார்.

"ஓஹோ...!" என்றாள் ஸ்ரீகலா.

"சரிடி! நீ ஜாக்கிரதையாயிரு... உங்க வீட்டுக்காரர் கிட்டே மனசு விட்டுப் பேசி உன் வாழ்க்கையைக் காப்பாத்திக்க... என்ன?" என்றார்.

பிறகும் சற்று நேரம் மற்ற விஷயங்கள் பேசி விட்டு போனை வைத்தார்.

போனை வைத்த பிறகு ஸ்ரீகலாவுக்கு கவலையாகிப் போனது. கணவன் சொன்னது சரிதான். தான்தான் மேகலாவை முழுமையாய் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், அவர் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கிறார். அதற்குள் தான் கோபித்துக் கொண்டு விட்டோமே என்று கவலையானது. ஆனால் உடனே வேறொரு மனது சொன்னது.

"தான் சொன்னதில் என்ன தவறு. இத்தனை நாள் கழிச்சு.. அதுவும் நேற்றுத்தான்... அதுவும் மேகலாவின் பேச்சு அடிபட்டதற்குப் பிறகுதானே தன்னை அணுகியிருக்கிறார்" என்று.

கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்! வழக்கத்தை விடத் தாமதமாக வந்தான்.

"ஸ்ரீ! சாப்பிட்டியா?" என்றான்.

"இல்லே! உங்களுக்காகக் காத்திட்டிருக்கேன்."

"நான் எப்ப வேண்ணா வருவேன். அதுக்காக உன் வயித்தைக் காயப் போட்டுகிட்டிருக்காதே..." என்றான்.

"ம்...!" என்றான்.

முகபாவத்திலிருந்து எதையும் கண்டு பிடிக்க முடிய வில்லை.

வழக்கம்போல் "சப்ஜி குடு" "சப்பாத்தி வை" என்று இயல்பாகக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

"ஸ்ரீ! அக்கா.. பத்மா.. பேசினா.. நம்மளை அவுங்க வீட்டுக்குக் கூப்பிடறாங்க. எப்பப் போலாம்?"

"உங்களுக்கு எப்ப சௌகரியப் படுதோ...!" என்றாள்.

"சரிடா! நீ தூங்கறதுன்னா.. தூங்கு. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு" என்று அறைக்குள் புகுந்து கொண் டான்.

ஸ்ரீகலாவுக்கும் "அப்பாடா! தப்பித்தோம்!" என்று ஒரு புறம் இருந்தது. இன்னொரு புறத்திலோ தன்னையும் மீறிய ஒரு ஏமாற்றம் இருந்தது.

புரண்டு புரண்டு படுத்து உறங்கினாள்.

• • •

"ஹேய்! ஸ்ரீ! நான் ஒருத்தன் ஏங்கிகிட்டிருக்கேன்னு தெரிஞ்சும்.. என்ன?" என்று பார்த்தசாரதி அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

"இல்லையே! நீங்கதான் எங்கக்கா நினைப்பிலயே நடமாடறீங்களே?"

"உங்கக்கா... நினைப்பா! அவடா ராமச்சந்திரா" என்று இடியிடியென்று சிரித்தான்.

ஸ்ரீகலா குறுகுறுவென்று பார்த்தாள். அவன் சற்று நேரம் சிரித்து விட்டுப் பிறகு சொன்னான்.



"மக்கு! உங்க அக்கா மேல எனக்கு அப்படியொரு இன்ட்ரஸ்ட் இருந்தா.. கேஸ் போட்டிருப்பேனா? இன்ட் ரஸ்ட் இல்லைன்னு சொல்ல மாட்டேன்.. அவளோட அழகு மேல ஒரு அட்ராக்ஷன் இருந்துச்சு. ஆனா.. அவளோட அழகு வெறும் புற அழகு மட்டும்தான்னு தெரிஞ்சதுக்கப்புறம் நல்லவேளை தப்பிச்சோம்னு ஆயிடுச்சு" என்றான்.

"அப்புறம்.. எப்படி என்னைப் பெண் கேட்டீர்களாம்?" என்றாள்.

"அது.. நானில்லை.. எங்க பேரண்ட்ஸ். அப்பாதான்.. சொன்னாரு உனக்கு அக அழகும் இருக்காம்...!"

"ஓஹோ! அப்படீன்னா! புற அழகு இல்லையோ...!"

"நான் அப்படிச் சொல்லலையே! அக அழகும்.. அப்படீன்னு ஒரு இம் போட்டேனில்ல.. நீ அதைப் புரிஞ்சுக்கனும் இல்லே!"

"நான் என்ன தமிழறிஞரா? அவ்வளவு தூரம் யோசிக் கறதுக்கு!"

"அவ்வளவு தூரம் யோசிக்கறதுக்கு என்ன இருக்கு?" கொஞ்சம் பக்கமாவே யோசிக்கறது?" என்றான்.

தூரம் என்ற வார்த்தையை இழுத்தவன் பக்கம் என்ற வார்த்தையை அருகில் நெருங்கி அமர்ந்து சொன்னான்.

அவள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"இவ்வளவு சீக்கிரம் மனசு மாறுவீங்கன்னு.. நான் நினைக்கலே" என்றாள்.

"ஸ்ரீ!" என்றான் மெல்ல நெருங்கினான்.

''மனசு மாறலே! தகுதியில்லாத ஒண்ணை எடுத்து வீசிட்டு அந்த இடத்துல உன்னை வச்சுட்டேன்'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

அவனே சொன்னான்.

''ஸ்ரீ இதென்ன பேச்சு நேரமா? நாம ஒருத்தருக்கொருத்தர் தெரிஞ்சுக்க வேண்டியது எவ்வளவோ இருக்கு'' என்று அவளைத் தன் கைகளுக்குள் சிறைப் படுத்தியபோது அவள் சிணுங்கினாள்.

''விடுங்க.. சாரதி!'' என்று.

திடுக்கிட்டு விழித்தாள்.

கனவு!

அத்தனையும் கனவு!

எழுந்து அமர்ந்தாள்! முகமெல்லாம் வேர்த்து விட்டது. திரும்பிப் பார்த்தாள்.

பார்த்தசாரதியும் ஒருக்களித்துப் படுத்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன கனவா?'' என்றான் ஒரு மாதிரிக்குரலில்.

ஸ்ரீகலாவுக்குத் தொண்டையில் ஏதோ அடைக்கிறாற் போல் இருந்தது. துளைக்கிறாற் போலப் பார்க்கிற அவன் பார்வை குறித்து வெட்கமாகவும் இருந்தது.

தனது கனவு குறித்து அவமானமாகவும் இருந்தது.

எங்கேயோ பார்த்துக் கொண்டு ''ஆமாம்!'' என்று தலையாட்டினாள்.

அவன் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டான்.



அவள் பரிதாபமாக அவனைப் பார்த்தாள்.

''என்ன.. என்ன.. சொன்னீங்க?'' என்றாள்.

''ம்.. அதென்ன? தினம் கனவு முடியும்போது ஒரே மாதிரி... ''பஞ்ச்'' வைக்கறே?'' என்றான்.

''பஞ்ச்சா?'' மறுபடியும் விழித்தாள்.

''விடுங்க..! சாரதி!'' அவன் நடித்துக் காட்டினான். அவள் திகைத்தாள்!

அடுத்த கணம் அவள் கண்கள் கலங்கியது! பார்த்த சாரதி சட்டென்று எழுந்தான்.

''ஹேய்! ஸ்ரீ'' என்று ஏதோ சொல்ல வந்தவன் சொல்லு வதற்கு முன்பாக அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு அழுதாள்.

பார்த்தசாரதிக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. ஆனால் அவனுக்கு ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. புரியாத மாதிரியும் இருந்தது.

ஒரே நிமிடம்தான்!

ஸ்ரீகலா சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டாள். விலக்கிக் கொண்டாள். கண்ணைத் துடைத்துக் கொண் டாள்.

''சாரி! உங்க தூக்கத்தையும் கெடுத்துட்டேன். ப்ளீஸ்! நீங்க தூங்குங்க'' என்றாள்.

பார்த்தசாரதி எதுவும் பேசவில்லை. மாறாக ஸ்ரீகலாவைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

''ஸ்ரீ! யூ நீட் ரெஸ்ட் தூங்கு'' என்றான்.

தன்னையும் மீறிய லேசான தேம்பலுடன் அவள் மெல்ல அடங்கினாள். உறக்கத்திலும் ஆழ்ந்தாள்.

பார்த்தசாரதி வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

முந்தைய நாள் நடத்தையின் மூலமாகத் தான் ஸ்ரீகலாவை நோகடித்து விட்டோம் எனப் புரிந்து கொண்டான்.

மேகலாவுக்கும், தனக்கும் நடந்த ஒருவிதமான போராட்டத்தில் இடையில் மாட்டிக் கொண்டாள் இந்தப் பெண்.

கோர்ட்டில் ஏறி சாட்சி சொன்ன அந்தப் பெண்ணா.. இவள்? அந்தத் துணிவும், தைரியமும் எங்கே போயின?

என்ன காரணத்துக்காகத் தனது பெற்றோர்களும், ஆகாஷும் இந்தப் பெண்ணைத்தான் நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னார்களோ தெரிய வில்லை. ஆனால் இவள் ஏன் ஒத்துக் கொண்டாள்?

இடையில் எதற்காக மேகலா "பிளே" பண்ணுகிறாள்?

இன்றைக்கு அவன் ஒரு விஷயம் கேள்விப்பட்டான். இரத்தினசாமி மேகலாவின் எதிர்பார்ப்புகள் இருக்கும் அளவுக்கு இருக்கவில்லை என்று. அதனால் மீண்டும் தங்கள் வாழ்க்கையில் நுழைந்து குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கலாம் என்று நினைக்கிறாளோ?

நடக்கவே விடக் கூடாது. எது எப்படியோ ஒன்று நிச்சயம். ஸ்ரீகலா இன்டக்ரிட்டி உள்ள பெண். தெளிவான வள். இந்த திருமணத்தை பொறுத்தவரை அவள் தெளிவாக இருக்கிறாளோ இல்லையோ தான் தெளிவாக இருக்க வேண்டும்.

மேகலாவைப் போன்ற மூன்றாம்தரப் பெண்களை யெல்லாம் இனிமேல் ஒரு காத தூரத்தில்தான் வைக்க வேண்டும். அருகே நுழைய விடவே கூடாது.



ஸ்ரீகலாவின் தலையைக் கோதிக் கொண்டே வெகு நேரம் விழித்திருந்தான்.

மறுநாள் காலை!

முதல் நாளிரவில் எதுவுமே நடவாதது போல் நடமாடு கின்ற கணவனைப் பார்த்து அன்றைக்கு ஒரே குழப்பம்.

எதுவும் கேட்கவும் வழியில்லை!

வழக்கம்போல் பார்த்தசாரதி இயல்பாக நடமாடினான்.

புறப்பட்டுப் போனான்.

பார்த்தசாரதி அந்தப் பக்கம் போனவுடன் இந்தப் பக்கம் மேகலா அழைத்தாள்.

"என்னடி! அந்த ஆளை விட்டு என்னை மிரட் டறியா?"

"எந்த ஆளை விட்டு?"

"அதாண்டி! அந்த சாரதியை!"

"சாரதி.. பேசினாரா? எப்ப?"

"என்னடி.. ரெண்டு பேரும் நாடகமா ஆடறீங்க! நேத்திக்கு நான் பேசினதைச் சொன்னியாக்கும். அந்த ஆள்.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன் பண்ணி. மேகலா.. நீ அந்த இரத்தினசாமியையாவது காப்பாத்திக்கப் பாரு! என் வைஃப் எதையெதையோ உன்கிட்டே உளறியிருக்கா...! நேத்தைக்கு கதையே மாறிப் போச்சு. சீக்கிரமே ஸ்ரீ ஜாடையிலயே அல்லது என் ஜாடை யிலயோ ஒரு பரிசு உருவாக்கறதாத் திட்டம்கறாரு..."

"ஓ!"

"என்னடி! ஓ!"

மேகலாவின் பொறாமையே அவளது பைத்தியக்காரத்தனமான இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்று ஸ்ரீகலாவுக்குப் புரிந்தது.

ஒரு பக்கம் கோபமாக வந்தது. மறுபக்கம் சிரிப்பாக வந்தது.

"இத பார்! மேகலா... உனக்கு என்ன வேணும் இப்ப?! எதுக்காக இப்படி அப்பப்ப உளறிக் கொட்டிக் கிளறி முடிகிட்டிருக்கே?"

"என்னது உளர்றேனா?"

"ஆமா.. பின்னே! நீ யார்கிட்டே பேசிகிட்டிருக்கே தெரியுமா? மிஸஸ். பார்த்தசாரதிகிட்டே. நான் ஒண்ணும் அவருக்குத் தொடுப்பு இல்லே! சும்மா ஊரைச் சுத்திட்டு சமயம் பார்த்துக் கழட்டி விடற கேர்ள் ப்ரண்டும் இல்லே! வைஃப்...! புரியுதா? தாலி கட்டிகிட்ட மனைவி! நாங்க எதுக்காக எங்களோட வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு உனக்கு விளக்கம் சொல்லிகிட்டிருக்கணும்" என்றாள்.

மேகலா அடிப்பட்டாற் போல் உணர்ந்தாள்.

"நீ இனிமே உன்னோட வாழ்க்கையைப் பாரு! நான் இனிமே என்னோட வாழ்க்கையைப் பார்க்கறேன். யு அன்டர்ஸ்டாண்ட்! அண்ட் பெஸ்ட் ஆஃப் லக்..." என்றாள்.

அலட்டிக் கொள்ளாமல் இணைப்பைத் துண்டித்தாள்.

அந்த நிமிடம் ஸ்ரீகலாவுக்குத் தன்னைக் குறித்தே பெருமையாக இருந்தது.

உடனே கணவனுக்கு போன் செய்து நடந்ததைச் சொன்னாள்.

"தட்ஸ் ரியலி குட்! ஸ்ரீ! இனிமேக் கொண்டு மேகலா நம்ம விஷயம் எதுவும் பேசினா... இப்படித்தான் பதில் குடுக்கணும்" என்றான்.



மறுபடியும் இணைப்பைத் துண்டிக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. மேகலாவிடம் பேசிய விதத்துக்காக அல்ல.

கணவன் தன்னிடம் பேசிய விதத்துக்காக.

"நம்ம விஷயம்!" என்று அவன் தன்னையும் இணைத்துக் கொண்டு பேசியது அவளுக்கு மிகவும் பிடித்தது.

இப்படி ஒரு இணைப்பை ஏற்படுத்தியதற்காகவாவது மேகலாவுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

அதே சமயம்!

"மேகலா! அடுத்த வாரமே நமக்குக் கல்யாணம்" என்று உற்சாகமாகத் தன் அறைக்குள் வந்து அறிவித்த இரத்தினசாமியிடம் கோபத்தைக் காட்ட முடியாத அவஸ்தை கொண்டிருந்தாள் மேகலா!

கோபம் தலைக்கேறியது! ஆனால் முகத்திலோ கபடப் புன்னகை நிலைத்திருந்தது!

"இருங்க...! எல்லாருக்கும் வைக்கிறேன்.. வேட்டு..." என்று கறுவிக் கொண்டாள்.

# 20

"நான் போலீசுக்குப் போவேன். நீங்க தவறாக தகவல் தந்ததா?" என்றாள் மேகலா கோபமாக.

"போ! நான் எனக்கு ஆயிரம் ஏக்கர் இருக்குன்னு. எப்பவாவது உன்கிட்டே சொல்லியிருக்கேன்னு சாட்சி வைத்து

புருஃப் பண்ணு'' என்றான் இரத்தினசாமி அலட்டிக் கொள்ளாமல்.

மேகலாவுக்கு அழுகையாக வந்தது.

இரத்தினசாமி அவள் எதிரில் வந்து நின்றான்.

''பாரு! மேகலா! நான் பார்த்தசாரதி இல்லே! கிராமத்துக் காட்டான். என்னோட அணுகுமுறையே வேறயா இருக்கும்! இப்ப உனக்கு என்ன வேணும்? காரு வேணும்.. பங்களா வேணும்.. வேலை செய்யறதுக்கு ஆள் வேணும்.. எல்லாம் கிடைக்கும். ஆனா, குடும்ப கௌரவத்தைக் குலைக்காம நீ நடந்துக்கனும். அது மட்டும்தான் நான் எதிர்பார்ப்பேன்'' என்றான்.

மேகலாவுக்கு வேறு வழியிருக்கவில்லை. மௌனமாக அமர்ந்து கொண்டிருந்தாள்.

''இன்னும் ஒரே வாரத்துல.. கல்யாணம்! எல்லா ஏற்பாடுகளும் நடந்துகிட்டிருக்கு'' என்றான்.

மேகலாவுக்கு அதற்குப் பிறகு எது குறித்தும் பேசவும் வழியிருக்கவில்லை.

அறையை விட்டு வெளியேறுவதற்கு முன்பு வேறொன்றும் சொன்னான்.

''ஆயிரம் ஏக்கர் வச்சிருக்கிற மாப்பிள்ளை உன்னைத் தேடி வாறும்னா.. அந்த அளவுக்கு உங்களுக்குத் தகுதி இருக்கணுமில்லே! அப்புறம்...!'' என்று விகாரமாகச் சிரித்தான்.

''எல்லா விதத்திலயும்.. உனக்கு எந்தக் குறையும் இல்லாமப் பாத்துக்கலாம்.. என்ன?'' என்றான்.

மேகலா மற்றவர்கள் முன்னிலையில் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. என்றாலும், எல்லா நேரத்திலும்



அவளது மனம் இரத்தினசாமியையும், பார்த்தசாரதியையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டது.

அதைக் காட்டிலும் இப்போது தனது தங்கை பார்த்தசாரதியை மிகவும் உரிமை எடுத்துக் கொள்கிற உறவில் இருக்கிறாள் என்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

''அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டு.. அரசனும், புருசனும் ஆத்தோட போன கதையாக ஆயிடக் கூடாதுடி! பேசாம இரு...'' என்று பாட்டி வேறு எச்சரித்தார்.

அன்னபூரணிக்கும் எல்லாருமாகத் தன்னை அலட்சியம் செய்கிறார்கள் என்பதால் பயம் ஏற்பட்டிருந்தது. அதனால் எப்படியோ இந்தக் கல்யாணம் முடியட்டும் என்று பொறுமையாக இருந்தார். வேறு வழியும் அவருக்கு இருக்கவில்லை.

இரத்தினசாமி திருமண ஏற்பாடுகளில் எதுவும் குறை வைக்கவில்லை.

நல்ல விலையுயர்ந்த பட்டு எடுத்தான்! நகைகள் வாங்கிக் கொடுத்தான்.

''இப்போதைக்கு இத யூஸ் பண்ணிக்கோ.. அப்புறம் புதுசு வாங்கித் தரேன்'' என்று பழைய பியட் வண்டி ஒன்று வாங்கிக் கொடுத்திருந்தான்.

மேகலாவுக்கு என்ன ஆச்சரியம் என்றால் புஷ்பாவும், குகநாதனும் ஆர்வமாக எல்லாத்திலும் கலந்து கொண்டதுதான்.

புஷ்பம் உற்சாகமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

பார்த்தசாரதிக்கும், ஸ்ரீகலாவுக்கும் பத்திரிகை அனுப்பினார்கள்.

"அத்தே! நான் இப்ப வரைக்கும் நிறைய லீவ் போட்டுட்டேன். அதுவுமில்லாம.. கேஸ் கீஸ்னு ஆனதுக்கப்புறம் நான் வந்தா நல்லா இருக்காது.. நீங்க பெரியவங்களா இருந்து நடத்துங்க.. உறவு எங்கே போயிடப் போகுது. அடுத்த முறை ஊருக்கு வரும்போது நாங்க அவங்க வீட்டுக்குப் போறோம்" என்றான்.

இப்படி ஒரு பதிலைச் சொல்லியதற்குப் பிறகுதான் அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. ஒருவேளை ஸ்ரீகலா போவதற்கு விரும்புவாளோ என்னவோ என்று எண்ணிக் கொண்டவனாக மனைவியிடம் கேட்டான்.

"ஸ்ரீ! நீ போகணும்னா.. போயிட்டு வா!" என்றான்.

"இல்லே! நான் போகலே!" என்றாள்.

ஆனால் திருமணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக அவனிடம் சொன்னாள்.

"ஏங்க! இங்க மீனாஷியம்மன் கோவில் இருக்குன்னு சொன்னீங்க... இல்லே! அங்கே போலாமா...!" என்றாள்.

பார்த்தசாரதி சற்று யோசித்தான்.

"ஏங்க.. லீவு கிடைக்காதா?"

"கிடைக்கும்...! சரி... போலாம்...!" என்றான். அவர்கள் இந்த இடத்தில் இருந்து இருநூறு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது.

போனார்கள்.

ஸ்ரீகலா மிகவும் ரசித்துப் பார்த்தாள்! புறப்படும்போதே கலவை சாதம் வேறு கட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

"ஹேய்! வழியில வாங்கிக்கலாம்!"



"ஐயோ! வேண்டாம்! பிட்ஸா... பர்கர்னு ஏதாவது சொல்லுவீங்க... இதோ உங்களுக்கு ஒரு பாக்... ஆனா டிஸ்போஸபிள் பாக்கெட்" என்றாள்.

"அப்ப சரி!" என்றான். கோவிலில் சாமி கும்பிட்டார்கள்.

காரிலேயே அமர்ந்து சாப்பிட்டார்கள். அப்போதுதான் பார்த்தசாரதி கேட்டான்.

"ஏய் ஸ்ரீ! இன்னேரம் தாலி கட்டி முடிச்சிருப்பாங்க இல்லே!" என்றான்.

"ம்...!" என்றாள். கணவன் முகத்தை ஜாடையாகப் பார்த்தாள். அந்த நேரம் அவள் உள்ளத்தில் அன்பு பொங்கியது.

"எவ்வளவு உண்மையாக நேசித்திருந்தால்... நம்பிக்கையோடு அக்கா பெயரிலேயே பங்களா வாங்கி குடுத்திருப்பார். ஆனால்... அக்கா.. எப்படி முகத்தில் கரியைப் பூசிவிட்டாள்! இப்போது எவ்வளவு வேதனை இருக்கும்!" என்று.

அவளது மனதில் தோன்றிய கனிவான உணர்வுகள் அவன் முகத்திலும் பிரதிபலித்திருக்குமோ என்னவோ தெரியவில்லை. புன்னகையுடன் பார்த்தான்.

"என்ன ஸ்ரீ?" என்றான்.

"ஒண்ணும் இல்லை!" என்று தலையசைத்து விட்டாள்.

"ஏய் ஸ்ரீ! சாமிகிட்டே உருகி உருகி வேண்டினியே... என்ன வேண்டினே?" என்றான்.

"ம்..! மேகலா.. அக்காவுக்கு இனிமேலாவது தெளிவு வரட்டும் வாழ்க்கையில எது முக்கியன்னு புரிஞ்சுக்கணும் வேண்டினேன்" என்றாள்.

அவன் ஆழ்ந்து கேட்டுக் கொண்டான்! பிறகு கேட்டான்.

"ஏய்.. ஸ்ரீ! இதுவரைக்கும் எதுக்குமே பிடிவாதம் பிடிச்சதில்லே! இப்ப எதுக்காகக் கோயிலுக்கு வரணும்னு ஒரே பிடிவாதம்...!"

"கண்டிப்பா.. சொல்லணுமா?"

"எந்த விஷயத்துலயுமே.. நான் உன்னைக் கட்டாயப் படுத்த மாட்டேன். ஆனா... சொன்னா.. சந்தோஷப்படுவேன்" என்றான்.

அவள் தரையைப் பார்த்தபடி சொன்னாள்.

"இல்லே! உங்க மனசுல.. இன்னைக்கு எவ்வளவு வேதனை இருக்குன்னு தெரியும். இந்த வேதனையான சமயத்துல.. தெய்வ சன்னிதானத்துல இருக்கணும். உங்களுக்குத் துணையா நான் இருக்கணும்னு நினைச்சேன்" என்றாள்.

பார்த்தசாரதி தலையைக் குனிந்து கொண்டு பேசுகிற மனைவியைப் பார்த்தான். ஆழ்ந்து பார்த்தான்.

பார்த்தசாரதியிடம் இருந்து பதில் வராமல் போகவே அவள் நிமிர்ந்து பார்த்தாள்!

தவறாக எதுவும் சொல்லிவிட்டோமோ.. என்று தோன்றியது. ஆனால் பார்த்தசாரதி புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் எத்தனையோ பொருள் இருந்தது.

"தாங்க்ஸ்!" என்றான்.



பார்வையிலும் ஏதோ மாறுதல்கள் தெரிந்தது. ஆனால், ஸ்ரீகலா அவன் முகம் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தபடியே வந்தாள்.

பார்த்தசாரதி சட்டென்று தனது அலுவலக வேடிக்கைகளைப் பற்றிப் பேசி அவளைச் சிரிக்கச் செய்தான்.

அதே நேரம்!

மேகலாவும், இரத்தினசாமியும் திருமண மேடையில் அமர்ந்திருந்தார்கள்!

இரத்தினசாமியின் பக்கத்திலிருந்து நிறையக் கூட்டம் வந்திருந்தார்கள்!

திருமண நிகழ்வுகள் கலகலப்பாகவே நடந்து கொண்டிருந்தன... இரத்தினசாமியும் உறவுக்காரர்களிடம் வெகு வேடிக்கையாகப் பேசுவதைக் கண்டு மேகலாவுக்கு ஆச்சரியம்!

தாலி கட்டும் நேரம் நெருங்கியது!

திரு மாங்கல்யத் தட்டை எல்லாருடைய பார்வைக்கும் அய்யர் உயர்த்திக் காட்டியவுடனே இரத்தினசாமி அய்யரிடம் சொன்னான்.

"சுவாமி! எங்க குடும்பத்துப் பெரியவங்க.. இருக்காங்க அவங்க தாலியை எடுத்துத் தரட்டும்" என்று.

மேகலா ஆச்சரியமாகப் பார்க்கையில் மேடையில் வந்து நின்ற பெரியவரைப் பார்த்து அன்னபூரணி அதிர்ச்சியடைந்தார்.

சுகவனம் கம்பீரமாக நின்றிருந்தார்!

"கல்யாணத்தை நிறுத்துங்க..." என்று சத்தம் போட்டார் அன்னபூரணி.

எல்லாரும் விழித்தார்கள்!

''மாப்பிளே! நீங்க இவருக்கு... என்ன ஆகணும்னு சொல்லுங்க...!'' என்றார் கடுமையான குரலில்.

''ஏன்? இவரு எனக்கு ரொம்ப நெருங்கின ஒறவு!''

''மாப்பிளே! இந்தக் கல்யாணம் நடக்காது'' என்றார்.

''ஏன்.. நடக்காது! இவரு எங்க உறவுங்கறதுனால கல்யாணம் எதுக்கு நிக்கணும்?'' என்றான்.

சுகவனம் ஒருவிதமான கேலிப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்.

குகநாதன் சட்டென்று முன்னாடி வந்து நின்றார்.

''அம்மா! ப்ளீஸ்! போதும்.. நீ உன் வாழ்க்கையைக் கெடுத்துகிட்டது போதும். இனிமேலாவது என் பொண்ணை நிம்மதியா இருக்கவிடு..'' என்று கைகூப்பினார்.

''என்னது.. உன் பொண்ணா? என் பேத்திடா...! என் பேச்சைத்தான்.. கேப்பா!''

''அத்தே! யாரு பேச்சை.. யாரு கேட்பாங்கறது பிரச்சினையில்லே அவளோட வாழ்க்கைப் பிரச்சினை!'' என்று கெஞ்சினார் புஷ்பம்.

இரத்தினசாமி அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தவன் எழுந்தான்.

''அம்மா! அன்னபூரணிப் பாட்டி! தயவு செய்து வெளிய போங்க!'' என்றான்.

''என்னது? நான் வெளியே போகணுமா...?'' என்றார் கோபமாக.



''ஆமா! வேண்ணா உங்க பேத்தி வந்தா.. கூட்டிட்டுப் போங்க'' என்றான் நக்கலாக.

''ஏய்! வாடி!'' என்று அன்னபூரணி மேகலாவின் கைகள் பிடித்து இழுக்க மேகலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

விழித்தபடி எழுந்தாள்!

''ஹேய்! உட்காரு!'' என்று உறுமினான் இரத்தினசாமி. மேகலா மறுபடியும் விழித்தாள்.

''போட்டோஸ்! ஞாபகம் இருக்கா?'' என்றான் மெல்லிய குரலில்.

மேகலா அமர்ந்து விட்டாள்!

அன்னபூரணி மீண்டும் இழுத்தார்.

இந்தக் களேபரத்தைப் பார்த்த குகநாதன் மார்பைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தார்.

''ப்ளீஸ்! தாலியைக் கட்டுங்க.. மாப்பிளை!'' என்று முணுமுணுத்தார்.

இரத்தினசாமி இதுதான் சாக்கென்று தாலியை வாங்கி மேகலாவின் கழுத்தில் கட்டினான்.

''இதென்னடா.. கல்யாணம்?!'' என்று வந்திருந்த கூட்டம் வேடிக்கை பார்க்க திருமணம் நடந்தது.

குகநாதனை அவசர அவசரமாக பக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

அன்னபூரணி மேகலாவிடம் ''துரோகம் பண்ணிட்டியே!'' என்று கதற.

''பாட்டிம்மா..! போதும். நீங்க பண்ணினதெல்லாம்'' என்று கோபமாகச் சொல்வதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுகவனம் அருகில் வந்து சொன்னார்.

"அன்னபூரணி! போதும்! வாழ்க்கையை நீ சரியாப் புரிஞ்சுக்கலே. கெடுத்துகிட்டே விடு.. இந்தக் குழந்தைங்க வாழ்க்கையாவது நல்லா இருக்கட்டும் ப்ளீஸ்ம்மா.. "விடு...!" என்றார்.

அன்னபூரணி முறைத்தார்.

இரண்டு பேரும் மெல்லிய குரலில்தான் பேசிக் கொண்டார்கள். மற்றவர்களுக்குக் கேட்கவில்லை. ஆனால் கோபமாகப் பேசிக் கொள்கிறார்கள் என்பது புரிந்தது.

"இது என் கௌரவப் பிரச்சினை!" என்று பல்லைக் கடித்தார்.

"உனக்கா? கௌரவமா!" என்று கிண்டலாகச் சிரித்தார்.

"உனக்கேதுடி கௌரவம்? நீ வாழ்ந்ததெல்லாம் கௌரவம் இல்லாத வாழ்க்கை. ஏதோ ஒரு குடும்பம்னு பேருக்குன்னு ஒட்டிகிட்டயே அது ஒன்றுதான் கௌரவம். பேசாம விலகிக்க... இல்லே! கூட்டத்தில் வைச்சு வேற மாதிரி நடத்துவேன்!" என்றார்.

மறுபடியும் ஆவேசமாக ஏதோ பேச ஆரம்பித்தார் அன்னபூரணி.

"அன்னபூரணி! போதும்... நிறுத்து.. இல்லே! அடிச்சுத் துவம்சம் பண்ணிடுவேன். உன்னை அடிச்சுத் திருத்தறதுன்னா.. எப்பவோ திருத்தியிருப்பேன்... அதை இப்ப செய்ய வக்காதே!" என்றார்.

மணிக்கட்டை மட்டும் அழுத்திப் பிடித்தார். அந்த பலத்தையே தாங்க முடியாதவராக அன்னபூரணி விழித்தார்.

ஒன்றுமே நடக்காதது போல சுகவனம் திரும்பினார்.

"விருந்தைப் பரிமாறுங்கப்பா!" என்றார்.



"வா.. நானும்.. நீயும்.. முதல்ல.. ஆஸ்பத்திரிக்குப் போலாம்... தேவைப்பட்டா... பொண்ணு மாப்பிள்ளை கொஞ்சம் கழிச்சு ஆஸ்பத்திரிக்கு வரட்டும்..." என்றார்.

அன்னபூரணியை அழைத்துக் கொண்டு கிளம்பினார். "பெண்ணின் அப்பாவுக்கு உடல் நலம் சரியில்லாமல் போனது" என்று கவலையோடு கருத்துப் பரிமாறிக் கொண்ட கூட்டம் காலை உணவு முடித்துக் கொண்டு கிளம்பினார்கள்.

நெருங்கிய சுற்றம் மட்டும் இருந்தார்கள்!

அரை மணி நேரத்தில் சுகவனம் "ஒண்ணும் பயப்படறதுக்கில்லே...! அதிர்ச்சி மயக்கம்தான். ரெண்டு மூன்று நாளைக்கு ரெஸ்ட் எடுத்தாப் போதும்கறாங்க" என்று போன் வரவும்தான் மற்றவர்களும் ரிலாக்ஸ்" ஆனார்கள்.

இரத்தினசாமி மிகவும் கனிவாக மேகலாவிடம் கேட்டான்.

"ஏன்.. மேகலா! அப்பாவைப் பாக்கணும் போல இருக்கா?" என்றான்.

"இம்!" என்றாள்.

அதற்குள் அவர்கள் கிளம்பி வந்து விடுவார்களோ என்ற பதட்டத்தில் புஷ்பம் மறுபடியும் போன் செய்தார்.

"மாப்பிளே! அவரு நல்லாத்தான் இருக்காரு. முதல்ல நீங்க ஆஸ்பத்திரிக்கு வர வேண்டாம். ஏதாவது கோயிலுக்குப் போங்க... நாங்க மத்தியானமா.. வந்துடுவோம்" என்றார்.

"சரிங்கத்தே!" என்றான் இரத்தினசாமி.

தன்னைக் கனிவாக நடத்துவது கண்டு அவளுக்கு ஆச்சரியம்தான்!

எல்லாம் பிற்பகல் வரைதான்!

பிற்பகலில் தனது பெற்றோர்கள் ஸ்ரீகலாவுக்கு அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று தகவல் கொடுத்தவுடனே அவர்கள் எவ்வளவு விரைவில் வர முடியுமோ அவ்வளவு விரைவில் வந்து விடுவதாகத் தகவல் தெரிவித்தார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்குள் வந்து விடுவார்கள் என்றவுடனே மேகலாவின் மனம் வேறு விதமாகத் திட்டம் போட்டது.

எப்படியும் பார்த்தசாரதியின் மனத்தைக் கரைத்து விட வேண்டும். அதுவரையிலும் சடங்கு, கிடங்கு என்று எதுவும் நடக்காமல் பார்த்துக் கொண்டால் போதும்.

அழுது கிழுது கரைத்து விடலாம்... என்றும், அதை எப்படி நிஜம்போல நடத்த வேண்டும் என்றும் திட்டம் போட ஆரம்பித்தாள்.

அமைதியாக நடமாடிக் கொண்டிருக்கிற மேகலாவை எல்லாரும் புரிந்து கொள்ளவில்லையென்றாலும் இரத்தினசாமிக்கு ஏதோ சந்தேகம் தோன்ற மீசையை நீவிக் கொண்டு குறுகுறுவென்று கவனித்துக் கொண்டிருந்தான்.

இத்தனை நடக்கும்போதும் பாட்டியைக் காணவில்லையே என்று தாத்தாவிடம் விசாரித்தான் இரத்தினபூபதி. "அவ கல்யாண மண்டபத்தை விட்டு வெளியே வந்ததுமே பிச்சுகிட்டுப் போனவதான். இனிமே அதைப் பத்தி நமக்கு என்ன பேச்சு?" என்றார் அலட்சியமாக.



# 21



"பாவம்! அப்பாவை எல்லாருமாச் சேர்ந்து ரொம்ப அலைக்கழிச்சுட்டாங்க" என்று வேதனையுடன் கண்ணீர் வடிக்கற மனைவியைத் தோளில் சாய்த்துக் கொண்டான் பார்த்தசாரதி. விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

"ப்ளீஸ்! ஸ்ரீ! கண்ட்ரோல் யுவர் செல்ஃப். எல்லாரும் நம்மளையே பாக்கறாங்க... பாரு" என்று தேற்றினான் பார்த்தசாரதி.

பெருமூச்சுடன் சொன்னாள்.

"என்ன செய்யறது? அவரு எப்பவும் பொறுமையான மனுஷனாவே இருந்து காலம் தள்ளிட்டாரு. ஆனாலும் உங்க பாட்டியோட மகன்னா யாரும் நம்பவே மாட்டாங்க" என்றான்.

"ஆமா! எங்க பாட்டி அவரை நிழலடிச்ச செடி மாதிரி பண்ணிட்டாங்க" என்றாள்.

"சரி.. விடு! இப்பத்தான் அட்டாக் இல்லேன்னுட்டாங்களே. வெறும் அதிர்ச்சி மயக்கம்தான்னு."

"அது சரி! அதிர்ச்சி ஆகற அளவுக்கு என்ன நடந்துச்சு..." என்றாள்.

"ஸ்ரீ! பெரிய விஷயமே நடந்துருக்கு. ஆகாஷ் எல்லா விவரமும் சொன்னான்" என்றான்.

விரிவாகச் சொன்னான்.

* * *

நடக்கிற எல்லாவற்றையும் ஆழ்ந்த மௌனத்துடனும் வேதனையுடனும் கவனித்துக் கொண்டிருந்தார் சுகவனம்.

பார்த்தசாரதிக்கும், மேகலாவுக்கும் திருமணம் என்ற போது மகிழ்ச்சியடைந்தார்.

பார்த்தசாரதியின் குடும்பம் பற்றி அறிந்ததில் இருந்து மேலகா சரியாகி விடுவாள் என்ற நம்பிக்கை தோன்றியிருந்தது.

உறவினர் ஒருவர் மாடசாமி என்று பெயர் அவர்தான் அன்னபூரணியம்மாவின் நடவடிக்கைகளைக் கண் காணித்து சுகவனத்திடம் தெரிவிப்பார்.

அன்னபூரணியைப் பிரிந்து வந்த சுகவனம் தவறு செய்து விட்டோமோ என்று மிகவும் வேதனைப்பட்டார்.

புஷ்பத்திடம் அடிக்கடி போனில் பேசுவார். விவரங்கள் தெரிந்து கொள்வார்.

மாடசாமி வந்து சொன்னார்.

"அண்ணா! அந்தப் பையன் அதுதான் பார்த்தசாரதி அவங்க வீட்டுக்கே தெரியாம மேகலாவுக்கு ஒரு பெரிய பங்களா வாங்கிக் குடுத்துருக்காரு" என்று.

சுகவனத்துக்கு அது சரியாகப் படவில்லை.

பெற்றோருக்குத் தெரியாமல் பார்த்தசாரதி வாங்கிக் கொடுத்தது தவறு என்பதோடு அதுவும் முழுக்க முழுக்க மேகலாவின் பெயரில் வாங்கி கொடுத்தது பெரிய தவறு என்று நினைத்தார்.

கவலைப்பட்டார்.

அப்போதுதான் ஸ்ரீகலாவை பற்றிய ஒரு விஷயம் அவருக்குத் தெரிய வந்தது. புஷ்பத்தின் வாயிலாகவே அந்த விஷயம் தெரிய வந்தபோது சிந்தனையில் ஆழ்ந்தார்.



மேகலா நிச்சயமாகப் பார்த்தசாரதியை நேசித்துக் கல்யாணம் செய்பவள் அல்ல என்று புரிந்தது.

பார்த்தசாரதி வந்திருந்த சமயங்களில் எல்லாம் பார்த்தசாரதியைக் கவனித்துப் பார்த்தார். மேகலாவுடன் அவன் வெளியே செல்லும்போதெல்லாம் அவரும் சற்றுத் தொலைவில் இருந்து கண்காணித்தார்.

அவரது உள்மனமும் அனுபவமும் சொன்னது. மேகலா எப்படி அன்னபூரணியைக் குணத்தின் சாயலில் கொண்டிருந்தாளோ அதே போல் பார்த்தசாரதியும் குணத்தில் தன்னைப் போன்ற கொள்கைகளையுடையவன்தான் என்று.

பார்த்தசாரதியும், மேகலாவும் திருமணம் செய்து கொண்டால் அந்தத் திருமண உறவால் பாதிக்கப்படுபவன் பார்த்தசாரதியாகத்தான் இருப்பான் என்று தோன்றியது.

வெகுவாக யோசித்தார்!

ஒரு முடிவெடுத்தார்.

தனது உறவினன் இரத்தினபூபதியைப் போய்ப் பார்த்தார்.

"பூபதி..." எனக்கு ஒரு உதவி செய்யணும்...! என்றார்.

"சொல்லுங்க.. மாமா" என்றான்.

மேகலாவைப் பற்றிய விவரம் முழுவதும் சொன்னார். "டே.. தம்பி! அந்தப் பொண்ணைத் திருத்தி சரிக்கட்டிக் கொண்டு வர்றது உன்னை மாதிரி ஆளாலதான் முடியும்" என்றார்.

இரத்தினபூபதி சற்றே யோசித்தான்.

"யோசிக்காதப்பா! எப்படியாவது அவ வாழ்க்கையைச் சரி பண்ணிக் குடு" என்றார் வேண்டுதல் போல.

"மாமா மேகலாவைக் கல்யாணம் பண்ணிக்கறதுல எனக்கொண்ணும் ஆட்சேபணையில்ல. ஆனா... அந்தப் பொண்ணு பார்த்தசாரதிக்கு..."

"நீ வேறப்பா! பார்த்தசாரதியோட பணத்துக்காக கல்யாணம் பண்ணிக்கன்னு என்ற ஷூட்டுக்காரம்மா.. இருக்காளே... கிராதகி.. அவதான் சொல்லியிருப்பா..." என்றார்.

"என்ன மாமா! இவ்வளவு பிரியமாப் பேசறீங்க!" என்று சிரித்தான் இரத்தினசாமி.

"அடப்போப்பா! என் மகன் குகநாதன் இருக்கானே எடுப்பார் கைப்பிள்ளை! தெரிஞ்சோ தெரியாமலோ அவங்கம்மா மேல உயிரையே வச்சிருக்கான். அந்தக் காரணத்துக்காகத்தான் வுட்டுத் தொலைச்சுட்டு வந்தேன்" என்றார்.

"அது சரி! அதே மாதிரி ஒரு பொண்ணை என் தலையில கட்டப் பாக்கறீங்க..." என்றான் குறும்பாகச் சிரித்தபடி.

"இல்லப்பா! அப்படியில்ல... இப்ப இருக்கிற தைரியம் எனக்கு அப்ப இல்லாமப் போச்சு. ஆனா, இந்தத் தலைமுறைப் பசங்க எல்லாம்..விவரமா இருக்கீங்க. எப்படியோ தட்டிக் கொட்டி சரி பண்ணிடுவீங்கன்னு ஒரு நம்பிக்கை" என்றார்.

"செய்யலாம்.. மாமா! ஏதாவது செய்யலாம்...! நீங்க சொல்றதெல்லாம் பார்த்தா.. தன் அழகு மேல ரொம்பப் பெருமையுள்ள பொண்ணுன்னு தெரியுது. அந்த அழகை நம்பியே ஒரு வாழ்க்கை வாழணும்னு நினைக்குது. சொகுசா.. இருக்கணும்னு நினைக்குது... அவ்வளவு தானே" என்றான்.



"கரெக்டுதாம்ப்பா..! சரியாப் பாயிண்ட்டைப் புடிச்சே!" என்றார்.

இரண்டு நாட்களுக்குள்ளாக இரத்தினபூபதி போட்ட திட்டத்தைக் கண்டு சுகவனத்துக்கு ஒரே சிரிப்பாகவும் இருந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது.

அவ்வப்போது லேசான ஆலோசனைகளைச் சொல்லிக் கொண்டு அந்தத் திட்டங்களில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

வாழ்நாள் பூராவும் தன் மனதில் துக்கத்தையே விதைத்து அறுவடை செய்த அன்னபூரணியின் முகம் பேயறைந்தாற் போல் ஆகிற காட்சியைக் கற்பனை செய்யவே அவருக்கு சந்தோஷமாக இருந்தது.

இரத்தினபூபதியை யார் மூலமாக அந்த வீட்டுக்குள் நுழைப்பது என்று யோசிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போது எதிர்பாராத இடத்திலிருந்து அவருக்கு உதவி வந்தது.

* * *

"ஏன்டா... அருண்! உனக்கெதுக்குடா... இந்த வேலை! பார்த்தசாரதியோட குணத்துக்கும் மேகலாவோட குணத்துக்கும் எப்படிடா... ஒத்து வரும்? நீ எதுக்கு அவனை அவங்க வீட்டுக்கெல்லாம் கூட்டிட்டுப் போனே?"

"டேய்! ஆகாஷ்...! அந்தப் புஷ்பம் சித்தி ரொம்ப நல்லவங்கடா! அதனால மேகலாவும் நல்லவளாத்தான் இருப்பான்னு நினைச்சேன்!

"இல்லடா! நான் கேள்விப்பட்ட வரைக்கும் மேகலா அப்படியே அவங்க பாட்டி... மாதிரி. அந்த சின்னப் பொண்ணு வேண்ணா.. நம்ம மாதிரி பாமிலிக்கு ஒத்து

வரும். அதிலயும் பார்த்தசாரதி இந்த மாதிரி விஷயங்கள்ல ரொம்ப டீப்பா.. இருப்பான். சரி வரலே.. வராது...'' என்றான் வருத்தத்துடன்.

''டேய்! ஆகாஷ்.. நீ நினைக்கற மாதிரி நானா ஒண்ணும் பார்த்தசாரதியை இழுத்துகிட்டுப் போய் அறிமுகப்படுத்தலை. அவனுக்கும் ஆர்வம் இருந்துச்சு...''

''அது தோற்றத்தைப் பார்த்து வர்ற ஆர்வம்டா...! அதுலயும் பார்த்தசாரதி வேற... நடனம், ஓவியம் இதுல எல்லாம் ஆர்வம் உள்ளவன்'' என்றான்.

அப்போது அருண்குமார் இடியிடியென்று சிரித்தான். ஆகாஷுக்குக் கோபம் வந்தது.

''சொல்லித் தொலைச்சுட்டு.. சிரிடா..!'' என்றான்.

''இல்லடா! நீ சொல்றதுலயும் கொஞ்சம் நிஜம் இருக்கும் போலத்தான் இருக்கு. மேகலா கொஞ்சம் நடனம் கிடனம் ஆடும்...! ஆனா, ஓவியம் எல்லாம் ஒண்ணும போடத் தெரியாது! ஆனா.. ஸ்ரீகலா வரைஞ்ச ஓவியத்தையெல்லாம்... தன்னோடதுன்னு காட்டி பேர் வாங்கிட்டா'' என்று சிரித்தான்.

ஆகாஷ் கவலையாகப் பார்த்தான்!

''பாத்தியாடா! இப்பவே தில்லு முல்லு ஆரம்பிச்சாச்சு.. இது தெரிஞ்சாலே பார்த்தசாரதி அப்செட்டாயிடுவான்'' என்றான்.

அப்போதுதான் அருண்குமாருக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது.

''உண்மைதான்டா! பார்த்தசாரதியோட குணம் வேற மாதிரி. எல்லாத்துலயும் ஸ்ட்ரெயிட்டா.. இருப்பான். ஆனா.. மேகலா கொஞ்சம் நடிக்கும்'' என்று இப்போது வருத்தப்பட்டான்.



தவறு நிகழ்ந்து விட்டது என்ற மனப்பான்மையிலேயே இருந்த ஆகாஷ் ஒரு திருமணத்தில் சுகவனத்தை சந்தித்தான்.

உறவுக்காரர்கள் என்பதால் அவர்கள் குடும்பத்தில் எல்லாரையும் தெரியும். அந்தக் குடும்பம் தொடர்பான எல்லா விஷயங்களும் தெரியும்.

சுகவனம் தானாகவே பேச்சை ஆரம்பித்தார்.

''தம்பி! சொல்றேன்னு தப்பா நினைக்காதே. நீயும் உன் ப்ரண்ட்ஸும் சேர்ந்து அந்தப் பார்த்தசாரதியைப் படுகுழியில தள்ளப் பாக்கறீங்க'' என்றார்.

ஆகாஷ் முதலில் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான். பிறகு சுதாரித்துக் கொண்டான்.

''ஆமாங்கய்யா! நடந்து போச்சு!'' என்றான் வருத்தத்துடன். தொடர்ந்து.

''எனக்கும்தான் பிடிக்கலே!'' என்றான்.

''அப்ப... சரி! நான் ஒரு பிளான் செய்யறேன்.. அதுக்கு ஹெல்ப் பண்ணுங்க'' என்றார்.

ஆகாஷ் உற்சாகமானான்.

''என்ன சொல்லுங்கய்யா!'' என்றான்.

''இந்தக் கல்யாணத்தைத் தடுத்து நிறுத்துங்க...'' என்றார்.

''அய்யா!'' என்றான் ஆகாஷ் மறுபடியும் திடுக்கிட்டுப் போய்!

''என்ன இருந்தாலும்.. உங்க பேத்தி! இப்படிச் சொல்றீங்களே!'' என்றான் ஆச்சரியமாக.

''ஆமாப்பா! என் பேத்திதான். அதனாலதான் சொல்றேன். ரெண்டு பேரோட வாழ்க்கையும் கெட்டுப் போயிடும்'' என்றார்.

"சரி...! என்ன பிளான்னு சொல்லுங்க...! பாத்துக்குவோம்" என்றான் ஆகாஷ்.

சொன்னார். பிறகு கடைசியில்,

"பாருப்பா! இப்படிப் பண்றதுதனால... ஸ்ரீகலா வாழ்க்கையும் சரியாடும். மேகலாவுக்கும் சரியான ஆள் வச்சிருக்கேன்" என்றார்.

ஆகாஷ் உண்மையாகவே மகிழ்ச்சியடைந்தான்.

"சரிங்கய்யா! நீங்க சொல்றதெல்லாம்... சரி! ஆனா.. யார் மூலமா இரத்தினபூபதியை அறிமுகப்படுத்தறது" என்று ஒரு நிமிடம் யோசித்தான். பிறகு முகம் லைட் போட்டாற்போல் வெளிச்சம் அடைந்தது.

"ம்...! இதற்கு ஒரு சரியான ஆள் இருக்காங்க..!" என்று அருண்குமாரை அழைத்தான். விவரம் சொன்னான்.

"ஐயோ! நான் எப்படிப் போய் ஏற்கனவே பேசின கல்யாணத்தை உடைக்கறது?" என்றான்.

சகவனம் சிரித்தார்.

"நீ ஒண்ணும் உடைக்க வேணாம்...! இரத்தினபூபதிக்கு ஆயிரம் ஏக்கர் நிலம் ஊர்ல இருக்குன்னு.. சொல்லு. போதும். நீ சொன்னாத்தான் என் பொண்டாட்டி நம்புவா... அதோட நிறுத்திக்க! அதுக்கப்புறம்... பார்த்தசாரதியைக் கழட்டி விடற வேலையெல்லாம் தேவி.. பராசக்தி.. அன்னபூரணித்தாயாரே பாத்துக்குவா..." என்றார்.

கடுப்பாக அவர் சொன்னதைப் பார்த்து அவர்களுக்குச் சிரிப்பு வந்தது.

"சிரிங்கப்பா! சிரிங்க! எதுக்கு அடக்கறீங்க! என் பொழப்புத்தான் சிரிப்பாய் போச்சே! இனி என் பேத்தி பொழப்பும் சிரிப்பாய் போக வேணாம்" என்றார்.



அவர்கள் முகம் போன போக்கைப் பாத்து அவர் தட்டிக் கொடுத்தார்.

"பரவாயில்லைப்பா! நான் ஒண்ணும் கோபிச்சுக் கலை!" என்றார்.

திட்டம் போட்டார்கள்!

இரத்தினபூபதியை இரத்தினசாமி என்று பெயர் மாற்றிக் கொண்டு போய் இறக்கினார்கள்.

பூபதி என்ற குடும்பப் பெயர் தங்கள் உறவினர்களில் உண்டு என்பதால் மனைவி கண்டு பிடித்து விடுவாளோ என்று சகவனத்துக்கு பயம்.

"ஆயிரம் ஏக்கர்.. நிலம்!" என்று மட்டும் சொன்ன அருண்குமார் அன்னபூரணியிடத்தில் ஏற்பட்ட மாற்றம் கண்டு உண்மையாகவே அதிர்ந்து போனான்.

பத்தே நாட்களில் அன்னபூரணி பேசிப் பேசி மேகலாவை கரைத்து விட்டதையும், அவளும் பார்த்தசாரதியைக் கைகழுவத் தயாராகி விட்டதையும் பார்த்த அருண்குமாருக்கு ஒரு புறம் அதிர்ச்சி.

இன்னொரு புறம் "நல்லவேளை! பார்த்தசாரதி விடுதலையானானே!" என்று இன்னொரு புறம் மகிழ்ச்சி.

அவர்கள் யாருமே எதிர்பாராத ஒன்றும் நடந்தது!

பார்த்தசாரதி எவ்வளவுக்கெவ்வளவு மென்மையானவனாக இருந்தானோ... அவ்வளவுக்குப் பிடிவாதமானவனாகவும் இருந்தான்.

தன்னை ஏமாற்றிய மேகலாவிடமிருந்து சொத்தைத் திரும்ப வாங்கியே திருவேன் என்று நின்றபோதுதான் அவர்களுக்கும் ஒரு விஷயம் புரிந்தது.

பார்த்தசாரதியும் திடசித்தக்காரன்தான்! என்று. அது மட்டுமில்லாமல் யாரைப் பிடித்தானோ என்ன செய்தானோ தெரியவில்லை.

கேஸ் ஒன்றிரண்டு மாதங்களுக்குள் முடிகிற மாதிரிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுகவனம் பேத்தி ஸ்ரீகலாவே சாட்சி சொல்லப் போவாள் என்பதை எதிர்பார்க்கவில்லை.

அதற்குப் பிறகுதான் நேரடியாகத் தலையிட்டார். ஸ்ரீகலாவுக்கு பாதுகாப்பாகத் தான் நின்று கொண்டார். அது மட்டுமல்லாமல் ஆகாஷ் மூலமாக சமரசம் பேசினார்.

அன்னபூரணியை மிரட்டி சொத்தைத் திருப்பக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

சொத்தைத் திரும்பக் கொடுப்பதற்கான பத்திரம் பதிகிற நேரத்தில்தான் ஆகாஷும் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனித்தான்.

அன்றிரவு!

சுகவனத்தை வந்து பார்த்தான்!

''அய்யா! எப்படியோ! ஒரு பொண்ணோட வாழ்க்கையைச் சீர்படுத்திட்டீங்க! ஆனா... இன்னொரு பொண்ணோட வாழ்க்கையும் சீர் படுத்தற பொறுப்பு.. உங்களுக்கு வந்திருக்கு...'' என்றான்.

முதலில் அவருக்குப் புரியவில்லை.

சற்றே விளக்கமாகவும், குறிப்புக் காட்டியும் சொன்னான்.

ஒரு பக்கம் அவருக்கு மகிழ்ச்சியானது! ஆனால் இன்னொரு பக்கம் இதை எப்படி நடத்தப் போகிறோம் என்ற கவலையும் ஏற்பட்டது.



மறுபடியும் ஆலோசித்தார்கள்!

ஆகாஷின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''தம்பி! அந்த விஷயத்துல உதவி செஞ்ச மாதிரி.. இந்த விஷயத்துலயும் செய்யணும்...'' என்றார்.

''செய்யறேங்கய்யா! கண்டிப்பாய் செய்யறேன்!'' என்றான்.

உடனடியாகப் பார்த்தசாரதியின் பெற்றோரிடம் பேசினான்.

''இந்த நேரத்துல பார்த்தசாரதியைத் தனியா விடக்கூடாது. என்னதான் அடுத்தவங்க கூட இருந்தாலும் மனைவி ஒரு பொண்ணு இருக்கற மாதிரி இருக்காது'' என்றான்.

ஒத்துக் கொண்டார்கள்! ஆனால் அடுத்து அவள் ஸ்ரீகலாதான் பெண் என்று சொன்னவுடனேயே ஒரேயடியாக மறுத்தார்கள்.

ஆகாஷ் கிட்டத்தட்ட அவர்களின் காலில் விழாத குறையாகக் கெஞ்சினான்.

''அங்கிள்! நான் சொன்னதை சரியாப் புரிஞ்சுக்குங்க... மேகலா.. சரியில்லைன்னு நான்தான் சொன்னேன். நானே இப்ப சொல்றேன்.. ஸ்ரீகலா அருமையான பொண்ணு. பார்த்தசாரதியோட வாழ்க்கையை சரிப்படுத்துவா...'' என்றான்.

''நடக்கற காரியமா? இப்படிக் கேஸ் கீஸுன்னெல்லாம் ஆனதுக்கப்புறம் அவங்க ஒத்துக்குவாங்களா?'' என்றார்.

''அது என் பொறுப்பு!'' என்றான்.

கடைசியாகத் தான் இவ்வளவு முயற்சியெடுப்பதற்கான காரணம் என்ன என்பதையும் சொன்னான்.


அதே போல புஷ்பத்திடமும், குகநாதனிடம் பேசினாள்.

தன் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் தாத்தா எவ்வளவு மெனக்கெட்டிருக்கிறார் என்பது ஸ்ரீகலாவுக்குத் தெரியவில்லை. ஆனால் இன்று புரிந்தது.

மின்னல் வேகத்தில் நடந்த மாற்றங்களையெல்லாம் ஜீரணிக்க முடியாமல் அப்பா அதிர்ந்து போய் விட்டார் என்ற கவலையிலேயே கணவனோடு சென்னை வந்து சேர்ந்தாள்.

இன்னும் கனமான புயல்கள் எல்லாம் வீசப்போகிறது என்று அப்போது அவளுக்குத் தெரியவில்லை.

## 22



மகனை நேரடியாகத் தன்னுடைய பொறுப்பில் அழைத்துக் கொண்டு போய் விட்டார் சுகவனம்.

"வேண்டாம்! இப்ப அங்க போக வேண்டாம்! அந்த அலங்காரி பேயாட்டம் போடுவா! உனக்கு உடம்பு நல்லாகட்டும். அப்புறம் ஏதோ ஒரு முடிவு செய்யலாம்" என்றார் மகனிடம்.

புஷ்பத்துக்கும் கூட அது சரியென்று பட்டது.

அன்னபூரணி அத்தை கோபத்தில் இருக்கிறார். தோல்வியின் கோபம். அது கண்முன் தெரியாமல் எல்லார் மேலும் பாயும் என்று தோன்றியது.

"ஆனா, மாமா! அவங்களைத் தனியா விட்டுட்டு?" என்று இழுத்தார்.



"தனியா.. விட்டா...! ஏதாவது செஞ்சுக்குவான்னு பயப்படறியோ? அந்தக் கவலையெல்லாம் வேண்டாம். அவ நாலு பேரைச் சாகடிச்சா. போதாதா!" என்று சுகவனம் கடுப்பாகவும் பேசாமல் விட்டு விட்டார்.

மேகலாவுக்கு அப்பாவின் உடல்நிலை கவலையைக் கொடுத்தது. தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடுமல்லவா? இப்போது ஒன்றுமில்லை என்றதும் பயம் தெளிவாகிவிட்டது.

இப்படி நடந்ததில் உள்ளூர அவளுக்கும் ஒரு நன்மை இருப்பதாக நினைத்தாள்.

எப்படியும் அப்பாவின் உடல்நிலை சரியாக இன்னும் ஒரு வாரமாவது ஆகும். அது வரைக்கும் யாரும் அவர்களுக்கு சடங்கு கிடங்கு என்று பேசமாட்டார்கள் என்று சந்தோஷம் இருந்தது.

இன்னமும் அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

பார்த்தசாரதியிடம் மனம் விட்டு ஒருமுறை பேசினால் அவன் தன்னை மன்னிப்பான். ஸ்ரீகலாவை எல்லாருடைய வற்புறுத்தலுக்காகத்தான் திருமணம் செய்திருக்கிறான். ஸ்ரீகலாவிடம் அழுதால் கூட இரங்கிவிடுவாள்.

"விட்டுக்குடுடி!" என்றால் விட்டுக் கொடுப்பாள். இந்த இரத்தினசாமியிடம் இருந்து விடுதலை வாங்கிக் கொண்டு தப்பித்துக் கொள்ளலாம் என்று கணக்குப் போட்டாள்.

தான் சிறுபிள்ளைத் தனமாக கணக்குப் போடுகிறோம் என்று புரியவில்லை.

தன் பார்வைக்காகவும், தன் அருகாமைக்காகவும் ஏங்கிக் கொண்டு அமெரிக்காவில் இருந்து ஓடி வந்த

வளைத்தான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. கோட்டை விட்டு விட்டோம்.

ஸ்ரீகலாவிடம் சொல்ல வேண்டியதுதான்.

"ஸ்ரீ! அவன் பெயருக்குத்தான் உன்னோட வாழறார். ஆனா, மனசளவுல என்னோட வாழறார் இப்படி ஒரு வாழ்க்கைக்கு உடன்படறது உனக்கு அவமானம்னு சொல்ல வேண்டியதுதான். நிச்சயமாக இந்தக் கருத்து அவளுக்கு உறைக்கும். அவள் ரோஷக்காரி! அப்படி ஒரு வாழ்க்கையில் இருந்து அவள் வெளியே வரத்தான் விரும்புவாள்.

இன்னொரு மனது சொன்னது.

"போடி பைத்தியக்காரி! அவ ஏற்கனவே யோசித்துத் தான் இப்படியொரு வாழ்க்கையில நுழைஞ்சிருக்கா! சாரதிக்கு அவளைப் பிடிக்கிறதோ... இல்லையோ.. ஸ்ரீகலாவுக்கு அவனைப் பிடிக்கும். தொடர்ந்து வாழ்ந்து ஜெயிக்கத்தான் பாப்பா" என்றது.

"எப்படியிருந்தாலும் இந்த இரத்தினசாமி கூட வாழவே முடியாது. அதிலயும் சகவனம் தாத்தாவோட சொந்தக் காரர்னா.. கண்டிப்பா பழி வாங்கத்தான் பாப்பாரு" என்று எண்ணிக் கொண்டாள்.

மேகலாவுக்கு இன்னொரு பயமும் தோன்றியது. ஒரு முறை இரத்தினசாமியின் உலகம் என்னும் குகைக்குள் அகப்பட்டு விட்டால் அந்த உலகத்திலிருந்து வெளியே வரவே முடியாது என்ற எண்ணம்தான் அது.

ஒரு வித பயத்தோடும், கலக்கத்தோடும் இருந்தாள். அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்பதனால் ஏற்பட்ட கலக்கம் என்று நினைத்தோ என்னவோ இரத்தினசாமி அவளிடம் கனிவாகவே நடந்து கொண்டான்.



தகவல் கொடுத்த மூன்றாவது நாள் காலையிலேயே பார்த்தசாரதியும், ஸ்ரீகலாவும் வந்து இறங்கினார்கள்.

"அப்பா!" என்று ஆசையுடன் கட்டிக் கொண்டு கண்ணீர் வடிக்கிற மகளை அன்புடன் பார்த்தார் குகநாதன்.

"ஒண்ணுமில்லடா! எனக்கு ஒண்ணும் இல்லை! சும்மா கொஞ்சம் அதிர்ச்சி. இப்பத்தான் எல்லாம் சரியா யிடுச்சே! இனிமேல உடம்பு நல்லாயிரும்.." என்று தேற்றினார்.

ஸ்ரீகலாவும், பார்த்தசாரதியும் அந்த வீட்டின் மாடியில் தங்கிக் கொண்டார்கள்.

ஸ்ரீகலா அப்பாவுக்கு வேண்டும் விதத்தில் சமையல் செய்து கொடுப்பது.. நேரா நேரத்துக்கு மருந்து கொடுப்பது என்று முழுமையாகக் கவனித்துக் கொண்டாள்.

மூன்றாள் நாள்!

மேகலாவும் இரத்தினசாமியும் யாரோ விருந்துக்கு அழைத்தார்கள் என்று போய்விட்டார்கள்.

பார்த்தசாரதி மாமனாருக்கு ஆறுதல் சொன்னான்.

"மாமா! கவலைப்படாதீங்க! ஸ்ரீகலா நல்ல பொண்ணு. எங்க அம்மா அப்பாவுக்கு அவளை ரொம்பப் பிடிச்சிருக்க. நானும் அவளை நல்லாப் பாத்துக்குவேன்" என்றான்.

அப்போது குகநாதன் சொன்னார்.

"மாப்பிளே! நானே இப்படி சொல்லக்கூடாது! ஆனா, வேற வழியில்லே! அந்த மேகலாப் பொண்ணு சும்மா இருக்க மாட்டா! பெரிய மாப்பிள்ளை எதிர்பார்த்த அள வுக்கு வசதியில்லாமப் போச்சேன்னு கடுப்பில இருக்கா... ஜாக்கிரதை" என்றார்.

பார்த்தசாரதி ஒன்றும் சொல்லாமல் சிரித்துக் கொண்டான்.

அதே சமயம்!

அப்பாவுக்கும் சாப்பிடுவதற்கு சாதம் பிசைந்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

தட்டில் சாதம் பரிமாறி ஸ்பூனால் சாப்பிடச் செய்தாள்.

அப்போதுதான் குகநாதன் சொன்னார்.

"மாப்பிளே! ஸ்ரீகலா... நல்லா.. வரைவா..! நம்ம வீட்டில இருக்கிற ஓவியம் எல்லாம் அவ வரைந்தது தான்" என்று.

பார்த்தசாரதி ஆச்சரியமாக ஸ்ரீகலாவைப் பார்த்தான். "அப்படியா! அது மேகலா வரைந்ததுன்னு.. இல்லே..! நான் நினைச்சுகிட்டிருக்கேன்" என்றான்.

ஸ்ரீகலா இடையில் புகுந்து "இல்லே! அதுல கொஞ்சமெல்லாம் அக்கா... வரைந்ததுதான்" என்று சமாளிக்க முயற்சிக்கவே அவன் ஒரு குறும்புச் சிரிப்புடன் பார்த்தான்.

குகநாதன் மறுபடியும் யதார்த்தமாக, "போம்மா! அவ எங்கே உட்கார்ந்து பொறுமையாய் படம் போடறா. அவளுக்கு ஊர் சுத்தவே நேரம் கிடைக்காது. இல்ல.. மாப்பிளே! ஸ்ரீதான் நல்லா வரைவா!" என்றார்.

ஸ்ரீகலா அதற்கு மேல் வாதாடவில்லை. விட்டுவிட்டாள். ஆகிறபடி ஆகட்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

"ஸ்ரீ! இந்த முறை நீ ஊருக்குப் போறதுக்குள்ளே. நானும் உங்கம்மாவும் சேர்ந்து இருக்கிற மாதிரி ஒரு படம் வரைஞ்சு குடு" என்றார்.



"சரிப்பா!" என்றாள்.

வெளியே போய் விட்டு வந்த மேகலா தன் கணவனிடம்.

"ஏங்க! அப்பாவுக்கு உடம்பு சரியில்லாம ஆனதில் இருந்தே நான் ஒரு நாள் கூட அப்பா கூடத் தங்கிப் பாத்துக்கலே...! இன்னைக்கு நைட் தங்கிட்டு வர்றேன்..." என்றாள்.

இரத்தினசாமிக்கு வேறு வழியிருக்கவில்லை. சரியென்று சொல்லிவிட்டுத் தன் வீட்டு மனிதர்களோடு கிளம்பிப் போனான்.

மேகலா தங்கையிடம் சொன்னாள்.

"ஸ்ரீ...! இன்னைக்கு அம்மா.. ரெஸ்ட் எடுக்கட்டும்! நீயும், நானும் மாத்தி மாத்தி அப்பாவைப் பாத்துக்கலாம். முதல்ல நீ கொஞ்ச நேரம் தூங்கிட்டு வா. நான் பாத்துக்கறேன். அப்புறம்.. நான் தூங்கறேன்" என்றாள்.

ஸ்ரீகலா யதார்த்தமாகவே எடுத்துக் கொண்டாள்.

பன்னிரண்டு மணி வாக்கில் அவள் இறங்கி வந்து அக்காவை விடுவித்தாள்!

மேகலா இரண்டு அறைகள் தள்ளி ஒரு அறையில் போய்ப் படுத்துக் கொள்வதாகச் சொன்னாள்.

ஸ்ரீகலாவும் சரியென்றாள்!

அப்பா ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தில் ஸ்ரீகலாவும் எதிர் சோபாவில் சாய்ந்தாள்!

அரைமணி நேரம் போயிருக்கும்!

ஸ்ரீகலா "திடீர்" என்று விழித்தவள் உடலெல்லாம் வேர்த்தது. கெட்ட கனவு! தலையை உலுக்கிக் கொண்டாள்.

ஜக்கில் தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்தாள்! இல்லை! சமையலறையில் தண்ணீர் எடுக்கலாம் என்று வெளியே வந்தாள்.

அதிர்ந்து நின்றாள்.

மேகலா சுற்று முற்றும் பார்த்த வண்ணம் மாடிப்படிகளில் ஏறித் தன் கணவனின் அறை நோக்கிச் செல்வதைக் கண்டாள்.

படபடப்புடன் திரும்பி அறைக்குள் புகுந்து கண்களில் நீர் நிறைய அமர்ந்து கொண்டாள்.

மௌனமாகக் கண்ணீர் வடித்தாள்.

* * *

பத்து நிமிடங்கள் போயிருக்கும்!

இன்னமும் மேகலா இறங்கி வந்தாற் போல் தெரியவில்லை. அதே நேரம் அப்பா திரும்பிப் படுத்தார். போர்வை விலகி விட்டது.

எழுந்து அவரது போர்வையை சரி செய்து விட்டு திரும்பிய போது யாரோ வேகமாக மாடிப்பகுதியை நோக்கி செல்கிறாற் போல தோன்றியது.

மின்னலென மறைந்த உருவம் பார்க்கும்போது இரத்தினசாமியைப் போலத் தோன்றியது.

திகிலாகி விட்டது.

அப்பாவை எட்டிப் பார்த்தாள்.

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்.

சடாரென மேலே போனாள்.

இரத்தினசாமியைக் கேள்விப்பட்டவரைக்கும் முரட்டு மனிதர் என்று சொன்னார்கள்.



"ஐயோ! ஏதாவது ரசாபாசமாகிவிட்டால் மொத்தக் குடும்பமுமே அவமானப் பட்டு நிற்கும்."

பதறியடித்துக் கொண்டு மேலே போனாள்!

இரத்தினசாமியைக் காணவில்லை!

பார்த்தசாரதி தங்கியிருந்த அறை ஒரு நீளமான அறை. கதவுக்கு நேராக இல்லாமல் சற்றுத் தள்ளி பெரிய படுக்கை இருந்தது.

அறைக்கு அந்தப் புறமும் ஒரு கதவு இருந்தது. அந்தக் கதவுக்கு நேராக ஒரு பெரிய மரத்தடுப்பு பல வித டிசைன்கள் பொறிக்கப்பட்டு இருந்தது. ஸ்ரீகலா அடுத்தடுத்த அறைகளில் எட்டிப் பார்த்தாள்.

யாரும் இருக்கவில்லை!

ஒரு வேளை தன் மனப்பிரமையோ! அக்கா இப்படி அகால நேரத்தில் தன் கணவனைச் சந்திக்கப் போயிருக்கிறாளே என்ற அச்சத்தில் ஏற்பட்ட கிலியாகத்தான் இருக்கும்.

"அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்!" என்பார்களே அப்படித்தான் இருக்கும். ஒருவேளை இந்த நேரத்தில் இரத்தினசாமி வந்திருந்தால் இந்த மாதிரி விஷயங்களுக்கு ஒரு முடிவு கட்டி விடுவாரே என்ற தன் உள் மனத்தின் ஏக்கமோ என்னவோ...!

இருக்காது!

சரேலென்று ஒரு உருவம் கடந்து சென்றது! அது நிச்சயம்!

தேடிக் கொண்டே தன்னையறியாமல் வந்து கணவனின் படுக்கையறை வாசலில் நின்றாள்.

அப்போது கண்ட காட்சி அவள் மனத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது!

பார்த்தசாரதியின் மார்பில் சாய்ந்து மேகலா குலுங்கி அழுது கொண்டிருந்தாள்.

பார்த்தசாரதி லேசாக அணைத்த வண்ணம் அவள் தலையைக் கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தான்!

கண்கள் தெறிக்கிறாற் போல் அந்தக் காட்சியை பார்த்த அவள் நடைபிணம் போலத் திரும்பினாள்.

அந்தப் படுக்கையறையின் முன்னால் இருந்த ஹாலில் இந்த பெரிய சோபாவில் பொத்தென்று அமர்ந்து கொண்டாள்!

அந்தக் கணத்தில்!

எப்போதும் போராடுகின்ற அவளது துணிவும், தைரியமும் எங்கேயோ காற்றில் கரைந்து விட்டாற்போல உணர்ந்தாள்.

குலுங்கிக் குலுங்கி அழுதாள்!

பார்த்தசாரதியை தான் நேசிக்கிறோம் என்பதை மேகலாவும் அவள் பழகிய காலத்திலேய அறிந்திருந்தாள்.

மேகலா... அவனிடம் இருந்து பரிசுப் பொருட்களை வாங்கிக் கொள்வதில் ஆரம்பித்து பங்களா வாங்கிக் கொள்வது வரை ஒரு ஆழ்ந்த வருத்தத்துடன் கவனித்துக் கொண்டிருந்தாள்!

ஸ்ரீகலாவைப் பொறுத்தவரை பார்த்தசாரதி மிகவும் உயர்வானவர். அவரைத் திருமணம் செய்து கொள்கிறவளையுமே அவர் பூப்போல் வைத்துக் கொள்வார். ஆனால் மேகலா போன்ற பெண் கண்டிப்பாக அவனுக்கு ஏற்றவள்



அல்ல. ஆனால் மேகலாவின் அழகு அவனை ஆகர்ஷித்திருக்கிறது. இப்போது எது சொன்னாலும் எடுபடாது. என்று அமைதியாக ஒதுங்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், பங்களாவை வாங்கிக் கொண்ட பிறகு மேகலாவும் பாட்டியுமாக பார்த்தசாரதிக்குத் தண்ணி காட்டிய போது அவள் மிகவும் துடித்துப் போனாள்.

ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இந்த மட்டில் மேகலாவின் குணம் என்ன என்பதை பார்த்தசாரதி புரிந்து கொண்டால் சரி! என்று.

"விலகி விட்டால் நல்லது!" என்றுதான் எண்ணினாள். ஆனால் அவன் கோர்ட்டுக்குப் போவான் என்று அவள் எதிர்பாராதது.

அப்போதுதான் புரிந்தது. பார்த்தசாரதி அமைதியானவன். ஆனால் கோழையல்ல என்று.

அம்மா, அப்பா எல்லாருமே கலங்கிப் போனார்கள். பயந்தும் போனார்கள் அம்மாவிடம் தனிமையில் தன் கருத்தைப் பகிர்ந்து கொண்டாள்!

"அம்மா! எல்லாரும் தப்பு செய்யாதீங்க! மேகலாவுக்கு புத்தி சொல்லுங்க! முப்பது லட்சம் நாற்பது லட்சம் போட்டு வாங்கிற சொத்தை யாரும் விட்டுக் கொடுக்க மாட்டாங்க... நியாயமில்லே!" என்று வாதாடினாள்.

"என்னடி செய்யச் சொல்றே! நானா போய் கோர்ட்டில் சாட்சி சொல்ல முடியும். உங்கப்பா அவங்க அம்மாவைத் தைரியமாய் எதிர்க்கிற மாதிரி இருந்தா.. இந்த நரகத்துல இருந்த நான் வெளியே போயிருப்பேனே!" என்றார் ஆழ்ந்த வருத்தத்துடன்.

"நானா.. போய் கோர்ட்டில் சாட்சி சொல்ல முடியும்?" என்று அம்மாவின் கேள்வி மின்னல் வெட்டுப் போல அவளுக்குள் ஒரு சிந்தனையைத் தோற்றுவித்தது.

"அம்மா.. நான் போய் சாட்சி சொல்றேன்!" என்றாள் ஸ்ரீகலா உறுதியான குரலில்.

"என்னடி! விளையாடறியா?" என்றார் அம்மா திகிலுடன்.

"நீங்க, எல்லாம்தான் விளையாடிகிட்டிருக்கீங்க! நான் சீரியஸாச் சொல்றேன்.

"நீ கல்யாணமாக வேண்டிய பொண்ணுடி!"

"கல்யாணம்! மேகலா செய்த காரியத்தால சந்தி சிரிச்சுப் போச்சு. எந்த மானமுள்ள ஆம்பளையும் நம்ம வீட்ல பொண்ணு எடுக்கணும்ன்னா... ரொம்ப யோசிப்பாங்க.." என்றாள்.

அம்மா பெருமூச்சு விட்டார்.

நியாயத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு பக்கம் இருந்தாலும் முக்கியமாக சாரதியின் பக்கம் நின்றாக வேண்டும் என்றுதான் அவள் உறுதியான முடிவாக இருந்தது.

துணிந்து இறங்கினாள்!

அதற்குப் பிறகும் கூட அவனுக்கென்று சொத்து திருப்பிக் கொடுக்கப்படும் வரை கூட இருந்தாள்.

பத்திரம் எழுதி முடித்த அன்றைக்கு மற்றவர்கள் அறியாமல் தன் மனம் கவர்ந்தவனைக் கண்களால் பருகிக் கொண்டாள்.

இனிமேல் தன் வாழ்க்கையில் அவன் வரப்போவதில்லை என்று எண்ணியபோது அவன் பெற்றோர்கள் பெண் கேட்டு வந்தார்கள்.

வேறு யாரையும் திருமணம் செய்து கொள்வதில்லை என்ற முடிவும் இருந்த அவளுக்குத் தான் வேண்டாத



பெண்டாட்டியாக இருந்தாலும் கூட அவன் அருகாமையில் இருப்போம்.

தனது ஆழ்ந்த அறிவாலும், பொறுமையான நடத்தையாலும் தன் பக்கம் அவனைத் திருப்பி விடக்கூடும் என்ற எண்ணத்திலேயே துணிவாக இருந்தாள்.

"இதென்ன! இப்போது மேகலா மறுபடியும் ஏதோ சாகசம் செய்கிறாள்!"

சாரதியும் என்ன? நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் கையணைப்பில் வைத்துக் கொண்டு! அதுவும் தான் நிற்பது கூட அறியாமல்!

நெஞ்சு பொறுக்கவில்லை! இதற்கு மேலும் அங்கே அமர்ந்து கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை!

எழுந்தாள்!

பாழும் பெண் மனது! மறுபடியும் ஒருமுறை திருப்பிப் பார்க்கச் சொன்னது!

திரும்ப எட்டிப் பார்த்தாள்!

இப்போது மேகலா அழுகையை நிறுத்தியிருந்தாள். நிமிர்ந்து பார்த்தசாரதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன்னையுமறியாமல் சத்தமான ஒரு கேவலை வெளிப்படுத்தினாள் ஸ்ரீகலா!


திரும்பிப் பார்த்த பார்த்தசாரதி திடுக்கிட்டுப் போனான். சட்டென்று மேகலாவை விட்டு "ஸ்ரீ" என்று உரத்த குரலில் அழைத்தான்!

ஸ்ரீகலா நிற்கவில்லை! படிகளில் வேகமாக இறங்கினாள்.

பார்த்தசாரதி அறையை விட்டு வேகமாக வெளியேறிய அதே சமயம் தடுப்புக்கு இந்தப் புறமாக வெளியே

வந்த இரத்தினபூபதி துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டிருந்தான்!

## 23



பார்த்தசாரதி ஸ்ரீகலாவின் பின்னால் போவதைப் பார்த்ததனாலோ என்னவோ கண்களில் தீப்பொறி பறக்க நின்றிருந்த இரத்தினபூபதி மெதுவாகத் துப்பாக்கியைக் கீழே இறக்கினான்.

உறுதியான சிந்தனையும், தீர்க்கமான முடிவுகளும் இல்லாத யாருக்குமே ஏற்படக்கூடிய குழப்பம், பயம், தன்னிரக்கம் இவையெல்லாம் அந்த நேரத்தில் மேகலாவுக்கு ஏற்பட்டது.

ஒரு நிமிடம் தயங்கி நின்றாள்!

அடுத்த நிமிடம் அவனை நோக்கிப் போனாள்!

''சுட்டுடுங்க பூபதி! முடிச்சுட்டீங்கன்னா எனக்கும் நிம்மதி. மன குழப்பத்திலிருந்து நானும் விடுபட்டுரு வேன். நீங்களும் என்னை மாதிரி ஒரு பொண்ணோட வாழ்க்கை நடத்தற கஷ்டத்துல இருந்து விடுபட்டுரலாம்'' என்றாள்.

தன்னையும் மீறிக் கதறி அழ ஆரம்பித்தாள்!

இரத்தினபூபதி அவளை அழ விட்டான்.

சற்று நேரம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். முன்னறைக்கு வந்தான்!

சைகை காட்டி அவளையும் அழைத்தான்!

வசியம் செய்யப்பட்டவள் போல் அவளும் வந்தாள்!



பக்கவாட்டு சோபாவைக் காட்டினான்!

அமர்ந்து கொண்டாள்!

''மேகலா! சாரதி.. சொன்னது எல்லாமும் உண்மை... தப்பான கைடன்ஸ்னால நீ சிக்கல்ல சிக்கிக்கறதுக்கு முன்னால் உன்னைக் கைகுடுத்துக் காப்பாத்தறதுக்கு நல்ல வேளையா உறவுக்காரங்க இருக்காங்களேன்னு நீ சந்தோஷப்படணும்'' என்றான்.

அவள் மௌனமாகத் தரை பார்த்து அமர்ந்தாள்! சாரதி சொன்ன விஷயங்கள் எல்லாம் அவள் மனதில் ஓட ஆரம்பித்தன. தான் நடந்து கொண்ட விதத்தையும் அவமான உணர்வு இழையோட எண்ணிப் பார்த்தாள்.

* * *

சாரதி தனது லேப் டாப்பில் கொஞ்ச நேரம் வேலை செய்தான்.

இரண்டு மூன்று நாட்களாகவே தொடர்ந்து புஷ்பம் கண்விழித்தினால் அவருக்கு மிகவும் களைப்பாக இருந்தது. ''நீ போய்த் தூங்கும்மா! நான் பாத்துக்கறேன்'' என்று சொல்லியிருந்தாள் ஸ்ரீகலா.

அதற்குள் ஏதோ ஒரு முக்கிய பிரச்சினை தொடர்பாக அவனது அலுவலகத்தில் இருந்து தொடர்பு கொண்டிருந்தார்கள். அது தொடர்பாக இ.மெயிலில் தொடர்பு கொண்டு பிரச்சினையை முடித்துக் கொடுத்தான்.

மெதுவாக எழுந்தவன் கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தவன் அறை வாசலில் நிழலாடுவது கண்டு திரும்பினான்!

மேகலா நின்று கொண்டிருந்தாள்!

பார்த்தசாரதி எதிர்பார்க்கவில்லை! சட்டென்று கைகளைக் கீழே தாழ்த்தினான்.

"மேகலா!" என்றான் முணுமுணுப்பாக.

சட்டென்று முன்நோக்கி நடந்த மேகலா அவன் அருகில் போய் நின்றாள்!

"நான் தப்புப் பண்ணிட்டேன்! சாரதி.. நான் தப்புப் பண்ணிட்டேன்!" என்று தேம்ப ஆரம்பித்தாள்.

பார்த்தசாரதி ஒரு சங்கடமான அமைதியுடன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"சாரதி! உங்க வேல்யூ எனக்குப் புரியாமல் போச்சு! உங்களை நான் அவமானப்படுத்தினதுக்கு.. கடவுள் எனக்கு வேணும்கிற தண்டனை கொடுத்துட்டாரு! எனக்கு இந்தக் கல்யாண வாழ்க்கை வேண்டாம்! நான் உங்களோட வந்தர்றேன்! எனக்கு எந்த உறவும் வேண்டாம்! ரைட்ஸும் வேண்டாம். ஒரு வேலைக்காரியாக் கூட இருந்துக்கறேன்" என்று அழுதாள்!

சட்டென்று அவன் எதிர்பாராதவிதமாக அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

என்ன செய்வதென்று தெரியாத சூழ்நிலையில் அவன் அவள் முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான்!

அதே நேரத்தில்தான் இரத்தினபூப்பதி பக்கவாட்டில் நுழைந்து நின்றான்.

தான் பார்க்க விரும்பாத காட்சியைப் பார்க்க நேர்ந்த விதத்தில் மௌனக் கண்ணீர் வடித்தபடி முன் ஹாலில் சோபாவில் ஸ்ரீகலா அமர்ந்து கொண்டாள்.

"மேகலா! நடந்த எதையும் மாத்த முடியாது! இனிமே எதையுமே அழிச்செழுத முடியாது! நான் உனக்கு ஒரு





வாய்ப்புக் குடுத்தேன். ஆனா நீ உன்னையே சரியாப் புரிஞ்சுக்கலை. பிராபப்ளி.. நானே என்னை சரியாப் புரிஞ்சுக்கலை. விட்ரு.. போன விஷயங்களை விட்டுட்டு.. இனிமேலாவது இந்த வாழ்க்கையை நல்லபடியா நடத்தப் பாரு..!"

"எப்படி.. எப்படி? அந்த இரத்தினபூபதியைப் பார்த்தாலே முரட்டுத் தனம் தெரியுது."

"இல்லே.. மேகலா! ஆகாஷ் எனக்கு எல்லா விஷயமும் சொன்னான். உங்க தாத்தாவோட உறவுக்காரர் உங்க குடும்பத்துக்குப் பழக்கமில்லே! உங்க தாத்தா போய் நடந்த விஷயங்களையெல்லாம்.. சொல்லித்தான் அவரு வந்து உன்னைக் கல்யாணம் செஞ்சிருக்காரு.."

"ஓ..!" என்று விழித்தாள்!

சற்றே விலகி நின்றாள்.

பார்த்தசாரதி பேசிய வார்த்தைகள் காதில் விழுகிற தூரத்தில் இரத்தினபூபதி இருந்ததால் அவனுக்குள்ளே ஆச்சரியம் தோன்றியது.

"என்னடா.. இது! ஆப்போசிட் பார்ட்டின்னு நாம நினைச்ச ஆள்.. நமக்கு ஆதரவாப் பேசறாரு" என்று அவனுக்கு ஆச்சரியம்.

காது கொடுத்துக் கேட்கலானான்!

"ஆமா! மேகலா! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே! உங்க பாட்டி உனக்குத் தப்பான கைடன்ஸே குடுத்தாங்க..! உன்னுடைய ஆசைகளை விசிறி விட்டு வளர்த்தாங்க..! தன்னோட குடும்ப வாழ்க்கை கெட்டதுல இருந்து கூட அவருக்கு எந்தவிதமான பாடமும் கத்துக் கலே..! ஆனா, உங்க தாத்தா.. அந்த மாதிரித் தன்னோட

பேத்திகளோட வாழ்க்கை கெட்ரக் கூடாதுன்னு நினைச்சாரு. அதனால போய்ப் பேசினாரு!'' என்று அவன் சொல்லும்போதே பூபதிக்கு தாத்தா தன்னிடம் வந்து பேசியது நினைவுக்கு வந்தது.

''தம்பி! டேய்.. பூபதி! உங்க கையைக் காலா நினைச்சுப் புடிக்கறேன்'' என்ற போது பூபதி பதறிப் போனான்!

''ஐயோ! என்ன மாமா?'' என்று.

பூபதியின் குடும்பம் ஒரு விதத்தில் தாத்தாவுக்குக் கடமைப் பட்டிருந்தது. அவனது தாயும் தந்தையும் ஏதோ ஒரு மனக்கசப்பில் பிரிந்தார்களாம். அப்போது சுகவனம் தான் தலையிட்டு இரண்டு பக்கமும் பேசி... நடையாய் நடந்து.. சமரசம் பேசி சேர்த்து வைத்தாராம். அதற்குப் பிறகுதான் பூபதி பிறந்தானாம்.

அந்த நன்றி அந்தக் குடும்பத்துக்கு!

அந்த நன்றிக்காக.. பூபதி எதுவும் செய்யத் தயாராக இருந்தான்.

''என்ன தாத்தா! அந்தப் பொண்ணு அந்தப் பையன் கிட்டே...!''

''தம்பி! அதுக்குப் பேரு நேசம் இல்லே! அவனுக்கு நிறைய சொத்து இருக்கறதுனால.. அவங்க பாட்டி செய்த உபதேசம். செரியப்பா! ஏதோ உறவுன்னே வேணா வச்சுக்கோ..! பார்த்தசாரதியைக் கல்யாணம் பண்ணாம இருக்கறதே நல்லது. அந்தப் பையன் பெருந்தன்மையான பையன்! அடிப்படையில என் பேத்தி கெட்டவ இல்லே! ஆனா.. ஆழம் கிடையாது. நீயானா.. அந்தப் பொண்ணை எல்லா விதத்திலும் சரி.. பண்ணிடுவே..!''

''அது சரி தாத்தா! நாம எப்படி உள்ளே நுழைவது?'' என்று கேட்டபோதுதான் தாத்தா அந்த ஆயிரம் ஏக்கர் ஐடியாவைக் கொடுத்தார்.



அதெல்லாம் நினைவு வர அவன் நின்று கொண்டிருக்கையில் பார்த்தசாரதி சொல்லிக் கொண்டிருந்தான்.

''அதனாலே எனக்கென்னவோ.. பூபதி நல்லவர்ன்னு தோணுது. அது மட்டுமில்லே! நான் மனசுல நினைச்ச பொண்ணு என்னை ஏமாளியாக்கினா. எனது பேரண்ட்ஸ் மனசாவது சந்தோஷப்படட்டும். இன்னொண்ணும் சொல்றேன்! ஸ்ரீகலா ரொம்ப நல்ல பொண்ணு! அவளுக்கு எந்த மனக்குறையும் இல்லாத அளவுக்கு வாழ வைக்கணும் கிற முடிவுல நான் இருக்கேன்! பழசெல்லாம் மறந்துடு.. மேகலா! இனிமேலாவது நல்லபடியா வாழப் பாரு..'' என்றபோதுதான் மறுபடியும் மேகலா அவன் மார்பில் சாய்ந்து கொண்டு அழுதாள்.

அந்த நேரம்தான் ஸ்ரீகலா நிற்பதைப் பார்த்தான் பார்த்த சாரதி.

பார்த்த கணத்தில் தன்னை விலக்கி விட்டு ஸ்ரீகலாவின் பின்னே பார்த்தசாரதி ஓடுவதைப் பார்த்தவுடன் மேகலாவுக்குத் தான் செய்தது எவ்வளவு அபத்தமான காரியம் என்று புரிந்தது.

* * *

இரத்தினபூபதி சொன்னான்!

''மேகலா! ரெண்டு பேரையுமே கட்டுத் தள்ளிரலாம் கற வெறியோடதான் வந்தேன். ஆனா, சாரதி பேசினதைக் கேட்டவுடன் கோபமெல்லாம் ஆறிப் போச்சு! இப்ப உனக்குத் தெரிஞ்சிருக்குமே உன்னோட இடம் என்னன்னு..!''

அவன் பல்லைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

இரத்தினபூபதி சட்டென்று சிரித்தான்!

''மேகலா! ஐயோ.. மேகலா! இன்னமும் நீ கனவுலகத்தில் இருக்கே! வாழ்க்கையையே நீ புரிஞ்சுக்கலை! மக்கு

ஆலோசனை கேக்கறது வாழ்ந்து ஜெயிச்சவங்ககிட்டே கேக்கணும்! உங்க பாட்டி மாதிரி ஆட்கள்கிட்டே... இல்லே! சரி.. சரி.. வா..! ரூமுக்குப் போலாம்..!'' என்றான்.

அவன் மிரள்வதைப் பார்த்தான்!

''ஹேய்! எதுவும் கற்பனை பண்ணிக்காதே! இன்னும் ஒரு வாரம் டைம் தரேன்! அதுக்குள்ள ஒரு முடிவுக்கு வா! அதுக்கப்புறம் நீ தாலியைக் கழட்டிக் கொடுத்தாலும் சரி..!

ஆனா.. ஒண்ணு ஞாபகம் வச்சுக்க.. நானும் சொத்துக் காரன்தான்!'' என்றான்.

முன்னால் மடமடவென்று இறங்கிப் போனான். அவளும் பின் தொடர்ந்தாள்!

கீழ்த்தளத்தில் படிகள் இறங்கியவுடனே முன்னால் இருந்த அறைக்குள் அவன் புகுந்து கொள்ள அவளும் நுழைந்தாள்!

இரட்டைக் கட்டிலைப் பிரித்துப் போட்டான்!

சாவகாசமாகக் காலை நீட்டிப் படுத்துக் கொண்டான்.

அவளும் அடுத்த கட்டிலில் படுத்துக் கொண்டாள்! சிந்திக்க ஆரம்பித்தாள்!

வாழ்க்கையிலேயே முதல் முறையாகச் சுயமாகச் சிந்திக்கிறோம் என்று தோன்றியது.

அதே நேரத்தில்!

ஸ்ரீகலா மெல்லிய குரலில் ஆனால் அழுத்தமாகத் தனது கணவனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''ப்ளீஸ்! சாரதி! இங்கே எந்த வாக்குவாதமும் வேண் டாம்'' என்று.

''ஓ.கே.! நீ சொன்னாச் சரிதான்!'' என்றான். பிறகு பிரச் சினையே வேண்டாம்ப்பா! நானும் இந்த ரூம்லயே இருக்கேன்!'' என்றான்.



அந்தப் பக்கத்தில் இரண்டு அறை இருந்தது.

உள்ளறையில் அப்பா படுத்திருந்தார். முன்னறையில் இருந்த சோபாவை விரித்துப் போட்டுப் படுத்துக் கொண்டாள்.

''கொஞ்ச நேரம் நீ தூங்கு! அப்புறம் நான்!'' என்றான்.

அவனது நடத்தையின் பொருள் புரியாமல் அவள் அந்தத் துக்கத்திலேயே உழன்று கொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில் ஆழ்ந்து உறங்கி விட்டாள்!

அப்பா புரண்டு படுக்கும் சத்தம் கேட்டது. உடனே எழுந்தான் பார்த்தசாரதி.

ஒரு நிமிடம் புரண்டு படுத்த குகநாதன் மறுபடியும் உறங்கி விட்டார்.

போர்வையை சரியாகப் போர்த்தி விட்டுத் திரும்பிய பார்த்தசாரதி சீராக மூச்சு விட்டுக் கொண்டு உறங்கிய மனைவியைப் பார்த்தான்.

கன்னங்களில் கண்ணீர் கோடாக ஓடியிருந்தது!

தன் மீதே அவனுக்குக் கோபம் வந்தது!

மேகலா வந்து மேலே விழுந்தவுடனேயே விலகியிருந் திருக்க வேண்டும். தனது கையணைப்பில் மேகலாவைப் பார்த்து ஸ்ரீகலா என்னென்ன கற்பனை செய்து கொண் டாளோ..! ஏற்கனவே என்ன இருந்தாலும் உங்களுக்கு மேகலாவை மறப்பது கஷ்டம் என்பது போல் ஜாடையாகப் பேசிக் கொண்டிருக்கிறாள்.

அந்த நிமிடத்தில் அவனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது.

இரண்டு பேருமே ஒருவருக்காக ஒருவர் கவலைப்படு கிறோமோ?

மேகலாவுடன் பழகிய ஒருவனைத் தனக்குத் திருமணம் செய்து வைத்து விட்டார்களே என்று வேதனையில் இருந்தாள். அவள் கண் முன்னாலேயே அந்த மேகலாவைக் கையணைப்பில் வைத்துக் கொண்டு நின்றால்..!

சே..! மடையன்! மடையன்! என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான்.

அதற்குப் பிறகு உறக்கம் வருவதற்கு வெகு நேரம் ஆனது!

அப்போதுதான் திடீரென்று அந்த எண்ணம் தோன்றியது! அந்தப் பக்கம் இரத்தினபூபதி நின்று கொண்டிருந்ததைப் போல இருந்ததே!

கையில் கூட ஏதோ துப்பாக்கி மாதிரி இருந்ததே!

அடடா! அதைக் கவனிக்காமல் விட்டு விட்டோமே! ஆனால் துப்பாக்கி எதுவும் வெடித்த மாதிரி சத்தம் கேட்கவில்லை.

மேகலாவுக்கு எப்போதுதான் புத்தி வருமோ தெரியவில்லை.

ஸ்ரீகலாவை எழுப்பிச் சொல்லலாமா என்று யோசித்தான்.

வேண்டாம்!

இவன் எதற்காகக் கவலைப்படுகிறான் என்று ஸ்ரீகலா நினைக்கக் கூடும்.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது போல மேகலாவே தன்னுடைய வாழ்க்கைப் பிரச்சினையை சமாளித்துக் கொள்ளட்டும்.

ஸ்ரீகலாவை சமாதானப் படுத்துவதுதான் தன்னுடைய வேலை என்று எண்ணிக் கொண்டான்.



அதே சமயம்!

ஸ்ரீகலா எழுந்து அப்பாவின் படுக்கையை எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

பார்த்தசாரதி படக்கென்று கண்களை மூடிக் கொண்டான்.

ஸ்ரீகலா மெல்ல அவன் படுத்திருக்கும் இடத்திற்கு வந்தாள். நின்று அவன் முகத்தை ஒரிரு நிமிடங்களுக்கு மேல் பார்த்துக் கொண்டிருந்தவள்!

அந்தக் கணத்தில் அவள் முகத்தில் தோன்றிய பாவங்களை அவன் லேசாகக் கண்களைத் திறந்து பார்த்துக் கொண்டான்.

மெதுவாகத் திரும்பி அறைக்குப் போனாள்.

லேசான இரவு விளக்கின் ஒளியில் தங்கம் போல் முகம் ஜொலிக்க இந்தச் சொத்தை இழந்து விடுவோமோ என்ற ஏக்கப் பார்வையும், கனிவும், அன்பும் போட்டி போட அவள் பார்த்துக் கொண்டு நின்ற விதம் அவன் உள்ளத்தில் ஒரு சிலிர்ப்பையே ஓடச் செய்தது!

மேகலாவின் முகத்தில் ஒரு நாளும் இந்த மாதிரி 'அன்பு' என்னும் முகபாவத்தையே தான் பார்க்க நேர்ந்ததில்லை என்பது தோன்றியது.

வெகு நேரம் சிந்தனையிலாழ்ந்தான்!

அந்தப் பக்கம் ஸ்ரீகலாவும் புரண்டு, புரண்டு படுத்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

மறுநாள் காலை!

புஷ்பம் வந்து "நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போய் ரெஸ்ட் எடு" என்று ஸ்ரீகலாவை அனுப்பி வைத்தாள்.

அதே நேரம்!

முந்தின நாள் துப்பாக்கியும் கையுமாகத் தான் இரத்தின பூபதியைப் பார்க்க நேர்ந்ததை ஸ்ரீகலாவிடம் சொல்லி ஆலோசிக்கலாம் என்று எண்ணிக் கொண்டே கீழே அவள் இருந்த அறைக்குப் போனான்.

மேலே இருந்த அறையிலும் இருப்பார்கள். கீழே சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட அறையில் இருந்து கொள்வாள்!

அந்த அறையில் நுழைவதற்கு சற்று முன்பாகவே கவனித்தான்!

மேகலா நின்று பேசிக் கொண்டிருந்தாள்! ஸ்ரீகலா தீவிரமான முக பாவத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்!

தன்னுடைய அறைக்குத் திரும்பி விட்டான். "இந்த விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் மேகலாவை இனிமேலும் தன்னுடைய வாழ்க்கையில் விளையாட அனுமதிக்கக் கூடாது" என்று கோபமாக நடை போட்டுக் கொண்டிருந்தான்.

அடுத்த கட்டமாக ஸ்ரீகலா என்ன மனப்பான்மையோடு வருவாளோ இன்னும் எப்படி அவளை சமாதானப்படுத்துவது என்ற கவலை வேறு எழுந்தது.

# 24

"இதுதான்டி நடந்தது!" என்றாள் மேகலா.

ஸ்ரீகலா நம்பிக்கையில்லாமல் தொடர்ந்து பார்த்தாள்.

"ஆமாடி! நானாத்தான் போய்ப் பார்த்தேன். சரியா என்னைக் கூப்பிடவும் இல்லே! எதுவும் பேசவும் இல்லே!" என்றாள் மேகலா.



ஸ்ரீகலாவின் முகம் மெல்லத் தெளிவடைந்ததைக் கண்ட மேகலா புன்னகைத்தாள்!

"ஏய்.. ஸ்ரீ! நீ ரொம்ப அவரை நேசிக்கறே இல்லே!" என்றாள்.

ஸ்ரீகலா திடுக்கிட்டுப் போனாள்.

"இல்லல்லே! பயப்படாதே! அதைப் பத்தி நான் எதுவும் சொல்ல மாட்டேன். அது உங்களோட அந்தரங்கம். அதுல... நான் தலையிடக் கூடாது..!" என்றாள்.

ஸ்ரீ மறுக்கவும் இல்லே! ஆமோதிக்கவும் இல்லை! மேகலா தொடர்ந்து சொன்னாள்.

"ஸ்ரீ! ஆக்சுவலாப் பார்த்தா.. உனக்கும், அவருக்கும் தான் பொருத்தம். அவர் என்னோட வெளியழகைப் பார்த்து அட்ராக்ட் ஆனாரே ஒழிய.. என்னை நேசிக்கலை! நானும் நேசிக்கலை..!" என்றாள்.

"ஏய்.. ஏன்! அப்படிச் சொல்றே?" என்றாள் ஸ்ரீகலா சற்று ஆச்சரியத்துடன்.

"ஆமா! நாங்க மட்டும் ஒருத்தரையொருத்தர் நேசிச்சிருந்தா.. அந்த பங்களா பெரிய விஷயமா எனக்குத் தெரிஞ்சிருக்காது. நம்ம கூறு கெட்ட பாட்டியோட ஆலோசனையும் கேட்டுகிட்டு நானும் ஏமாத்தற அளவுக்குப் போயிருக்க மாட்டேன்!" என்றாள்.

"அது உன் பக்க நியாயம்! அவருமா உன்னை நேசிக்கலேங்கறே."

மேகலா சிரித்தாள்! ஸ்ரீகலாவின் கன்னத்தைத் தட்டினாள்!

"அவரும்தான்! இல்லேன்னா, அவரும் கேஸ் போட்டிருக்க மாட்டாரே!"

"ஸ்ரீகலாவுக்கு அது நியாயமான வாதமாகத் தோன்றியது. சகோதரியின் முகம் பார்த்துச் சொன்னாள்.

"மேகலா! அதெல்லாம்.. எனக்குத் தெரியாது! அது பத்தி நான் யோசிக்கவும் இல்லே! ஆகாஷ் அண்ணாதான் ரொம்ப சொன்னார். பார்த்தசாரதியை இனி தனியா விடக் கூடாதும்மா! உங்கக்கா பண்ணின தப்பை நீ சரி பண்ணிக் குடும்மான்னு.. அதோட அம்மாவும், அப்பாவும் வேற ரொம்ப சொன்னாங்க" என்றாள்.

"சரிடி! ஸ்ரீ! சாரதி என்ன சொன்னாருன்னு நான் விளக்கமா சொல்றேன். ஒரு ப்ரண்டாத்தான் என்னைத் தேத்தினாரு. நானும் பூபதியோடதான் என் வாழ்க்கையை நடத்தியாகணும்" என்றாள்.

ஸ்ரீ சொன்னாள். "அக்கா! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே! கிடைச்ச வாழ்க்கையை இனிமேலாவது நேர் பண்ணிக்கப் பாரு" என்றாள்.

மேகலா பெருமூச்சு விட்டாள்.

அப்போது ஸ்ரீகலா இன்னொன்றும் சொன்னாள்.

"அக்கா! பாட்டி.. பாவம்! எல்லாரும் இப்பக் கைவிட்டுட்டாங்க! தப்போ.. ரைட்டோ.. உன் மேல ரொம்ப பாசம் வச்சிருந்தாங்க." நீ போய் அவங்களைப் பாரு! ஆனா..!" என்று நிறுத்தினாள்.

மேகலா குறுக்கிட்டாள். "ஆனா..! அவங்க ஆலோசனை எதுவும் கேட்காதே! அதானே!" என்றாள்.

இருவரும் சிரித்தார்கள்.

மேகலா விடைபெற்றுக் கொண்டு போவதற்கு வெகு நேரமாகியது.



வெகு நாட்களுக்குப் பிறகு இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். மேகலாவுக்கு ஆகாஷின் மேல் இருந்த வருத்தங்கள் எல்லாம் சரியானது போல் உணர்ந்தாள்.

அதே சமயம்!

மேகலா தொடர்ந்து குட்டையைக் குழப்புவதாக நினைத்த பார்த்தசாரதி இதற்கு ஏதாவது முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்தான்.

உடனடியாக ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு போன் செய்தான்!

* * *

"டேய்! என்னடா இது! மழை விட்டும் தூவானம் விடலேங்கற மாதிரி இந்த மேகலா ஏதாவது பண்ணிகிட்டே இருக்கா? நீ ஏதோ.. அந்த பூபதி நல்லவரு. வல்லவருன்னு சொன்னே.. ஆனா, அவரு என்னடா.." என்று அவன் முடிக்கு முன்னே ஆகாஷ் குறுக்கிட்டான்.

"மேகலா வந்து என்ன சொன்னா?" என்றான்.

"என்ன சொன்னா? என்னால அந்த ஆள் கூட வாழ்க்கை நடத்த முடியாது. உங்க வீட்ல வந்து வேலைக்காரியாக் கூட இருக்கேன்னா.. இவளை எல்லாம் வீட்ல வேலைக்கு வச்சுக்க முடியுமா?"

"சரி.. நீ என்ன சொன்னே?"

"நான் என்ன சொன்னேன்? எல்லாமே உன் நல்லதுக்குத்தான் நடந்துருக்கு! தாத்தாவோட கிலேடிவ்தான் இரத்தினபூபதி. தாத்தாவோட வேண்டுதலுக்காக உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்காரு. உனக்கு எந்தக் குறையும் இல்லாம வச்சிருப்பாரு..! அப்படின்னு சொன்னேன்."

"கரெக்ட்தான்!"

"ஆனா.. நீ சொன்னதுக்கு நேர் மாறா அவரு துப்பாக்கியைத் தூக்கிட்டு நிக்கறாரு. அதே நேரம் மேகலா வேற என் மேல சாஞ்சுட்டு அழுதுகிட்டிருந்தா. நானும் ஏதோ ஒரு விதத்துல ஆறுதல் படுத்தணுமேன்னு தட்டிக் குடுத்துகிட்டிருந்தேன்.. நம்ம வைஃப் அதைப் பார்த்து அப்செட்! இந்த மாதிரி சிக்கல் எல்லாம் வரும்னுதான் நான் அந்த வீட்ல பொண்ணு வேண்டாம்னேன். இப்ப.. ஸ்ரீ படற வேதனையை என்னால பாக்க முடியலை" என்றான்.

"குட்! அது நல்லது!"

"எது? அவ வேதனைப் படறது நல்லதா? இல்லை.. அதைப் பார்க்க முடியாம நான் அவஸ்தைப் படறது நல்லதா?"

"ரெண்டுமேதான்."

"பல்லை உடைப்பேன்."

"உடைக்கலாம்! உடைக்கலாம்! நான் சொல்றது முழுசையும் கேட்டுட்டுப் பல்லை உடை" என்றான்.

பிறகு சொன்னான்.

"டேய்! வேற குடும்பத்துல உனக்குப் பொண்ணு கிடைக்கும். ஆனா.. ஸ்ரீ மாதிரி கிடைக்காது. ஒரு பழமொழி கேட்டிருக்கையா. நாம நேசிக்கறவங்களைக் காட்டிலும் நம்மை நேசிக்கறவங்கதான் வாழ்க்கைக்குத் தேவையானவங்கன்னு."

"அது சரிடா! பூபதி துப்பாக்கியைக் கையில வச்சுட்டு அலையறாரே. அதுக்கு ஒரு முடிவு கட்டுங்க!" என்றான்.

"நான் பேசறேன்.. தாத்தாகிட்டே பேசறேன்" என்றான்.



என்ன பேசினானோ தெரியவில்லை.

அன்று மாலையே ஒரு திருப்பம் நேர்ந்தது...

குகநாதன் எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டார். வீட்டில் கலகலப்புத் திரும்பியது!

தாத்தா அந்த வீட்டில் கம்பீரமாக நடமாடுவதையும் எல்லாருக்கும் எல்லா வசதிகளும் கிடைப்பதை மேற்பார்வை செய்து கொண்டிருந்ததைப் பேத்திகள் மிகவும் ரசித்துக் கொண்டார்கள்.

இப்படியொரு தாத்தாவை பாட்டி ஏன் இழந்தார் என்ற வருத்தம் ஏற்பட்டது. ஆனால் பாட்டியை பற்றி யாருமே பேசவில்லை.

குகநாதன்தான் கேட்டான்.

"ஏன் ஸ்ரீகலா! பாட்டியை யாராவது போய்ப் பாத்தீங்களா?" என்று.

எல்லாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இதற்குள் இரத்தினபூபதியும், மேகலாவும் புறப்பட்டு வந்தார்கள்.

"மாமா! நானும் வைஃப்பும் கிளம்பறோம்" என்றான் இரத்தினபூபதி.

"மாப்பிளே! இன்னும் இரண்டு நாளாவது இருங்க! அப்புறம் புறப்படலாம்!" என்று வற்புறுத்தினார் குகநாதன்.

சகவனும் வற்புறுத்தவே இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

தங்கினார்கள்!

அன்றிரவு!

தனது அறையில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பார்த்தசாரதிக்கு திடீரென்று அது உறைத்தது.

"ஆகாஷ் ஏதோ பழமொழி சொன்னானே.

"நாம நேசிக்கறவங்களைக் காட்டிலும் நம்மை நேசிக்கறவங்கன்னு.."

சட்டென்று அதன் பொருள் புரிந்தது.

"ஓஹோ! அப்படியா.. விஷயம்! ஒரு சேர மகிழ்ச்சியும், அன்பும் உள்ளே பொங்கியது.

தனக்குப் புரியாத ஒன்று- ஆகாஷுக்குப் புரிந்து போனது.

கண்டிப்பாக ஸ்ரீகலா வாய்விட்டு யாரிடமும் சொல்லியிருக்க மாட்டாள்!

அப்புறம் எப்படி?

தனக்கு மட்டும்தான் இந்த விஷயம் கடைசியாகப் புரிகிறது போலும்!

நடந்த எல்லாவற்றிலும் ஆகாஷுக்குப் பங்கு இருக்கும் என்று தோன்றியது.

தான் தன்னைப் புரிந்து கொண்டிருப்பதைக் காட்டிலும் ஆகாஷ் இன்னும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கறானே என்று தோன்றியது.

மனம் நெகிழ்ந்தது.

ஆகாஷை, மறுபடியும் அழைத்தான்!

"எம்பா! அப்பவே என்னவோ பழமொழி சொன்னியே அதுக்கு என்னடா.. அர்த்தம்?" என்றான்.

ஆகாஷ் சிரித்தான்.



"எப்ப சொன்ன பழமொழிக்கு எப்ப விளக்கம் கேட்கறே!" என்றான்.

"எப்பக் கேட்டா என்னடா? விளக்கம் கேட்கன்னு தோணிச்சில்லே! அதுக்கு சந்தோஷப் படுடா!" என்றான்.

விளக்கம் சொன்னான்!

பார்த்தசாரதி இப்போது அமைதியாக உள்வாங்கிக் கொண்டான். ஆழ்ந்த அமைதியுடன் அமர்ந்து கொண்டான்.

* * *

பிரிட்ஜைத் திறந்து பார்த்தார் அன்னபூரணி.

கொஞ்சமே கொஞ்சம் மாவு இருந்தது.

புஷ்பம் இதுவரையிலும் அவரை அடுக்களைப் பக்கம் விடவே இல்லை! தானே எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்வார்.

திடீரென்று இப்படி நேர்ந்து விட்டது!

திருமண வீட்டில் அதிர்ச்சியில் சாய்கிற போதும் கூட "தாலியைக் கட்டு" என்று ஆணையிட்ட மகன் மீது இன்னும் கோபம் அடங்கவில்லை! அதுவும் இந்த மாப்பிள்ளை தனது தந்தையின் உறவுக்காரர் என்று தெரிந்த பிறகும் கூட!

அவரால் ஜீரணிக்க முடியவில்லை!

இத்தனை காலம் உயிரோடிருக்கோமா.. இல்லையா என்று கூடப் பார்க்காத தந்தை!

தன் மகன் தனது வார்த்தைகள் கேட்டு நடக்கிற வரைக்கும் உலகத்தையே ஜெயித்து விட்ட மாதிரி வலம் வந்த அன்னபூரணி.

ஒரு வகையில் தன் கணவன் விஷயத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தை மகள் மூலமாக இட்டு நிரப்பி விட்டதாக அவர் பெருமையுடன் இருந்தார். ஆனால் அத்தனையும் ஒரே நாளில் தலை கீழாக மாறி விட்டது.

எப்படி அத்தனை பேரும் தன்னைப் பற்றிக் கவலைப் படாமல் கல்யாண மண்டபத்தில் அம்போ என்று விட்டு விட்டுப் போனார்கள்.

அப்போதும் கூடத் தன்பக்கம் தவறு இல்லை என்றே அவர் நினைத்தார். மயங்கி விழுந்த மகளை ஆஸ்பத் திரிக்குக் கொண்டு போனார்கள். அதைக் கூட எண்ணா மல் தான்தான் வெளியே வந்தோம் என்பதும் அவருக்குத் தோன்றவேயில்லை.

என்ன முயன்றும் இரத்தினபூபதி தன் கணவனின் உறவுக்காரன் என்பதை அவரால் ஜீரணிக்கவே முடிய வில்லை. அதைக் காட்டிலும் ''உட்கார் மேகலா!'' என்று அவன் மிரட்டிய உடனே மேகலா அமர்ந்தது மட்டுமல் லாமல் தாலி கட்டிக் கொண்டதையும் அவரால் சுத்தமாக ஜீரணிக்க முடியவில்லை.

மடமடவென்று கல்யாண மண்டபத்தை விட்டு வெளியே வந்தார்.

எல்லாரும் குகநாதனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுகிற பரபரப்பில் இருந்தார்கள்.

தன்னுடைய ஃபியட் காரை ஓட்டிக் கொண்டு வீடு வந்த சேர்ந்தார்!

பழைய நினைவுகள் எல்லாம் படையெடுத்தன.

அந்தக் காலத்தில் எத்தனை நண்பர்கள் இருந்தார்கள். எவ்வளவு ''இன்ஃப்ளுயன்ஸ்'' இருந்தது! ஆனால்



இப்போதெல்லாம் அன்னபூரணி என்ற பெண்ணைத் தங்கள் வாழ்நாளில் சந்தித்ததேயில்லை என்பது போல நடந்து கொள்கிறார்கள்!

தன்னைப் பற்றி குகநாதன் என்ன புரிந்து கொண் டானோ தெரியவில்லை. ஒரு நாளும் தன்னிடம் மனம் விட்டுப் பேசியது இல்லை. தனது தந்தையைப் பற்றியும் பேசியதும் இல்லை.

அவன்!

அப்பிராணி என்று நம்பிக்கை கொண்டிருந்த இவன் ''தாலியைக் கட்டுங்க'' என்று ஆணையிடுகிறான்.

உடனே மேகலாவும் உட்கார்கிறாள். தன் கண் முன்னே வெற்றிப் பெருமிதத்தோடு நின்று சுகவனம் திரு மணத்தை நடத்துகிறார்.

இத்தனை நாள் விவரமாகக் காத்திருந்து இரண்டு பேத்திகளுக்குமே தன் விருப்பத்திற்கேற்ப திருமணம் செய்து காட்டிய கணவனின் வெற்றி அவரை ஈட்டிக் கொண்ட தாக்கினாற் போல் குத்தியது.

இன்னொரு மனது சொன்னது!

''அன்னபூரணி! நீ நினைப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை. அவருக்கு செய்த துரோகத்துக்கு உன்னை விட்டு நாகரீகமாக விலகிப் போனார். ஆனால் தன் னுடைய கடமைகள் எதிலிருந்தும் விலகவில்லை. மாறாக வெளியே இருந்தாலும் குடும்பத்தில் என்ன நடக்கிற தென்று கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார். உன்னை வேண்டுமானால் அவமானப்படுத்தியிருக்கலாமே ஒழிய குடும்பத்துக்கு எதுவும் கெடுதல் செய்யவில்லை. நீ யாரிடமாவது கோபித்துக் கொள்ளலாம் என்றால் அது உன்

மகன் குகநாதனிடம்தான். சரியான சமயம் பார்த்து உன்னை கழட்டி விட்டு விட்டானே'' என்றது.

பலவும் எண்ணிக் குழம்பினார்!

பிற்பகலில் பசி எடுத்தது!

ஏதோ ஒரு ஆளை அழைத்து ஹோட்டலில் சாப்பாடு வாங்கி வரச் செய்தார்!

மகனைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை. ஆனால் இரண்டு நாட்கள் கழித்து மகனைத் தன்னுடைய பங்களாவுக்கு அழைத்துச் சென்று விட்டார் சுகவனம் என்று தெரிந்த போது இன்னும் நொந்து போனார்.

''எல்லாரும் என்னைக் கைவிட்டு விட்டார்கள்'' என்று தனிமையில் அழுது கொண்டார்.

இரண்டு நாட்கள் ஹோட்டலில் உணவு வாங்கி வந்த வுடனே வயிறு கெட்டுப் போனது. அந்த உபாதை வேறு. உடலும், மனமும் பலவீனமாகியதும் நெஞ்சில் இது வரை இருந்த துணிச்சல் எல்லாம் போன இடம் தெரி யாமல் மறைந்து போனது.

ஆழ்ந்த மனவருத்தத்தோடு மாவை எடுத்து தோசை வார்த்தார். தொட்டுக் கொள்வதற்கு ஊறுகாயை கொஞ்ச மாய்த் தொட்டுக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டே அமர்ந்தார்.

கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

''இந்தா! புஷ்பா...!'' என்று குரல் கொடுக்கு முன்னே வந்து நிற்பாள் புஷ்பா.

வகை வகையாகச் செய்து பரிமாறுவாள். ''அந்த சின்னக் குட்டி...! என்னதான் எதிர்ப்பும் காட்டினாலும்... வயித் துக்கு வேணும்கறதை செஞ்சு குடுத்துடும்''. என்று எண்ணிக் கொள்கையில் அந்தப் பெரிய ஹாலின் மறு கோடியில் இருந்த கதவருகில் நிழலாடுவது தெரிந்தது.



எதிர்பார்ப்பும் அச்சமுமாய்த் திரும்பிப் பார்த்தார். மேகலா நின்றிருந்தாள்!

''பாட்டி! அப்பா... உங்களைப் பார்த்துட்டு வரச் சொன் னாங்க'' என்றாள்.

''அவன் எதுக்குடி என்னைப் பார்த்துட்டு வரச் சொன் னான். எல்லாரும் திருட்டுப் பரம்பரைடி'' என்று ஏதோ சொல்ல வந்தவர் பின்னால் இரத்தினபூபதி நிற்பதையும் வெறித்துப் பார்த்தார்!

மேகலா உள்ளே வர யத்தனித்த போது.

''உள்ள வராதடி!'' என்று உறுமினார்.

மேகலா புன்னகைத்தாள்! ''வேண்டாம் பாட்டி! பூபதி... மோசமான ஆளு...! தாத்தாவோட சொந்தம் ஆச்சே! பாரு... இப்பக் கூட சட்டைப் பைக்குள்ளே... துப்பாக்கி வச்சிருக்காரு'' என்றாள்.

சிரித்தபடியே தனது உறுமலையெல்லாம் கொஞ்சமும் சட்டை செய்யாமல் காலை எட்டிப் போடுகிற பேத்தியை ஒருவிதக் கையாலாகாத்தனத்தோடு பார்த்துக் கொண்டு நின்றார் அன்னபூரணி.

பூபதியோ சிரிப்பை அடக்கிக் கொண்டு ஆழப் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 25

தேம்பித் தேம்பி அழுகிற அன்ன பூரணி பாட்டியை உலகின் எட்டாவது அதிசயம் போலப் பார்த்துக் கொண் டிருந்தாள் மேகலா.

பரிதாபமாக இருந்தது!

"பாட்டி! ஸ்ரீகலா வாழ்க்கையைப் புரிஞ்சுகிட்ட அளவுக்கு நீங்களும் நானும் புரிஞ்சுக்கலே! உங்க கடந்த கால வாழ்க்கையைப் பற்றி நான் பேச வர்லே! அன்னைக்கு உங்க பாயிண்ட் ஆஃப் வியூல நீங்க செஞ்சது கரெக்டா இருக்கலாம். உங்களைப் பொறுத்தவரை அது சரியா இருக்கலாம். ஆனா,"

"இல்லடி! நான் செஞ்சது எதுவுமே சரியில்லே! உங்க தாத்தா மனசை நோகடிச்சுட்டேன். அதுதான் இன்னைக்கு அனுபவிக்கிறேன்" என்று அன்னபூரணிப் பாட்டி அழ ஆரம்பித்தவுடனேயே மேகலா திகைத்து நின்றாள்.

"இந்த நாலு நாளா... நான் என்ன செஞ்சேன்னு நினைச்சீங்க! இதைப் பத்தித்தான் யோசிச்சிகிட்டிருந்தேன். இப்ப நான் என்னத்தை சாதிச்சேன்! தாத்தா... என்னத்தை சாதிக்கலை!" என்றார்.

மேகலா இந்தத் திருப்பத்தை எதிர்பார்க்கவில்லை. மாறாக இரத்தினபூபதியைத் திரும்பி வியப்புடன் பார்த்தாள். அவனும் புன்னகைத்தான்!

"சரி... நீங்க பேசுங்க! நான் அந்தப் பக்கம் போனா இன்னும் கொஞ்சம் ப்ரீயாப் பேசுவீங்க!" என்று நகர்ந்தான். பாட்டி கர்சீப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் தொடர்ந்தார்.

"ஆமாடி! மேகலா தாத்தா நம்மளை விட்டுட்டுப் போனதுக்கப்புறம் நான் உன் மேலதான்டி.... எல்லாப் பிரியத்தையும் வச்சேன். "நீ என்னை மாதிரி வரணும்... உன்னை வச்சு ஜெயிக்கக் காட்டணும்னு நினைச்சேன்! ஆனா" என்று அவர் முடிக்கவில்லை... அதற்குள் மேகலா குறுக்கிட்டாள்.



"இப்ப என்ன ஆயிடுச்சு. பாட்டி! பார்த்தசாரதிக்கு நாம செஞ்ச துரோகத்துக்கு மேகலாவைக் குடுத்து ஈடுகட்டியாச்சு. சொல்லப்போனா பார்த்தசாரதிக்கு என்னைக்காட்டிலும் ஸ்ரீகலாதான் ரொம்பப் பொருத்தமானவ" என்றாள்.

பாட்டி நீண்டதொரு பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார்.

"அது அப்படித்தான்!"

மேகலாவே மறுபடியும் தொடர்ந்தாள்.

"அப்புறம் என்ன பாட்டி கவலை! ஒருவேளை இரத்தினபூபதி தாத்தாவுக்கு சொந்தக்காரர்ன்னு பயப்படறீங்களோ?"

சற்று நேரம் மௌனம் காத்த பாட்டி சொன்னார்.

"கல்யாணத்தன்னைக்கு எனக்கும் அப்படி ஒரு பயம் இருந்தது. ஆனா... இப்ப நாலு நாளா... எல்லாரும் என்னைக் கைவிட்டுட்டு..."

"ப்ளீஸ் அப்படி நினைக்காதீங்க! நாங்க யாரும் உங்களைக் கைவிடவெல்லாம் செய்யலே! எல்லாரும் அப்பா... அப்பான்னு அவரைக் கவனிச்சுகிட்டு கிடந்தோம். நேத்துதான் அவரு நார்மலுக்கு வந்தாரு... உடனே உங்களைத்தான் கேட்டாரு..." என்றாள் மேகலா.

"சரி. நீங்க என்னைக் கைவிடலேன்னே வைங்க... ஆனா நான் இந்த நாலுநாளும் எல்லாத்தையும் அனலைஸ் பண்ணினேன்." என்றார்.

திடீரென்று நினைவு வந்தவர் போலக் கேட்டார்.

"ஏன்டி! ஸ்ரீகலாவுக்காக தாத்தாவே பார்த்தசாரதி கிட்டே போய்ப் பேசினாராமா?" என்று.

"இல்லை. பாட்டி! ஆகாஷ்தான் பேசினார். ஆனா பின்னணியில தாத்தா இருந்திருக்காரு. தாத்தா நம்மளை விட்டு எங்கயும் போயிடலை! இங்க இருந்து ஒரு இருபது மைல் தொலைவிலதான் இருந்திருக்காரு..." என்றாள்.

"ஓ! பயங்கரமான ஆள்றி! உங்க தாத்தன் இந்தப் புத்திசாலித்தனம் அந்தக் காலத்துல இருந்திருந்தா நான் ஏண்டி... அல்லாடியிருக்கப் போறேன்" என்றார்.

மேகலா கவனமாக அது குறித்துப் பேசுவதைத் தவிர்த்துவிட்டாள்.

அன்னபூரணியே மறுபடியும் தொடர்ந்து பேசினார்.

"ஏண்டி! உங்கப்பா இங்கே வருவானா... இல்லே!" என்றார்.

"ஏன்... பாட்டி! நான் ஒண்ணு கேக்கறேன்..., அதுக்கு பதில் சொல்லு! என்னமோ... எங்கப்பா... மேல... பாசம்ன்னு சொல்றியே நாலு நாளா எங்கப்பா கிட்டத்தட்ட செத்துப் பொழச்சாரு நீ ஏன் வந்து பாக்கலே!"

"அதான்... உங்க தாத்தா... அங்க இருந்தாரே!"

"தாத்தா... இருந்தா... என்ன... பாட்டி! நீ போய்ப் பார்த்திருக்கணும் இல்லே!" என்றாள் மேகலா காட்டமாக.

அன்னபூரணியால் பேச முடியவில்லை. பிறகு மெது வான குரலில் சொன்னார்.

"இல்லடி! உங்க தாத்தன் ஏதாவது அவமானப்படுத் தினா... நான் என்ன... செய்யறது?" என்றார்.

"பாட்டி... மகன் மேல இருக்கிற பாசத்தைக் காட்டிலும் உனக்கு செல்ப் ரெஸ்பெக்ட்தான் முக்கியமாப் போச்சு..." என்றாள் மேகலா.



"அப்படியில்லைடி...!" நான் வரணும்ன்னுதான் நினைச் சேன்... ஆனா... பயம்மா... இருந்துச்சு...நீங்க எல்லாரும்... என்னை விட்டுட்டுப் போயிட்டீங்க!" என்றார்.

மறுபடியும் அழுதுவிட்டார்!

"பாட்டி! அழாதீங்க! நான் போய் அந்த வீட்ல பேசிட்டு... உங்களுக்குத் தகவல் குடுக்கறேன். நானும் ஸ்ரீயும் அப்பாகிட்டே பேசறோம்..." என்றாள்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பினாள்.

மீண்டும் வீடு முழுவதும் தனிமையே சூழ்ந்திருக்க அன்னபூரணியின் நெஞ்சில் முதல் முதலாகத் தனிமை யின் பயம் சூழ்ந்தது.

இதுநாள் வரையிலும் தான் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த பேத்தி இப்போது தாத்தாவிடம் பேசி அனுமதி வாங்கிக் கொண்ட பின்னரே தன்னை அங்கே வரவழைப்பாள் போலிருக்கிறது.

ஒரே மாதத்திற்குள்ளாகத் தன் ஆதிக்கம் தளர்ந்து போய் நிலைமை தலைகீழாக மாறியது எப்படி என்று யோசிக்க ஆரம்பித்தார்.

• • •

தாத்தா... அம்மா, அப்பா... எல்லாமாக விமான நிலையத்துக்கு வந்திருந்து ஸ்ரீகலாவையும், பார்த்தசாரதியை யும் வழியனுப்பினார்கள்.

விமானப் பயணத்தின் போது.

"ஏங்க... சாரதி! பாட்டியைப் பார்த்தாலும் பாவமா இருக்கு. தாத்தாவைப் பார்த்தாலும் பாவமா இருக்கு...

இளமைப் பருவத்துல வாழ்க்கையில குழப்பங்கள் வந்தா மொத்த வாழ்க்கையும் வீணாப் போகுதில்லே!'' என்றாள்.

''ம்...!'' என்றான்.

''நாம எதுவும் பண்ண முடியாதா?'' என்று ஆவலாக அவன் முகத்தைப் பார்த்தாள்.

''பண்ணியிருக்கு... அது உனக்குத் தெரியாதில்லே!'' என்றான்.

''ம்... அப்படியா?'' என்று கண்களை அகல விரித்தாள்.

''ஆமா! ஸ்ரீ... ஆகாஷ் இரத்தினபூபதிகிட்டே பேசினேன். இரத்தினபூபதியும், மேகலாவும் ரெண்டு நாளுக்கு முன்னாலே போய் உங்க பாட்டிகிட்டே பேசியிருக்காங்க. பாட்டி இப்பத்தான் யோசிக்க ஆரம்பிச்சிருக்காங்க...''

''உலக அதிசயம் தான்!'' என்றாள் ஸ்ரீகலா.

''எது?'' என்றான் பார்த்தசாரதி.

''பாட்டி யோசிக்க ஆரம்பிச்சதுதான்'' என்றாள். பார்த்தசாரதி சிரித்தான்!

ஸ்ரீகலாவுக்கு சட்டென்று அது புரிந்தது.

இப்போதெல்லாம்... பார்த்தசாரதியிடம் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் பழகுகிறோம் என்பது புரிந்தது.

''ஸ்ரீ! நல்லா வாயடிப்பியோ?!'' என்றான்.

அவள் களுக்கென்று சிரித்தாள்.!

''பின்னே! எப்படி பாட்டிகிட்டேயிருந்தும் மேகலாகிட்டே இருந்தும் என்னைக் காப்பாத்திக்கறது? கொஞ்சம் சுருக்குன்னுதான் பேசுவேன். அதனாலதான் பாட்டி என்கிட்டே நெருங்காம இருந்தாங்க... தெரியுமா?''



''ஓ! இது ஒருவகை தற்காப்பு ஆயுதமோ?''

''ஆமா...ங்க... சாரதி! ஐயோ! சின்னது இருக்கே! அது முகத்திலே அடிச்ச மாதிரிப் பேசும்னு என்கிட்டே நெருங்கவே மாட்டாங்க...'' என்றாள்.

அதற்கும் பார்த்தசாரதி சிரித்தான். பிறகு ஆத்மார்த்தமான குரலில் சொன்னான்.

''ஸ்ரீ! இப்ப நினைச்சா... எனக்கு ஆச்சரியமா இருக்கு...! மேகலா... ரொம்ப ஹாலேவான ஆளுன்னு எனக்கு எப்படிப் புரியாமப் போச்சு!'' என்றான், தன்னிரக்கம் குறைந்த குரலில்.

''ப்ளீஸ்! நாம மேகலாவைப் பத்திப் பேச வேண்டாமே...!''

''ஏன்?''

''என்ன இருந்தாலும் எனக்கு அக்காதானே! அவளைக் குறை சொல்லும்போது அதுல உண்மை இருந்தால் கூட ஒரு பக்கம் வலிக்குது!'' என்றாள்.

பார்த்தசாரதி அவளை ஆழ்ந்து பார்த்தான். பிறகு சொன்னான்.

''ஸ்ரீ! நீ ரொம்ப ஸ்வீட்டான பொண்ணு'' என்று.

ஸ்ரீகலா அப்போது நினைத்துக் கொண்டாள்.

''பாசம் ஒருபுறம் அவளைப் பற்றி ஒருபுறம் அலசும் போது... அவளது கீழ்மையான குணங்களும் வெளி வரும்போது இன்னும் கேவலமாகப் போய் விடும்.''

அன்றைய பேச்சில் மேகலாவுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் நிறைய அறிவுரை சொல்லியிருந்தாள் ஸ்ரீகலா.

தொடர்ந்து பட்ட காயங்களுக்குப் பிறகு மேகலா யோசிக்கவும் ஆரம்பித்திருந்தாள். அவள் மட்டுமல்லா மல் யோசிக்க ஆரம்பித்திருந்த பாட்டி மீதும் அவர்களுக்கு அக்கறை இருந்தது.

ஸ்ரீகலாவுக்கு தாத்தாவை மிகவும் பிடித்தது. குடும் பத்தை விட்டுப் போனாலும் அவர் குடும்பப் பொறுப்புக் களில் இருந்து விலகிவிடவில்லை. எங்கோ அருகி லேயே இருந்து கொண்டு குடும்பத்தைக் கண்காணித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறார்.

சரியான நேரத்துக்கு இரத்தினபூபதியைக் களத்தில் இறக்கி.... சும்மா... சொல்லக் கூடாது... தாத்தா... கெட்டிக் காரர்தான் என்று எண்ணிக் கொண்டாள்.

அப்போதுதான் அந்த சந்தேகம் தோன்றியது.

தாத்தாவுக்கு தன் மனம் ஒருவேளை புரிந்திருக்குமோ. அதனால்தான் ஆகாஷிடம் பேசி... அவரையே விட்டுத் தன்னிடம் பேச...!

சட்டென்று அவளுக்குள் வெட்கம் படர்ந்தது!

எல்லாரும் கண்டு பிடித்து விட்டார்களோ! அவள் முகம் சிவப்பதை ஆர்வத்துடன் கவனித்துக் கொண் டிருந்த பார்த்தசாரதி கேட்டான்!

கண்களில் குறும்பு தெரிந்தாற்போல் இருந்தது.

"என்ன... ஸ்ரீ! யோசனை!" என்று.

"இல்லே! ஒண்ணும்... இல்லே!" என்றாள் தலையைக் குனிந்து கொண்டாள்.

பார்த்தசாரதி அதற்கு மேல் அதைப்பற்றி பேச வில்லை. பேச்சை மாற்றிவிட்டான்.



"ஸ்ரீ! நிறைய லீவு போட்டாச்சு! இனிமே ஆபீஸ்ல நிறைய வேலை இருக்கும்! முன்ன பின்னதான் வரு வேன்! நீ அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்" என்றான்.

ஸ்ரீகலா தலையை ஆட்டிக் கொண்டாள். அவன் கண்களை மூடித் தலையைப் பின்புறம் சாய்த்து உறங்க ஆரம்பித்தான்.

அவளுக்கு உறக்கம் வரவில்லை. மாறாக சிந்தனை பின்னோக்கி ஓடியது!

அன்றைக்கு முந்தின நாள்!

புறப்படுவதற்கு முன்பாக தாத்தாவிடம் நிறையப் பேசினாள்.

"அப்ச்சி! இப்ப எடுக்கற மாதிரி ஸ்டெப்ஸ் நீங்க அப்ப எடுத்திருந்தீங்கன்னா கதையே வேற..." என்று ஆரம் பித்தாள்.

"எப்படி எடுக்கறது? அப்ப எனக்கு அதிக வசதி யில்லே! சாதாரண ஆள். உங்க பாட்டி வசதியான இடத் திலே இருந்து வந்தவ... அது மட்டுமல்ல மேல் மட்டக் கலாச்சாரம் அதுலே எதுவுமே தப்பில்லேன்னு நினைக் கறான்னு அப்புறம்தானே புரிஞ்சது. எனக்கும், அவளுக் கும் ஒத்து வராதுன்னு புரிஞ்சுக்கறதுக்குள்ளே... உங்கப் பன் பொறந்துட்டான். அந்த ஒரு காரணத்துக்காகப் பொறுத்தேன். அதுக்காக எத்தனை நாள் அவமானப்பட முடியும்?" என்றார்.

தாத்தா சொல்வதிலும் நியாயம் இருப்பதாக அவளுக் குத் தோன்றியது. உண்மைதான்... பாட்டியின் குணத்துக் குத் தாத்தா அவ்வளவு நாள் கூட இருந்ததே ஆச் சரியம்தான் என்று எண்ணிக் கொண்டாள்.

மெதுவாக அடுத்த கட்டத்துக்குப் போனாள். "அது சரிங்க... அப்ச்சி! நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சதுல... ரொம்ப பாதிக்கப்பட்டது எங்க அப்பாதான்... தெரியுமா?" என்றாள்.

தாத்தா மறுக்கவில்லை.

"உங்களைப் போல சுய சிந்தனைக்காரராயும், சுய மரியாதைக்காரராகவும்,... இருக்கக் கூடாதுன்னு... ரொம்பக் கேர்புல்லாய் பாத்துக்கிட்டாங்க... பாட்டி...!" என்றாள்.

தாத்தா மறுபடியும் கசப்புடன் புன்னகைத்தார்.

ஸ்ரீகலா தாத்தாவைப் பார்த்து மறுபடியும் குறும்புடன் சிரித்தாள்.

"ஆனா எங்கப்பா... பாட்டியை ஏமாத்திட்டாரு...?" என்றாள்.

"எப்படி?"

"எங்கப்பா... சுயசிந்தனை உள்ளவர்தான். ஆனா, பாட்டியோட திருப்திக்காக... ஒண்ணுமே புரியாத மாதிரி... நடிச்சுக்குவாரு. ஆமாம் சாமி... போடுவார்... ஆனா, மேகலா கல்யாணத்துல பாட்டிக்கு ரொம்ப அதிர்ச்சியாய்ப் போச்சு" என்றாள்.

"அந்த அதிர்ச்சி வைத்தியம்தான் அவளுக்குத் தேவை!" என்றார் சுகவனம்.

ஸ்ரீகலா மெதுவாக விஷயத்துக்கு வந்தாள்.

"அப்ச்சி! ஆனா... இப்ப எனக்கு என்ன தோணு துன்னா... அப்பா அம்மா எல்லாம் வெளியே வந்ததுல... கண்டிப்பா... பாட்டி இப்ப வெக்ஸ் ஆகியிருப்பாங்க. அப்ச்சி! போனதெல்லாம் போகட்டும். இனிமேலாவது பாட்டியை உங்களோட சேத்துக்குங்க" என்றாள்.



தாத்தாவின் முகத்தில் மண்டிய அளவிலா வேதனை அவளைத் தாக்கியது.

"பாரு... ஸ்ரீகலா! நான் உங்க பாட்டிக்கு எந்தத் துரோகமும் செய்யலே. பாட்டிதான் எனக்கு துரோகம் செஞ்சா... தெரியாம நிகழ்ந்த தப்பு இல்லே அது! தெரிஞ்சே நடந்த தப்புக்கள். எப்படி சகிக்கக் முடியும்?" என்றார்.

"புரியுது... அப்ச்சி...! ரொம்ப நல்லாப் புரியுது அவங்க செஞ்ச எதையும் நாங்க நியாயப் படுத்தலே...! ஆனா... வயசான காலத்துல அவங்களைத் தனியா விட வேண்டாம்...கறதுதான் எங்களோட கோரிக்கை...!" என்றாள்.

தாத்தா முகம் இறுக்கமாகவே இருந்தது. ஸ்ரீகலா அதற்கு மேல் பேச்சை மாற்றி விட்டாள். ஆனாலும் உள்ளூர ஒரு திருப்தி...!

தாத்தாவின் காதில் விஷயத்தைப் போட்டாகிவிட்டது. எப்படியும் எல்லாருமாக வேண்டிக் கொண்டால் நடக்கலாம்!

பாட்டியும், தாத்தாவும் ஒரே கூரைக்குக் கீழே இருந்தால் அப்பாவாவது சந்தோஷமாக நடமாடுவார் என்று எண்ணினாள் ஸ்ரீகலா. மேகலாவிடம் அது விஷயமாகப் பேசி ஏதாவது செய்யச் சொல்லியிருந்தாள்.

என்ன நடந்ததோ... தெரியவில்லை... என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே மிக இயல்பாகப் பார்த்தசாரதி அவள் தோளில் தலையை வைத்துக் கொண்டு உறங்கினான்.

தன் கணவனின் ஸ்பரிசத்தில் சற்றே தவித்துப் போய் அமர்ந்திருந்தாள்.

எதிர்காலம் என்ன வைத்திருக்கிறதோ என்று யோசித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவன் எது குறித்தும் தீவிரமாக முடிவெடுப்பதற்குள்ளாக மூன்று மாதங்கள் வேகமாக ஓடியிருந்தது.

# 26

''தம்பி! நீ கொஞ்சம் பர்மிஷன் கேட்டுட்டு வாயேன்'' என்று புனிதவதியின் படபடப்பான குரலைக் கேட்டு பார்த்தசாரதி லேசான பதைபதைப்புக்குள்ளானான்.

''என்னம்மா... விஷயம்!'' என்றான்.

''தம்பி! பெரிய விஷயம் இல்லே! ஆனா, சின்ன விஷயம்னு சொல்றதுக்கு இல்லே! நம்ம ஸ்ரீ சமைக்கும் போது குக்கர் வெடிச்சு...''

''ஐயோ...!''

''இல்லல்லே! அப்படி பயப்பட வேண்டாம்! மூடி தெறிச்சு விட்டத்துல போய் ஒட்டிருச்சு. குக்கர்ல கொதிச்சுகிட்டிருந்த வெந்நீர்... குப்புன்னு தெளிச்சது ஸ்ரீமேல... விழுந்துடுச்சு... இடுப்புப் பக்கமா...!''

''டாக்டரை...!''

''அதெல்லாம்... நம்ம உமா வந்து பாத்துருக்கு. உள்ளே ரூம்ல இருக்கு. நீ எதுக்கும் புறப்பட்டு வாயேன்.''

''சரி... சரி... வர்றேன்...!'' என்றான் சி.பி.ஓவிடம் அனுமதி வாங்கிக் கொண்டு கிளம்பினான்.

ஸ்ரீகலா அன்றைக்குக் காலையில் இருந்தே ஏனோ சோர்வாக உணர்ந்தாள்.

கடந்த மூன்று மாதங்களாக வாழ்க்கை வேகமாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது.

காலையில் கணவனுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுத்து அனுப்புவது... பிற்பகலில் உணவுக்கு வரும் நேரம் கவனிப்பது.

அதற்குப் பிறகு... அத்தை, மாமாவுடன் சற்று நேரம் அளவளாவுவது என்று நேரம் செலவழிப்பாள்.



கிடைத்த நேரத்தில் ஓவியங்கள் வரைவாள்.

ஸ்ரீகலா வரைகிற ஓவியங்களுக்குப் பார்த்தசாரதிதான் முதல் ரசிகனாக இருந்தான்!

அவள் ஒவ்வொரு படத்திலும் நிறங்களைச் சேர்க்கிற விதம் உணர்வுகளை வெளிப்படுத்துகிற விதம் என்று மிகவும் ரசிப்பான்.

ஒரு நாள் சொன்னான்!

''ஸ்ரீ உன்னையே ஒரு ஓவியமா வரையேன் என்று. அதற்கு உதவியாக அவளை நிற்க வைத்து ஒரு போட்டோ எடுத்துக் கொடுத்தான்.

வேண்டுமென்றே ஏதோ சொல்லிச் சிரிக்க வைத்து எடுத்தான். டிஜிட்டல் காமிராவை வைத்துக் கொண்டு நிறைய போட்டோக்கள் எடுத்தான். அதில் தனக்குப் பிடித்த ஒரு புகைப்படத்தைக் கொடுத்து வரைந்து கொடுக்கச் சொன்னான்.

வரைந்தாள்!

நாலைந்து நாட்கள் ஆனது அந்த ஓவியம் வரைந்து முடிப்பதற்கு.

''சாரதி! நான் முழுசா... முடிக்கற வரைக்கும் உங்களுக்குக் காட்ட மாட்டேன்'' என்றாள் செல்லமாக.

''ஓ.கே.! ஆனா... எத்தனை நாள்ல முடிப்பே!'' என்றான்.

''ஃபோர் ஆர் ஃபைவ் டேஸ்'' என்றாள்.

தினமும் இரவு வந்தவுடன் அவள் முகத்தை ஆர்வமாகப் பார்ப்பான்.

அவள் புன்னகைப்பாள்.

''இன்னும் கொஞ்சம் வேலையிருக்கு..'' என்பாள்.

''சரி..!'' என்பான் ஏமாற்றத்தோடு.

ஐந்து நாட்களுக்கு மேலானது!

"ஸ்ரீ...! இனி எனக்குப் பொறுக்காது!" என்றான்.

"ப்ளீஸ்! ப்ளீஸ்! ஒன் மோர் டே... நாளைக்கு சாயங்காலம் உங்கள் பார்வைக்கு வைக்கப்படும்" என்றாள்.

அதே போல் திரை போட்டு வைத்திருந்த ஓவியத்தைத் திறந்து காட்டினாள்.

அந்த ஓவியத்தைப் பார்த்த பார்த்தசாரதி அப்படியே பார்த்துக் கொண்டேயிருக்கிற சாரதியாக மாறிப் போனான்.

வெகு நேரம்...! அமைதியாகவும், ஆழ்ந்த ரசனையோடும் அவன் அந்த ஓவியத்தை ரசித்துப் பார்ப்பதைக் கண்ட ஸ்ரீகலாவுக்கு பெருமிதமாக இருந்தது.

எந்த ஒரு படைப்பாளிக்கும் ஏற்படக் கூடிய மகிழ்ச்சி அவனுக்கும் ஏற்பட்டது.

அப்படியே ரசனையில் மூழ்கிப் போனான். சற்றுக் ழித்து மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தான். ழுங்கி விடுவது போல பார்த்த அந்தப் பார்வையை வள் ரசனை சார்ந்த பார்வையாகவே எடுத்துக் கொண்டாள்.

முகம் சிவந்தது!

"ப்ளீஸ்!" என்றாள் குரல் எழும்பாமல்.

"ஸ்ரீ! ஐ ம் பிரவுட் ஆஃப் யு...!" என்றான். மறுபடியும் ராம்ப... ரொம்பப் பெருமையாயிருக்கு..." என்றான்.

அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

"உனக்கு விருப்பப்பட்ட மாதிரி... படங்கள் வரைஞ்சு ளு. அடுத்த வருஷம் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்ய ம்" என்றான்.

வளுக்கும் அவனது ஆர்வம் மலைப்பாக இருந்தது. யென்று தலையாட்டினாள்.



"ஹேய்... ஸ்ரீ! அம்மா, அப்பாகிட்டே சொல்லலாம்" என்று அறை வாசலை நோக்கி வந்தவன் என்ன நினைத்தானோ நின்றான்.

திரும்பி அவளை நோக்கி வந்தான்.

"இஃப் யு பர்மிட்... மா!" என்று முகம் நோக்கிக் குனிந்தான்.

மிக வேகமாகவும் இல்லாமல், அழுத்தமாகவும் இல்லாமல் மென்மையாக ஒரு முறை முத்திரை பதித்து நிமிர்ந்தான்.

கண்கள் தரையைப் பார்க்க, படபடத்தபடி நிக்கிற மனைவியை நின்று ஆழ்ந்து பார்த்தான்.

ஒரு நிமிடம் நின்றானோ.... எவ்வளவு நேரம் நின்றானோ... தெரியவில்லை.

அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை.

ஒருவிதமாகப் பார்த்து விட்டு அறையை விட்டு வெளியேறினான்.

அதற்குப் பிறகு!

அன்றைக்கெல்லாம் ஒரே அமளியாக இருந்தது. சகோதரிக்கு போன் செய்து புகழ்ந்து தள்ளியிருப்பான் போலும்.

பத்மா அன்று மாலையே கணவனுடன் வந்தாள்.

"என்ன ஓவியரே! இது நியாயமா? உங்களை மட்டும் தான் வரைஞ்சு தள்ளுவீங்களா? எங்களையெல்லாம் வரைய மாட்டீங்களா?" என்று கலாட்டா செய்தாள்.

"இல்லே! உங்க தம்பிதான்!" என்று அவள் முகம் சிவக்க முணுமுணுப்பதைப் பார்த்தும் சிரித்தபடி குறுக்கிட்டாள்.

"ஏனாம்! நேர்ல பாக்கறானே... மிட்டாயை முழுங்கற மாதிரி..! அது பத்தலையாக்கும்" என்று அவன் செய்த கலாட்டாவை தாங்க முடியாமல் பார்த்தசாரதியே குறுக்கிட்டான்.

"போதும்.... பத்மா... விடு!" என்று

"அதெப்படி விடறது! என்னையும் எங்காத்துக்காரரையும் ஜோடியா ஒரு படம் வரைஞ்சு குடுக்கச் சொல்லு. அப்புறம்... அம்மாவையும்... அப்பாவையும்..." என்றாள்.

"ஏய்! அவ என்ன போட்டோக் கடையா நடத்தறா?" ஜோடி ஜோடியா வரையறதுக்கு" என்று புனிதவதி சிரித்தார்.

"நம்ம ஸ்ரீயோட ஓவியத் திறமைக்கு இயற்கைக் காட்சிகள் வரைந்தா... நல்லா இருக்கும்" என்றார் கோபாலகிருஷ்ணன்.

"அப்பா..! அப்ப ஒன்னு செய்வோம். நயாகரா ஃபால்ஸ்... அங்கே... இங்கேன்னு போவோம். அந்தப் பின்னணியில நாம நின்னு போட்டோ எடுத்துக்குவோம்! அதை அடிப்படையா வச்சு வரையட்டும்" என்றாள் பத்மா.

"இது நல்லா... இருக்கே?" என்று பாராட்டிக் கொண்டான் பார்த்தசாரதி.

"சரி... நானும், உங்கம்மாவும் ஹனிமூன் போனோமே அப்ப எடுத்த போட்டோ இருக்கு...! நீங்கதான் ஹனிமூன் ஆல்பம் பார்த்திருக்கீங்களே... அதை அடிப்படையாக்க வரைஞ்சு குடு..." என்றார் கோபாலகிருஷ்ணன்.

"சரிங்க மாமா...!" என்றாள்.

"அப்ப... நாங்க எங்கே... போறது?!" என்று கணவரைப் பார்த்தாள்.



பத்மாவின் கணவன் திருவேங்கடம் மென்மையாக புன்னகைத்தான். பத்மாவின் கலாட்டாக்களை தலையிடாமல் ரசித்துக் கொள்பவன்.

''எங்கன்னாலும்... சரி...! தம்பி... ஆனா... உன் செலவிலே!'' என்றான்.

''அப்ப... சரி! இந்தத் தெருக்கோடியிலே ஒரு பார்க்க இருக்கே! அங்கே போவோம்.. ஸ்ரீ எதுக்கும்... கொஞ்சம் சுண்டல் செஞ்சுரு... சாப்பிட்டுகிட்டே உட்கார்ந்து நீ வரைவியாம்...'' என்றான் சாரதி.

''ம்ஹூம்...! அதெல்லாம் முடியாது! லிபர்ட்டி சிலைதான் எங்களுக்கு பேக்கிரவுண்ட்'' என்று அறிவித்தாள் பத்மா.

''ஆமா... சாரதி! லிபர்ட்டியை நாம சிலையில தான் பார்க்கணும். இவங்ககிட்டே மாட்டினதுக்கப்புறம் நமக்கு நிஜ வாழ்க்கையில ஏது லிபர்ட்டி...'' என்று பெருமூச்சு விட்டான் ''வெங்கட்'' என்று அழைக்கப்படுகிற திருவேங்கடம்.

''வெங்கட்... அண்ணா! ஜாக்கிரதை! பத்மா அண்ணி பாட்டுக்கு கோபத்துல எங்கயாவது பிடிச்சுத் தள்ளி விடப் போறாங்க! அப்புறம்... கேட்டா...'' பாஸ்டன் டீ பார்ட்டி மாதிரி இது ஒரு விதமான பார்ட்டிம்பாங்க என்று சிரித்தாள் ஸ்ரீகலா.

எல்லாரும் சிரித்தார்கள்.

இப்படி எப்போதும் கலகலப்பாக இருக்கிற தனது குடும்பத்தை மிகவும் நேசிக்க ஆரம்பித்திருந்தாள் ஸ்ரீகலா.

அவளுக்கு அப்போது தோன்றியது.

''தன்னை ஒரு படம் வரைந்து கொடுக்க வேண்டும்'' என்று பார்த்தசாரதி கேட்கவில்லை என்று.

வரைய வேண்டும்.

சாரதிக்கே தெரியாத வண்ணம் வரைந்து கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் அந்தப் படத்தை வரைய ஆரம்பித்திருந்தாள்.

எப்போதும் அது குறித்த யோசனையில் இருந்ததனாலோ என்னவோ காலையில் சற்று கவனக் குறைவாக இருந்து விட்டாள்.

காஸ்கெட்டை சரியாகப் பொருத்தாததலோ என்ன காரணமோ தெரியவில்லை. அந்த விபத்து நேர்ந்து விட்டது.

சத்தம் கேட்டு அத்தையும் மாமாவும் ஓடி வந்தார்கள்.

அதற்குள்ளாக சமீபத்தில் ஒரு புத்தகத்தில் படித்த விஷயம் நினைவுக்கு வர பாத்ரூமுக்குள் ஓடினாள்.

ஆடைகளைத் தளர்த்திக் கொண்டு சட்டென்று குளிர்ந்த நீரை எடுத்து வெந்நீர் பட்ட இடங்களில் எல்லாம் வீசினாள்.

அந்த வைத்தியமே போதுமானதாக உணர்ந்தாள். ஆனால், அத்தையும், மாமாவும் தங்கள் குடும்ப நண்பனின் பெண் டாக்டர். உமாவை வரவழைத்தார்கள்.

உமா வந்து பரிசோதித்து விட்டு...

"ஒண்ணும் பயப்படுகிறதுக்கில்லை. உடனே குளிர்ந்த தண்ணீர் ஊற்றியது நல்ல விஷயம். அப்படியும் கொஞ்சம் பிராப்ளம் இருந்தா... இந்த ஆயின்ட்மெண்டைப் போடுங்க" என்று எழுதிக் கொடுத்து விட்டு வெளியே வந்தார்.

அறையை விட்டு வெளியே செல்கையில் "ஏய்... ஸ்ரீ! யாள் மேலாவது கோபமா? இப்படி நீ வெடிக்கறதுக்கு பதிலா க்கரை வெடிக்க விடறே!" என்று கலாட்டா செய்து விட்டுப் போனார்.



எப்போதும் போல தனது வெட்கப் புன்னகையையே பதிலாக வீசினாள் ஸ்ரீகலா.

அதே நேரம்!

பார்த்தசாரதி முகத்தை அழுத்தத் துடைத்தபடி பரபரப்பாக வந்தவன்.

''அம்மா.... ஸ்ரீ!'' என்று குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தான்.

''வாங்க...! சாரதி...! ஒண்ணும் பயப்படுறதுக்கில்லே! ட்ரீட்மெண்ட் குடுத்தாச்சு...!. ஆயின்ட்மெண்ட் எழுதிக் குடுத்துருக்கேன். கொஞ்சம் அதிர்ச்சி ஆயிருக்காப்ல அது நீங்க குடுக்கற ட்ரீட்மெண்டைப் பொறுத்து மாறும்'' என்று அவனிடம் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே பேசிய உமா விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்.

''ஸ்ரீ!'' என்று அவன் அறைக்குள்ளே புகுகிற நேரம் பத்மா பரபரப்பாக வந்தவள்.

எப்போதும் வேடிக்கையாகப் பேசுபவள் தனது வேடிக்கைப் பேச்சையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு,

''என்ன ஸ்ரீ! கேர்ஃபுல்லா இருக்கறதில்லையா? மேலே சுவத்துல அடிச்ச மூடி... தப்பித் தவறி... முகத்துல... ஐயோ...'' என்று பதைபதைத்தாள்.

''அண்ணி! அப்படி எல்லாம் எதுவும் நடக்கலே! என் கண்டதையும்... வீணாக் கற்பனை பண்ணிக்கறீங்க'' என்றாள் ஸ்ரீ ஆறுதலாக.

''பார்றா! அலட்டிக்காம சொல்றா! ஜாடிக்கேத்த மூடி! உன்னை மாதிரியே...!'' என்றாள் ஆதங்கத்துடன்.

அவர்கள் எல்லாருமாகத் தனக்காகப் பதைக்கிற பதைப்பில் தெரிகிற அன்பைக் கண்டு மனம் உருகினாள் ஸ்ரீகலா.

''விடுங்கண்ணி! இனிமே கேர்ஃபுல்லா இருந்துக்கறேன்.'' என்றாள்.

''ஸ்ரீ! நான் ஏன் இப்படிப் பதைச்சுப் போறேன்னா... எனக்குத் தெரியும். இந்த மாதிரி சமயங்கள்ல... எரிச்சல் எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியும். ஒருதடவை பட்டாசு நெருப்புப் பட்டு... நான் பட்டேனே அவஸ்தை'' என்று சொல்லிக் கொண்டாள்.

''இல்லங்கண்ணி! நான் உடனே தண்ணியை எடுத்து வீசி அடிச்சுட்டேன். அதனால புண்ணாகலை...'' என்றாள் ஸ்ரீ.

''ஆமா! முதல்லயெல்லாம் தண்ணியை ஊத்தாதீங்க...! ஜமுக்காளத்துல சுத்துங்க... அப்படீன்னெல்லாம் சொல்வாங்க... இப்ப லேட்டஸ்ட் தியரி என்னன்னா... வெண்ணீ பட்டாலோ... சூடு பட்டாலோ உடனே பச்சைத் தண்ணீரை அந்த இடத்துல மேல ஊத்தச் சொல்றாங்க'' என்றாள் பத்மா.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பினார்கள் பத்மாவும், கணவரும். அதுவும் ''ஒண்ணும் பிரச்சினையில்லை'' என்று பலமுறை ஸ்ரீகலா சொன்னதற்குப் பிறகுதான் போனார்கள்.

''ஸ்ரீ! நீ ரெஸ்ட் எடுத்துக்கோ! நான் சமையல் பார்த்துக்கறேன். சிம்பிளாய் செய்துக்கலாம்'' என்று அறைக்கு அனுப்பினார் அம்மா.

எப்போதும் இரவு நேரத்தில் பார்த்தசாரதி அரிசி உணவு வகைகள் சேர்க்க மாட்டான். இன்றைக்குத்தான் என்னவோ.

''ஸ்ரீ! சாதம் சூடா செஞ்சு... ரசம் வச்சு வை...!'' என்று சொன்னான்.

அதற்கான முயற்சிகளில் இறங்கும் போதுதான் இப்படியாகிப் போனது.



இரவு உணவு எளிமையாக முடித்துக் கொண்டவுடன் தங்கள் அறைக்கு வந்தார்கள்.

பார்த்தசாரதி அலுவலக அறையில் கொஞ்ச நேரம் செலவழித்து விட்டு வந்த போதுதான் அந்தக் காட்சியைப் பார்த்தான்.

ஆயின்ட்மெண்ட் டப்பாவைக் கையில் வைத்துக் கொண்டு தயக்கத்துடன் விழித்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீகலா.

''என்ன ஸ்ரீ?'' என்று நெருங்கினான்.

''எங்கயாவது எரிச்சல்... இருந்தால் மட்டும் போடச் சொன்னாங்க'' என்றாள் முணுமுணுப்பாக.

''எங்கே?'' என்றான்.

அவள் ''முதுகுப் பகுதியில் இரண்டு புள்ளிப் பகுதிகளாக எரிகிறது'' என்றாள்.

பார்த்தசாரதி அந்த ஆயின்ட்மெண்ட் டப்பாவைக் கைகளில் வாங்கிக் கொண்டு உதவி செய்ய முற்பட்டான்.

''ப்ளீஸ்! வேண்டாம்... நானே!''

''எப்படி... நீயே! குடு... இங்கே!'' என்று பிடுங்கிக் கொள்ள வெட்கத்தில் தவிக்கிற மனைவியைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

''அப்படி... என்ன யோசனை? அம்மா போன் செய்யவும்... எனக்கு மூச்சே கொஞ்ச நேரம் நின்னு போன மாதிரி ஆயிடுச்சு...! தேவியார்... எனக்கு வாழ்நாள் முழுக்க வேணும்கற பொறுப்புணர்ச்சியோட கொஞ்சம் பார்த்துக்கிட்டாத் தேவலை!'' என்றான் அடிக்குரலில் சிரித்தபடி.

ஸ்ரீகலா திகைத்துப் போய் நிமிர்ந்து பார்க்க ''ஹேய்! அப்படியே... அந்த ஓவியத்திலே இருக்கிற மாதிரி...'' என்றான்.

முகம் நோக்கிக் குனிந்தான்.

# 27

''ப்ளீஸ்...! சாரதி...'' என்றாள். தவிப்புடன் இடம் கொடுத்தாள்.

''ஸ்ரீ! அந்தக் கண்ணு என்னென்னவோ சொல்லுது. ஆனா, வாய் மட்டும் ஏன் வேறெதோ சொல்லுது'' என்றான். கீழ்க்குரலில் சிரித்தான்.

ஆயின்ட்மென்டைத் தடவி விட்டு அவள் கூச்சம் போகும் வகையில் சற்று நேரம் கேலி பேசினான்.

''குக்கர் மூடியே பறந்து போற அளவுக்கு அப்படி என்னடா... சமையல் செஞ்சே?'' என்றான்.

''சாப்பாடுதான்...! அதுவும் உங்களுக்குத்தான்!'' என்றாள். அவன் கடகடவென்று சிரித்தான்.

''கடைசியிலே எல்லாத் தப்பும் என் மேலயா?''

''இல்லல்லே! தப்பு சொல்லலே...!'' என்று அவள் சொல்லவும் அவன் லேசாக அணைத்துக் கொண்டான்.

நேசமும், அன்புமாகப் பார்த்தான்.

ஸ்ரீகலா அந்தப் பார்வையை ஆழமாக உள்வாங்கிக் கொள்வதையும் அவனையே உற்றுப் பார்ப்பதையும் அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

''ஹேய்! என்ன அப்படிப் பார்க்கறே?!'' என்றான்.

ஸ்ரீகலா அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''அது... அது... ஒரு சஸ்பென்ஸ்... இருக்கு... அப்புறம்... சொல்றேன்...''

''இத பார்றா...! ஸஸ்பென்ட் முகத்தை ஆழமாப் பாக்கறதுக்குக் கூட ஒரு சஸ்பென்ஸ் இருக்கா... என்ன?!'' என்றான்.



''ஆமா..!''

''ஹேய்...! சொல்லேன்!'' என்று இழைய அவன் மீண்டும் முகம் சிவக்க அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''சரி... விடு...! நீயே உனக்கு எப்பத் தோணுதோ... சொல்லு...!'' என்றான்.

கட்டிலில் அமர்ந்து அருகில் அமர்ந்துக் கொண்டான்.

''ரொம்பப் பெயினா இருக்காடா?'' என்றான்.

''இல்லல்லே! உடனே தண்ணீர் அடிச்சதாலே பிராப்ளம் இல்லே! ஆனா... ஒண்ணு ரெண்டு டிராப்ஸ்... அங்கங்கே பட்டது... மட்டும் கொப்பளமா ஆயிடுச்சு... அது சரியாப் போயிடும்'' என்றாள்.

''சே...! நான் பதைச்சுப் போயிட்டேன்டா...! அம்மா வேற டென்ஷனாப் பேசினாங்களா வீட்டுக்கு ஓடி வந்து உன்னைப் பாக்கறவரைக்கும் உயிரே இல்லாத மாதிரி ஆயிடுச்சு...'' என்றான்.

''நான்... சமையல்ல... ஏதோ ஒரு யோசனையில இருந்தேன்...!'' என்றாள்.

''அதுதான்... என்ன யோசனை?'' என்றான், மறுபடியும் விடாப்பிடியாக.

''அதுதான்... சொன்னேனே... சஸ்பென்ஸ்...'' என்றாள்.

மறுபடியும் கடகடவென்று சிரித்தான்.

''சரி... விடு...! எப்பவோ சொல்லு...!'' என்றான்.

''சரி... எதுவும் சொல்ல மாட்டேங்கறே! இப்ப என்ன செய்யறது...?'' என்றான்.

ஸ்ரீகலாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவன் முகத்தைப் பார்த்து விழித்தாள்.

''ஹேய்! உனக்கும் ஒண்ணும் பிராப்ளமில்லேங்கறே. எதைக் கேட்டாலும் சஸ்பென்ஸ்ங்கறே! அப்புறம் என்னதான் விஷயம் சொல்லு...?'' என்றான்.

அவன் கேள்வி கேட்கின்ற விதமும், அதில் ஒளிந்திருந்த ஏதோ ஒரு விஷயமும், அவன் அதைச் சொல்கிற விதத்தில் உள்ள விஷயமும் அவளுக்குப் புரிந்தது. ஆனால் என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

மெல்லச் சிரித்தபடி தன் மனைவியைக் கையணைப்பில் கொண்டு வந்தான்.

"ஸ்ரீ! போதும்...! இனிமேல் நாம எல்லாத்தையும் வெளிப்படையாய் பேசிக்கலாம்.... என்ன?" என்றான்.

ஆனால் பேசவிடவில்லை.

ஸ்ரீகலாவும் எதுவும் பேசுவதற்கு வழியில்லாதவள் போல இடம் கொடுத்தாள்.

மென்மையும், இதமுமாக தன்னை அணுகிய கணவன் குறித்து அவளுக்கு வியப்பாகவே இருந்தது.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் அதே நினைவில் இருந்தாள்.

இரண்டு நாட்கள் கழித்து சஸ்பென்ஸ் என்னவென்று தெரிந்த போது பார்த்தசாரதி பேச்சற்று நின்றான்.

* * *

இரண்டு மூன்று நாட்களுக்கு முன் அவளது ஓவியம் பார்த்து மலைத்து நின்ற விதம் பார்த்தபோது அவளுக்குள் அது தோன்றியது.

தனது ஓவியத்தை இவ்வளவு தூரம் ரசித்துப் போற்றுகிறாரே அவருடைய படத்தை வரைந்து கொடுத்தால் எப்படி இருக்கும்? என்ற எண்ணம்தான் அது.

தனது வீட்டுப் பணிகளை முடித்த பின்பு ஒரு ரகசியம் போல தனது அறையிலேயே அவனது ஓவியத்தை வரைய ஆரம்பித்தாள்.

எந்தப் புகைப்படத்தின் உதவியும் இல்லாமலே அவனது உருவத்தை அவளால் வரைய முடிந்தது.



பாஸ்போர்ட் சைஸ் போட்டோவைப் போல இடுப்பளவு உருவம் வரைய ஆரம்பித்தாள்....

வரையும்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

தன் மனதுக்குள் எவ்வளவு அழுத்தமாக அவன் முகம் பதிந்திருந்தது என்று.

ஆழ்ந்து ரசித்து அந்த உருவத்தை வரைய ஆரம்பித்தாள். ஆனால் அவளுக்கு ஒரு ஆசை இருந்தது. அவன் பார்வையில் காதல் உணர்வு தெரிய வேண்டும். அதை அந்த ஓவியத்தில் கொண்டு வர வேண்டும் என்பது.

முயற்சிக்கும் போதுதான் அவளுக்குப் புரிந்தது! சாரதி இதுவரை காதல் நிரம்பிய பார்வையைத் தன் மீது வீசியதே இல்லை! எப்படி முடியும்? அவன்தான் தன்னைக் காதலித்துக் கல்யாணம் பேசவில்லையே! ஏதோ ஒரு பெண்ணால் ஏற்பட்ட ஏமாற்றம்! அந்த ஏமாற்ற நோத்தில் அவரைத் தனியாக விடக்கூடாது என்பதற்காக ஒரு அவசரக் கல்யாணம்.

அவள் எத்தனையோ கதைகளில் படித்திருக்கிறாள்! விருப்பமில்லாமல் நடக்கிற கல்யாணத்திற்குப் பிறகு எப்படி அந்தக் கதாநாயகன் காதலியின் மீது வெறுப்பைக் கொட்டுவான் என்று.

நல்ல வேளையாக சாரதி அவளிடத்தில் அந்த மாதிரி வெறுப்பைக் கொட்டவில்லை. அவளை சகித்துக் கொள்கிறார்.

தனக்கு அவரைப் பிடிக்கிறது. அவரை நேசிக்கிறோம் என்பதை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு அதே விதத்தில் அவரும் தன்னிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை.

நியாயமோ... இல்லையோ... நடக்கப் போவதில்லை! சரி... கற்பனையிலாவது முயற்சிப்போம் என்று முயற்சித்தாள்.

கோபம்தான் வந்தது. ஏனென்றால் அவளால் அப்படி ஒரு உணர்வைக் கொண்டு வர முடியவில்லை.

இதைப் பற்றியெல்லாம் எழுந்த வருத்தத்திலேதான் ஏதோ யோசனையுடன் அவள் வேலை செய்ய அது விபத்திலே முடிந்தது.

ஆனால்!

முந்தின நாள்! அதாவது நேற்று அவன் பார்த்த பார்வையில் அவள் எதிர்பார்த்த காதல் இருந்தது.

ஸ்ரீகலாவால் நம்பவே முடியவில்லை!

அதனால்தான் தன்னையும் மறந்து அந்தப் பார்வையை உள்வாங்கிக் கொள்வது போல் விழுங்குவது போல் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அதைத்தான் அவன் கேலி கூட செய்தான்.

வண்ணங்களைக் குழைத்து! தூரிகையைக் கையில் எடுக்கையில் அவனது பார்வை அவள் மனதை மீண்டும் ஆக்கிரமித்தது.

பிற்பகல் நேரம்!

அத்தை, மாமாவெல்லாம் ஓய்வெடுக்கிற நேரம்! அந்த நேரம் அலுவலகத்திற்குள் புகுந்து கொள்வாள்.

வரைவதற்கான உபகரணங்கள் போர்ட் எல்லாமே இருந்தது.

அவனது சிவப்பு நிறத்தைத் தூரிகையின் வண்ணத்தில் கொண்டு வந்தாள்.

காதில் பொதிந்த அந்தக் கருவண்டு விழிகளை வரையும் போது உணர்வு மயமாகியிருந்தாள்.

கண்களில் ஆனந்தக் கண்ணீர் உறைந்தது. மனதுக்குப் பிரியமானவர்களின் வாங்கிக் கொடுக்கற ஒரு சின்னப் பொருளில் மனம் சொக்கிப் போய் விடுகிறதே அந்த மனப்பான்மையில் இருந்தாள்.



ஓவியம் முடித்து சற்று எட்ட நின்று பார்க்கையில் அவனே எதிரே சிரிப்பது போல் இருந்தது.

மோனாலிசாவின் புன்னகையில் இருக்கிற மர்மம் போல் அதிலே ஏதோ உணர்வு மறைந்து இருந்தது.

தழுவிக் கொள்ள வேண்டும் என்று பரபரத்த உணர்வை அடக்கிக் கொண்டாள்.

கணவன் வருவதற்காகக் காத்திருந்தாள். வழக்கமாக ஏழு. மணி எட்டு மணிக்கு வருவான். சில வேளைகளில் இன்னமும் கூட நேரமாகும்.

இன்று ஆறு மணிக்கெல்லாம் வந்து நின்றான்.

''சும்மாதாம்மா...! ஸ்ரீ கூடக் கொஞ்ச நேரம் டைம் செலவு செய்யலாம்னு... வந்தேன்...'' என்றான்.

''எங்கயாவது வெளியே போறீங்களா?'' என்றார் அப்பா.

''இல்லப்பா...! வீட்லதான் ஓய்வு!'' என்றான். ஆனால் அப்பாவுக்குத் தெரியாமல் மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அதற்கு எந்த விதமான பிரதிபலிப்பும் காட்டாதவள் போல் நடிப்பதற்குள் ஸ்ரீகலாவுக்குப் போதும் போதும் என்றாகியது.

அப்பாவின் கண்களில் கூட குறும்பு மின்னியது... தங்களது அறைக்குப் போனவர் மனைவியிடம் ஆலோசனை செய்தார் போலும்.

இன்றைக்கெல்லாம் அவர்களும் ஸ்ரீகலாவின் மகிழ்ச்சி நிறைந்த முகபாவத்தையும், பாட்டுப் பாடிக் கொண்டு அவள் லேசாக நடமாடுவதையும் பார்த்து எதையாவது புரிந்து கொண்டார்களோ என்னவோ.

''சரிப்பா! நீதான் இருக்கியே! பத்மா ரொம்ப நாளாக் கூப்பிட்டுகிட்டிருக்கா...! நான் போய் இன்னைக்கு அங்கே தங்கிட்டுக் காலையிலே வர்றோம்'' என்று கிளம்பினார்கள்.

பார்த்தசாரதிக்கும் மறுக்க வழியிருக்கவில்லை. பத்மாவதியின் கணவன் காரில் வந்து அழைத்துச் சென்றார்.

அவர்களை வழியனுப்பி விட்டு வந்தவன் மனைவியைப் பார்த்துச் சிரித்தான்.

"ஏய்...! அவ்வளவு வெளிப்படையாவா... தெரியுது?"

"எது...?"

"அதான்... நான் உன்கிட்டே மயங்கிப் போய்க் கிடக்கிறேங்கிறது?" என்றான்.

அவள் குறும்புடன் அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

"எனக்கே ஆச்சரியம்தான்!" என்றாள்.

"எது...?"

"மேகலாவை இவ்வளவு சீக்கிரம் மறந்ததுதான்" என்றாள் ஸ்ரீகலா.

"ஷ்!" என்று அவள் உதட்டில் ஒரு விரல் வைத்து அழுத்தினான்.

"மேகலாவை நினைக்கிற நேரம் இது இல்லே!" என்றான். அவளது பின்னலை எடுத்துத் தனது கைகளில் பிடித்துக் கொண்டான்.

"ஹேய்! வேலையே ஓடலை! தேன் குடிச்ச நரிம்பாங்களே... அது மாதிரி அலைஞ்சுகிட்டிருந்தேன். எங்க சி.பி.ஓவே பாத்துட்டு 'என்ன மேன்! நீ இன்னைக்கு ஆளே சரியில்லே... கிளம்பு...'ன்னு அனுப்பிட்டாரு..." என்று சிரித்தான்.

"அப்ப நிஜம்தான் போல இருக்கு!" என்றாள் ஸ்ரீகலா.

"எது...!" என்றான் மெல்லச் சீண்டினான்.

"வெளிப்படையா தெரியுதுங்கறது. அத்தையும், மாமாவும் கிளம்பிட்டாங்க!" என்றாள்.

"அப்புறம்... சி.பி.ஓ.வே அனுப்பி வைச்சிருக்காரு." அவன் சிரித்தான்.



"ஸ்ரீ!" என்றான் குழைந்து போன குரலில். இன்னும் நெருங்கி இழைந்தான்.

"ம்..."

"என்ன... அது சஸ்பென்ஸ்... சஸ்பென்ஸ்ன்னு சொல்லிக்கிட்டே இருந்தே சொல்லேன்... ப்ளீஸ்! எனக்கு மண்டையே வெடிச்சுப் போகும் போல இருக்கு..."

அவளும் அவன் சட்டை பட்டனைத் திருகியபடி இழுந்தாள்.

"அது சொல்ற மாதிரி விஷயம்... இல்லே! நீங்க பாத்துத்தான்... புரிஞ்சுக்கணும்." என்று சொல்லும் போதே அவளை விட்டு எதிரில் நிறுத்திக் குறும்பாகப் பார்க்க அவள் முகம் சிவந்தது.

"ஐயோ...! நீங்க என்ன!" என்று சிணுங்கினாள் அவனை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

"அங்கே...!" என்று காட்டினாள்.

அவன் வியப்புடன் அந்த ஓவியம் வரைகிற பலகையில் மாட்டப் பட்டிருக்கிற ஓவியத்தை மூடியிருந்த திரையை விலக்கினான்.

அப்போதுதான் அப்படி மலைத்து நின்றான்.

கொஞ்ச நேரம் கடந்தது. தன்னையே கண்ணாடியில் படித்துக் கொண்டது போல உணர்ந்தான்.

வியப்பு மிதக்கும் கண்களோடு திரும்பி மனைவியைப் பார்த்தான்.

"ஸ்ப்ளெண்டிட்... ஸ்ரீ!" என்றான்.

தன்னை மறந்தான். ஸ்ரீகலாவை அருகே இழுத்துத் தன் பரிசு மழையை பொழிந்தான்.

"ஹேய்! ஸ்ரீ! யு ஹேவ் கிவன் மீ... எ வேல்யூலெஸ்... கிப்ட்" என்று கொண்டாடிக் கொண்டான்.

தனது அன்பு படையெடுப்பால் அவளைத் திக்கு முக்காடச் செய்தான்.

அவளும் உணர்வு மயமாகி இருந்தாள். தன் மனம் கவர்ந்தவனுக்குத் தனது படைப்புப் பிடிக்கிறது என்ற எண்ணமே அவள் உள்ளமெல்லாம் நிறைந்து உணர்வுகளை ஆக்கிரமித்தது.

தன் உணர்வுகளையெல்லாம் விதவிதமாகக் கொட்டினான். ஸ்ரீகலாவும் இணையாகத் தன் அன்பை வெளிப்படுத்தினாள்.

சற்றுக் கழித்து.

மனைவியைத் தன் கைப்பிடிக்குள் வைத்துக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டான்.

"ஸ்ரீ... எப்ப ஆரம்பிச்சே!" என்றான்.

"நான் வரைய ஆரம்பிச்சு... ஒரு வாரமாச்சு! ஆனா... ஆனா...!" என்று நிறுத்தினாள்.

"ம்...!" அவன் தூண்டினான்.

"உங்க... பார்வையில... அந்தக் காதலைக் கொண்டு வர்றதுக்குத்தான்... கொஞ்சம்... வெயிட் பண்ண வேண்டியதாப் போச்சு...! நானும் எப்படியெப்படியோ கற்பனை பண்ணிப் பார்த்தேன். ஆனா... வொர்க் அவுட் ஆகலே! பட்..."

"ம்...!" என்றான். ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நேத்து... நேத்து... நீங்க பார்த்தீங்களே... அப்பத்தான்...!" என்றாள்.

மீண்டும் உணர்வு மயமாகிற தன் கணவனுக்கும் சற்று நேரம் ஈடு கொடுத்தாள்.

சற்றுக் கழித்து.

"தேவ்... வா!" என்று மறுபடியும் அந்த அறைக்கு மனைவியுடன் சென்று நின்று அந்தப் படத்தை ஆழ்ந்து பார்த்தான்.

அப்போதுதான் கவனித்தான்.



அந்த ஓவியத்தில் அவள் வரைந்திருந்த சட்டை முதல் முதலாக அவர்கள் வீட்டுக்குப் போயிருந்த போது அவன் அணிந்திருந்த சட்டை.

அவனுக்கு அது ஏன் அவ்வளவு நன்றாக நினைவிருந்தது என்றால் அந்த சட்டை மேகலாவுக்குப் பிடிக்கவில்லை என்பதால் அதற்குப் பிறகு அதை அவன் அணியவேயில்லை...!

துல்லியமாக... அந்த நிறம், அந்த டிசைன்கள் எல்லாவற்றையும் அந்த ஓவியத்தில் கொண்டு வந்திருந்தாள் ஸ்ரீகலா.

"ஸ்ரீ!" என்றான் ஆழ்ந்த குரலில்.

"ம்...!" என்றாள்.

"இந்த ஷர்ட்.... முத... முதல்ல... உங்க வீட்டுக்கு வந்திருந்தப்ப... போட்டிருந்த சட்டை!" என்று நிறுத்தவும்.

மீண்டும் அவளை எதிரே நிறுத்தி முகம் பார்த்தான்.

"அப்படியா?" என்ற கேள்வி இருந்தது. அப்போதிலிருந்தேவா என்னை நேசித்தாய் என்ற கேள்வியும் இருந்தது.

"அப்ப... அது எனக்குத் தெரியலை!" என்று முணுமுணுப்பாகப் பதில் சொன்னாள் மேகலா...

"எப்பத் தெரிஞ்சா... என்ன... விடு. இப்பத்திக்கு நிரூபிப்போம்.!" என்றான்.

## 28

நிரூபித்தான் பார்த்தசாரதி. அந்த நிரூபணத்திற்கு அவளும் உடந்தையானாள்.

ஸ்ரீகலாவும், பார்த்தசாரதியும் கை கோர்த்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தார்கள்.

அது ஒரு பூங்கா!

"ஸ்ரீ... கொஞ்ச நேரம் நடந்து வரலாம்... வா!" என்று அழைத்துப் போயிருந்தான் சாரதி.

அந்தப் பூங்காவில் வெளிச்சம் நன்றாகவே இருந்தது. பேசிக் கொண்டே அமர்ந்திருந்தார்கள்.

"ஸ்ரீ! இன்னைக்கு... ஒரு கவிதை படிச்சேன். அன்பெனும் ஓடையிலே அப்படீங்கற கவிதைத் தொகுப்புல ஓஷோ சொல்றார்.

"காலை மலர்ந்து விட்டது.
கதிரவன் உதித்துக் கொண்டிருக்கிறான்
இரவின் அனைத்து நிழல்களும் மறைந்து கொள்கின்றன.
"நேற்று" நிறைவேறி விட்டது
ஒரு புதிய தினம் பிறந்து கொள்கின்றது
இந்தப் புதிய பகலோடு நாமும்
புதியதாக வடிவெடுத்தால்
எவ்வளவு நன்றாக இருக்கும்?
மனம் பழையதாகவே இருந்து விடுகிறது
அது கடந்த நேற்றிலேயே தங்கி விடுகிறது
ஆகவே புதியதை வரவேற்பதிலும்
அதனை ஏற்றுக் கொள்வதிலும்
அது பின் தங்கி விடுகிறது
மனம் ஒவ்வொரு கணமும் பழையதை விட்டு
மீண்டு விடுவதே அவசியமானது
அப்போதுதான் அது
நிகழ்காலத்தில் உயிர்த்தெழும்
நிகழ்காலத்தில் வாழ்வதே
அற்புதமான ஆனந்தமானது!

அது ஆன்மீகம் சம்பந்தப் பட்டதானாலும் என்னைப் பொறுத்தவரை அதுவே உண்மையாகிவிட்டது" என்றான்.

அவன் மேகலாவைப் பற்றிக் குறிப்பிடுகிறான் என்பது புரிய மௌனமாக அமர்ந்திருந்தாள்.



அவன் பேசுவதைக் கேட்டபடியே எதேச்சையாகச் சுற்றிலும் பார்த்தவள் ஆங்காங்கே வெளிப்படையாக காதல் ஜோடிகள் நடத்திக் கொள்கிற நாடகம் கண்டு சற்றே திடுக்கிட்டுப் போனாள்.

"ஐயோ! என்னங்க... இது!" என்றாள். அவன் சிரித்தான்.

"அது அவங்க கலாச்சாரம்!" என்றான். அவள் எதிர்பாராத விதமாகத் தானும் அதே நாடகத்தை நிகழ்த்தினான்.

மெல்லத் திமிறினாள்.

"என்னங்க... இது...!" என்று தவிக்க.

"இந்த மாதிரி ப்ரீடம்.. நம்ம ஊர்ல கிடைக்காதில்லே...!" என்று சிரித்தான்.

"இது ப்ரீடமாக்கும்?" என்றாள்.

"இல்லையா... பின்னே!" என்று அவன் கேட்க.

"எனக்கென்னவோ அப்படித் தோணலே"

"ஏன்?"

"இங்கே எவ்வளவுக்கெவ்வளவு வேகமா எல்லாம் நடக்குதோ... அவ்வளவுக்கவ்வளவு வேகமா முடிஞ்சும் போயிடும்... தெரியுமா..!"

"அது அப்படித்தான்....! ரெண்டு மாசம் கழிச்சு வந்து பார்த்தா... அதோ அந்த ஆளும், அந்தப் பொண்ணும் வேற வேற ஆட்களோட இதே நாடகத்தை நடிச்சுகிட்டிருப்பாங்க" என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

"நீ கூட..... என்னைப் பத்தி முதல்லே அப்படித்தான் நினைச்சிருப்பே..." என்றான்.

ஸ்ரீகலா சற்று நேரம் மௌனம் சாதித்தாள். பிறகு சொன்னாள்.

"அது தெரியலே! ஆனா... எனக்கென்னவோ... ஆரம்பத்துல இருந்தே... மேகலாவுக்கும் உங்களுக்கும் சரி வராதுன்னு தோணிக்கிட்டேயிருந்தது" என்றாள்.

"நீ மட்டுமில்லே...! ஆகாஷ், எங்கப்பா... எல்லாருமே நினைச்சிருக்காங்க... ஹேய்...! ஒண்ணு சொன்னா ஆச்சரியப்படுவே...! நடந்த எல்லாத்துலயும் உங்கம்மாவுக்கு ஒரு முக்கியமான ரோல் இருக்கு... தெரியுமா?" என்றான்.

அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள்!

"ஆமா...! உங்கம்மா. அடிக்கடி உங்க தாத்தாகிட்டே அதாவது மாமனார்கிட்டே போன்ல பேசுவாங்களாம். அப்ப சொல்லியிருக்காங்க கண்டிப்பா இந்த மாப்பிளே... மேகலாவுக்கு பொருந்தி வராது. இந்தக் கல்யாணம் நடந்தா... ரெண்டு பேரு வாழ்க்கையுமே கெட்டுப் போகும்னு சொல்லி இருக்காங்க..."

"ஓ...!"

"அது மட்டுமில்லே! அவங்களே சொல்லியிருக்காங்க... ஸ்ரீகலாவுக்கு அந்தப் பையனை ரொம்பப் பிடிச்சிருக்கு... அதுக்கு ஏதாவது பண்ணுங்கன்னு..."

"ம்....!"

"அப்போ... உங்க தாத்தா கேட்டிருக்காரு..." அதெப்படி? பெரிய பொண்ணுக்குப் பாத்த மாப்பிள்ளையை... சின்னப் பொண்ணுக்குப் பாக்கறதுன்னு."

"அதுக்கு ஏதாவது செய்ங்க...! பெரியவளா விலகிப் போற மாதிரி ஏதாவது செய்ங்கன்னு."

"ஓஹோ?"

"அதுக்கப்புறம்தான்... தாத்தா... இரத்தினபூபதியைக் கொண்டு வந்து இறக்கியிருக்காரு. அப்படி இறக்கும் போது... மேகலாவைத் திணறடிக்கணும்னுதான் ஆயிரம் க்கன்னு கதை விட்டிருக்காங்க..." என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

ஸ்ரீகலா அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தபடி கேட்டாள்.

"அப்ப... உங்களுக்கு முதல்லயே... தெரியுமா?"



"இல்லல்லே...! எனக்குத் தெரியாது. உங்க அம்மா மாதிரியே... இன்னொருத்தர்... உன் மனசைப் புரிஞ்சுகிட்ட ஆளு...! அவன்தான் நம்ம கல்யாணத்துக்கே முக்கியமான ஆளு..."

"யாரு...?"

"ஆகாஷ்!"

"ஓ! பின்னே என்னவோ... நீதான்ம்மா சாரதியோட தனிமையைப் போக்கறதுக்கு சரியான ஆளு. இந்த மாதிரி நேரத்துல டிப்ரஷன் வராமக் காப்பாத்த உன்னாலதான் முடியும்னு என்னென்னவோ சொன்னாரே!"

சாரதி கலகலவென்று சிரித்தான்.

"பின்னே? நீ பார்த்தசாரதியை லவ் பண்றே. அதனால சாரதியை நீயே கல்யாணம் பண்ணிக்கோன்னு சொன்னா... நீ ஒத்துக்கிட்டிருப்பியா?" என்றான்.

"இல்லே!" என்றாள் நிலம் பார்த்தபடி.

"அப்பத்தான் உங்க அக்கா அடிபட்டிருக்கா. அப்படியிருக்கும் போது சத்தியமா... இல்லவே இல்லைன்னு சாதிச்சிருப்பே" என்றான்.

"ஆமா!" என்று எளிமையாக ஒத்துக் கொண்டாள்.

"அது மட்டுமில்லே... ஆகாஷ் உங்க தாத்தாகிட்டே பேசியிருக்கார். அப்பத்தான் புஷ்பாத்தை சொன்னதை அவரு சொல்லியிருக்காரு. அது மட்டுமில்லே! எங்கப்பாகிட்டே ஆகாஷ் பேசியிருக்கான்... ஆகாஷ் அடிச்சுச் சொல்லியிருக்கான். மேகலா இப்படியிருக்காளேன்னு நினைக்காதீங்க...! ஸ்ரீகலாவை மட்டும் மருமகளா ஒத்துகிட்டீங்கன்னா... உங்க மகன் லைஃப்ல நிம்மதியாயிருக்க முடியும்னு" என்று நிறுத்தினான்.

ஸ்ரீகலா அப்போது கேட்டாள்.

"நீங்க... எப்படி ஒத்துகிட்டீங்க?"

"எனக்கு பெருசா... ஒண்ணும் விருப்பு... வெறுப்பு... இல்லே! எங்கப்பா ஒரு வார்த்தை சொன்னாரு... "டேய்...

தம்பி! நீயா விருப்பப்பட்டு ஒரு பொண்ணு தேர்ந்தெடுத்தே...! அதுக்கு நாங்க எந்த மறுப்பும் சொல்லலே! எப்படியெப்படியோ என்னென்னவோ நடந்து போச்சு! இப்ப எங்க விருப்பத்துக்கு ஒத்துக்கோ. உன் வாழ்க்கை ஒண்ணும் கெட்டுப் போகாதுன்னாங்க...!"

"ம்...!"

"அதுக்கப்புறம்... நான் ஒண்ணும் பெரிசா... யோசிக்கலே! சம்மதம் சொல்லிட்டேன். அதுவும் மேகலாவை நான் ஒண்ணும் கைவிடலே. அவதான் எனக்கு துரோகம் பண்ணிட்டா!" என்றான்.

"அது உண்மைதான்!" என்றாள்.

"ஸ்ரீ! என்னைச் சரியாப் புரிஞ்சுக்க... நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துகிட்டப்பவே மேகலா மேட்டர் முடிஞ்சு போச்சு..." என்றான்.

"அப்புறம்... ஏன்?"

"அப்புறம்... ஏன்... உன்கிட்டேயிருந்து விலகினேன்னு கேக்கறியா? எனக்கு உன்னைப் பார்த்தா பாவமா இருந்துச்சு. எல்லாருமா சேர்ந்து வற்புறுத்தி உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்களோன்னு... ஒவ்வொரு தடவையும் நான் நினைச்சுக்குவேன். தன் கண் முன்னாலேயே தன்னோட சிஸ்டரோட சுத்திக்கிட்டிருந்தவனைக் கல்யாணம் பண்ணியிருக்காளேன்னு உன் மனசு எவ்வளவு வேதனைப்படும்னு... நினைச்சுக்குவேன்."

"ஓ...! நான் வேற மாதிரியா நினைச்சுட்டேன். பாவம்... மேகலாவை மறக்க முடியாமத் துக்கத்துல இருந்தப்ப... நம்மளைப் புடிச்சு கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்கன்னு..."

"நல்ல வேடிக்கை" என்று சிரித்தான். மறுபடியும் சொன்னான்.

"ஆக மொத்தம்... ரெண்டு பேரும் ஒருத்தருக்காக ஒருத்தர் கவலைப்பட்டிருக்கோம்..." மெதுவாக எழுந்தான் பார்த்தசாரதி... அவளும் எழுந்தாள்.



"இனிமே குளிர் தாங்காது. போகலாம்" என்றார்கள்.

மறுபடியும் கைகோர்த்தபடி நடந்தார்கள்.

வீடு வந்ததும் பார்த்தசாரதி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

"ஹேய் ஸ்ரீ! அம்மாவும், அப்பாவும் ஏதோ கண்டு பிடிச்சிருக்காங்க.. அதனாலதான் அக்கா வீட்டுக்குப் போறேன்னுட்டுப் போயிட்டாங்க!"

அவள் முகம் சிவந்தது.

"அப்படித்தான் தெரியுது! பத்மாண்ணியும் ஏதோ ஜாடை மாடையா கலாட்டா செஞ்சாங்க."

பார்த்தசாரதி இதுவரை பொறுத்தது போதும் என்பது போல் மனைவியைத் தன் கையணைப்பில் கொண்டு வந்தான்.

"ஹேய்! அன்னைக்கு மேகலா வந்து என்னை மீட் பண்ணிட்டுப் போனதுக்கப்புறம்.."

"ஹலோ...! அது மீட் பண்ணினதா? நான் மேல வந்து பாக்கறேன். மேகலா என்னமோ... உங்க மேல சாஞ்சுகிட்டு..." என்று கடுப்பான குரலில் சொன்னாள்.

"ஹேய்! பொறாமை பாரு!" என்று கன்னம் நிமிண்டிச் சிரித்தான்.

"பொறாமையா? எனக்கு நெஞ்சே வெடிச்சுடும் போல ஆயிடுச்சு..."

"அப்படியா!" என்று அவன் குறும்பாக ஏதோ காதில் சொல்ல கைக்குக் கிடைத்த ஏதோ புத்தகத்தை எடுத்துத் தலையில் தட்டினாள்.

அவன் அதை ரசித்துக் கொண்டான். பிறகு சொன்னான்.

"இங்க பாரு! உங்கக்கா... ஏதோ ஒரு பிளானோடதான் வந்தா. ஆனா... நான் இரத்தினபுபதியைப் பத்தி விவரமா சொன்னேன். அதுக்கப்புறம் கொஞ்சம் புரிஞ்சுகிட்ட

மாதிரித் தெரிந்தது. புரிந்துகிட்டாளோ... இல்லையோ நான் ஒத்து வரமாட்டேன்னு தெரிஞ்சுருச்சு...''

''ஆமா... அன்னைக்கு இன்னொரு கூத்தும் நடந்துச்சு... கூத்தில்லே... பயங்கரம்'' என்றாள் ஸ்ரீகலா.

''நீ... இரத்தினபூபதி துப்பாக்கியைத் தூக்கிட்டு வந்ததைத்தானே சொல்றே?'' என்றான்.

''ஆமா...!'' என்றாள். இப்போது நினைத்தாலும் அவள் உடல் நடுங்கியது.

''மேகலா... அதுல கொஞ்சம் பயந்துதான்... போனாள்'' என்றான் பார்த்தசாரதி.

''ஆனா... அம்மாவெல்லாம் சொல்றதைப் பார்த்தா இரத்தினபூபதி நல்லவராத்தான் தெரியறாரு...'' என்றாள்.

''எனக்கும் தாத்தா சொன்னாரு. இப்ப என்ன நடந்துச்சு தெரியுமா? மேகலாவும், இரத்தினபூபதியும் போய் அன்ன பூரணிப் பாட்டியைப் பார்த்துப் பேசி இப்ப பாட்டியை வீட்டுக்கே கூட்டிட்டு வந்துட்டாங்க...'' என்றான்.

''அப்படியா?''

''ஐயோ! அது சஸ்பென்ஸா இருக்கட்டும்னு சொன்னாங்க... நான் மயக்கத்துல உளறிட்டேன்'' என்றான்.

''பரவால்லே! நல்ல விஷயத்தை சீக்கிரமா தெரிஞ்சுக்கறதுல தப்பில்லே!''

''முழுமையா... நல்ல விஷயம்னு சொல்ல முடியாது. ...த்தா... சொல்லிட்டாராம்... என்ன இருந்தாலும் பழைய ...லேஷன்ஷிப் எல்லாம் எதிர்பார்க்க முடியாது. ஒரே வீட்ல ...ருக்கட்டும். எப்ப எனக்கு மனசுக்குத் தோணுதோ... ...ப்ப நான் பேசிக்கறேன்னு சொல்லிட்டாராம்'' என்றான்.

''அதுவே... பெரிய விஷயம்தான். எப்படியோ அம்மா ...ருப் பிரச்சினை தீர்ந்தது. இல்லேன்னா பாட்டியைத் ...யா விட்டுட்டமேன்னு அப்பா கவலைப் பட்டுகிட்டிருப் ...... அதனாலதான்... தாத்தாவும் ஒத்துகிட்டாராம்...''



''சரி... அதெல்லாம்... விடு! நான்தான் நிகழ்காலத்துல வாழ்வதே அற்புதமான ஆனந்தமானதுன்னு... சொன்னேனே... அதை விட்டுட்டு...''

''அடடா! இப்ப என்ன நிகழ்காலத்துல வாழணுமாம்.''

''ஆமா... இந்த நிமிஷம் ஸ்ரீகலா என்னும் தேவதை... தன்னுடைய ஓவியத்தால் என் மனதைக் கொள்ளை கொண்டு விட்டாள். ஹேய்! அது என்ன சஸ்பென்ஸ்'' என்றான்.

அவள் களுக்கென்று சிரித்தாள்.

''அது ஒண்ணுமில்லே! உங்க படத்தைத் தத்ரூபமா வரைஞ்சுட்டேன். ஆனா, கண்ல மட்டும் காதல் பார்வையைக் கொண்டு வரணும்னு டிரை பண்ணினேன். ஆனா... முடியல...''

''என்னா... நேத்து வரை நீங்க அப்படி பார்க்கலை..! அப்புறம்... அப்புறம்...!''

''நேத்து பார்த்ததை வச்சு... வரைஞ்சீங்களாக்கும்'' என்று அன்புடன் புன்னகைத்தான். பிறகு சொன்னான்.

''ஸ்ரீ! அந்தக் குக்கரை நினைவுச் சின்னமா வச்சுக்கணும். இல்லேன்னா... எனக்கும் தைரியம் வந்திருக்காது. உனக்கும் விஷயம் புரிஞ்சிருக்காது.''

''ஆமா... வச்சுக்குங்க...'' என்றாள்.

''ஸ்ரீ! என்னைப் போல மடையன் உலகத்திலேயே இருக்க மாட்டானாம்.'' ஆகாஷ் சொல்றான்.

''ஆமா! இதை வேற அவரு சொல்லணுமாக்கும்?'' என்று சீண்டினாள்.

சற்று நேரம் பொய்யாகச் சண்டை போட்டார்கள்.

''சரி... ஏன் அப்படி சொன்னாருன்னு சொல்லுங்க'' என்றாள்.

''மேகலாவோட பர்ஸனாலிட்டியைப் பார்த்த நான் அவளோட உள்ளழகு பத்திச் சிந்திக்கவே இல்லை. நீ வீட்டு முற்றத்திலே இருக்கிற வெள்ளி நிலாவாம். நான் அதைப் புரிஞ்சுக்காம எங்கேயோ தங்க நிலா இருக்கு... அது

கிடைக்கப் போகுதுன்னு... நம்பிகிட்டிருந்தேனாம். ஆனா அது தங்க நிலா இல்லையாம். சுட்டெரிக்கிற சூரியனாம்" என்றான். சிரித்தாள்.

மேலும் சொன்னான்.

"சில வேளைகள்ல ஆகாஷ் என்னை நான் புரிஞ்சுக்கறதை விட நல்லாப் புரிஞ்சிருக்கானோன்னு தோணும். எனக்காக மெனக்கெட்டதுக்கு அவன் ஒரு விளக்கம் வேற சொல்வான். அவன் கல்யாணத்துக்கு வந்தப்பத்தான் நான் மேகலாவைப் பார்த்தேனாம். அதனால அவனுக்கும் அதுல ஒரு பொறுப்பு இருக்காம்."

ஸ்ரீகலா அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். "நான் நினைக்கவே... இல்லே! ஆகாஷ் அண்ணா என்னை இப்படித் துல்லியமாய் புரிஞ்சு வச்சிருப்பாருன்னும்" என்றாள்.

"ஆமா! உனக்கு ஒரு சகோதரன் இல்லைங்கற குறையே உனக்குத் தேவையில்லை. ஆகாஷ் மாதிரி ஒருத்தன் கிடைச்சிருக்கானே அதுவே போதும்" என்றான்.

"ஸ்ரீ! என் வீட்டு முற்றத்துக்கு வந்த வெள்ளி நிலாவே! இப்படியே வாய்ப்பேச்சுப் பேசி என்னை காய வைக்கலாமா? குளிர்விக்கக் கூடாதா?" என்றான்.

"குளிர்விப்போம்... தலைவா!" என்றாள். குறும்பாகக் கலகலவென்று சிரித்தாள்.

அவன் சிரிப்பதை அவள் வைத்த கண் வாங்காமல் பார்க்க

"இப்படித்தான்... அந்த ஓவியத்திலும் இருக்கீங்க" என்றாள்.

"பேச்சை... மாத்தாதே!" என்று அவன் நெருங்க, தன் தண்கதிர்ப் புன்னகையிலும், அன்பெனும் குளிர் மழை விலும் அவனை நனையச் செய்தாள். இனிமேல் வாழ்நாள் முழுவதும் அதையே செய்யப் போவதாக உறுதியும் எடுத்துக் கொண்டாள்.